# உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா



ரமணிசந்திரன்

# உன்னைத் தழுவிடிலோ, கண்ணம்மா...

ரமணிசந்திரன்

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை
இராயப்பேட்டை, சென்னை–600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : உன்னைத் தழுவிடிலோ, கண்ணம்மா... |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : செப்டம்பர், 2002 |
| இரண்டாம் பதிப்பு | : ஆகஸ்ட், 2004 |
| மூன்றாம் பதிப்பு | : அக்டோபர், 2005 |
| நான்காம் பதிப்பு | : ஏப்ரல், 2007 |
| ஐந்தாம் பதிப்பு | : நவம்பர், 2008 |
| ஆறாம் பதிப்பு | : மே, 2010 |
| ஏழாம் பதிப்பு | : அக்டோபர், 2011 |
| எட்டாம் பதிப்பு | : செப்டம்பர், 2013 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| பக்கங்கள் | : 176 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.80.00**

அச்சிட்டோர் : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14.


## பதிப்புரை

திருமதி. ரமணிசந்திரன் எழுத்துக்களை மிகுந்த ஈடுபாட்டோடு படிக்கும் வாசகர்கள், வாசகிகள் தமிழ் பேசும் உலகெல்லாம் பல்லாயிரக்கணக்கில் பெருகி வருகிறார்கள்.

தினமும் ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிகின்றன.

அதிலே மலேசியாவில் உள்ள மதிப்பிற்குரிய வாசகி ஒருவரின் கடிதத்தைக் கீழே தருகிறோம்.

"நம் வாழ்க்கையில் மிக அவசியமானது அமைதி, மகிழ்ச்சி, இவை இரண்டும் உங்கள் புத்தகங்களில் எனக்குக் கிடைக்கின்றன. என்னிடம் நீங்கள் எழுதிய ஏராளமான புத்தகங்கள் உள்ளன. ஒவ்வொரு புத்தகத்தையும் குறைந்தது 100 தடவையாவது படித்திருப்பேன். படித்து முடித்ததும் மனதிற்கு ஒரு உற்சாகம், மகிழ்ச்சி பொங்கி வழியும்.

என் கணவர் கேட்பார் "அப்படி என்னதான் இந்தப் புத்தகத்தில் இருக்கு; இப்படி சிரிச்சுக்கிட்டே படிக்கிறியே" என்று. பதில் கூறினால் அவருக்குப்

புரியாது. திரும்பத் திரும்பப் படிக்க போர் அடிக்கலியான்னு கேட்பார், எனக்கு ஒரு தரம் கூட போர் அடித்தது இல்லை. இது நிஜம்.

இவ்வளவு அருமையான புத்தகங்களைத் தரும் உங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள். நன்றியும் கூட..!"

இப்படிப்பட்ட எண்ணற்ற வாசகிகள், வாசகர்களின் பாராட்டுக்களுக்கு எங்கள் நன்றி.

வாசகிகள், வாசகர்களின் பாராட்டை மேலும், பெறும் வகையில் **'உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா'** என்ற அருமையான நாவலைத் திருமதி. ரமணிசந்திரன் அவர்கள் தந்துள்ளார்கள்.

படித்து மகிழுங்கள், கருத்தை எழுதுங்கள்.

அருணோதயம் அருணன்

# உன்னைத் தழுவிடிலோ, கண்ணம்மா...

## 1

அதுவரை அமைதியாக ஓரளவு உபசாரக் கலகலப்புடன் இருந்த சூழ்நிலை சட்டென மாறியது.

மறுக்கக் கூடும் என்ற ஊகம்கூட, வெகு லேசாகத்தான் இருந்தது.

இப்போதும், மறுப்பு என்று வார்த்தைகளால் சொல்லவில்லை. ஆனால்...

மகளுக்கு, உரிமை கொடுத்து வளர்த்திருந்தவர் அவர். அவள் எங்கே செல்வதையும், யாரோடு பழகுவதையும் ராமலிங்கம் தடுத்ததில்லை. இரண்டு மகள்களுக்குமே அப்படித்தான். அதனாலேயே, திருமண விஷயத்திலும், அவர் தலையிட்டு

குட்டையைக் குழப்புவார் என்ற எண்ணம் யாருக்குமே ஏற்பட்டதில்லை.

அத்தோடு, வசீகரனும் அப்படி ஒன்றும் 'பாப்பர்' இல்லையே. ராமலிங்கம் அளவுக்குப் பெரிய பணக்காரனாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவனிடமும் சில பல கோடிகள் இருக்கத் தானே செய்கின்றன.

தினமும் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் டிபன் சாப்பிட அழைத்துச் செல்லும் அளவுக்கு... பிறந்த நாளைக்குக் காதலிக்கு வைர 'டிராப்ஸ்'பரிசளிக்கும் அளவுக்கு...

என்ன குறைவு கண்டு, ராமலிங்கம் இப்படியொரு நிபந்தனை விதித்தார்?

அவனுக்குத் தன்மானம் என்று ஒன்று இருக்கவே கூடாது என்று எண்ணினாரா?

தந்தை, பாட்டி என்று வசீகரனுக்கு நெருங்கிய உறவினர்கள் இருப்பது தெரிந்தும், தந்தை வைத்த சொத்து பத்தோடு, அவன் உழைப்பில் வெகுவாக உயர்த்தி வைத்திருக்கும் தொழிலும் அவனுக்கு ஒன்று இருக்கிறது என்பது தெரிந்த பின்னும், இந்த நிபந்தனையை, அவரால் எப்படிச் சொல்ல முடிந்தது.

உள்ளூரக் குமுறியதை வெளிக்காட்டாமல், "அப்போது, நான் கிளம்புகிறேன் சார். எனக்கு வேறு கொஞ்சம் வேலை இருக்கிறது. அதைப் பார்க்கப் போக வேண்டும். உணவு மிகவும் சுவையாக இருந்தது என்று உங்கள் சமையல்காரனிடம் சொல்லுங்கள், வரட்டுமா" என்று எழுந்தான் வசீகரன்.

"ஊகூம். வசி. இன்று அந்த சினிமாவுக்குப் போக வேண்டும் என்று சொன்னேனே, மறந்து விட்டதா? கொஞ்ச நேரம், அப்பாவிடம் பேசிக் கொண்டிருங்கள். நான் கொஞ்சம் 'மேக்கப்' சரி செய்து கொண்டு வருகிறேன்" என்றாள்.



"அந்தப் படம், நீ மூன்று முறை பார்த்தாயிற்று, சுபா. இன்னும் அதில் என்னத்தைப் பார்க்கப் போகிறாய். கதையும் படு சுமார். அந்த ஒரு தரம் பார்த்ததே என்னால் தாங்க முடியவில்லையே" என்றான் வசீகரன், சிறு எரிச்சலோடு.

அவள் தந்தை, அவனது... ஏன் அவளதும் கூடத்தானே? அவர்கள் இருவரது வாழ்க்கையையுமே, அந்த ராமலிங்கம் தலை கீழாக்கிக் கொண்டிருக்கிறார். இவளானால், சிறு பிள்ளைத்தனமாக சினிமா, சினிமா என்கிறாளே.

ஆனால் அதற்கு மேலும் தன்னால் போக முடியும் என்று காட்டினாள், சுபா. "அந்தப் படத்தில் நாலாவது காட்சியில் வரும் போது, கதாநாயகி அணிந்திருக்கும் சங்கிலியில் தொங்கும் டாலரைப் பார்க்க வேண்டும். அது, 'ஜேட்' என்கிறாள் என் தோழி. நான் 'பெரிடாட்' என்கிறேன். இரண்டில் எந்தக் கல் என்பதைத்தான். திரும்பவும் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும்." என்று விளக்கினாள்.

மகா முக்கியம் என்று ஆத்திரத்தோடு, தந்தையின் பேச்சைப் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று குறிப்பாக அவனுக்குக் கூறுகிறாளோ என்ற சந்தேகம் அவனுக்கு உண்டாயிற்று.

அப்படித்தான் இருக்க வேண்டும் என்று மனம் நிச்சயப்பட்டுவிட, சுபாவை நோக்கி முறுவலித்தான் வசீகரன்.

வசீகரமான முறுவல்.

அதில் ஈடுபட்டு, சுபாவும் முகம் மலர்ந்தாள். "போவோமா?" என்று துள்ளிக் குதித்துக் கொண்டு எழுந்தாள்.

"வேறு வழி?" என்று, சிரித்த முகமாகவே அவன் கூறவும், "இதோ ஐந்தே நிமிஷங்களில் வந்து விடுகிறேன்." என்று உள்ளே ஓடினாள் அவள்.

மகளைக் கனிவாக நோக்கியவாறே, "உட்காருங்கள் மிஸ்டர் வசீகரன். என் மகள் ஐந்து நிமிஷத்தில் தயாராவதாகச் சொன்னால், குறைந்தது ஐந்து, ஐந்து நிமிஷங்களாவது ஆகும். அந்த நேரத்தை வீணாக்காமல், அதற்குள் நாம் கொஞ்சம் தொழில் விவகாரம் பேசலாம் என் ஏற்காடு வருமானத்துக்கு ஒரு செலவுக் கணக்கு தந்தேனே, அதைப் பார்த்து முடித்து விட்டீர்களா? வருமான வரி இலாகாவில் ஒத்துக் கொள்ள முடியாத ஏதாவது இருக்கிறதா?" என்று தொழில் பேச்சைத் தொடங்கினார் ராமலிங்கம்.

ஒரு பெரிய கணக்குத் தணிக்கை நிறுவனத்துடைய முக்கியப் பங்குதாரனான வசீகரனுக்குத் தன் தொழில் ஈடுபாடு அதிகம். புள்ளி விவரங்களை விரல் நுனியில் வைத்திருப்பது என்பார்களே, அதுபோல அவ்வளவையும் மனதில் பதித்து வைத்திருப்பான். நகரின் பல முக்கியப் புள்ளிகள், அவனது அந்த 'வெற்றி' நிறுவனத்துடைய, வாடிக்கையாளர்கள். ராமலிங்கமும், அவர்களுள் ஒருவர்.

சொல்லப் போனால்; இந்தத் தொழில் தொடர்பின் மூலமாகத் தான், வசீகரன், சுபாவைச் சந்தித்ததே. தன் இரு மகள்களையும், ராமலிங்கம் தன் தொழில்களில் பங்குதாரர்களாக ஆக்கியிருந்தார். எனவே சில பல கையெழுத்துகளுக்காக, சுபா, சோபிதா இருவரையுமே, வசீகரன் அவ்வப்போது சந்திக்க வேண்டியிருந்தது.

சின்னவள் சோபிதா, சொன்ன இடத்தில் கையெழுத்தைப் போட்டுவிட்டு, அவள் பாட்டில் போய்க் கொண்டே இருப்பாள். ஆனால் சுபா நின்று பேச்சுக் கொடுப்பாள். ஏதாவது குறுக்குக் கேள்வி கேட்பாள், கடைசியாக ஏதாவது ஓர் இடத்தில் கையொப்பமிட மறந்து சென்று விடுவாள். இந்த ஒரு கையொப்பத்துக்காக, ஆளிடம் கொடுத்து அனுப்பினால்,'போட மாட்டேன், நீங்களே வாருங்கள்' என்று அவனை நாயாக அலைய வைப்பாள்.

'இங்கே வாருங்கள், அங்கே வாருங்கள்' என்று இழுத்தடிப்பாள்.



அவள் வரச்சொல்லும் இடங்கள் பெரும்பாலும், நட்சத்திர ஹோட்டலாக இருக்கும், அல்லது பெரிய திரை அரங்குகளாக இருக்கும். சில சமயம் ஸ்பென்சர், ஃபவுண்டன் பிளாசா போல வணிக வளாகங்களாகவும் இருக்கக் கூடும். இரண்டு மூன்று மணி நேரம் அவளோடு சுற்றி அலையாமல், கையெழுத்துப் போட்டுத் தரவே மாட்டாள்.

எல்லாம் வேண்டுமென்றே செய்வது என்பது, அவனுக்கும் புரியாமல் இல்லை. புரிந்ததால், பிடிக்காமலும் போகவில்லை.

சுபாவின் அழகிய தோற்றமும், கவர்ச்சிகரமான உடல் அமைப்பும், எடுத்துக் காட்டும் ஆடை, அணிகலன்களும், இளைஞனான அவனைக்கிறங்க அடித்திருந்தன. எனவே, அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம், அவனும் சந்தோஷமாகவே சென்று கொண்டிருந்தான் எனலாம்.

விரைவிலேயே, இருவரும் அவரவர் காதலைப் பரிமாறிக் கொண்டனர்.

இரண்டு இடங்களிலுமே, யாரும் தடைகளை எதிர்பார்க்க வில்லை.

தாயற்றவன் வசீகரன்.

அவனைத் தொழிலில் ஈடுபடுத்தியவர், அவன் தந்தை பிரகாசம்தான். மகனுக்கு இருபத்தைந்து வயது ஆகிவிட்டது என்பதோடு, தொழிலிலும், தன் சொந்தத் திறமையாலேயே காலூன்றத் தொடங்கிவிட்டான் என்று உணர்ந்தவர், அவனுக்குப் பெண் பார்க்கத் தொடங்கி, அவருக்குத் திருப்தியாய்த் தோன்றிய சில இடங்களுக்கு அவனையும் அழைத்துச் சென்றார்.

சுபா அவன் மனதில் வேர் விடத் தொடங்கியிருந்த நேரம் அது.

திருமண ஆசை கொஞ்சமும் இல்லை என்று, வசீகரன் தலையைப் பெரிய மறுப்பாய்த் திருப்பி விட்டான்.

உலகம் தெரிந்தவர், பிரகாசம். மகன் மனதில் ஏதோ இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டார். மகனும் முட்டாளல்ல, அவனாக வரட்டும் என்று எண்ணியவராய், "உன் விருப்பம். நீயாகப் பார்த்து, உனக்குப் பொருத்தமாக எந்தக் கழுதையை இழுத்து வந்தாலும், ஆசீர்வாதம் செய்யத் தயார்" என்று விட்டு, தன் குன்னூர்ப் பண்ணையைப் பார்க்கச் சென்று விட்டார்.

"அந்தக் கழுதை, உனக்கு ஏற்ற கழுதைதானா, என்பதை மட்டும் ஆராய்ந்து தேர்ந்தெடு" என்பது மட்டும்தான் அவரது அறிவுரை.

எனவே, அவன் வகையில் பிரச்சினைக்கே வழியில்லை. அவள் வகையிலும் அப்படியே இருக்கும் என்றுதான் அவன் நினைத்துக் கொண்டிருந்தான்.

ஆனால் இந்த நிபந்தனை...

உள்ளூரத் தன்னையே உலுக்கி விட்டுக் கொண்டான் வசீகரன்

இந்த நிபந்தனையிலும் ஒன்றும் இராது. அப்படி ஏதேனும் இருந்தால் சுபா, இவ்வளவு அலட்சியமாக, சினிமாவுக்குக் கிளம்ப மாட்டாள். ராமலிங்கமும், இவ்வளவு அமைதியாக 'பிசினஸ்' பேசமாட்டார்.

எல்லாம் சும்மா ஒரு விளையாட்டு. சும்மா ஒரு கேலிப் பேச்சு அவ்வளவுதான். திருமணம் என்றாலே, கேலியும் கிண்டலும் வழமைதானே?

மனம் ஒரு நிலைக்கு வந்துவிட, வசீகரனும் தொழில் பேச்சில் கவனத்தைச் செலுத்தினான். "இரண்டு அயிட்டங்கள், சார். சுபாவுக்கு ஒரு ரூபி செட் வாங்கியதைக் கணக்கில் எழுதியிருக்கிறீர்கள் அப்புறம் சோபிதாவுக்கு வைரத்தில் ஒரு மோதிரம். நகை வாங்குவதை வரிக் கழிப்புக்குரிய கணக்கில் சேர்க்க முடியாது அல்லவா?...'



"அடடா... ஆமாம். அதை மறந்து விட்டேன் பாருங்கள். செலவு கணக்கில் மொத்தத் தொகை எவ்வளவு வேண்டும் என்பதை மட்டும் பார்த்துச் சேர்த்து எழுதிக் கொண்டிருந்தேனா? இந்தப் பாயிண்டை மறந்து போனேன். இப்போது என்ன செய்வது? கிட்டத்தட்ட முக்கால் லட்சத்துக்கு கணக்கு உதைக்குமே."

"அதற்கென்ன சார். அதுதான் ஆண்டுதோறும் அலுவலகத்துக்கு மேஜை நாற்காலி, சோபா செட் வாங்குவது, வெள்ளையடிப்பது, அலங்கரிப்பது என்று நிறைய விஷயங்களுக்கு அனுமதி இருக்கிறதே சமாளித்து விடலாம்" என்று வசீகரன் வழி சொல்லிக் கொடுக்க ராமலிங்கம் சிரித்தார்.

"'வெற்றி', ஏன் வெற்றிகரமாக நடக்கிறது என்பது நன்றாக விளங்குகிறது..." என்று அவர் புகழ்ச்சியாக சொல்லிக் கொண்டிருக்கும் போதே, 'கும்'மென்ற வாசனை கட்டியம்கூற, சுபா வந்து விட்டாள்.

"என்ன ஆச்சரியம். என் பெண்களில் ஒருத்தி இவ்வளவு சீக்கிரமாக வெளியே செல்லத் தயாராகி வந்து விட்டாளே. மழை கொட்டப் போகிறது" என்று வேடிக்கை பேசினார், பெற்றவர்.

"போங்கப்பா, ஆனால் நான் உடை கூட மாற்றவில்லை. உடை மாற்றி, அப்புறம் அதற்கு ஏற்ற நகை, நகச் சாயம், எல்லாம் பார்ப்பதானால் தியேட்டரில் படம் தொடங்கிவிடும். நான் பார்க்க வேண்டிய காட்சி வேறு சீக்கிரமே வருகிறதா? அது முடிந்து விட்டால் அப்புறம் இதே சினிமாவுக்கு இன்னொரு தரம் போக வேண்டியதாகி விடும்..." என்று சுபா சொன்னதுமே, வசீகரன் சட்டென எழுந்து விட்டான்.

இந்தக் கண்றாவிப் படத்துக்கு இன்னுமொரு முறை போவதா? என்னதான் சுபாவின் அருகில் இருப்பதற்கு அவனுக்கு ஆசையே என்றாலும் இது ரொம்பவுமே அதிகப்படி.

"சீக்கிரம் வா, சுபா. படம் தொடங்குமுன் போய் விடலாம். வா...வா..." என்று அவளை அழைத்தான்.

அவனது அவசரத்தைப் பார்த்துத் தந்தை மகள் இருவருக்குமே சிரிப்பு வந்தது.

"பயப்படாதீர்கள் வசீகரன். இன்னமும் படம் தொடங்குவதற்கு நிறையவே... அதாவது நீங்கள் போக்குவரத்து நெரிசலில் இரண்டு தரம் நின்று சென்றால் கூடப் போய்ச் சேர்ந்து பத்து நிமிஷத்துக்கு அப்புறம்தான் படம் தொடங்கும். அதனால் அவசரப்படாமல் நிதானமாகவே செல்லலாம். சுபிம்மா, உன்னிடம் கொடுத்தேனே, அந்தச் சொத்து லிஸ்ட் வைத்திருக்கிறாய் அல்லவா? திரும்பி வருமுன், வசீகரன். அவைகளின் இன்றைய மதிப்பு அவற்றின் மூலம் வரும் வருமானம் போன்ற விவரங்கள் எல்லாம் அதில் இருக்கின்றன. அதை ஒரு முறை படித்துப் பார்த்தீர்கள் என்றால், முடிவுக்கு வருவது உங்களுக்கு எளிதாக இருக்கும்" என்று மீண்டும் அவனைத் திகைக்க வைத்தார், ராமலிங்கம்.

அப்படியானால், இந்தப் பேச்சை இவர் விடுவதாக இல்லை. விளையாட்டாகவோ, வேடிக்கையாகவோ சொல்லவும் இல்லை.

'ஜிவ்'வென்று சினம் தலைக்கேற, "நான் உங்கள் ஆடிட்டர், சார், இந்தச் சொத்துக் கணக்குகள் எல்லாமே, எனக்கு ஏற்கனவே தெரியுமே" என்றான் அவன் குரலில் எதையும் காட்டாமல்.

"எதற்கும், அவளதை மட்டும் தனியாக வைத்துப் பார்ப்பது நல்லது" என்றார் வயதில் மூத்தவர்.

'பார்த்து? 'இவ்வளவு சொத்தா?' என்று மயங்கி விழ வேண்டுமா? அப்படி விழுகிறவனை உங்கள் மகளுக்கே பிடிக்குமா...' என்று வசீகரன் எண்ணமிடும் போதே, "நான் அப்போதே அந்த லிஸ்டை என் பைக்குள் எடுத்து வைத்து விட்டேன், அப்பா. அதைக் காட்டி அவரிடம் பேசவும் போகிறேன். தயவு பண்ணி, இதற்கு மேல் பேசாதீர்கள். வீண் விவாதம் செய்து கொண்டிருந்தால், எனக்குத் திரைப்படத்துக்குத் தாமதம் ஆகிவிடும். பைபை" என்றபடி: வசீகரனிடம் திரும்பினாள் சுபா. "என்ன போவோமா?"



அவளிடம் முன்னே செல்லுமாறு சைகை செய்து விட்டு, ராமலிங்கத்திடம் ஒரு தலையசைவுடன், வசீகரன் கிளம்பி விட்டான்.

அருகில் அமர்ந்து அப்படி, இப்படி என்று சளசளத்தபடி வந்த சுபா, சற்று பொறுத்து வெளியே எட்டிப் பார்த்து, "என்ன வசி, இது தியேட்டருக்குப் போகும் வழி இல்லையே. அல்லது இந்தப் பக்கமாகக் குறுக்கு வழி எதுவும் இருக்கிறதா?" என்று வினவினாள்.

"இல்லை." என்றான் அவன் சுருக்கமாக.

"அய்யோ, நான் அந்தப் படத்தைக் கட்டாயம் பார்க்க வேண்டும். காரைத் திருப்புங்கள். சீக்கிரம்" என்று அதட்டியவள், காதே கேளாதவன் போல, அவன் நேரேயே செல்லவும், "ப்ளீஸ் வசி, எனக்கு அந்தப் படம் கட்டாயம் பார்க்க வேண்டுமே. வசிம்மா, ப்ளீஸ்மா" என்று அவனிடம் கொஞ்சிக் கெஞ்சலானாள்.

சற்றும் இளகாமல், "அதை நாளை பார்த்துக் கொள். இப்போது எதையோ என்னிடம் பேசப் போவதாக உன் தந்தையிடம் அளந்துவிட்டு வந்தாயே. என் வீட்டுக்குப் போய் அதைப் பேசிவிட்டு வரலாம்."

"அதில்லை, வசிம்மா..." என்று அவள் மேலும் கொஞ்சலாகச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, கார் அவனது ஃப்ளாட் இருந்த காம்பவுண்டுக்குள் நுழைந்தது.

அவள் முறைத்துப் பார்த்ததை லட்சியமே செய்யாமல், அவன் காரை நிறுத்திவிட்டு, அவன் இறங்கவும் வேறு வழியின்றி, அவளும் காரை விட்டு இறங்கினாள்.

அங்கிருந்த இரு காவலர்களில் ஒருவனிடம் சாவியைக் கொடுத்துக் காரை அவன் இடத்தில் நிறுத்தி வைக்கும்படி கூறிவிட்டு, இறுகிய முகத்துடன் 'லிஃப்ட்'டை நோக்கி நடந்தான் அவன்.

தலையை ஒரு வெட்டு வெட்டிவிட்டு, ஒயிலாக அவனைப் பின் தொடர்ந்தாள் சுபா என்று அழைக்கப்படும் சுபலேகா.

அப்படி, இவன் எங்கே போய் விடுவான்?

## 2

கதவைத் திறந்து, வீட்டினுள் சென்றதுமே, இங்கே இவளைக் கூட்டி வந்தது தவறு என்று, வசீகரனுக்குத் தோன்றத் தொடங்கி விட்டது.

முக்கியமான எதையும் சீரியசாகப் பேசுவது என்றால், சுபா என்னென்ன செய்வாள் என்பது அவன் அறியாதது இல்லை. வெளியே, ஏதாவது பொது இடத்தில் அவள் கூடக் கொஞ்சம் பொறுப்போடு பேசக் கூடும்.

ஆனால், அழைத்து வந்தது வந்தாகிவிட்டது. ஒழுங்கானபடி அவளைப் பேச வைப்பது, அவன் பொறுப்புதான்.

பெருமூச்சை அடக்கியபடி, திரும்பிப் பார்த்தால் சோபாவில் பாதி படுத்த நிலையில், சாய்ந்து கிடந்தாள் அவள். உடலின் அழகிய வளைவுகளை அனாயாசமாய் எடுத்துக் காட்டும் தோற்றம்.

அருகில் சென்று, அள்ளி அணைக்கத் தூண்டிய உணர்வுகளை அடக்கிக் கொண்டு, "எழுந்து ஒழுங்காக உட்கார் சுபா. முக்கியமான விஷயம் பேச வேண்டும்" என்று கறார்க் குரலில் கூறினான் வசீகரன்.

"ஏனோ? பேசுவதற்கு வாயும், காதும்தானே வேலை செய்ய வேண்டும்? நீங்கள் பேசுவது எனக்கு நன்றாகக் கேட்கிறது. சொல்லுங்கள்." என்றாள் அவள் சற்றும் அசையாமல் அப்படியே கிடந்தபடி.



மூச்சு முட்டுவது போல, ஜன்னலின் அருகே சென்று வெளியே பார்த்தான், வசீகரன்.

தூரத்தில் பொன் மணல் பரப்பும், கடலில் ஆங்காங்கே கப்பல்களும்... ஜன்னலின் வழியே தெரிந்த காட்சி, நெஞ்சை அள்ளுவதாகத்தான் இருந்தது. இரவு நேரத்தில் அழகு இன்னும் அதிகரித்துத் தெரியும். இந்த அழகுக்காகவே, இந்த 'அப்பார்ட் மெண்டை' வசீகரன் வாங்கினான்.

ஆனால், இப்போது அந்த அழகு கண்ணில் படவே இல்லை.

ஒரு பெரிய மூச்சை எடுத்துக் கொண்டு, சுபாவின் புறம் திரும்பினான்.

அவன் பேசத் தொடங்குமுன், கைப்பையிலிருந்து, ஏற்கனவே எடுத்து வைத்திருந்த காகிதக் கற்றையை, சுபா அவனிடம் நீட்டினாள். "முதலில் இதைப் படித்துப் பார்த்து விடுங்கள். அப்புறமாக நாம் பேசலாம்" என்று ஒரு மயக்கும் புன்னகையை வீசினாள் அவள்.

அதை வாங்காமலே, "எல்லாம் உன் சொத்துப் பத்திரங்கள் தானே? உள்ளே வை. என்ன சுபா, இது? இது என்ன பைத்தியக் காரத்தனமான நிபந்தனை? மிஸ்டர் ராமலிங்கம்தான் என்னவோ உளறுகிறார் என்று பார்த்தால் உனக்கும் எல்லாம் தெரியும்போல, நீயும் அதை ஏற்றிருப்பது போலல்லவா தோன்றுகிறது. இது சரியல்ல என்று உனக்குமா புரியவில்லை?" என்று வசீகரன் தவிப்புடன் பேசினான்.

"நீங்கள் சொல்வதுதான் எனக்குப் புரியவில்லை. அப்பாவின் நிபந்தனையில் என்ன தப்பு இருக்கிறது?" என்று உதட்டைக் குவித்து, உடம்பை நெளித்துக் குறைப்பட்டாள் அவள்.

"என்னவோ? அவர் சொன்னதை, நீ முழுக் கவனத்துடன் கேட்டாயா? இல்லை என்று நினைக்கிறேன். எங்கள் வீட்டுத் தொடர்பை அடியோடு அறுத்துக் கொண்டு வர வேண்டும் என்கிறார். உன் அப்பா. எப்படி முடியும்? நான் என்ன, வானத்திலிருந்து, தரையில் தொப்பென்று குதித்தவனா? நான் அடிக்கடி என் பாட்டியைப் பார்த்துவிட்டு வருவது உனக்குத் தெரியும் அல்லவா? உன்னைக் கூட அங்கே வருமாறு பலமுறை அழைத்தும், உன்னால் வர முடியாமலே போயிற்றே. அவர்கள் என்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற தாயாரைப் பத்து மாதம், தன் வயிற்றில் சுமந்து பெற்றவர்கள். அவர்களை, நான் எப்படி விட முடியும்? என் தந்தை. என் அம்மா இறந்தபின் மறுமணமே செய்து கொள்ளாமல் என்னை வளர்த்தவர். என்னைப் படிக்க வைத்து தொழிலிலும் ஒரு நல்ல நிலைக்கு உயர்த்தி விட்டவர். அவரை நான் எப்படித் துறக்க முடியும்? அத்தோடு, என் தொழில். முதல் படியில் அப்படி ஏற்றி விட்டபோதும், மீதி வளர்ச்சி என் முயற்சிதானே? இந்த ஃப்ளாட் பார். முப்பது லட்ச ரூபாய். முழுவதும் என் சம்பாத்தியம் தானே? இதைத் தந்த என் தொழிலை எப்படி விடுவேன்? இன்னும் கூட, எவ்வளவு உயரமோ போவேன். எல்லோரும், அண்ணாந்து பார்க்கும் அளவுக்கு. எதையும் யோசியாமல், எல்லாவற்றையும் விட்டுவிட்டு வா என்றால், எப்படி முடியும்? நீயே யோசித்துப் பார்" என்றான் அவன்.

அவளுக்குப் புரிய வைத்திடும் வேகத்துடன், முழு மூச்சாய் அவன் பேசி முடித்ததற்கு அவளது பிரதிபலிப்பு அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக இருந்தது.

கண்களை வட்டமாக விரித்து, அவனை ஆச்சரியம் தோன்றப் பார்த்தாள் சுபா. "வாவ். எவ்வளவு நீளப் பேச்சு. தங்கு தடையே இல்லாமல் திக்கித் திணறாமல், என்ன அருமையாகப் பேசினீர்கள் தெரியுமா? நீங்கள் அரசியலுக்குப் போயிருக்க வேண்டும், வசி. இப்படி நாலு மேடையில் பேசினால் போதும். சீக்கிரமே பெரிய ஆளாகி விடலாம். ஆளும் கட்சியில், அப்பாவுக்குச் சில சினேகிதர்கள் உண்டு. பார்க்கச் சொல்லட்டுமா?"



"சுபலேகா."

வசீகரனின் முகத்திலிருந்த திகைப்பு மாறி, கண்கள் கூர்மை பெற்றன. "அதாவது, உன் தந்தையின் நிபந்தனைகள், உனக்கு ஏற்கனவே தெரியும். அவை உனக்கும் சம்மதம்தான். அப்படித் தானே?"

சுபாவின் பளிங்குக் கண்களில், எந்தவித உணர்ச்சியும் இல்லை. எந்தவித உணர்ச்சியையும், அவள் அப்போது காட்ட விரும்ப வில்லை.

சொந்த பந்தம் அனைத்தையும் அறுத்துக் கொண்டு தொழிலையும் விட்டுவிட்டு, மாமனார் வீட்டோடு வந்து விட வேண்டும் என்று வசீகரனுக்கு ராமலிங்கம் விதித்த நிபந்தனையில் அவளுக்கும் பங்கு இருந்தது. தன் தொழிலில் ஈடுபட்டு, தன் வீட்டோடு இருக்கும் மாப்பிள்ளைதான் வேண்டும் என்பது ராமலிங்கத்தின் உறுதியான கருத்து. அதை அவர் விடுவதாக இல்லை. ஆனால் சொந்த பந்தத்தை விலக்கும் யோசனை, அவளது. அதை அவரும் ஆமோதித்தார்.

ஆனால், அதை இப்போது தெரிவிப்பது சாதகமாகாது என்று உணர்ந்து தந்தையை நியாயப்படுத்த முனைந்தாள் அவள்.

"பாருங்கள் வசி. அப்பாவுக்கு நாங்கள் இரு பெண்கள் மட்டும்தான். அவர் தேடி வைத்திருக்கும் பெரும் சொத்தைப் பாதுகாத்துப் பராமரிக்க, அவர் மருமகன்களைத்தானே நம்பியிருக்க வேண்டும்...?"

"ஏனோ?" என்று இடையில் குறுக்கிட்டான் வசீகரன். "இதென்ன, காடு கழனிக்குச் சென்று, உழுது பயிரிட்டு ஆடு, மாடு, காட்டு மிருகங்களிடம் இருந்து காப்பாற்றுகிற வேலையா?

இல்லையே. எல்லாம் பல்வேறு வகை முதலீடுகள், மொத்தமாய்க் கம்பெனி வாடகைகள், ஏற்காடு பண்ணை வருமானம் கூட கணக்கைப் பார்த்தால் போதும். கொஞ்சம் பயிற்சி எடுத்துக் கொண்டால், நீயும் உன் தங்கையுமே கவனித்துக் கொள்ளலாம். உதவிக்கு லீகல் அட்வைசர், ஆடிட்டர் என்று நாங்களும் இருக்கிறோம். எனவே சொத்தைப் பாதுகாக்க, மருமகன்தான் தேவை என்று கிடையவே கிடையாது. இப்போதே சோபிதாவுக்கு நிறையத் தெரியும். உனக்கும், ஓரளவு தெரியும். இன்னும் கொஞ்சம் கற்றுக் கொண்டால் போதும்."

இவன் விஷயம் தெரிந்தவன். இவனிடம் அறியாப் பெண் வேஷம் போட்டு, ஏமாற்ற முடியாது.

ஒரு முடிவுக்கு வந்து, "இதோ பாருங்கள் வசி, அப்பாவின் பிடிவாதம் உங்களுக்குத் தெரியும். அவர் ஒன்று சொன்னால், சொன்னதுதான். நம் இருவருக்கும் திருமணம் நடக்க வேண்டும் என்றால், நான் உங்களுக்கு வேண்டும் என்றால், அப்பாவின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதுதான் வழி" என்று மறைமுகமாக மிரட்டினாள்.

ஆனால் அதற்கும் மசியாமல் மீண்டும், "ஏனோ" என்று கேட்டான் அவன்.

திகைப்புற்று, "அப்படியென்றால்? 'ஏனோ' என்றால், என்ன அர்த்தம்?" என்று விசாரித்தாள் அவள்.

"உனக்கு வயது இருபத்து மூன்று ஆகிறது. நாம் இருவரும் விரும்பி மணந்து கொள்வதை யாராலும் தடுக்க முடியாது."

"வாயைக் கழுவுங்கள்" என்றாள் சுபலேகா ஆத்திரத்துடன். "அப்படி எதுவும் செய்தால், சொத்தில் ஒரு பைசா தர முடியாது என்று அப்பா சொல்லவில்லை. அதைப் பற்றிய யோசனையே இல்லாமல் மடத்தனமாக உளறுகிறீர்களே. அப்பா எவ்வளவுதான் குழைந்து, கனிந்து பேசினாலும் அவர் ஒன்று சொன்னால், சொன்னதுதான். அதை மாற்றவே மாட்டார். நினைவிருக்கட்டும்" என்று படபடத்தாள்.



ஆனால், "மாற்ற வேண்டாம்" என்றான் அவன் அலட்சியமாக.

அவள் முறைத்துப் பார்க்கவும், "மெய்யாகத்தான் சொல்லுகிறேன், சுபா. உனக்கே தெரியும் நான் நன்றாகத்தான் சம்பாதிக்கிறேன். இப்போது நீ பழகியுள்ள வாழ்க்கைத் தரம் சற்றும் குறையாமல் ஒரு செழிப்பான வாழ்க்கையை உனக்குத் தர என்னால் முடியும். பிறகென்ன எல்லாவற்றையும் விட்டுவிட்டு நான் அங்கே வருவது? அதைவிட நீ என்னிடம் வா. நீ எதையுமோ யாரையுமோ விட்டுவிட வேண்டும் என்று கூட, நான் உன்னிடம் சொல்லப் போவது இல்லை" என்று இலகுவாக முடித்து முறுவலித்தான் வசீகரன்.

சிரிப்பு வேறா, என்று கொதித்தது அவளுக்கு.

"முப்பது கோடிச் சொத்தை விடுவதா? மாட்டேன்.." என்று கிரீச்சிட்டாள் அவள். "அத்தோடு மாமனார் சொந்தக்காரர்கள் என்று கண்டவர்களோடு அனுசரித்துப் போக, என்னால் முடியாது" என்று அவள் கத்தவும், அவன் முகம் கடுத்தது.

"என் உறவினர்கள், உனக்குக் கண்டவர்களா?" என்றான் அவனும், ஆத்திரத்துடன்.

வசீகரனின் சினத்தைக் கண்டதும், சுபா கொஞ்சம் தணிந்தாள். "அதுதான் சொன்னேனே வசி. நான் என் விருப்பப்படி வளர்ந்தவள். என்னால் மற்றவர்களுக்குச் சரியாக வளைந்து கொடுக்க முடியாது. அத்தோடு இந்த முப்பது கோடிச் சொத்தை விட்டுவிடவும் முடியாது. நீங்கள் அங்கே எங்கள் வீட்டுக்கு வருவதுதான் நல்லது. அதுதான் சரியான முடிவு வசி. வந்து விடுங்கள்" என்றாள்.

சிறு கசப்புடன் நோக்கி, "என்னைவிட, உனக்குப் பணம்தான் பெரிதாகிப் போயிற்றா?" என்று கேட்டான் வசீகரன்.

“அப்படிப் பார்த்தால், காதலித்து மணந்து கொள்ளப் போகும் என்னைவிட, உங்களுக்கு உங்கள் சொந்தக்காரர்களும் தொழிலும் தான். பெரிதா என்று நானும் கேட்கலாம்தானே? பணம் என்று அவ்வளவு அலட்சியமாகச் சொல்லுகிறீர்களே. எவ்..வ்வளவு பணம்? அதை எண்ணிப் பார்த்தீர்களா? முப்பது லட்சம் வீட்டைப் பெரிதாகச் சொல்லுகிறீர்களே. அது முப்பது கோடி. இப்போது உணர்ச்சி வசப்பட்டு, வாயில் வந்ததைக் கூறுகிறீர்கள். சற்று யோசித்துப் பார்த்தால், உங்களுக்கே புரியும். அத்தோடு...” என்று எழுந்தவள், தலையைச் சரித்து அவனை நோக்கி மோகனமாக முறுவலித்தாள். “என்னை மறக்க உங்களால் முடியாது. இந்தக் கோபம் தாபம் எல்லாம் கொஞ்சம் தணிந்ததும், உங்களுக்கே உண்மை புரிந்து நீங்களே என்னைத் தேடி, ஓடி வருவீர்கள். அதுவரை பை...” என்று கைப்பையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

“கீழே வாட்ச்மேனிடம் தானே, உங்கள் கார் சாவி இருக்கிறது. வாங்கிக் கொண்டு போகிறேன். அப்புறம், ஒரு டிரைவர் மூலம் காரை அனுப்பி வைக்கிறேன். அதற்குள் என்னைப் பார்க்க வேண்டும் என்று வந்து விட்டால் உங்கள் பழைய காரில் வாருங்கள். உங்கள் வரவுக்காக நான் வீட்டிலேயே காத்திருப்பேன்.” என்று சொல்லிக் கொண்டே போனவளின் குரல் தேய்ந்து மறைந்தது.

தேடிப் போவேனா? நானா? என்று ஆத்திரத்துடன் எண்ணினான் வசீகரன். அவ்வளவு மனோதிடம் அற்றவன் என்றா, அவனைப் பற்றி அவள் எண்ணினாள்.

அதுவும், அவனைவிடச் சொத்து பெரிதென்று சொன்ன வளையா தேடிப் போவான்?

முப்பதுகோடியென்ன, முன்னூறு கோடியே என்றாலும், அவனைவிட அந்தப் பணம் பெரிதென்று அவள் சொல்லலாமா? அவன் என்றேனும் அப்படிச் சொல்லுவானா?

இத்தனைக்கும் அவன் சுபாவை மண் குடிசையிலா அவனோடு வாழச் சொன்னான்? மகாராணி மாதிரியல்லவா வாழ வைப்பதாகச் சொன்னான்.



அப்படியும், அந்த முப்பது கோடி பெரிதென்று போய் விட்டாளே!

அதுவும் சும்மா போகவில்லை!

அவளுடைய தந்தையின் அசட்டுத்தனமான நிபந்தனைகளை ஏற்று பெற்றவர், சுற்றம், நட்பு, தொழில் எல்லாவற்றையும் உதறிவிட்டு அவள் பின்னே வாலாட்டிக் கொண்டு வந்து நிற்பான் என்று ஆரூடம் வேறு சொல்லிவிட்டுப் போனாள்.

அப்படி வாலாட்டுகிற நாய்தான், அந்த வீட்டுக்கு வேண்டுமாம்.

அதற்கு அவள் வேறு யாரையேனும் காதலித்திருக்க வேண்டும்.

வசீகரன் மானமுள்ளவன்.

அவன் ஒரு நாளும் அப்படி..., என்று அவன் எண்ணமிடும் போதே, அந்தத் தளத்தில் ‘லிஃப்ட்’ நின்று கதவு திறக்கும் ஓசை கேட்டது.

அவள்தான், திரும்பி வந்து விட்டாள்.

ஆவலாக ஓடிச் சென்றவன், வேறு யாரோ ‘லிஃப்ட்’ கதவை மூடிக்கொண்டிருக்கக் கண்டு திகைத்தான். மனதில் வலியுடன் கூடிய திகைப்பு.

அப்படியானால், அதற்குள்ளாக அவளுக்காக அவன் மனம் ஏங்கத் தொடங்கி விட்டதா?

என்ன ஏங்கினாலும் அந்த நிபந்தனைகளை அவன் ஏற்கப் போவது இல்லைதான். ஆனால் வருத்தம், வருத்தம்தானே?

ஊகூம். இந்த வீட்டில் இப்படித் தனியே மொட்டு மொட்டென்று அமர்ந்து சுபாவை எண்ணி ஏங்கிக் கொண்டிருப்பது சரியல்ல, அதைவிட...

எழுந்து, ஒரு நாள் தங்குவதற்குத் தேவையான துணி, பிரஷ் என்று எல்லாம் எடுத்து வைத்தான்.

சுபாவிடமிருந்து, கார் வந்ததும் திருச்சிக்கு கிளம்பி விட்டான்.

திருச்சியில் தான் அவனுடைய தாய்வழிப் பாட்டியின் வீடு இருக்கிறது.

பாட்டிக்கும், இரண்டே பெண்கள்தான். வசதிதான். ஆனால் எந்த மருமகனையும் வீட்டோடு மாப்பிள்ளையாக வந்தாக வேண்டும் என்று நிபந்தனை விதித்ததில்லை. மூத்த மகள் இருப்பது மும்பையில். ஆனால் இளைய மகள் இறந்து விட்ட பிறகும் மும்பைக்குச் சென்று பெரிய மகளோடு சேர்ந்து வசிப்பதற்குப் பாட்டி மறுத்து விட்டாள். வேலைக்கு ஆட்களை வைத்துக் கொண்டு, சொந்த வீட்டில் தனியாகவேதான் வசித்து வருகிறாள். அவ்வப்போது வசீகரன் போய்ப் பார்த்து, ஏதாவது தேவையா என்று விசாரித்து விட்டு வருவான்.

அவன் வந்து கூட இருக்கும் அந்த ஒரு நாள் அவளுக்கு சொர்க்கம்.

அருகிலேயே உட்கார வைத்துக்கொண்டு ஊர்க்கதையெல்லாம் அளப்பாள். அவனிடமும் கேட்பாள். அவனும் சென்னையில் உள்ள வேலைப் பளு இல்லாமல் நிம்மதியாக இருப்பான்.

இருவருக்கும் மகிழ்ச்சியாக, நாள் கழியும். மலைக் கோட்டையில் ஏறிவிட்டுப் புத்துணர்ச்சியோடு திரும்பி வருவான். பாட்டியால், ஒரு சிறு சஞ்சலம் கூட ஏற்படாது. தன் காதலைப் பற்றிச் சொன்ன போதுகூட 'கவனம் அவசரப்படாதே. எச்சரிக்கையோடு யோசித்து முடிவு செய்' என்று எல்லோரும் சொல்லும் அறிவுரைகளைப் பாட்டி சொன்னதில்லை.

"அப்படியாப்பா? ரொம்ப சந்தோஷம். அடுத்து நீ வரும்போது ஒரு தரம் அவளை அழைத்து வருகிறாயா? உன்னோடு சேர்த்துப் பார்க்க எனக்கு ஆசை" என்று மட்டும்தான் சொன்னாள்.

இந்தப் பாட்டியைப் போய், சுபாவுக்குப் பிடிக்காதாமே. கண்டவர்களை அனுசரித்துப் போக அவளுக்குப் பிடிக்காதாம். கண்டவர்கள். முதலிலேயே அவனுடைய உறவினர்கள் வேண்டாம் என்று முடிவே கட்டியிருக்கிறாள். அதனால்தான், பாட்டியைப் பார்க்க வென்று அத்தனை தரம் அழைத்தும், ஏதேதோ சாக்குச் சொல்லி, வராமலே இருந்து விட்டாள். இன்று கண்டவர்கள் என்று அவனிடமே சொல்லுகிறாள்.



இன்று அவனுடைய பாட்டியை அனுசரிக்க முடியாது என்பவளிடம், அவன் மட்டும் என்ன அனுசரணையை எதிர்பார்க்க முடியும்? இருந்திருந்து, இவளிடம் போய் மனதைப் பறி கொடுத்தானே.

மனசு சரியில்லாதபோது, காரை ஓட்டாதிருப்பது நல்லது. அதிலும் வேகமாக ஓட்டவே கூடாது என்பதன்படி, போக்குவரத்து அதிகம் இல்லாத சமயங்களில் கூட, வசீகரன் அன்று அதிக வேகம் எடுக்கவில்லை.

நிதானமாக ஓட்டிச் சென்று, ஹோட்டலில் அறையெடுத்து அங்கேயே குளித்து உணவை முடித்துக் கொண்டு, பாட்டி வீட்டுக்குச் சென்றான். முன் அறிவிப்பின்றித் திடீர் என்று வரும்போ தெல்லாம் அவன் வழக்கம் இதுதான்.

பாட்டியுடைய பணியாட்களுக்குத் திடீர் வேலை கொடுத்து எரிச்சல் மூட்ட அவனுக்குப் பிரியம் இல்லை. அந்த எரிச்சல் பாட்டியிடம் பிரதிபலிக்கக் கூடுமே!

பாட்டியின் வீட்டுத் தெருவில் காரை மெதுவே செலுத்தியபடி, வசீகரன் சுற்றிலும் பார்த்தான்.

இரட்டைப் படுக்கையறையுடன் கூடிய பாட்டியின் வீடு தவிர, எல்லாம் பெரிய பெரிய வீடுகள் ஆகி விட்டிருந்தன. ஆனால் சுற்றிலும் மரம் செடி, கொடிகளோடு பாட்டியின் வீடே மனதிற்கு அமைதியளித்தது.

காரை ஓரமாக நிறுத்திவிட்டு அவன் இறங்கிச் சென்றபோது, ஒரு பெண்ணின் இனிய குரல், 'இவ்விதம் கூறிவிட்டு, வானதி சிரித்தாள்.

அதைக் கேட்ட குந்தவையும் சிரித்தாள். பொன்னியின் செல்வனும் சிரிப்பை அடக்கப் பார்த்து முடியாமல் குபீர் என்று வாய்விட்டுச் சிரித்தான்' என்று ரசனையுடன் வாசித்துக் கொண்டிருந்ததைக் கேட்டு, அப்படியே நின்று கேட்டான்.

கல்கியின் 'பொன்னியின் செல்வன்'.

"'... காற்றும் மிருதுவான குரலில் சிரித்து மகிழ்ந்தது'' என்று அவள் முடித்தபோது வசீகரனின் முகத்திலும், புன்னகை எட்டிப் பார்த்தது.

'எதிர் வீட்டுப் பெண் கதை வாசித்துக் காட்டுவாள். அதில் மட்டுமல்லாமல் அதை நினைத்துக் கொண்டிருப்பதிலும் பொழுது போய் விடும்' என்று பாட்டி அவ்வப்போது சொல்லும் போது வசீகரன் அதைப் பெரிதாக நினைத்தது கிடையாது. ஆனால் தானும் ரசித்து அவள் வாசித்த விதம், அவனுள்ளும் அந்தக் காட்சியைத் தோன்ற வைத்தது.

கதையில் வந்த நந்தி மண்டபத்தையும் கால்வாயையும் கற்பனை செய்தபடி, அவன் உள்ளே செல்லுகையில், "இந்த பாகம் முடிந்து விட்டது. பாட்டி நாளைக்கு அடுத்ததைத் தொடங்கலாம். நேரமாகி விட்டது. வரட்டுமா?'' என்றவாறு அவசரமாக வெளியே வந்து கொண்டிருந்த அந்தப் பெண், எதிரே வசீகரன் வருவதைக் கண்டதும், அரை வினாடி தயங்கி வழி விலகி மீண்டும் வேகமாகச் சென்று விட்டாள்.

அந்த அரை விநாடியில் பார்த்த அளவில் கலைந்த கூந்தலும், நலுங்கிய ஆடையுமாகப் பாட்டியுடைய எதிர் வீட்டுப் பெண்ணின் தோற்றம் அவனுக்குச் சற்று ஏமாற்றத்தையே அளித்தது.

எந்நேரமும், 'சிக்' கென்று உடையணியும் சுபலேகாவின் நினைவு தானாக வர, அவன் முகம் மீண்டும் கடுத்தது. இவளிடமிருந்து அவனுக்கு விடுதலையே இல்லையா?



# 3

எந்நாளையும்விட அதிகமாக, அன்று அபரஞ்சிக்கு வேலை நெட்டி முறித்தது. பொதுவாக, அவ்வப்போது கிடைக்கும் பத்துப் பதினைந்து நிமிஷ ஓய்வுகூட, அன்று அரிதாகிவிட்டிருந்தது.

இதில் எதிர் வீட்டுப் பாட்டியை எப்போது போய்ப் பார்ப்பது? பாவம், அவள் வருவாள் என்று காத்துக் கொண்டே இருப்பார்களே. வாசித்துக் காட்டக் கதைப் புத்தகம், கால் முட்டிகளில் தடவி விடத் தைலம்... இத்யாதி உபகரணங்களோடு வேலை வாங்கிக் கொண்டு சும்மா அனுப்ப மனமில்லாததால் அவளுக்கு வைத்துக் கொடுக்க, சில விலை உயர்ந்த வகை பிஸ்கட், கேக்கும் வாங்கி வைத்திருப்பார்கள். அதைச் சாப்பிட்டுக் கொண்டே இருவருமாகப் பேசிக் கொண்டிருப்பது வழக்கமாகி விட்டிருந்தது.

அவளுக்கு ஒரு சந்தேகம் கூட. ஏதாவது நல்லதாக அவளைச் சாப்பிட வைக்க வேண்டும் என்பதற்காகவே, அப்படிச் சொன்னால் தினமும் வர மாட்டாளோ என்று தனக்கு உதவி என்று பாட்டி அழைக்கிறாரோ என்று.

எப்படியோ, அது ஒரு உற்சாக பானம் போல, அவளுக்கும் அன்றையத் தினத்தை நல்லபடியாகக் கழிய வைக்கும்.

வேலை வாங்குவதற்கு மட்டுமே அபரஞ்சி என்று எண்ணாத ஒருவரைப் பார்த்துப் பழகுவதே தெம்பளிக்கிறதோ என்னவோ?

புஸ்தகங்கள் பற்றிய பேச்சு, பல்வேறு விஷயங்களைப் பற்றிய ஒத்த கருத்து இல்லாவிட்டாலும்கூட, அதைத் தடையின்றி

விவாதிக்கும் சலுகை. இப்படிப் பல காரணங்களால் பகவதிப் பாட்டியின் வீடு. அபரஞ்சிக்கு ஓர் அடைக்கலபுரமாக இருந்தது.

அங்கேதான் நன்றாக மூச்சு விட முடிவது போல இருக்கும்.

ஆனால் இன்று பாட்டி வீட்டுக்குப் போக முடியாமல் அதனால் அந்த நல்ல மூச்சை விட முடியாமலே போய் விடப் போகிறது என்று சோர்வுடன் எண்ணியவாறே மதிய விருந்துக்குப் பயன்படுத்திய அக்ரோஓபல் தட்டுகளைக் கழுவியவள், அவற்றை ஒவ்வொன்றாகத் துடைக்கத் தொடங்கினாள்.

"மெள்ள, மெள்ள வைடி, ஒரு தட்டு, இரு நூறு, முன்னூறு கொடுத்து வாங்கி வைத்திருக்கிறேன். உன் எரிச்சலில், அதைப் போட்டு உடைத்து விடாதே" என்றாள் சத்தமின்றிப் பின்னே வந்து அவளது வேலையைக் கண்காணித்த சித்தி பாக்கியம்.

அப்படி எத்தனை தட்டுகளை அபரஞ்சி உடைத்திருக்கிறாளாம்? இதுவரை உடைந்த நாலும், இரண்டு தட்டுகள், ஒரு காபிக் கப், ஒரு கிறிஸ்டல் தம்ளர் அனைத்துமே, இந்தச் சித்தியுடைய செல்ல மகள் செல்வி உடைத்ததுதானே? அதுவும் பயன்படுத்தும்போது, கை தட்டி விழுந்து உடைந்தவை.

முதலில் கழுவி எடுத்து வைக்கும் போதாகட்டும், பயன்படுத்திய பின் அழுக்கான பாத்திரங்களை மீண்டும் கழுவித் துடைத்து எடுத்து வைக்கும் போதாகட்டும், இதுவரை அபரஞ்சி ஒரு சிறு தட்டையேனும் போட்டு உடைத்திருப்பாளா? அப்படியிருக்க, என்ன அநியாயமான குற்றச்சாட்டு?

உதட்டைப் பற்களால் அழுத்தி, வெளி வரத் துடித்த வார்த்தைகளை அடக்கியவாறு, தன் வேலையைத் தொடர்ந்தாள் அவள்.

அவள் அருகிலேயே நின்று, "கிளியாம்பா சாப்பாட்டுக்கு வருவாள். இப்போது மிஞ்சிய எதையும், எடுத்துக் கொடுத்து விடாதே. இன்று இரவு சாப்பிட அதையும் சேர்த்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். கிளியாம்பாவுக்கு நேற்று மிஞ்சிய சாம்பார் கொஞ்சம் இருக்கும். அதையும் ரசத்தையும் எடுத்துக்கொடு" என்று அவள் காதோடு சொல்லிவிட்டு வந்தது போலவே ஓசைப்படாமல் போய் விட்டாள் பாக்கியம்.



சென்று மறைந்து கொண்டிருந்த சிற்றன்னையின் அகன்ற முதுகை வெறித்தபடி, சற்று நேரம் அசையாமல் நின்றாள் அபரஞ்சி.

பாக்கியம், அவளுடைய சித்தப்பாவுடைய மனைவி. தன் வீட்டில் வேலை செய்வதற்காகவே, பதினைந்து வயதில் அபரஞ்சி பெற்றோரை இழந்தாள் என்று நம்புகிறவள். பள்ளி நேரம் போக மற்ற நேரத்தில் பெற்றோரை நினைத்து வருந்திக் கொண்டு இராமல் மனதை வேறு விஷயங்களில் ஈடுபடுத்துவதாகச் சொல்லித் தொடங்கியதுதான். இப்போது வீட்டு வேலையின் முழுப் பொறுப்பும், அபரஞ்சியுடையதுதான் என்றாகிவிட்டது.

முதலில் அபரஞ்சியும், அவ்வளவாகப் பொருட் படுத்தவில்லை. வீட்டுப் பெண் செய்யக் கூடிய செய்கிற வேலைகளாகத்தான் அவளுக்குத் தோன்றியது. மிகவும் தந்திரமாகச் செயல்படுத்தப்படும் திட்டம் இது என்று புரிந்து கொள்ளும் வயதும் இல்லை. புரிந்து கொள்ளத் தேவையான புத்தியும் இல்லை.

எனவே இந்தக் குற்றேவல்களைச் செய்து முடித்தபின், "அடேடே பரவாயில்லையே, கண்ணு. நன்றாகச் செய்திருக்கிறாயே" என்று பாக்கியம் தட்டிக் கொடுத்த போது, உடல் சோர்வு மறந்து சந்தோஷமாகக் கூட உணர்ந்து அடுத்த வேலையை இன்னும் உற்சாகத்துடன் செய்தாள்.

அந்த வீட்டில், தான் சம்பளமில்லாத வேலைக்காரியாக இருக்கிறோம் என்பதை அபரஞ்சி உணர்ந்ததே, அவள் கல்லூரியில் முதலாம் ஆண்டுப் படிப்பை முடிக்கும் தருவாயில்தான்.

அவள் வகுப்பில் எல்லோரும், உல்லாசப் பயணம் செல்வதாக முடிவு செய்தனர். ஐந்து நாட்கள் கர்நாடகா சுற்றுப் பயணம். சித்தியிடம் விஷயத்தை சொல்லும்போது, அபரஞ்சி தயங்கியது. பணம் கேட்க வேண்டியிருக்கிறதே என்றுதான்.

ஆனால் "வேண்டாம்" என்று ஒற்றை வார்த்தையில் மறுத்த பாக்கியம், அதற்குச் சொன்ன காரணம் "அப்புறம் வீட்டு வேலையை யார் செய்வது?" என்பது. பெண்ணின் திகைத்த நோக்கைக் கவனியாதவள் போல, முகத்தையும் திருப்பிக் கொண்டாள்.

கலக்கத்துடன் தனியே அமர்ந்து யோசித்த போதுதான், அபரஞ்சிக்கு விவரம் புரிந்தது.

அந்த வீட்டில் அவள் ஒரு கௌரவ வேலைக்காரி. உறவு நிலையின் காரணமாகக் கீழ்மட்ட வேலைகளைச் செய்யச் சொல்லா விட்டாலும் அவள் வேலையாளேதான்.

அதன் பிறகே, அந்த வீட்டில் தனக்கும் சித்தப்பா மகள் செல்விக்கும் வாங்கப்படும் துணிகளின் எண்ணிக்கையிலும், தரத்திலும் உள்ள வேறுபாடு, அவள் மனதில் உறைத்தது.

ஆனால் இதில் எதைப் பற்றியும் சித்தி சித்தப்பாவிடம் கேட்க, அவளுக்குப் பயமாக இருந்தது. ஆதரவு என்று யாரும் இல்லாத நிலையில் கோபப்பட்டு, வீட்டை விட்டு வெளியே போ என்று விட்டால்?

தந்தையின் சேமிப்பு, வைப்பு நிதி என்று ஏதோ பணம் 'டெப்பாசிட்' செய்ததாக ஒரு ஞாபகம் வந்தது. ஆனால் அது எவ்வளவு என்று தெரியாததோடு அதை அவளது திருமணத்தின் போதுதான் எடுக்க வேண்டும் என்று பேசியதும் கூட நினைவு வர, வாய் திறக்க அவளுக்குத் தைரியமே வரவில்லை.

அத்தோடு, சித்தப்பா வீட்டில் அவளுக்குச் சாப்பாடு, மட்டமானது என்றாலும் துணிமணி, தங்கும் இடம் எல்லாம் கொடுக்கத்தானே செய்கிறார்கள்? அதற்குரிய விலையாக இந்த வேலைகளைச் செய்வதில் தப்பில்லை என்று தீர்மானித்தாள் அவள்.

நல்ல வேளையாகச் சித்தப்பா வீட்டினர், அபரஞ்சியின் படிப்பை நிறுத்தவில்லை. அவளுடைய தந்தையுடைய அலுவலக



நண்பர்கள், அலுவலகத்தின் மூலம் அவளது படிப்புக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். பணச்செலவு இல்லாததோடு, அவர்களுக்குப் பதில் சொல்ல நேருமே என்பதும், அபரஞ்சியின் படிப்பு, தடை படாததன் காரணமாக இருக்கக்கூடும். எப்படியாயினும் அவளுக்குக் கல்விச் செல்வம் தொடர்ந்து கிடைத்தது.

காலையில் எழுந்தால், எல்லோருக்கும் காபி கலந்து அவரவருக்குக் கொண்டு போய்க் கொடுப்பது, காலைச் சிற்றுண்டி தயாரிப்பில் உதவுவது, கல்லூரியிலிருந்து வந்ததும் மாலைச் சிற்றுண்டி காபி பரிமாறலை ஏற்பது என்று அந்தந்த நேரத்துக்குரிய வேலை என்று ஏதாவது இருக்கும்.

சித்தப்பா நாகேந்திரனின் நிலை சற்று உயர்ந்து, சமையலுக்கு ஆள் வைத்தபோது, அபரஞ்சியின் வேலைகளில் எதுவும் மாறவில்லை. வீடு பெருக்கி துணி துவைத்துப் பாத்திரம் கழுவும் சுற்று வேலைக்காரி கிளியாம்பாவின் நிலையும் மாறவில்லை.

அதிலும் இப்போது நாகேந்திரனின் பொருளாதார நிலை உயர்ந்ததிலிருந்து தொழில் தொடர்பான ஆட்களுக்கு அவ்வப் போது விருந்து வைப்பதால் இருவருக்கும் வேலை அதிகம் ஆயிற்று என்றே சொல்லலாம்.

விலை உயர்ந்த பீங்கான் பாத்திரங்களைக் கிளியாம்பா முரட்டுத் தனமாகத் தேய்த்துக் கீறல் விழுந்து விடும் என்று அவைகளைச் சுத்தம் செய்வதும், விருந்துகளுக்கு மெனு, வீட்டு அலங்காரம் போன்றவையும், அபரஞ்சிக்கு அதிகமாகிய வேலைகள்.

வீட்டை அடிக்கடி துடைத்துக் கண்ணாடி போல ஆக்குவது, அதிகப்படிச் சமையலுக்குப் பயன்படுத்தப்படும் அதிகப்படிப் பாத்திரங்களைத் துலக்குவதும், கிளியாம்பாவின் அதிகப்படி வேலைகள். அரைக்க திரிக்க என்று மிஷினுக்கும் போவாள். சில சமயங்களில், அவள் மகன் மணிகண்டன்-சித்தப்பாவின் அலுவலகத்தில் அட்டெண்டராகப் பணி புரிகிறவன்-போன் பில், எலக்ட்ரிக் பில் கட்டுவதற்காகவோ, சாமான் வாங்கிப் போடவோ வீட்டுக்கு வந்தால் அவளைப் [illegible] புரிவான்.

வீட்டு வேலையை முடித்துவிட்டு முகத்து வியர்வையை முந்தானையால் துடைத்தபடி, அபரஞ்சியிடம் வந்தாள் கிளியாம்பா. "எனக்குச் சாப்பாடு தர்றியாம்மா? வூட்டிலே, அது வேற பட்டினியாகக் காத்திருக்கும். சோத்தைக் குடுத்திட்டு நாலு மணிக்குத் திரும்பவும் வந்தடணுமின்னு அம்மா சொல்லியிருக்காங்க" என்று கேட்டாள்.

வேலைக்காரியின் பாத்திரத்தில் சாதத்தை எடுத்து வைத்த அபரஞ்சிக்குத் தன் சிற்றன்னை சொன்னபடி, பழைய சாம்பாரை எடுத்துக் கொடுக்கக் கை கூசியது. வறுத்த கோழியும் கறியுமாகச் சமையல் செய்த அத்தனை பாத்திரங்களையும், கை நோகச் சுரண்டித் தேய்த்தவள், அரைக்கரண்டி கொடுத்தால்கூட, ஆனந்தமாகக் கொண்டு போவாள்.

"இரவும் யாரோ வருகிறார்கள். போல கிளியாம்பா. அதனால் இன்றைய பதார்த்தம் எல்லாம் இருக்கட்டும் என்று சித்தி..." என்று இழுத்தபடி, சின்னப் பாத்திரத்தில் இருந்த சாம்பாரையும், ரசக் கிண்ணத்தையும் எடுத்துக் கொடுத்தாள்.

"அட, நீ ஏம்மா கலங்குற? இல்லாட்டியும், அள்ளி அள்ளிக் குடுத்திறப் போவுதா, என்ன? இத்தினி வருசத்திலே, அந்த அம்மா புத்தி, எனக்குத் தெரியாதாங்காட்டியும். இருக்கிறதச் சொம்மா குடு, கண்ணு, மணி அப்பாரு, ஒடம்பு சொகமில்லையின்னு வுட்டோட கெடக்குதா, பசி பசிங்கும். வாரேம்மா. நாலு மணிக்குள்ளர, வந்தாவணுமே" என்று பாத்திரங்களைக் கூடையில் அடுக்கிக் கொண்டு கிளியாம்பா கிளம்பினாள்.

பீங்கான் பாத்திரங்களை அபரஞ்சி அடுக்கி முடிக்கக் காத்திருந்தவள் போலப் பாக்கியம் மீண்டும் மைத்துனர் மகளிடம் வந்தாள். "அபிம்மா..." என்ற அழைப்பிலேயே எச்சரிக்கை அடைந்து, கவனத்துடன் கேட்டாள் சின்னவள்.

"பார் அபி. மணி நாலு ஆகப் போகிறது. நீ இன்னமும் எதிர் வீட்டு அம்மாளைப் போய்ப் பார்க்கவே இல்லையே. பாவம், அந்த



அம்மாள். உன்னை எதிர்பார்த்து அந்த அம்மாளின் கண்ணே பூத்துப் போயிருக்கும். இங்கே, சாயங்காலக் காபிக் கடையை, நானே பார்த்துக் கொள்ளுகிறேன். நீ போய் அந்த அம்மாளுடன் ஆசை தீரப் பேசிக் கொண்டிருந்து விட்டு, ஓர் ஆறு மணிவாக்கில் திரும்பி வருகிறாயா? அதற்குமுன் நீ வர வேண்டிய அவசியம் இல்லை" என்று குழைந்தாள்.

அதாவது ஆறு மணிக்கு முன் வராதே என்று அர்த்தம்.

இப்போதெல்லாம் அடிக்கடி இப்படித்தான் நடக்கிறது.

மாலையில் யாரோ வரப் போகிறார்கள். வருகிறவர்கள் கண்ணில் அபரஞ்சி படுவது பாக்கியத்துக்குப் பிடிக்கவில்லை.

## 4

பாக்கியத்துடைய விருந்தினர்களைப் பார்த்துத்தான் ஆக வேண்டும் என்ற எண்ணம், அபரஞ்சிக்கும் இல்லை.

அந்த இரண்டு, இரண்டரை மணி நேரம் இந்த வீட்டிலிருந்து விடுதலை கிடைத்தால் அதுவே அவளுக்குப் பெரும் நிம்மதி தான்.

பார்வதிப் பாட்டி வீட்டில் அவளுக்கு எப்போதும், வரவேற்பு உண்டு.

இவ்வளவு நேரம் இருந்தால் பொன்னியின் செல்வனில், இப்போது படித்துக் கொண்டிருக்கும் அத்தியாயம் மட்டுமின்றி, அந்தப் பாகத்தையே முடித்து விடலாம்.

"சரி, சித்தி" என்று முக மலர்ச்சியுடன் கூறியவள், உள்ளே சென்று முகம் கழுவினாள்.

கலைந்திருந்த கூந்தலை வாருவதற்காகச் சீப்பை எடுத்தவள், ஒரு கணம் யோசித்து, சீப்பை எடுத்த இடத்திலேயே வைத்தாள். அவள் அணிந்திருந்த சற்று மட்டமான பருத்தி நூல் சுரிதார் கசங்கியிருந்ததைக் கண்டு கொள்ளாமல், அப்படியே புறப்பட்டு விட்டாள்.

மற்றபடி, உடையை மாற்றி தலையை வாரிக் கொண்டு போனால் பாக்கியத்துக்குப் பிடிக்காது.

வயதுப் பெண். அக்கம் பக்கம் போவதற்குக் கூடத் தனி அலங்காரம் செய்து கொண்டு போனால், பாக்கிறவர்கள் என்ன சொல்லுவார்கள், என்று தொடங்குவாள்.

என்ன சொல்லுவார்கள்?

நேரடியாகக் கேட்கத் துணிவின்றிச் சும்மா பார்த்தாலே, "எவனைப் பார்க்க, இந்த அலங்காரம் என்பார்களடி" என்று கூறி அபரஞ்சியைக் கூச வைத்து விடுவாள்.

வீட்டிலோ, அதற்கும் மேல் கொஞ்சம் பளிச்சென்று நின்றாலும் கரித்துக் கொட்டி விடுவாள். பாத்திரம் தேய்ப்பது, தரை துடைப்பது போன்ற வேலைகளைக் கூட, அன்று அபரஞ்சி செய்யும்படி ஆகிவிடும் அணிந்திருந்த உடை, நன்கு க்சங்கி அழுக்காகும் வரை பாக்கியம் விடவே மாட்டாள்.

செல்வி வளர, வளரவே அப்படித்தான்.

அழகுக் குறைவான செல்வி, தன் பளிச்சென்ற தோற்றத்தால், இன்னமும் மட்டமாகத் தெரிகிறாள் என்பதால், சித்தி இப்படி நடக்கிறாள் என்று புரிந்து கொண்டதில் இருந்து தன் தோற்றத்தில் நியாயமான அக்கறை காட்டுவதைக் கூட அபரஞ்சி விட்டு விட்டாள்.

தன்னைத் தானே அவள் கண்ணாடியில் பார்ப்பது கூட அபூர்வம். பிறகென்ன? யார் திருப்திக்காக அநாவசியமாகக் கடும் சொற்களையும், கடின வேலைகளையும் தலையில் இழுத்துப் போட்டுக் கொள்ள வேண்டும்? சற்று பரட்டைத் தலையாக, கசங்கல் உடையுடன் நலுங்கினாற்போலத் தோன்றுவதில் யாருக்கு என்ன பெரிய நஷ்டம் நேர்ந்துவிடப் போகிறது?



ஒன்றுமில்லை என்று எண்ணித்தான் அபரஞ்சி தன் தோற்றத்தில் முதலில் அலட்சியம் காட்டத் தொடங்கியது. பிறகு அதுவே பழகியும் போயிற்று.

கல்லூரிக்குச் செல்லும்போது மட்டும், ஆசிரியை ஏதாவது சொல்வாரோ என்று தோற்றத்தில் கொஞ்சம் அக்கறை காட்டுவாள். திரும்பி வீடு வந்துவிட்டால், அவ்வளவுதான் பழையபடி அக்கறையற்ற தோற்றம்தான்.

படிப்போடு கூட, ஓய்வற்ற வீட்டு வேலைகளும் சேர்ந்து கொள்ளும்போது மெய்யாகவே அவ்வப்போது களைப்பாகத்தான் இருக்கும். அந்தத் தோற்றமே, பாக்கியத்துக்கும் திருப்தியைத் தர, காலம் பிரச்சினையற்றுப் போயிற்று.

பார்வதியம்மாளுக்குக் கண்ணாடி போடாமல், அவ்வளவு நன்றாகப் பார்க்க முடியாது. அப்போதும் ஓரிருமுறை தலை சீவிக் கொள்ளவில்லையா, என்று கேட்டிருக்கிறாள். ஆனால் சலிப்புடன் சின்னவள் உச்சுக் கொட்டிய விதத்தில், அதற்கு மேல் அவளது தோற்றம் பற்றி அபரஞ்சியிடம் பார்வதிப் பாட்டி பேசியதில்லை.

அத்தோடு அவருக்கும் அபரஞ்சியின் இந்தத்தோற்றமே பழகிப் போய் விட்டது.

எனவே பார்வதியம்மாளின் வீட்டுக்குப் போவதற்காக, அபரஞ்சி தன் தலையைக் கூட வாரிக் கொள்ளவில்லை. அப்படியிருந்தும், கிளம்பிச் செல்லும்போது, சித்தி மகள் செல்வி விஷத்தைக் கொட்டினாள்.

"நீ அந்தக் கிழவிக்கு விழுந்து விழுந்து பணிவிடை செய்கிறாயே. அதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை, தெரியுமா?

அந்தம்மாவுடைய பேரன், வேறு ஒருத்தியைக் காதலிக்கிறானாம். பேரழகியாம், மகாமகாத் தீவிரமான காதலாம். விரைவிலேயே திருமணமாம். அப்பாவுடைய வாடிக்கைக்காரர் ஒருவருக்கும், அந்த வசீகரன்தான் ஆடிட்டராம். அவர் ரொம்பவும் உறுதியாகச் சொல்லுகிறார். இரண்டு பேரும், சேர்ந்து சுற்றாத இடமே கிடையாதாம். அதனால் இந்த வீட்டை வாங்கி, இங்கே வந்ததிலிருந்து இந்த ஓர் ஆண்டாக நீ திட்டமிட்டுச் செய்த வேலையெல்லாம், முழு விரயம்'' என்று உரக்கக் கூறிச் சிரித்தாள்.

தாயின் வாரிசு.

செல்வி சொன்ன அத்தனை விவரங்களும் ஏன் அதற்கு மேலாகவே அபரஞ்சிக்குத் தெரியும். பார்வதி அம்மாளுடைய பேரன் காதலிக்கும் அந்தப் பெண் அழகி மட்டுமல்ல. பெரிய பணக்காரியும் கூட. அதி நாகரீகம். பலமுறை சொல்லியனுப்பியும் , ஒரு தரம்கூட, அவள் பாட்டியை வந்து பார்க்கவே இல்லை என்பது வரை அவளுக்குத் தெரியும். உள்ளூரப் பாட்டிக்குப் பிடித்தம் இல்லாவிட்டாலும், பேரன் ஆசைப்பட்டு விட்டதால் அந்தப் பெண்ணை வரவேற்கப் பாட்டி தயாராக இருக்கிறார் என்பது கூட, அபரஞ்சிக்குத் தெரியும்.

பாட்டி, தன் கவலைகளைப் பகிர்ந்து கொள்வதே, அபரஞ்சியிடம்தானே? அந்த வயதான ஜீவனின் வேதனைகளுக்கு ஒரு வடிகால்.

எனவே, செல்வியை விடவும் அதிகமாகவே இது விவரம் அபரஞ்சிக்குத் தெரியும்.

அத்தோடு அந்தப் பேரனுக்காக அவள் எதையும் செய்ய நினைத்ததே கிடையாது. இப்படி ஒரு பேரன் இருக்கிறான் என்று தெரிவதற்கு முன்பிருந்தே தனித்து வாழும் பார்வதிப் பாட்டியிடம் பரிவு கொண்டு, அவருக்குத் தன்னால் ஆன உதவியை அபரஞ்சி செய்யத் தொடங்கி விட்டிருந்தாள்.



பின்னர் அந்தப் பேரனைப் பற்றிப் பார்வதியம்மாளே சொன்ன பிறகும் அவனை அவள் சந்தித்தது இல்லை. பேரன் வீட்டில் இருக்கும்போது பாட்டிக்குப் பொழுது தானாகவே பறக்கும். பாட்டியின் தைலம், மருந்து வகையறாக்களையும் அவனே கவனித்துக் கொள்வான் என்பது பாட்டியின் வாக்குமூலம். எனவே அபரஞ்சி அவருக்கு அவசியமில்லை.

அத்தோடு, பாட்டியும் பேரனும் பேசுகையில் இடையே போய் நிற்கவும் அபரஞ்சி விரும்பியதில்லை. எனவே அவன் முன் கூட்டியே சொல்லிவிட்டு வரும் நாளிலும் சரி, அவன் கார் அந்த வீட்டில் தென்பட்டாலும் சரி அபரஞ்சி எதிர் வீட்டுப் பக்கமே போக மாட்டாள்.

அவளைப் போய், அந்தப் பேரனுக்காக அவனுடைய பாட்டிக்கு அவள் உபசாரம் செய்வதாகக் கூறுவது, எத்தகைய அபாண்டம். நியாயமற்றுப் பேசும் இவளிடம் இதையெல்லாம் எடுத்துச் சொல்லி வாதாடுவதும் வீண். அப்புறம் வேறு ஏதாவது எதிர்பாராத விதத்தில் தாக்குதல் வரும். இவள் தாயிடம் போலவே, இவளிடமும் பதில் சொல்லாமல் தூர விலகிப் போவதே மேல்.

'வம்புசெறி தீங்கினர் தம் கண்ணில் படாத தூரத்தே நீங்குவதே மேல்' என்ற அறிவுரைக்கிணங்க, இவ்விருவர் கண்ணிலும், அடியோடு படாத தூரத்துக்குச் செல்ல அவளுக்குக் கொடுத்து வைக்காவிட்டாலும், அப்போதைக்கு ஓர் இரண்டரை மணி நேர விடுதலை கிடைத்திருப்பதால், அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் ஏன் விட வேண்டும்? இவள் அறிவு கெட்டத்தனமாக ஏதோ சொன்னாள் என்று தான் விரும்பிய இடத்துக்குப் போகாமலும்தான் ஏன் இருக்க வேண்டும்?

ஒரேயடியாக ஒன்றும் சொல்லாமல் போனாலும் அலட்சியமாகப் போனதாகப் புகார் வரும் என்பதால், “அப்படியா செல்வி?'' என்று கேட்டபடி, நெற்றிப் பொட்டு சரியாக இருக்கிறதா

என்று கூடப் பாராமல் அபரஞ்சி எதிர் வீட்டுக்குச் சென்று விட்டாள்.

அன்று ஆறுதலுக்காகப் பாட்டியைத் தேடி வந்த வசீகரனின் கண்ணில் பட்டதும், அபரஞ்சியின் இந்தத் தோற்றமே.

வினாடிக்கும் குறைவாக, அவன் பார்த்த அந்த நேரத்திலும், அவன் பார்வையில் தென்பட்ட ஏமாற்றம், அபரஞ்சியை ரொம்பவுமே பாதித்தது.

வந்தவன், பாட்டியின் அன்புக்குரிய பேரன் என்பது அவளுக்குத் தெரியும். அவனது மற்ற கதைகளும் அவள் அறிந்தவைதானே. இவன் ஏமாற்றமாகப் பார்த்தாலும் உற்சாகமாகப் பார்த்தாலும், எல்லாமே அவளைப் பொறுத்த வரையில் ஒன்றுதான்.

ஆனால் அவன் ஏன் அவளை அப்படிப் பார்த்தான்? அவளிடம் என்ன எதிர்பார்த்து அந்த அரை வினாடி பார்ப்பதற்குள் ஏமாற்றம் அடைந்து போனான்?

அவன் காதலி பேரழகி என்று செல்வி சொன்னாளே. பார்க்கும் பெண்கள் எல்லோரும் அதே போல அழகாக இருப்பார்கள் என்று எதிர்பார்த்து இல்லையென்று ஏமாந்து போனானா?

இல்லை. அப்படியில்லை. தன் காதலி அளவு, அடுத்த பெண் அழகாக இல்லை என்றால் மகிழ்ச்சிதான் அடைவார்களே தவிர, அதில் ஏமாற்றம் ஒன்றும் இராது.

இது வேறு என்று புரிந்தபோதும், என்னவென்று தெரியாததால், அபரஞ்சியின் மனம் குழம்பிக் கொண்டே இருந்தது. ஆனால் இதை யாரிடம் போய்க் கேட்பது?

அவனிடமே கேட்டாலும், அப்படியெல்லாம் ஒன்றும் இல்லையே என்று விட்டானானால், கேவலமாகிப் போகும்.

போகிறான் என்று தோளைக் குலுக்கி அலட்சியப்படுத்த முயன்றாலும், உறுத்தல் நெருஞ்சியாய்க் குத்திக் கொண்டேதான் இருந்தது.



ஆனால் இதை அடியோடு தூக்கியடிக்கும் விதமாக அவளது வாழ்வில் பல்வேறு திருப்பங்கள். திகில் திருப்பங்கள் மளமள வென்று நிகழலாயின.

அன்று வீட்டுக்குத் திரும்பிப் போனதுமே, அபரஞ்சி கவனித்தது, மாலைக் காபி, சிற்றுண்டி நாலைந்து பேருக்கு அளிக்கப் பட்டிருக்கிறது என்பதைத்தான்.

அவ்வப்போது மணிக்கணக்கில் வெளியே இருந்துவிட்டு வருமாறு, மைத்துனர் மகளை பாக்கியம் அனுப்பும் போதெல்லாமே, இதே போலப் பலர் காபி டிபன் அருந்தியதற்கான அடையாளங் களை அபரஞ்சி கண்டிருக்கிறாள். அப்படி என்ன என்று யோசித் தவளுக்கு சித்தப்பா மகள் செல்வியின் முகத்திலிருந்த மேக்கப்பும், அவள் அவிழ்த்து வீசியிருந்த பட்டுச் சேலையும் விடை தந்தன. கூடவே அவளது ஆத்திரம் கலந்த அழுகையும்.

செல்வியை யாரோ பெண் பார்க்க வந்திருக்கிறார்கள். பார்த்துவிட்டுப் பிடிக்கவில்லை என்றும் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள்.

தொடர்ந்து, சித்தப்பா குடும்பத்தினர் பேசியதில், அவள் காதில் விழுந்ததும், அவளது ஊகத்தையே உறுதி செய்தது.

ஆனால் இதை ஏன் அபரஞ்சிக்கு மறைத்து செய்ய வேண்டும்?

தங்கையைப் பெண் பார்க்க வருவதை எண்ணிப் பொறாமைப் படுவாள் என்று எண்ணினார்களோ என்று நினைத்து முதலில் வருத்தப்பட்டாள், அவள்.

அவ்வளவு மட்டமானவளாகவா தன்னை மதிப்பிட்டிருக் கிறார்கள் என்ற வேதனை.

கல்லூரியில் அவள் பாராததா? ஒன்றுமே இல்லாமல், ஓரொருவர் எவ்வளவு அழுகுபடுத்திக் கொள்ளுகிறார்கள். அடர்ந்து நீண்ட கூந்தலையும், அழகான உடல் கட்டையும் தங்க நிறத்தையும் வைத்துக் கொண்டு அதைக் குறைத்துக் காட்டிக் கொண்டிருக்கும் அபரஞ்சியா இதற்காகப் பொறாமைப் பட்டு விடுவாள்?

விஷயம் அப்படியல்ல என்பது பிறகு தெரிந்தது.

அந்த வீடு, சற்றுப் பெரிய வீடுதான் என்றாலும் ஓர் அறையில் பேசுவது அடுத்த அறைக்குக் கேளாத அளவு பெரிதில்லை. அத்தோடு அந்த வீட்டினரின் தொண்டையும், சின்னது இல்லை. மெல்லப் பேச வேண்டும் என்று அவர்கள் எண்ணவும் இல்லை.

அவ்வப்போது காதில் நன்றாகவே விழுந்தவை என்னவெனில், என்னதான் அலங்காரமே இல்லாமல் நின்றாலும் அபரஞ்சியின் வெள்ளைத் தோலுக்காக அவளைக் கட்டிக் கொடு என்று செல்விக்குப் பார்க்கும் மாப்பிள்ளை வீட்டார் கேட்டு விட்டால் என்ன செய்வது?

இப்போதெல்லாம் எலும்புக் கூடு மாதிரி இருப்பதுதானே நாகரீகம்? அதனால் சற்றுப் பூசினாற்போலப் பொய்யோ எனும் இடையாளாக இடுப்பே இல்லாமல் இருக்கும் செல்வியை வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டுப் பெரியவளை விரும்பி விட்டால்?

எதற்கு வம்பு? அண்ணன் மகள் வீட்டிலேயே இல்லாவிட்டால் பிரச்சினையே வராதே.

அதுவும் சரிதான் என்று உள்ளூர ஒத்துக் கொண்ட அபரஞ்சி, சித்தப்பா வீட்டினர் குறிப்புக் காட்டுமுன், கோயிலுக்கோ எதிர் வீட்டுக்கோ ஓடிப் போனாள்.

அப்படியும் கடைசியாக ஒரு மாப்பிள்ளை வீட்டார், "உங்கள் அண்ணன் மகள் ஒருத்தி உங்கள் வீட்டில் வளர்வதாகச் சொன்னார்களே. அவள் ஜாதகத்தையும் கொடுங்கள். எது பொருந்துகிறதோ முடித்து விடலாம்" என்று கேட்டு விட்டார்கள்.

அவ்வளவுதான். "ஏழை எளியவன், எவன் என்றாலும் உங்கள் அண்ணன் பெண் கல்யாணத்தை உடனே இந்த மாதமே முடித்தாக வேண்டும்" என்று ஆடத் தொடங்கினாள் பாக்கியம்.



"செய்து விடலாமடி, பாக்கி, நான் மாட்டேன் என்றா சொல்லுகிறேன்? ஆனால் நீ சொல்லுகிற மாதிரி கூட யாராவது ஒருத்தன் கிடைக்க வேண்டும் அல்லவா?" என்றார் நாகேந்திரன்.

"ஏன், நம் அட்டெண்டர் மணிகண்டன் இல்லையா?" என்று கேட்டாள் பாக்கியம்.

பக்கத்து அறையில் பூஜாடிகளுக்கு பிராஸோ போட்டுக் கொண்டிருந்த கைகள் அசைவற்று அப்படியே நின்றுவிட, தன் காதுகளை நம்ப மாட்டாமல் திகைத்தாள் அபரஞ்சி.

## 5

அட்டெண்டர் மணிகண்டன்.

அந்த வீட்டு வேலைக்காரி கிளியாம்பாவுடைய மகன்.

அவளிடமே 'சோறு போட்டுக் கொடு தாயீ' என்று கேட்டு வாங்கிப் போகும் ஒருத்தியுடைய மகன். அவளுக்குக் கணவனா? நினைத்துப் பார்க்கக் கூட, இந்தச் சித்திக்கு எப்படி முடிந்தது?

அதையே சித்தப்பா நாகேந்திரனும் கேட்கவும் அபரஞ்சியின் மனம் சற்றே அமைதியடைந்தது.

அப்படி எது நடக்கவும் சித்தப்பா விட்டுவிட மாட்டார்.

சித்தியின் சொல்லுக்கு எதிராக அன்றுவரை சித்தப்பா விரலைக் கூட அசைத்து அவள் பார்த்தது இல்லைதான். ஆனால் இந்த விஷயத்தில் அபரஞ்சி அவரை நம்பினாள். அவருடைய சொந்த அண்ணன் மகளை அவர் வீட்டு வேலைக்காரி மகனும், அலுவலக அட்டெண்டருமான ஒருவனுக்கு மணமுடிக்க அவருக்கு எப்படி

மனம் வரும்? அவருக்கே மனம் ஒவ்வாது என்பதோடு நாலு பேர் அவரையும்தானே, கேவலமாகப் பேசுவார்கள்.

அண்ணன் மகளை இப்படித் தள்ளி விட்டு விட்டார்கள் என்று சொல்ல மாட்டார்களா?

சித்தப்பா, இதை இப்போதே உணர்ந்திருப்பார். விரைவிலேயே சித்திதான் சித்தப்பாவுக்குப் புரிய வைத்திருக்கிறாள் என்பதை விரைவிலேயே அறிய நேர்ந்தபோது, செய்வதறியாமல் அவள் திணறிப் போனாள்.

சித்தி பாக்கியத்தின் யோசனை, முளையிலேயே கிள்ளி எறியப்பட்டு விட்டதாகத்தான் அபரஞ்சி எண்ணியிருந்தாள்.

ஆனால் அன்று எலக்ட்டிரிக் பில்லைக் கட்டிவிட்டு வந்த மணிகண்டன் சைக்கிளில் அமர்ந்தபடியே அபரஞ்சியை அழைத் தான். "இந்தா, இந்தக் கார்டையும் பில்லையும் வாங்கிப் போய், பத்திரமாக வை. அப்புறம், அய்யா வந்ததும் அவர் கிட்டே கொடுத்திடு. வாவா ஜல்தி" என்றான்.

மரியாதை குறைந்தது போல அபரஞ்சிக்குத் தோன்றியது.

கிராமப்புறங்கள் போல, 'வாங்கள், போங்கள்' என்பது பெரும்பான்மை நகரங்களில் இப்போது பழக்கம் இல்லைதான். ஆனால் மணிகண்டன் சைக்கிளில் இருந்து இறங்கி அவளிடம் வந்து கார்டையும் ரசீதையும் நீட்டி, "அய்யாவிடம் கொடுத்துவிடு" என்று சொல்லியிருந்தால் வித்தியாசமாகத் தோன்றியிராது.

ஒரு வேளை, ஏதாவது அவசரமாகப் போக வேண்டி இருக்கக் கூடும் என்று மனதைச் சமாதானம் செய்து கொண்டு கார்டையும் ரசீதையும் வாங்கி வைத்தாள்.

ஆனாலும் மனதில் உறுத்தல்தான்.

அடுத்த நாள், மற்றொரு விருந்து வீட்டில் நடந்தபோது, அந்த உறுத்தல் அதிகம் ஆயிற்று.



விருந்து முடிந்து கண்ணாடி பீங்கான் பொருட்களை வழக்கம் போல அபரஞ்சி கழுவித் துடைத்துக் கொண்டிருக்கும்போது தன் வேலை முடிந்து கிளியாம்பா, அவளது சாப்பாட்டுக்காக வந்தாள். "என்னா, எனக்கு மொதல்லே சாப்பாட்டை எடுத்து வச்சிட்டு, இந்த வேலை பாக்கக் கூடாதாங்காட்டியும்? சரிசரி, கையில இருக்கறதக் கீள வச்சுப்போட்டு, என் சாப்பாட்டை எடுத்துக் குடு" என்றவள் குரலைத் தணித்து, "இந்தா, நல்ல பதார்த்தம் இப்ப ஆக்கினதையும் கொஞ்சம் உள்ளார வச்சு, மேலே சோத்தப் போடு. கொஞ்சம் கொறஞ்சா, தெரியவா போகுது? அல்லாம், நம்மளுக்குப் போக மிச்சம். அட, சீக்கிரம்மா. சொல்றேனில்ல?" என்று விரட்டினாள்.

சென்ற முறை விருந்தின் பிறகு கிளியாம்பா நடந்து கொண்ட முறை தானாக நினைவு வர, அபரஞ்சி பிரமித்து நின்றாள்.

இதுபோன்ற எதையேனும் எதிர்பார்த்தோ என்னவோ, திடுமெனப் பாக்கியம் அங்கே வந்துவிடவே, வேலைக்காரிக்குச் சாப்பாடு கொடுக்கும் பிரச்சினை, தானாகத் தீர்ந்தது.

ஆனால், அவளிடம் உரிமை உள்ளவர்கள் போலத் தாயும் பிள்ளையும் நடந்து கொண்ட விதம் அவள் மனதை அரித்துக் கொண்டே இருந்தது.

என்னவோ நடந்திருக்கிறது.

இதை யாரிடம் எப்படிக் கேட்பது?

இந்த நிமிஷம் வரை அவளிடம் யாரும் எதுவும் சொல்ல வில்லை.

சொல்லத் தயங்கினார்களா, அல்லது எப்போது வேண்டு மானாலும் சொல்லிக் கொள்ளலாம் என்ற அலட்சியமா? அப்படி அவர்கள் சொல்லும்போது கேட்பதற்கு அபரஞ்சிக்கும் சில விஷயங்கள் இருந்தன.

ஆயினும் தேன் கூட்டில் கல்லெறிந்தாற்போல, அவளாகக் கேட்டு, அவர்களது தயக்கத்தை உடைத்துத் தொல்லையை இழுத்துக் கொள்வது நல்லதில்லையே.

இப்படியெல்லாம் சப்பைக் கட்டுக் கட்டினாலும், 'ஆமாம் அப்படித்தான். மணிதான் உன் வருங்காலக் கணவன்' என்று சித்தப்பா வெளிப்படையாகச் சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற பயமே, எதையும் கேட்க விடாமல் தன்னைத் தடுக்கிறது என்பதை அபரஞ்சி உணராமல் இல்லை. தன் நெஞ்சு தனக்குத் தெரியாமல் இருக்குமா? 'க்ராஸ் த பிரிட்ஜ், வென் இட் கம்ஸ்' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அதுபோலப் பிரச்சினை நேர் எதிரே வரும்போது அதைச் சமாளிக்கும் துணிவைத் தன்னுள்ளே வளர்த்துக் கொள்ள முயற்சி செய்தாள் அவள்.

உள்ளூர முளை விட்டிருந்த சந்தேகத்தை உறுதி செய்வது போல, ஒன்று நடந்தது.

பாக்கியத்தின் வழி உறவில் ஒரு திருமண மறு விருந்து என்று அந்தக் குடும்பம் முழுமையுமாக, வெளியே சென்றிருந்தனர். அப்படியே வேறு எங்கோ போவதாகவும், திரும்பி வர இரண்டு மூன்று நாட்கள் ஆகக் கூடும் என்றும் சொல்லியிருந்தனர். செல்விக்கு ஏதோ மாப்பிள்ளை பேசி முடிவு செய்வது முக்கியமான உள் நோக்கம் என்பதால் திரும்பி வருவது என்றைக்கு என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை என்று அபரஞ்சி ஊகித்தாள். கூட இருந்து வேண்டிய வேலைகளைச் செய்வதற்காகக் கிளியாம் பாவையும், உடன் அழைத்துச் சென்றிருந்தனர்.

வழக்கமான வேலைகள் இல்லாததால், அபரஞ்சி சோபாவில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது ரேஷன் வாங்குவதற்காக மணிகண்டன் வீட்டுக்கு வந்தான்.

படித்துக் கொண்டிருந்த அபரஞ்சியைப் பார்த்ததும், "சோபாவில் உட்காராதே" என்றான்.



"என்னது?"

திகைப்புடன் கேட்டவளிடம், "சோபாவில் உட்காராதே என்றேன். கீழே உட்கார்ந்து பழகு. ஏழைக்கேற்றது எள்ளுருண்டை தான். நமக்கெல்லாம் சோபா அதிகப்படி." என்று பெரிதாகப் புத்தி சொல்லி விட்டு ரேஷன் கார்டை எடுத்துக் கொண்டு போனான் அவன்.

நமக்கா?

அதிர்ச்சியில் அபரஞ்சிக்கு உடம்பு குலுங்கி விட்டது.

நான் அந்த மாதிரி வாழப் பழகியவள் அல்ல என்று தவித்தாள்.

சிறு வயதில், தந்தையுடன் பைக்கில் சென்றதும், பிறந்த நாள் கேக் வெட்டியதும், துண்டு துண்டாய் நினைவு வந்தது. பெரும் பணத்தில் புரளவில்லை என்றாலும் கீழ் நிலையிலும் இருக்கவில்லை தானே? எவ்வளவோ சின்னத்தனமாக நடக்கும் பாக்கியம் கூட இந்த மாதிரிச் சொன்னதில்லையே.

அப்படி வளர்ந்துவிட்டு அவளிடமே உணவு கேட்டு அவள் எடுத்துத் தருவதை வாங்கி, வீட்டுக்கு எடுத்துப் போய் உண்ணும் ஒருத்தியின் மருமகளாக வாழ்வதா?

காய்ச்சல் வரப் போவது போல, உடம்பெல்லாம் குறுகுறு வென்றது.

அந்த மாதிரி வீட்டில் வாழப் போகிறவள் மாதிரியா, அவளைப் பார்த்தால் தோன்றுகிறது?

ஆத்திரத்துடன் எழுந்து சென்று, கண்ணாடியில் தன்னையே பார்த்துக் கொண்ட அபரஞ்சிக்கு வயிறு கலங்கியது.

கலைந்து பறந்த கூந்தல். களைத்த முகம். வீடு துடைக்கும் துணி போலக் கசங்கிச் சுருங்கியிருந்த சுரிதார். கால் ஓரத்தில் கிழிசல் வேறு. சற்று உயர்ந்த குடும்பத்துப் பெண் என்று சத்தியம் செய்தால் கூட, நம்ப மாட்டார்கள். தோற்றத்தில் அப்படி ஓர் அசட்டை.

என்ன இப்படியாகி விட்டாள். எதிர் வீட்டுப் பாட்டியுடைய பேரன். அந்த வசீகரனின் முகத்தில் தோன்றிய ஏமாற்றம். அவளுக்கு நினைவு வந்தது. அன்றும் இப்படித்தான் இருந்தாள் போலும்.

சட்டென வாயெல்லாம் கசந்து வாந்தி வருகிற மாதிரி ஓர் உணர்வு உண்டாயிற்று.

ஓடிப்போய், நிறையக் குளிர்ந்த நீர் அடித்து முகத்தைக் கழுவினாள். ஆனால் அதில் திருப்தி ஏற்படவில்லை. வேகமாகச் சென்று அவளது சிறு மர அலமாரியைத் திறந்து பார்த்தாள்.

எல்லாமே, ஓரளவு சாயம் போன மாதிரி அல்லது அழுக்கு வண்ண உடைகள்தான். பழசும்கூட. ஒன்றே ஒன்று மட்டும் சற்று வித்தியாசமாக இருந்தது.

அதுவும் அப்படி ஒன்றும் பிரமாதமான கலர் அல்லதான். ஆனால் மற்றவை போல வேண்டுமென்றே மட்டமாக வாங்கியது அல்ல. ஒரு 'சேல்' போட்டிருந்தபோது செல்விக்காக வாங்கியது. ஆனால் செல்வியின் குண்டு உடல் அந்தச் சுரிதார் செட்டினுள் நுழைய மாட்டேன் என்று விட்டது. ஏதாவது கடையில் வாங்கியிருந் தால், திருப்பிக் கொடுத்து விட்டுப் பதிலுக்கு இன்னொன்றை மாற்றி வாங்கியிருப்பார்கள். ஆனால் 'சேல்' கடைசி நாளில் வாங்கியதால் மாற்றிக் கொள்ள முடியவில்லை. விலையும் குறைவு. ரொம்பப் பளிச்சென்றும் இல்லை என்பதால் ரொம்பத் தாராளமாய் அபரஞ்சிக்குக் கொடுத்து விட்டாள் பாக்கியம்.

அப்போதும், "நல்ல துணி என்று சும்மா, சும்மா போட்டுக் கொள்ளாதே. ஏதாவது கல்யாணம் காட்சியென்று வந்தால் அணியலாம்" என்று ஒரு மறைமுகமான எச்சரிக்கையுடனேயே கொடுத்ததால் இன்று வரை அபரஞ்சி அதை அணிந்ததே இல்லை.

இப்போது அதை எடுத்துக் கொண்டு குளிக்கப் போனாள்.

ஷாம்பூ போட்டுக் கூந்தலை அலசி, உடம்பெல்லாம் நன்றாகத் தேய்த்துக் குளித்தாள். புதிய சுரிதாரை அணிந்துகொண்டு



கூந்தலையும் அழகாக வாரி விட்டாள். சின்னதாகச் சிவப்புப் பொட்டை ஒட்டவைத்த பிறகே, கண்ணாடியில் தன்னை முழுமையாகப் பார்த்தாள்.

பார்த்த அளவில், 'அப்பாடி' என்றிருந்தது அவளுக்கு.

நன்றாய்த்தான் இருக்கிறாள். இத்தனைக்கும் அலங்காரம் என்று வெறும் பவுடர்கூட, அவள் பூசிக் கொள்ளவில்லை. பாக்கியத்தின் அச்சமும் சரிதான். ஆனால் அதற்காக இனி அபரஞ்சி தன்னைக் கெடுத்துக் கொள்ள முடியாது. கூடாது.

கண்டவர்களுக்குக் கண்ட எண்ணம் வருகிறது. அதை அனுமதிக்கக் கூடாது.

உருப்படியாய் இருக்கும் சுரிதார் செட். இது ஒன்றுதானே என்று எண்ணும் போது, மனம் சோர்ந்தது.

ஆனால் தலையை வாரி விட்டுக் கொள்ளலாம் அல்லவா? அழுக்குக் கலர்த் துணிகளை கூட நன்றாகத் துவைத்து பெட்டி போட்டு, அணியலாமில்லையா? முகத்தையும் கழுவிப் பளிச்சென்று வைத்துக் கொள்ளலாமே?

வீட்டோடு இருக்கும் பையன், காவல்காரன் இருவரிடமும் சொல்லிவிட்டு, அபரஞ்சி, எதிர் வீட்டுக்குச் சென்றாள். அங்கே பார்வதிப் பாட்டியின் பாசமான வரவேற்பு, புண்ணுக்குப் புனுகு தடவினாற்போல, அவளுக்கு இன்னமும் இதமாக இருந்தது.

கண்ணாடியை அணிந்து, சில கடிதங்களைப் படிக்க முயன்று கொண்டிருந்த பாட்டிக்கு அபரஞ்சியின் புதிய தோற்றம், அளவில்லாத மகிழ்ச்சியைத் தந்தது.

'கம்பானியன்' போல எப்போதும் அவரோடு கூடவே இருக்கும் பெண்மணி சரசுவதியை அழைத்து, அபரஞ்சிக்குச் சுற்றிப் போடச் சொன்னாள்.

"எப்போதும் இப்படியே இருடாம்மா" என்று ஆசி போலப் பணித்தாள்.

"எனக்கும் ஆசைதான் பாட்டிம்மா. ஆனால் அது நடக்கவே நடக்காதே" என்று சோகமாகப் பெருமூச்சு விட்டாள் அபரஞ்சி.

"ஏம்மா? அந்த ராட்சசி விட மாட்டாளா?" என்றாள் பாட்டி ஆத்திரத்துடன்.

"எந்த ராட்சசி? ஓ. சித்தியா? சித்தியை விடுங்கள் பாட்டி. அந்தக் கடவுளே அதற்கு விட மாட்டாரே!"

"கடவுளா? எப்படி..?"

"கடவுளேதான் பாட்டி. ஆண்டு தோறும், எனக்கும் வயதைக் கூட்டுவாரில்லையா? அறுபது வயது ஆகிறபோது, எனக்கும் தலை நரைத்து, தோல் சுருங்கி... எப்போதும் இப்படியே இருபத்தியிரண்டு வயது இளமையாய் இருக்க முடியாதே பாட்டி." என்று சோகமாகச் சொல்லி விட்டுக் கலீர் என்று நகைத்தாள் அபரஞ்சி.

"போக்கிரி" என்று அவளைச் செல்லமாய் வைது, தானும் இணைந்து சிரித்தாள், பார்வதி.

இந்தச் சிரிப்பொலியைக் கேட்டபடிதான், அன்றைக்கு உள்ளே வந்தான் வசீகரன்.

இளமையும், முதுமையும் இணைந்து நகைத்த அந்தக் காட்சி, ஒரு மறக்க முடியாத சித்திரமாய் அவன் மனதில் பதிந்தது.

வசீகரனைக் கண்டதும், கிளம்பிச் சென்றுவிட எண்ணி எழும் போதே, அவன் முகத்தைக் கவனத்துடன் ஆராய்ந்தாள் அபரஞ்சி. அன்று அரை விநாடிக்குள் அப்படி மாறியதே.

அந்த ஆராய்ச்சிக்கு அவசியமே இல்லாமல் மெச்சும் பார்வையுடன் "எப்போதுமே இப்படியே இருக்கலாமே அபரஞ்சி? ஒப்பனைகள் இல்லாமலே அழகாக இருக்கிறதே. அழகான பெயருக்கேற்ற அழகான தோற்றம். கண்ட கந்தை, கசங்கல்களை அணிந்து, இருக்கும் அழகைக் கெடுப்பானேன்?" என்றான் வசீகரன்.



அவனது மெச்சும் பார்வையே, அவளுக்குப் போதுமானது தான். அப்படியிருக்க, அவனது இந்தப் பாராட்டு அவளுக்கு உச்சி குளிர வைத்தது. கூடவே பிரமித்தும் போனாள்.

## 6

வசீகரனின் பாராட்டுதல், அபரஞ்சியின் மனதைக் குளிர்வித்த போதும், அவளுக்கு ஆச்சரியமாகவும் இருந்தது.

அவளுடைய சித்தப்பா நாகேந்திரன், பாட்டி வீட்டுக்கு எதிர் வீட்டை வாங்கிப் புதுப்பித்துக் குடி வந்து கிட்டத்தட்ட ஓர் ஆண்டு ஆகிறது. குடி வந்து, ஒரு மாதத்துக்குள், அபரஞ்சியும் பார்வதிப் பாட்டியும் மிகவும் சினேகமாகி, சின்னவள் முடிந்தவரை தினமுமே, பாட்டி வீட்டுக்கு வந்து போவது வழக்கமாகி விட்டிருந்தது.

தேவையான பணிவிடைகளைச் செய்து, கூடவே இருப்பதற்காக ஐம்பதுகளில் உள்ள ஒரு பெண்மணி, பாட்டியுடன் கூடவே வசித்தாள்.

வீட்டு வேலைக்கு வள்ளியம்மா, காவலுக்குத் தோட்டக்காரன்.

வேறு தேவை இல்லாதபோதும், அபரஞ்சியைப் பிடித்துப் போய் அவள் வருகைக்காகப் பார்வதி காத்திருப்பார். அவள் மருந்து தடவி விடுவது சுகமாக இருக்கிறது என்று சும்மாவேனும் சொல்லிக் கொள்வார். அபரஞ்சி வரத் தயங்கிவிடக் கூடாதே.

அபரஞ்சிக்கு இது நல்ல மூச்சு விடுகிற, விட முடிகிற இடம். மனம் விட்டுப் பேச முடிகிற, வாய்விட்டுச் சிரிக்க முடிகிற இடம். எனவே தினமும் ஒரு தரமேனும் இங்கே ஓடி வந்து விடுவாள்.

ஆனால் அப்படி அடிக்கடி வந்தாலும் வசீகரனை அவள் நேரில் சந்தித்துப் பேசியதில்லை.

இரண்டு மூன்று வாரங்களுக்கு ஒரு தரமேனும், திருச்சிக்குச் சென்று தன் பாட்டியைப் பார்த்து வருவதை வசீகரன் கட்டாயமாக்கிக் கொண்டிருந்தான். பொதுவாக அது ஒரு ஞாயிற்றுக் கிழமையாகவோ, விடுமுறை நாளாகவோ இருக்கும். வரப் போவதை முன் கூட்டியே தெரிவித்து விடுவான். அவனுக்கான உணவு, மற்ற வசதிகளை ஏற்பாடு செய்ய வசதியாக இருக்கும் அல்லவா.

திடும் என்று வந்து நின்று கொண்டு, 'இதைக் கொண்டுவா, அதை வைக்கவில்லை' என்று ஆடாமல், செய்வதற்கு அவகாசம் கொடுக்கும் அவனது இந்தப் பழக்கம் அபரஞ்சியின் மனதில் அவன் மதிப்பை உயர்த்தியிருந்தது. அப்படிச் சொல்லாமல் திடுமென வந்தாலும் தன் தேவைகளை முடித்துவிட்டே வீட்டுக்கு வருவான் என்று பார்வதி அம்மாள் பெருமையாகச் சொல்வதுண்டு.

பொதுவாக அவன் முன்கூட்டியே சொல்லி விடுவதால் அவன் இருக்கக் கூடிய நாட்களில் அபரஞ்சி பாட்டி வீட்டுக்குப் போவது இல்லை. மற்றபடியும், அவன் கார் நிற்பது எதிர் வீட்டிலிருந்து பார்த்தாலே தெரியும். பார்த்துவிட்டு ஒதுங்கிக் கொள்ளுவாள். பாட்டியும் பேரனுமாக தனியே பேச எத்தனையோ இருக்கும். அப்படிப் பேசுவதே சுகமாகவும் இருக்கும். அதற்குத்தான் இடையூறாகப் போய் நிற்கக்கூடாது என்று எண்ணுவாள். அத்தோடு செல்வி சொல்லுவது போலன்றி இளைஞன் ஒருவன் வந்திருக்கும் போது, அங்கே செல்ல அவளுக்கே ஒரு மாதிரிப் பிடிக்காது.

எனவே அவளும் வசீகரனும் நேரில் சந்தித்துப் பேசியதே இல்லை.

அப்படியிருக்க ரொம்ப சாதாரணமாக அவளைப் பெயர் சொல்லி அழைத்து வெகு சரளமாக அபிப்பிராயமும் சொல்லவும் அவளுக்கு ஆச்சரியமாகிப் போயிற்று.



அவளது வியந்த பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு லேசாக நகைத்து நகைப்புக்கு நேர் விரோதமாக "சரி" என்று வருத்தம் தெரிவித்தான் வசீகரன். "எடுத்த எடுப்பில் ஒரு புதியவரிடம் இப்படி அபிப்பிராயம் கூறுவது சரியல்லதான் என்றாலும் பாட்டி உன்னைப் பற்றிச் சொல்லிச் சொல்லி மனதில் ரொம்பவும் தெரிந்தவர் போலாகி விட்டது. தப்பாக எண்ண வேண்டாம்" என்றான் தொடர்ந்து.

தொழிலில் ஈடுபட்டுப் பலருடனும் பேசிப் பழகி விட்டதால் அன்னியப் பெண்ணுடனும் இயல்பாகப் பேச வருகிறது போலும், ஆனால் அந்த வாய்ப்பு இல்லாத அபரஞ்சி கொஞ்சம் தயங்கினாள்.

"வந்து... எனக்கும் கொஞ்சம் அப்படித்தான். உங்களைப் பற்றி பாட்டி அடிக்கடி கூறுவார்கள். அதனால் தெரிந்த மனிதர் போலத் தான் தோன்றுகிறது. வந்து... பாட்டியைப் பார்க்கவென்று சென்னையிலிருந்து வந்திருக்கிறீர்கள். இருவரும் பேசிக் கொண்டிருங்கள். நான் கிளம்புகிறேன்" என்றாள்.

பார்வதியின் பக்கம் திரும்பி, "பாட்டி, நான் அப்புறமாய்..." என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வசீகரன் குறுக்கிட்டான். "ஊகூகூம். நான் வந்து விட்டேன் என்பதற்காக, நீ ஓட வேண்டாம் அபரஞ்சி. அப்படிப் பாட்டியிடம் தனிப்படப் பேசவென்று பிரமாதமாக ஒன்றும் இல்லை. அதனால் நாம் மூவருமாகச் சேர்ந்தே பேசிக் கொண்டிருக்கலாம். பாட்டிக்கும் இன்னும் அதிக மகிழ்ச்சியாக இருக்கும்" என்றான்.

"ஆமாம், அபி அவன் சொல்வதுதான் சரி. உட்கார். வசீகரன் நீயும் உட்கார்."

வசீகரன் மரியாதை நிமித்தம் சொல்லியிருந்தாலும், சொன்ன விதம் வெகு இயல்பாக இருக்க, பார்வதி அம்மாளும் அதை ஆமோதிக்கவே அபரஞ்சி மீண்டும் அமர்ந்தாள்.

தானும் அமர்ந்தபடி, "என்னை வசீகரா என்று முழுப் பெயர் சொல்லி அழைப்பது பாட்டி மட்டும்தான். அப்பா இன்னும் சிலர் 'வசு' என்பார்கள். ஓரிருவருக்கு நான் 'வசி'" என்று புன்னகையோடு சொல்லிக் கொண்டு வந்தவனின் முகம் பேச்சின் கடைசிப் பகுதியில் லேசாகக் கடுத்தது.

'வசி' என்று அழைப்பவர் மேல் அவனுக்கு என்ன கோபமோ? அவனைக் கோபமூட்டியவர் மேல் ஏனோ அவளுக்கும் கோபம் வந்தது.

அழகான பெயர் என்று முதலில் தொடங்கியது அவன்தானே. அதிலேயே தொடர்ந்து பேசுவதில் தப்பில்லை என்று எண்ணியவள், "வசீகரமான பெயரைக் குறுக்க வேண்டாம் என்று பாட்டி நினைத்திருப்பார்கள். வசு என்றாலும் நல்லவிதமான அழைப்புதான். அஷ்ட வசுக்களில் ஒருவரான தேவன், பொன், அக்கினி என்று நல்ல அர்த்தங்களாகவே அகராதியில் பார்த்தேன். ஆனால் 'வசி'யைத் தவிர்க்கப் பாருங்கள் சார். வடு, வடுப்படுதல் என்றெல்லாம் போட்டிருக்கிறது" என்றாள் அபரஞ்சி.

எதையோ யோசித்தவன் போல ஒரு கணம் முகம் இறுகியவன், உடனே மாற்றிக் கொண்டான். "அபரஞ்சி புத்தகம் வாசிக்கும் போது கேட்க நன்றாயிருக்கும் என்பீர்கள். ஆனால் அகராதியைக் கரைத்துக் குடித்திருக்கும் விஷயம் சொல்லவே இல்லையே பாட்டி." என்று கையை விரித்து வியப்பு காட்டினான்.

"ஒரேடியாய்ப் புகழ்ந்தால் எனக்கு ஜலதோஷம் பிடித்துக் கொள்ளுமோ என்று பயந்திருப்பார்கள்" என்று நமுட்டுச் சிரிப்புடன் அபரஞ்சி கூறவும், சட்டெனச் சிரித்தான் அவன்.

சிரித்துவிட்டு, "என்னவோ, உனக்கு மட்டும்தான் தமிழ் அர்த்தங்கள் தெரியும் என்று எண்ண வேண்டாம், அபரஞ்சி. நான் கூடப் படித்திருக்கிறேன். உதாரணமாக, வசுவைப் போல அபரஞ்சியும் பொன்தான் என்று எனக்குத் தெரியும். ஆக இருவரும் சமம்தான்" என்று பெருமை போலக் கூறினான் வசீகரன்.



"ம்ம்ம், அப்படியா? ஆனால் அகராதிப்படி நான் 'புடம் போட்ட பொன்' ஆயிற்றே" என்று அபரஞ்சி கூறவும் "அம்பேல்" என்று அவன் கை தூக்க மூவருக்குமே சிரிப்பு வந்து விட்டது.

வசீகரன் வாய்விட்டுச் சிரிப்பதை உள்ளூர வியப்புடன் அபரஞ்சி கவனித்தாள்.

பெயருக்கேற்றபடி வசீகரமாகத்தான் இருந்தது.

பல ஆண்டுகளாக ஆண்கள் சிரித்து அபரஞ்சி அதிகம் கேட்டதில்லை. நாகேந்திரன் ஒரு மாதிரி சந்தோஷமற்ற மனிதர். பொதுவாக 'உம்'மென்று இருப்பார். அவரது விருந்துக்கு வருகிறவர்களிடமும், அடுத்தவருக்காகச் சிரிக்கும் அசட்டுச் சிரிப்பு இருக்குமே தவிர, இந்த மாதிரி இலகுவாக இணைந்து நகைப்பதைப் பார்க்க முடியாது.

திடுமென அவன் காதலியைப் பற்றி அவளுக்கு நினைவு வந்தது. அந்தக் காதலி, எவ்வளவு பெரிய அதிருஷ்டக்காரி. இந்தச் சிரிப்பைப் பார்த்துக் கொண்டே இருக்கலாமே.

"என்ன, திடீரென்று இப்படியொரு பெருமூச்சு?" என்று வசீகரன் கேட்ட பிறகுதான் தான் பெருமூச்சு விட்டதையே அபரஞ்சி உணர்ந்தாள். என்ன பைத்தியக்காரத்தனம்? யாரோ அதிருஷ்டக்காரியாக இருந்தால் இவளுக்கு என்ன வந்தது? இப்போது இவனுக்கு என்னவென்று பதில் சொல்வது?

சொல்வதறியாமல் அவள் திகைக்கையில், "அவள் சித்தி நினைவு வந்திருக்கும்" என்று எடுத்துக் கொடுத்து பார்வதி அம்மாள் உதவி செய்தாள்.

இதற்கு மேல் இங்கிருப்பது மன அமைதிக்கு நல்லதில்லை என்று தோன்றிவிட, அபரஞ்சி எழுந்தாள். "நான் கிளம்புகிறேன் பாட்டி. வருகிற நேரம் பற்றிச் சித்தி போன் பண்ணக் கூடும். வருகிறேன்" என்று வசீகரனிடமும் சொல்லிக் கொண்டு மேற்கொண்டு நில்லாமல் அபரஞ்சி கிளம்பி விட்டாள்.

வியப்பை மறைத்துத் தலையாட்டினான் அவன்.

அவள் வாயில் தாண்டிச் செல்லும் வரை பார்த்திருந்துவிட்டு, "நல்ல பெண். உன் மனைவியாக இப்படி ஒரு பெண்ணைத்தான்... ஆனால் சற்று வசதியுள்ள குடும்பத்தவளாகக் கற்பனை செய்து கொண்டிருப்பேன். போகட்டும். நீ அந்தப் பெண் அவள் பெயரென்ன சுபா... சுபலேகாதானே. அவளை எப்போதடா இங்கே அழைத்து வரப் போகிறாய்? இருவருமாக வரும் போது மாணிக்க வினாயகருக்கு ஓர் அர்ச்சனை செய்ய வேண்டும்" என்றார் பார்வதி.

பாட்டியின் பேச்சின் பின் பாதியை ஒதுக்கிவிட்டு, "வசதி என்ன வசதி? மனைவியாக வேண்டிய பெண்ணுக்குப் பணம் இருக்கத் தேவையில்லை பாட்டி. இருக்க வேண்டியது நல்ல மனம்தான்" என்றான் வசீகரன்.

வீட்டிற்குப் போன அபரஞ்சிக்கு ஏனோ வேலையே ஓடவில்லை. எதையோ பறி கொடுத்த உணர்வு அவளது இதயத்தை அழுத்தியது. ஏழு ஆண்டுகளுக்கு முன் இறந்து போன பெற்றோரை எண்ணி, இப்போது இரு மடங்காய் பரிதவித்தது. ஒரு நல்ல வாழ்வை அமைத்துத் தரவேண்டியவர்கள் இப்படி நட்டாற்றில் விட்டு விட்டுப் போய் விட்டார்களே. இப்படித் தகுதியற்றவர்கள் கையில் மாட்டிக் கொண்டு தவிப்பதற்கு அவளையும் சேர்த்து அழைத்துக் கொண்டே போயிருக்கலாமே, என்று ஏங்கினாள்.

ஆனால் அவளது வாழ்வோ அன்றி அவர்களது சாவோ எதையும் நிர்ணயிக்கும் உரிமை அவளுடைய அருமைப் பெற்றோரின் கையில் இருக்கவில்லையே. எந்தப் பிறவியில் அவள் என்ன பாவம் செய்தாளோ. சிலப்பதிகாரம் சொல்வது போல அவளது ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டுகிறது. படுகிறாள்.

ஊகூம். தப்பு இப்படியெல்லாம் நினைப்பதே தப்பு. இப்படித் தன்னிரக்கம் கொள்வது அவளது தைரியத்தை அடியோடு அழித்து விடக்கூடும். கூடாது.



சொல்லப் போனால் கடவுள் அவளுக்கும் எத்தனையோ நலங்களைத் தந்துதான் இருக்கிறார்.

நல்லவர்களோ, இல்லையோ தங்குவதற்குக் கூரையைத் தந்திருக்கும் உறவினர்கள். சிறந்த படிப்பு என்று சொல்ல முடியா விட்டாலும் பட்டப்படிப்பு. நல்ல தோற்றம்.

இதற்கு மேல் தன்னை உயர்த்திக் கொள்வது அவளது பொறுப்பு அல்லவா?

குறுக்கும் நெடுக்குமாக நடந்தவாறு அபரஞ்சி யோசித்துக் கொண்டிருக்கும் போதே மணிகண்டன் ரேஷன் சாமான்களோடு திரும்பி வந்தான்.

அன்று போலவே சைக்கிளில் அமர்ந்தபடியே, "இந்தா இதையெல்லாம் எடுத்துப் போய் உள்ளார வை" என்று அபரஞ்சியை ஏவினான்.

உள்ளே உதறத் தொடங்கியபோதும், அதுவரை யோசித்துக் கொண்டிருந்தது நினைவு வர, அபரஞ்சி நிமிர்ந்தாள்.

உட்புறம் நோக்கி, "ஏ சின்னான்" என்று குரல் கொடுத்தாள்.

வீட்டோடு இருக்கும் பையன் ஓடி வந்தான்.

அவனிடம், "அதோ மணிகண்டனிடம் இருந்து, சாமான் களை வாங்கி உள்ளே கொண்டு போய் வை." என்று உத்திர விட்டாள்.

எப்படியும் சின்னாவைப் பொறுத்தவரை அபரஞ்சி முதலாளி யுடைய அண்ணார் மகள்தானே? அத்தோடு சாப்பாடெல்லாம் எடுத்துத் தருகிறவளும் அவள்தான். பெரியம்மா மாதிரி இல்லாமல் தயவு தாட்சண்யம் பார்ப்பவளும் கூட. எனவே அவள் பணித்ததைச் செய்யப் பையன் ஓடினான்.

அபரஞ்சி, ஒரு பத்திரிகையை எடுத்துக் கொண்டு சோபாவில் அமர்ந்து படிக்கத் தொடங்கினாள்.

இதை எதிர்பாராத மணிகண்டனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை போலும். சற்று நேரம் அப்படியே நின்று பார்த்து விட்டு சைக்கிளை விட்டு இறங்கி வந்தான்.

ரேஷன் கார்டு, வாங்கிய சாமான்களுக்கான பில், மிச்சப் பணம் எல்லாவற்றையும் டீபாய் மீது வைத்தான். "அம்மா கிட்டே கொடுத்திடு" என்றான்.

அவள் நிமிர்ந்து பாராமல், பத்திரிகையிலேயே கவனமாக, "உம்" கொட்டவும் விருட்டென்று வெளியேறிச் சென்று விட்டான்.

எதையோ சாதித்து விட்ட மாதிரி இருந்து அவளுக்கு.

ஆனால் இது போதாது. இந்த வீட்டைச் சார்ந்து இருக்கும் வரை, இது நிச்சயமாகப் போதாது. உணவு, உடை, உறைவிடம் என்று எல்லாவற்றுக்குமே இவர்களை அண்டி வாழும்போது இவர்களை மீறுவது கடினம்.

அது முடியாது என்று இல்லை. பெரிதோ, சிறிதோ, அவளுக்கும் ஒரு பிடிதரம் இருக்கும்போது சித்தி ஒரேயடியாக அவளைப் பணிய வைக்க முடியாது. ஆனால் சித்தியின் குணத்துக்கு ரொம்பவே ரசாபாசம் ஆகிவிடும். அப்படியின்றி இந்தப் பிரச்சினையிலிருந்து நல்லபடியாக மீள வேண்டுமானால், சித்தப்பா குடும்பத்தை அண்டி வாழும் இந்த நிலை இப்போதே மாற வேண்டும்.

இரவெல்லாம் யோசித்து, மறுநாள் பாட்டி வீட்டுக்கு போய் அவளது சொற்பத் தகுதிகளுக்கு ஏற்றதாய் ஏதாவது ஒரு வேலை பார்த்துத் தர முடியுமா, என்று கேட்க வேண்டும் என்று முடிவு செய்தாள்.

ஒரே ஒரு தரம் சற்றுக் கலகலப்பாகப் பேசுமுன், வேலைக்கு அடிப் போடுகிறாளே என்று அவளைப் பற்றிக் கேவலமாக எண்ணுவானோ என்று சற்று நேரம் தவித்தாள்.

ஆனால் அவள் என்ன அவனது வாழ்விலா பங்கு கேட்கிறாள்?

அவளது தகுதிக்கேற்ற ஒரு வேலைதானே? இதில் தவறாக நினைக்க என்ன இருக்கிறது என்று அவள் தன்னைத்தானே



ஒருவாறு தேற்றிக் கொண்டு எதிர் வீட்டுக்குச் செல்வதற்காகக் கிளம்பினாள்.

சித்தப்பாவின் வீட்டுச் சுற்று மதில் வாயிலை அவள் அடையும் போது, பாட்டி வீட்டிலிருந்து ஒரு கார் வசீகரனுடையது வெளியே வருவது தெரிய அப்படியே நின்றாள்.

வசீகரன்தான். அதற்குள் கிளம்பிவிட்டானே.

கிளம்பிச் செல்லுகிறவனை வழி மறித்து நடுத் தெருவில் நிறுத்திச் சொல்லுகிற விஷயம் அல்லவே அவளது தேவை. நின்று நிதானித்து நாலு விஷயங்களுக்கு இடையே சொல்வதே கடினம்.

எதிர்வீட்டு வாயிலருகே அபரஞ்சி நிற்பதைப் பார்த்துவிட்டு முறுவலோடு கையாட்டிவிட்டுப் போனான் அவன்.

முணுக் முணுக்கென்று மெல்லிதாகச் சுடர் விட்டுக் கொண்டிருந்த ஒரு நம்பிக்கை நட்சத்திரம் கண்ணுக்கு மறைவதாய் உணர்ந்தாள் அபரஞ்சி.

வசீகரன் திரும்பி வராமலே போய்விடப் போவதில்லை.

மிஞ்சி மிஞ்சிப் போனால் ஓர் இரண்டு வாரம். பதினைந்து நாட்களுக்குள் கட்டாயமாக பாட்டியைப் பார்க்கத் திரும்பி வந்து விடுவான். அதுவரையிலும் சமாளிக்க வேண்டும். அவ்வளவு தானே? அது கூட முடியவில்லையென்றால் அபரஞ்சி இந்த இருபத்தியிரண்டு வயது வரை உயிர் வாழ்வதே வீண்.

இந்தப் பதினைந்து நாட்கள் கழித்து வசீகரன் வரும் போதும் அவளுக்கு வேலை நிச்சயம் என்ற உறுதி எதுவும் கிடையாதே என்று உள்ளே எழுந்த குரலைப் பிடிவாதமாகப் புறக் கணித்தாள்.

வசீகரன் வருவான் வேலை கிடைக்கும். அவனாகக் கொடுக்கா விட்டாலும் பாட்டியின் சிபாரிசிலேனும் அவன் அவளுக்கு வேலை கொடுக்கப் போவது நிச்சயம். பார்த்துக் கொள்ளலாம்.

வேலை இல்லாவிட்டாலும் கூடப் பார்த்துக் கொள்ளலாம்.

இப்போது தேவை மன உறுதி மட்டுமே.

அவளது மன உறுதியும் மிக விரைவிலேயே தேவைப்பட்டு விட்டது.

## 7

ஐந்து நாட்கள் டேராப் போட்டும், நாகேந்திரன் குடும்பத்தார் விரும்பியது போல எதுவும் நடவாது போகவே, கணவன், மனைவி, மகள் மூவருமே யாரைக் கடித்துக் குதறலாம் என்பது போல மிகவும் மோசமான மன நிலையோடுதான் வந்திருந்தனர்.

கடித்துக் குதறுவதற்கு அபரஞ்சியை விட்டால் சரியான ஆள் வேறு யார் இருக்கிறார்கள்?

குற்றம் குறை தேடிய பாக்கியத்தின் கண்களில் அபரஞ்சியின் திருத்தமான தோற்றம்பட்டு ஆத்திர மூட்டியது.

"ஏய், இங்கே வாடி" என்று அருகில் அழைத்து மைத்துனர் மகளை ஏற இறங்கப் பார்த்தாள்.

கொஞ்சமும் கவர்ச்சியற்ற பழைய ஆடையில் கூட அவள் பளிச்சிட்டாள்.

இந்த அழகு இல்லை என்றுதானே அவள் மகளை வேண்டாம் என்று விட்டார்கள். பத்து லட்சம் வரை தருவதாகச் சொல்லியும் ஒரேயடியாக மறுத்து விட்டார்களே.

கொதிப்புடன் நோக்கியபோது, அபரஞ்சி தலைவாரி அழகாகப் பொட்டிட்டு இருப்பதும் உடையும் கசங்கல் கிழிசல் இல்லாதிருப்பதும் தெரிந்தது.



இவள் தன்னை அழகு படுத்திக்கொள்ள வேறு தொடங்கி விட்டாளா? சும்மாவே அவள் மகளைக் கழிக்கிறார்கள். இப்படி இவளைப் பார்த்துவிட்டால் அழைத்து வருகிற பணக்காரப் பயல்கள் எல்லாம் இவளுக்காக அல்லவா வரிசையில் நிற்பான்கள்.

"ஏய் என்னடி இது வேஷம்? ஐந்தே நாள் நான் ஊரில் இல்லை என்றால் திரும்பி வரவே மாட்டேன் என்று நினைத்தாயா? இஷ்டம் போல அலங்காரம் செய்து கொள்ள, இது என்ன பலானப்பட்ட வீடா? இந்த மாதிரி மினுக்கிக் கொண்டு நின்றால், பார்க்கிறவர்கள் என்ன சொல்லுவார்கள்?" என்று வெறுப்பும் கோபமுமாக வார்த்தைகளைக் கொட்டினாள்.

மினுக்குவதா?

சும்மா, தலை வாரிப் பொட்டு வைப்பதை மினுக்குவது என்றால் பார்லருக்குப் போய் 'ப்ளீச்' பண்ணி, ஐ ஷாடோவும் லிப்ஸ்டிக்குமாக நிற்கும் செல்வியை என்ன சொல்லுவார்கள்? அவள் இருக்கும் இந்த வீட்டையும் தான் என்னவாய் நினைப்பார்கள்?

இதை வாய் வார்த்தையாகச் சொல்லிவிட்டு அதற்கு மேல் அபரஞ்சி இந்த வீட்டில் ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது.

ஆனால் சித்தியின் நியாயமற்ற இந்தப் பேச்சைச் சும்மா விடவும் முடியாமல் செல்வியை ஒரு தரம் லேசாகப் பார்த்துவிட்டு, "வெறுமனே தலையைக் கோதிப் பின்னல் மட்டும்தானே சித்தி போட்டிருக்கிறேன்? இதை யாரும் எதுவும் சொல்லமாட்டார்கள். கவலைப்படாதீர்கள்" என்று உள்ளே சென்றாள் அவள்.

வேகமான நடையிலும், மெல்லிய மேனியின் எழில் தெரிவதை வெறுப்புடன் வெறித்தாள் பாக்கியம். ரத்தக் கண்ணீர் வடிய வைக்கிறேன் பார் என்று உள்ளூரக் கறுவினாள்.

பாக்கியத்தின் எந்த முறைப்புக்காகவும் அபரஞ்சி, தன் புதிய தோற்றத்தை மாற்றிக் கொள்ளவில்லை. 'அழகான பெயருக்கேற்ற,

அழகான தோற்றம்' என்று வசீகரனின் குரல் தைரியமூட்டிக் கொண்டே இருக்க பழைய பஞ்சைப் பராரித் தோற்றத்தை அவள் நினைத்துக் கூடப் பார்ப்பதாக இல்லை.

மறுநாள், இரண்டு தரம் வந்துவிட்டுப் போன மணி கண்டனையும் அவள் கண்டு கொள்வதாக இல்லை.

"இன்னும் ரெண்டு தோசை வய்யேன்..." என்று தொடங்கிய கிளியாம்பாவையும் அலட்சியம் செய்தாள். சற்றுத் திகைத்துவிட்டு, "இந்தா, கொஞ்சம் மருவாதியா நடந்துக்கோ. அப்புறம் நல்லாருக் காது. ஆமா" என்று மிரட்டிவிட்டுப் போனாள் கிளியாம்பா.

மிரட்டலா என்று மனதுள் குறித்து வைத்தாள் அபரஞ்சி.

இரண்டாவது தடவை வந்த மணிகண்டன் அபரஞ்சியைத் தேடி வந்து பேசினான். "ஒரு வாட்டி சொன்னா புரிஞ்சிக்க மாட்டியா? வெளக்குமாத்துக்கு யாராச்சும் பட்டுக் குஞ்சலம் கட்டுவாங்களா? உனுக்கு எதுக்கு இந்தா மாதிரி துணியும், தலைக்கட்டும்? பழைய மாதிரி இரு. இல்லாட்டி எங்க அம்மா மாதிரிக்கு மொத்தையாக் கொண்ட போட்டுக்க. இந்த மினுக்கல் எல்லாம் எனக்குக் கொஞ்சங் கூட புடிக்கல. தெரிஞ்சுக்க" என்று அவள் அகன்று செல்ல முடியாமல் வழியை மறித்து நின்று சொல்லிவிட்டுப் போனான்.

இனிப் பொறுத்திருப்பது பைத்தியக்காரத்தனம். அப்புறம் மௌனம் சம்மதம் என்பது போலக் கொண்டு வந்து விடுவார்கள். எனவே சித்தப்பாவிடம் பேசியாக வேண்டிய கட்டம் வந்துவிட்டது என்று அபரஞ்சி முடிவு செய்தாள். எதிர்ப்புத் தெரிவித்தாக வேண்டிய கட்டம்.

சித்தி, சித்தப்பாவிடம் பேசிவிட்டு அதைப் பற்றிப் பார்வதிப் பாட்டியிடமும் சொல்ல வேண்டும்.

வயதான பெண்மணியின் மனதை வேதனைப்படுத்தக் கூடாது என்று பல துன்பங்களைப் பார்வதி அம்மாளிடம் அபரஞ்சி கூறுவதில்லை. ஆனால் வேலைக்காரர்கள் மூலம் பரவுவது போக, அனுபவசாலியான பார்வதி அம்மாளே பலவற்றை ஊகித்துக் கொள்ளுவாள். அத்தோடு பாக்கியத்தின் தொண்டையும் தெரு தாண்டியும் கேட்கும்.



எனவே அபரஞ்சியின் வாழ்க்கை அவளாகச் சொல்லா விடினும் பெரும்பாலும் பாட்டி அறிந்ததே.

இப்போது மணிகண்டன் பற்றி நாகேந்திரன் தம்பதியிடம் பேசிவிட்டு பேச்சின் விவரத்தை பாட்டியிடம் தானே தெரிவிக்க வேண்டும் என்று அவள் எண்ணினாள். பேச்சின் முடிவு அவளுக்குப் பாதகமாக இருந்தால், பெரும்பாலும் பாதகமாகத்தான் இருக்கும் என்றே அபரஞ்சிக்குத் தோன்றத் தொடங்கியிருந்தது. அப்படி ஆகிவிட்டால் வெகு விரைவில் அபரஞ்சிக்கு ஒரு வேலை வேண்டியிருக்கும். அப்போது பாட்டியின் சிபாரிசு அவளுக்குக் கட்டாயமாகத் தேவைப்படும். பாட்டியும் அறிய வேண்டியதுதான்.

நாகேந்திரனிடம் தனித்துப் பேசத்தான் அபரஞ்சி விரும்பினாள்.

ஆனால் மனைவி அருகில் இல்லாமல் நாகேந்திரன் முக்கியமான விஷயங்கள் எதையும் பேச மாட்டார். அத்தோடு தன்னை ஒதுக்க முயன்றதாகப் பாக்கியம் எண்ணிவிட்டால், பலன் நேர் மாறாகி விடும்.

கிளியாம்பா காது கேட்கவும் இதைப் பேசக் கூடாது என்று நினைத்ததால் மாலை வேலை முடிந்து அவள் வீடு சென்றபின், நாகேந்திரனும் அலுவல் முடிந்து திரும்பி வந்து காபி டிபனை முடிக்கிற வரையில் "உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்" என்று அபரஞ்சி பேச்சைத் தொடங்கினாள்.

எதிர்பார்த்திருந்தாரோ என்னவோ, நாகேந்திரனுக்கு அண்ணன் மகளை நிமிர்ந்து பார்க்கவே விருப்பம் இல்லை.

ஆனால் அவரை முந்திக் கொண்டு, "கேட்டீங்களா? உங்கள் அண்ணார் பொண்ணுக்கு உங்கள்கிட்டே என்னவோ தனியாகப்

பேசணுமாம். பேசுங்கப்பா. நான் வேணுமானால் இங்கிருந்து போய் விடுகிறேன். சித்தப்பாரும், பெண்ணும் தனியாக இருந்து வேண்டிய மட்டும் என்னைத் திட்டுங்கள். அதற்குத்தானே, அவள் உங்களிடம் தனியாகப் பேச வேணும் என்கிறாள்'' என்று எழுவதற்குச் சிறு முயற்சிகூடச் செய்யாமல் அசையாமல் இருந்தபடி, பாக்கியம் குறைப்படும் குரலில் கூறினாள்.

''உங்களிடமும் பேச வேண்டும் என்றுதான் இப்போது வந்தேன், சித்தி'' என்று அவளைச் சமாதானப்படுத்த முயன்றாள் அபரஞ்சி.

''எங்கே? எல்லாம் பொய். என்னிடம் பேசுவதானால் இன்று பகல் முழுவதுமாக எவ்வளவு நேரம் இருந்தது? நீ என்னைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லையே'' என்று பழைய பேச்சையே தொடர்ந்தாள் பாக்கியம்.

அவளைக் குளிர்விக்கும் விதமாக ஏதோ சொல்லத் தொடங்கிய அபரஞ்சிக்குச் சட்டெனப் புரிந்தது.

இது பேச்சை மாற்றும் முயற்சி. உப்பு சப்பற்ற கண்ட விவாதங்களில் நேரத்தைப் போக்கிவிட்டு ஏதாவது வேலை என்று நாகேந்திரன் எழுந்து சென்று விடப் போகிறார். இந்த வீண் விவாதங்களில் குழம்பிப் போய் அபரஞ்சியே பேச வந்ததை விட்டுவிட்டால் அது போனஸ்.

நான் ஒன்றும் அவ்வளவு முட்டாளல்ல என்று மனதுள் கடுத்தபடி, ''உங்கள் இருவரிடமும் சேர்ந்துதான் பேச வேண்டும் சித்தி. அதனால்தான் இரண்டு பேரும் சேர்ந்து இருக்கிற நேரம் பார்த்து வந்தேன். ப்ளீஸ் சித்தி. இனி, நான் பேச வந்த விஷயம் பேசுவோம்'' என்று சற்று அழுத்தமான குரலில் சொல்லித் தொடங்கினாள் அபரஞ்சி.

வெறும் பார்வைக்கே பணியும் இவளா, இப்படிப் பேசுகிறாள் என்று திகைத்த பாக்கியம், வேறு உத்தி கண்டுபிடிக்குமுன், அவசரமாகத் தொடங்கினாள் பெண். ''நம் வேலைக்காரி



கிளியாம்பாவும் அவளுடைய மகன் மணிகண்டனும் என்னிடம் பேசுகிற முறை சரியில்லை, சித்தப்பா. அவர்கள் நிலைக்கு மிகவும் அதிகப்படி உரிமை எடுத்துக் கொள்ளுகிறார்கள். என்னிடம் மரியாதையுடன் நடக்கும்படி அவர்களிடம் சொல்லி வையுங்கள்'' என்றாள் அதே அழுத்தமான குரலிலேயே.

நாகேந்திரன் மோட்டு வளை இல்லாத காரணத்தால் மேல் தளத்தைப் பார்க்க முதலில் சுதாரித்தவள் பாக்கியம்தான்.

முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு, ''அவர்கள் என்ன உன்னிடம் மரியாதையாக நடப்பது? நீதான் அவர்களிடம் மரியாதையாக நடக்க வேண்டும் தெரிந்து கொள்!'' என்று உத்திரவிட்டாள்.

''ஏன்? அவர்கள் இருவரும் இந்த வீட்டு வேலையாட்கள்...''

''ஆமாண்டீ. அவர்கள் இந்த வீட்டு வேலைக்காரர்கள்தான். ஆனால் உனக்கும் அவர்களுக்கு மேற்பட்ட அந்தஸ்து கிடையாதுடீ. அதை மனதிலே வைத்துக் கொண்டு பேசு.''

''சித்தீ.''

''என்னடீ, சித்தி? எல்லாம் இந்த மனுஷன் கொடுத்த இடம். படிக்க வைத்தாரில்லையா? கட்டாயம் பேசுவாய்டீ. முதலிலேயே மண்டையில் இரண்டு குட்டு குட்டி, வீட்டோடு போட்டிருந்தால் இந்தப் பேச்சு பேசுவியா? பல்லை இளித்துக் கொண்டு அந்த மணியுடைய தாலிக்குக் கழுத்தை நீட்டியிருப்பாயே.''

விஷயத்தைப் போட்டு உடைத்துவிட்டு ஓரக்கண்ணால் மைத்துனர் மகளைப் பார்த்தாள் பாக்கியம்.

உள்ளே எரிந்தது அபரஞ்சிக்கு. என்னவோ, கைப்பணம் செலவழித்துப் படிக்க வைத்த மாதிரியல்லவா, பேசியாகிறது. அப்பாவுடைய நண்பர்கள் ஏற்பாடு செய்து வைத்த இலவசப் படிப்பு போக, அவளது திறமையால் கிடைத்த உபகாரச் சம்பளத்தில் தானே அவள் படித்தது.

ஆனால் அது இப்போது முக்கியம் அல்ல. வாழ்க்கை அதல பாதாளத்துள் புதைந்து விடாமல் காத்தாக வேண்டும். அதுதான் முக்கியம்.

கல்லுளி மங்கன் போல இடித்த புளியாய் உட்கார்ந்திருக்கும் சித்தப்பாவைப் பார்க்கையில் ஆத்திரம் வந்தது. அண்ணன் மகள் என்ற எண்ணமே இல்லையே? ஆனால் இத்தனை ஆண்டுகளாக இல்லாத எண்ணம் இப்போது வரும் என்று எதிர்பார்ப்பது மடத்தனம்.

இப்போது என்ன செய்வது? இந்தச் சித்தியின் காலில் விழுந்து கெஞ்சினால்கூட, அசைய மாட்டாள் என்றுதான் அபரஞ்சிக்குத் தோன்றியது.

இல்லை. இவள் முன் பலவீனத்தைக் காட்டுவது தவறு. இன்னமும் ஏறி மிதிப்பாள். எதிர்க்க முடியாத எளியோரை வாட்டும் வக்கிரம், இவளுக்கு அதிகம்.

கத்தினாலும், பத்து மடங்கு உரக்கக் கத்தக் கூடியவள். ரொம்பக் கீழ்த்தரமாகவும் பேசுகிறவள். அவள் அளவுக்குக் கீழிறங்கி, அபரஞ்சியால் பேச முடியாது. பிடிவாதக்காரியும்கூட.

ஆனால் இதற்காகவெல்லாம் பயந்தால் வாழ்க்கையல்லவா, அழிந்து போகும்?

பாக்கியத்தின் கண்களை நேராகப் பார்த்து, "மணியின் தாலி? ஏன் சித்தி?" என்று முடிந்தவரை அமைதியாகவே அபரஞ்சி வினவினாள்.

அழுகை, ஆத்திரம் போன்றவற்றைத்தான் பாக்கியம் எதிர்பார்த்திருந்தாள் போலும். இந்த அமைதியின் கம்பீரத்தில் சற்றுத் திணறிப் போனாள்.

"அது...அது..." என்று தடுமாறியவள், உடனே நிமிர்ந்தாள். "ஏன், உனக்கும் கல்யாணம் ஆக வேண்டும்தானே? வயசு ஆகுதே இருபத்தியிரண்டுக்கும் மேலே."



பாக்கியம் எகிறாததிலேயே, அவசரப்பட்டு வெற்றியாய் உணர்ந்தாள் சின்னவள். "ஆனால் இந்த மணி எதற்காக சித்தி?" என்று மீண்டும் அமைதிக் குரலிலேயே கேட்டாள்.

'பெரிய மகாராணி மாதிரி என்னிடமாடி விளக்கம் கேட்கிறாய்?' என்று எண்ணியவளாய், "என்ன செய்வது கண்ணு. புது இடத்திலே போய் நீ கஷ்டப்படக் கூடாதில்லையா? மணியை மணந்தால் நீ எப்போதும் போல, உன் வேலைகளைப் பார்த்துக் கொண்டு இங்கேயே விழுந்து கிடக்கலாமில்லையா? அவனும்தான் மாதம் ஆறு நூறு சம்பாதிக்கிறான். சொந்தமாக ஒரு காசு இல்லாத உனக்கு அவன் கிடைத்தது எவ்வளவு அதிர்ஷ்டம் பார்" என்றாள் பாக்கியம் நக்கலாக.

வாழ்நாள் பூராவும், சம்பளம் இல்லாத வேலைக்காரிக்குத் திட்டம். என்ன கொடுமை.

வெறித்து நோக்கிவிட்டு, "எனக்கு ஒரு விஷயம் புரியவில்லை சித்தி. என் திருமணத்தின்போது கிடைக்கும்படியாகப் பணம் 'டெப்பாசிட்' செய்தார்களே, அதை வைத்துப் பெரிய பணக்காரனாக இல்லாவிட்டலும், ஒரு மத்தியதரக் குடும்பத்தலைவனாய்ப் பார்த்திருக்கலாமே. ஏன் இப்படி?" என்று அப்போதும் நிதானமாகவே கேட்டாள், அபரஞ்சி.

நாகேந்திரன் உட்கார முடியாமல் நெளிய, பாக்கியம் ஆவேசமாக நிமிர்ந்தாள். "ஏய், என்னடீ, எங்களிடமாடீ, கணக்குக் கேட்கிறாய்? ஏன், ஏழு வருஷமாக இந்த வீட்டில் உட்கார்ந்து தின்னுகிறாயே, அதற்கு எவ்வளவு பணம் செலவாகியிருக்கும்? அப்புறம் துணிமணி, படிப்பு அந்தப் பணத்தை எங்களிடமே தந்தால் கூட, உனக்காக நாங்கள் செய்த செலவுக்குப் பத்தாது. ஆனால் அதற்குக்கூட இல்லாமல் அந்தப் பணம்தான் முழுகிப் போச்சு. உன் இருபத்தோராம் பிறந்த நாள் அன்றைக்குப் போய்ப் பார்த்துத் தெரிந்து கொண்டு வந்தோமே. பாவம், நீ வருத்தப் படுவாயே என்று உன்னிடம் கூடச் சொல்லவில்லை."

கன்றிக் கறுத்துவிட்ட நாகேந்திரனின் முகம் வேறு சொன்னது.

அந்தப் பணத்தைத் திருமணத்தில் அல்லது இருபத்தோராவது வயதில் எடுக்கலாம் என்று இருந்திருக்கும் போது. கள்ளக் கையெழுத்திட்டோ, எப்படியோ பணத்தை முழுங்கி விட்டார்கள். பணம் எங்கே இருந்தது என்பதையே அறியாத அவளால் இப்போது என்ன செய்ய முடியும்?

பெரிதோ, சிறிதோ, ஒரு பிடிதரம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டு இருந்தவளுக்குப் பெரிய அடிதான். ஆனால் இவ்வளவு அநியாயம் செய்தவர்கள், இன்னமும் செய்ய விடுவதா, என்ற ஆத்திரமும் அபரஞ்சிக்கு உண்டாயிற்று.

தலை நிமிர்ந்து, "எது, எப்படி ஆனாலும் சரி, சித்தப்பா. நான் மணிகண்டனை மணந்து கொள்வது நடக்காத காரியம்!" என்று உறுதியான குரலில் அறிவித்தாள்.

நாகேந்திரன் மௌனமாக இருக்க, பாக்கியம் அலறினாள். "அதென்னடி தனியாகச் சித்தப்பன்கிட்டே பேச்சு? நடக்காத காரியம்? நான் நடத்திக் காட்டுகிறேண்டி. இன்னிக்கு ஏழாம் நாள், அடுத்த புதன் கிழமை கல்யாணம். சம்மதமானால் இங்கே இரு. அல்லது இப்போதே என் வீட்டை விட்டு வெளியேறு!" என்று பதிலுக்கு அறிவித்தாள் பாக்கியம்.

முதல் முறையாக நாகேந்திரன் வாயைத் திறந்தார். "இப்பவே பதில் சொல்லு என்றால் எப்படி பாக்கி? இரண்டு நாள், அபி நிதானமாக யோசிக்கட்டும். அவள் புத்தியில்லாத பெண் அல்ல. தகுதிக்கு மீறி ஆசைப்படுகிறவளும் கிடையாது. அமைதியாக யோசித்தால், சரியான முடிவுக்குத் தானாகவே வந்து விடுவாள்" என்றார் மனைவியிடம்.

"வராட்டி, நடுத் தெருவுக்குப் போய், தெரு நாயாய் அசிங்கப்படட்டும்" என்று ஆசீர்வதித்தாள், அவருடைய அருமை மனைவி பாக்கியம்.

இன்னும் இரண்டே நாட்கள் அவகாசம்.



அதற்குள் வசீகரன் வருவானா? வராவிட்டால்?

நிலைமையை எடுத்துச் சொன்னால் பார்வதி அம்மாள் அபரஞ்சியைக் கைவிட்டுவிட மாட்டார். ஆனால், பாக்கியத்தின் பெரிய தொண்டையையும், கண்ட பேச்சையும் அந்த இடத்தில் கௌரவத்துடன் வாழ்ந்து வரும், அந்த வயதான பெண்மணி தாங்குவாரா? தாங்க வேண்டும் என்று எதிர்பார்க்க, அபரஞ்சிக்கும் தான் என்ன உரிமை இருக்கிறது?

ஒன்றும் இல்லை. அதைப் போலவே அந்தப் பாட்டியுடைய பேரன், அவளுக்கு வேலை தர வேண்டும் என்று எதிர்பார்க்கவும், அபரஞ்சிக்கு எந்தவித உரிமையும் கிடையாது. அப்படியிருக்க அவனிடம் வேலை கேட்கலாம், தருவான் என்று முதலில் அபரஞ்சி எப்படி எண்ணினாள்?

துன்பங்கள் தொடர்ந்து வரும் என்பார்கள். துன்ப நினைவுகளும் அப்படித்தான். தொட்டுத் தொட்டு, பெற்றோரை இழந்தது வரை அத்தனையும் சேர்ந்து அவள் அழுவதற்குத்தான் பிறந்தவளோ? அல்லது செத்துப் போய் விடலாமா, என்றெல்லாம் தோன்றவும் அபரஞ்சி பயந்து போனாள்.

இப்படித் தனியே உட்கார்ந்து மனதைக் குழப்பிக் கொண்டிருந்தால் தப்பு முடிவு கூட எடுத்துவிடக் கூடும் என்ற பயம் தோன்றவும், சட்டென எழுந்து எதிர் வீட்டுக்குச் சென்றாள். அவளது ஒரே புகலிடம் அதுதானே?

"வா அபி, என்ன உன் சித்தியின் குரல், அடுத்த தெரு வரை..." என்று கேலியாகப் பேசத் தொடங்கிய பார்வதி அம்மாள் அபரஞ்சியின் முகத்தைப் பார்த்ததும், "வாம்மா வந்து என் அருகில் உட்கார். என்ன விஷயம்?" என்று கனிவும் கவலையுமாகக் கேட்டார்.

சற்று முன் நினைத்ததெல்லாம், அந்தக் குரலில் மறந்து போய்விட, "பாட்டி எனக்கு உடனே ஒரு வேலை வேண்டுமே!" என்று மொட்டையாகத் தன் இமாலயத் தேவையை முதலில் தெரிவித்தாள் அபரஞ்சி.

வியப்பை அடக்கிக் கொண்டு அவளை உட்கார வைத்து உபசாரம் செய்து விவரம் கேட்டறிந்த பார்வதி அம்மாளும் அதையே ஆமோதித்தாள்.

ஆச்சரியப்படத் தக்க விதமாக அந்த நேரத்தில் அங்கே வந்து சேர்ந்த வசீகரனிடம் சுருக்கமாக விவரம் கூறிக் கேட்ட போது சற்று யோசித்துவிட்டு அவனும் அபரஞ்சிக்கு ஒரு வேலை தர ஒப்புக் கொண்டான்.

"ஆனால் அந்த வேலை பற்றி நான் அபரஞ்சியிடம் தனியாகப் பேச வேண்டும் பாட்டி!" என்று சொல்லி அவளைத் தனியே அழைத்துச் சென்று அது என்ன வேலை என்று அவன் தெரிவித்த போதுதான், அபரஞ்சி ரொம்பவும் திகைத்துப் போனாள்.

ஏனெனில், அவன் மனைவி என்ற பதவி அது!

இன்னொருத்தியை 'மகாத் தீவிரமாகக் காதலிக்கும்' அவன், அவளை மணக்க முன் வருவானேன்?

"ஆனால் ஏன்?" என்ற கேள்வியைத் தானாக அவளது வாய் கேட்டது.

## 8

அவன் ஒரு பெண்ணை மணக்கிறேன் என்று சொன்னதும், அவள் ஆஹா என்று காலடியில் விழுந்து விடுவாள் என்று எண்ணும் அளவுக்கு வசீகரன் கர்வம் பிடித்தவன் அல்ல. சொல்லப் போனால் அவனை விடவும் பணம் பெரிது என்று சொல்லி, அவனை இன்னமும் காதலிப்பதாகக் கூறிக் கொண்டிருந்த சுபலேகா அவனது தன்னம்பிக்கைக்குப் பெரிய அடியே கொடுத்திருந்தாள். இன்னமும் மனதில் ஒத்துக் கொள்ள முடியாத அடி.



தான் அழகன், சமூகத்தில் ஒரு நல்ல நிலையில் இருப்பவன், நன்றாகச் சம்பாதிப்பவன் என்பதெல்லாம் அவனுக்குத் தெரியும்தான். கூடவே இந்தக் காரணங்களால் பெண்கள் மத்தியில் அவனுக்கு மதிப்பு உண்டு என்பதையும் அறிந்தே இருந்தான். இருந்தாலும் 'இம்' மெனுமுன் எல்லாப் பெண்களும் தன் காலடியில் விழுந்து விடுவார்கள் என்று வசீகரன் ஒரு நாளுமே நினைத்தது இல்லை.

அத்தோடு, தன்னைப் பற்றிய பல விவரங்களைப் பாட்டி மூலமாக அபரஞ்சி அறிந்திருப்பதிலும் ஆச்சரியமில்லை. ஆனால் அதைப்போல அவளது நிலையை அவனும் ஏற்கனவே அறிந்திருந்ததால், ஆகா என்று தலையாட்டுவதற்குப் பதில் அவள் கேள்வி கேட்டது அவனுக்கு வியப்பளித்தது.

ஆனால் அவள் அப்படிக் கேட்டதே ஒரு வகையில் ஆறுதலாகவும் இருக்கவே கண்ணில் சிறு கேள்வியுடன் அபரஞ்சியை நேராக நோக்கினான் அவன்.

உதட்டைக் கடித்து ஒரு கணம் தயங்கினாள் அபரஞ்சி. உடனேயே ஒரு முடிவுக்கு வந்தவளாய் ஒரு மூச்செடுத்துக் கொண்டு, "நீங்கள் மனைவி என்று சொன்னதால் கேட்க வேண்டியிருக்கிறது, சார். வந்து... நீங்கள் ஒரு பெண்ணைக் காதலிப்பதாகக் கேள்விப்பட்டேன். மகாத் தீவிரமான காதல் என்று சொல்லி என் சித்தப்பா மகள் சொன்னாள். சீக்கிரமே திருமணம் என்று கூடச் சொன்னாள். அப்படியிருக்க... வந்து அதுதான் மனதில் குழப்பமாக இருக்கிறது சார். அதனால்தான் கேட்டேன்." என்று தன் மன நிலையைச் சொன்னாள்.

"நீ கேள்விப்பட்டது சரிதான்" என்றவன் சட்டைப் பையைத் துழாவி, சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

ஜன்னல் பக்கம் சென்று, புகையை ஒரு தரம் இழுத்து வெளிப்புறமாக விட்டுவிட்டுத் திரும்பி வந்தான். "நீ கேட்டதும் சரிதான். ஒரு வகையில் நீ கேட்டதே எனக்கு மகிழ்ச்சிதான். திருமணம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள ஒரு

தனிப்பட்ட உறவு. கொடுக்கல் வாங்கலில் சமமாக இருக்க வேண்டியது . மணம் செய்து கொள்ளச் சொல்லிக் கேட்டதாலேயே, உனக்கு நான் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். அது என் கடமை. இன்னொருத்தியைக் காதலிக்கும் நான், மணந்து கொள்ளுமாறு உன்னை ஏன் கேட்டேன்? இது உன் குழப்பம் இல்லையா?''

ஆம் என்பதாகத் தலையாட்டும் போதே அவள் மனம் வானில் ஜிவ்வென்று பறந்தது. இல்லை. அவளை நான் காதலிக்கவே இல்லை. எல்லாம் கட்டுக்கதை என்று சொல்லப் போகிறானோ என்று நினைவு ஓடும் போதே, 'நீ கேள்விப்பட்டது சரிதான்' என்று வசீகரன் கூறியது நினைவு வந்து சிறகடித்த மனதைத் தரைக்கு இறக்கியது.

அவன் சொன்னான். "என்னைப் பற்றி, உனக்குப் பாட்டி சொல்லியிருப்பார்கள். அதாவது சுபா பற்றி!''

மீண்டும் தலையாட்டினாள் அவள்.

"சுபாவை நான் காதலிப்பது உண்மை. மணந்து கொள்வதாகவும் இருந்தேன் என்பது வரைதான் பாட்டிக்குத் தெரியும். ஆனால்...'' என்று தொடங்கி திருமணத்துக்கு அவளுடைய தந்தை ராமலிங்கம் இட்ட நிபந்தனை பற்றி வசீகரன் கூறினான். அது பற்றிய இருவரின் உரையாடலையும் தெரிவித்தான்.

"அந்த நிபந்தனையை ஏற்க என்னால் முடியாது. சுபாவால் அந்த முப்பது கோடியை விட முடியாது. அதனால் எங்களுக்குத் திருமணம் நடக்க வாய்ப்பே கிடையாது.''

அபரஞ்சிக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்த வசீகரனைவிடப் பணத்தை அது எத்தனை கோடியாக இருந்தாலும் என்ன? அந்தப் பணத்தைப் பெரிதாக யார் நினைப்பார்கள்? ஒரு வேளை முப்பது கோடியைப் பார்த்தால் விட மனம் வராதோ?

மீண்டும் ஜன்னல் அருகே சென்று சிகரெட் புகையை வெளியே ஊதிக் கொண்டு இருந்தவனைப் பார்த்தாள் அபரஞ்சி.



நல்ல உயரம். கம்பீரமான தோற்றம். கலகலப்பான பேச்சு. அத்தோடு. அவனது மனித நேயம். சிகரெட் பிடித்தாலும் அந்தப் புகை அவளைப் பாதிக்காமல், வெளிப்புறமாக ஊதி விட்டுக் கொண்டு இருக்கிறானே. அதுவும் மிகுந்த மனச் சஞ்சலத்தில் இருக்கும் இந்த நேரத்திலும்.

ஊகூம் முன்னூறு கோடியே கொடுத்தாலும், இவனை யார் விடுவார்கள். ஒரு வேகத்தில் ஏதோ சொல்லி விட்டாலும் கூட சுபா விரைவிலேயே வசீகரனைத் தேடி வந்து விடுவாள். அப்படி வரும்போது...

"சற்றுப் பொறுத்திருந்தால், அந்த சுபா மனம் மாறி வரலாமில்லையா? எனக்குச் சாதாரணமான வேலை போதும் சார்'' என்றாள் சில தடுமாற்றத்துடன்.

"என்னை மணக்க முடியாது என்பதை மாற்றிச் சொல்லுகிறாயா?'' என்று அவன் வெளிப்படையாகக் கேட்டான்.

"அப்படியில்லை... ஆனால் என்னை விடுத்து உங்களை எண்ணிப் பாருங்கள். நமக்குத் திருமணம் ஆன பிறகு சுபா மனம் மாறி வந்தால் கூடக் கொஞ்ச காலம் பொறுத்து இருந்தோமில்லையே என்று அப்போது உங்களுக்கு மிகவும் வேதனையாக இருக்கும் அல்லவா? அதைத்தான் நினைத்தேன்.''

"ஓ. எனக்காகக் கவலையா? அதற்குக் கொஞ்சமும் அவசியமில்லை. அவள் மாற மாட்டாள். சுபாவைப் பொறுத்தவரை நான்தான் மாற வேண்டியவன். மாறிவிடுவேன் என்று மிகவும் நிச்சயம் மாற்றிவிடப் போவதாகச் சவால் கூட விட்டிருக்கிறாள். மாறக்கூடாது என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் மாறி விடுவேனோ என்ற பயம் இப்போது கொஞ்சம் வரத் தொடங்கியிருக்கிறது. ஏனென்றால்... அதையும் அந்தக் கேவலத்தையும் சொன்னால் தானே உனக்குப் புரியும்..'' என்று முகம் சற்று கன்ற வசீகரன் சொல்லலானான்.

வசீகரனை மாற்றிவிடப் போவதாகச் சவால் விட்டிருக்கும் சுபா அதற்கான முயற்சியை ஒரு நாளும் கை விட்டதில்லை.

முதலில் வாக்குவாதத்தில் அவனை வெல்ல முயன்றாள். ஆனால் அது பலிக்காது என்று ஆனதும் போர் முறையை மாற்றி விட்டாள்...

அவன் தயங்குவதைக் கண்டதும், அபரஞ்சியின் மனதில் சுமையேறியது. ஏதோ பெரிய விஷயம். மனதுக்குத் துன்பம் தரக் கூடியது. எவ்வளவு துன்பமானது என்றாலும், உண்மையை அறிந்து கொள்வது மேல் என்பது அவளது கருத்து. அவனாகச் சொல்ல விரும்பாவிட்டால்..ஆனால் சொல்லித்தானே ஆக வேண்டும்? அதுதானே, நியாயம்?

அதையே எண்ணியவன்போல, வசீகரனும் தொடர்ந்தான். "நான் உன்னை மணக்கக் கேட்டிருக்கிறேன் அபரஞ்சி. திருமண உறவு என்பது ஆண் பெண் உறவில் மிக நெருக்கமானது. ஒளிவு மறைவு இருக்கக் கூடாதது. அதிலும் நான் இன்னொருத்தியைக் காதலித்தவன் என்பதால் சில விஷயங்களை உனக்குத் தெளிவு படுத்த வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது" என்றவன் சுபாவின் போர் முறை மாற்றம் பற்றின விவரம் சொன்னான்.

சில நாட்களாகவே மிகவும் கவர்ச்சிகரமாக உடையணிந்து அவனது ஓய்வு நேரத்தில்.. அதாவது அவன் வீட்டிலிருக்கும் நேரத்தில் வந்து 'போஸ்' கொடுத்தவாறு ஏதாவது பேசிக் கொண்டிருப்பாள்.

கடைசியாக அன்றைக்கு முதல் நாள்...

சுபாவின் உடை, அவனது உடலின் எந்தப் பகுதியையும், ஊகத்துக்கு விடவில்லை. அந்த உடையுடன் வந்து அதற்கு மேலும் கவர்ச்சிகரமாக உடலை நெளித்து கண்ணில் போதையுடன் அவள் 'மற்றதை நாளைக்குப் பேசலாம், இன்று இணைந்து மகிழ்வோம் வா'



என்று அவள் அழைத்தபோது இந்த சொர்க்கத்தை மறுப்பது மடத்தனமோ என்று கூட ஒரு கணம் வசீகரனுக்குத் தோன்றி விட்டது. ஓர் எட்டு, அவள் புறமாய் எடுத்துக்கூட வைத்து விட்டான். ஆனால் உடனேயே அவளது திட்டம் அவனுக்குப் புரிந்துவிட்டது. .....அவளைத் தொட்டு விட்டால் அப்புறம் அவளைக் கை கழுவ மாட்டான் என்று புரிந்து இந்த மாதிரி அவனை வீழ்த்த முயற்சிக்கிறாள்.

அவள் கழற்றி வீசியிருந்த மேல் அங்கியை எடுத்து அவள் தோளை மூடிப் போகச் சொன்னான் அவன்.

ஆனால் மூடி விட்டபோது அவனது கைகள் நடுங்கியதை உணர்ந்த அவள் சிரித்துவிட்டு "இன்னும் எத்தனை நாள் என்னைப் போகச் சொல்லுவீர்கள் என்று பார்க்கத்தானே போகிறேன்" என்று கொஞ்சலாகக் கூறி செல்லமாக அவன் கன்னத்தில் தட்டினாள்.

ஓரளவுக்கு அவனுக்கே அந்த சந்தேகம் வந்துவிட்டிருந்தது. ஏதோ ஒரு பலவீனமான மனநிலையில் அவனுக்குச் சுபாவை மறுக்க முடியாமல் போய்விட்டால்?

ஆனாலும் சமாளித்துக் கொண்டு "தேவைப்பட்டால் வாழ்க்கை முழுவதும்" என்றான் அவன். "என் தந்தையைத் தாத்தா என்று அழைத்து அவரோடு விளையாடும் குழந்தைகளைப் பெறக் கூடிய ஒருத்தியைத்தான் நான் மணக்க முடியும் சுபா. அது நீயாக இருந்தால் இரட்டிப்பு சந்தோஷம். அப்படி இல்லாவிட்டாலும் உலகில் வேறு பெண்களே இல்லாமல் போகவில்லை" என்று முயன்று அலட்சியம் காட்டிப் பேசினான் வசீகரன்.

சுபா, மெய்யாகவே அலட்சியமாகப் பேசினாள். "என்னைத் தவிர இன்னொருத்தியை நீ தொட்டு விடுவாயா வசி? நடக்கிற காரியமா? அதுவே முடியாதபோது பிள்ளையாவது இன்னொன் றாவது?" என்று சிரித்தாள். சட்டென அவனை இழுத்து முத்த

மிட்டாள். பிறகு “இன்றைக்கு இவ்வளவு போதும். மீதி விருந்து நாளைக்கு வைக்கிறேன். தயாராயிரு” என்று மீண்டும் சிரித்தவாறே அங்கிருந்து கிளம்பிச் சென்றுவிட்டாள்.

அதற்கு மேல் அங்கே இருக்க இயலாமல் இரவே திருச்சிக்குக் கிளம்பி வந்து விட்டான் வசீகரன். உச்சிப் பிள்ளையார் கோயிலைப் பார்த்த பிறகுதான், பசி, தூக்கம் தெரிந்தது. சாப்பிட்டுவிட்டுப் படுத்துத் தூங்கியவன், மாலையில் உச்சிப் பிள்ளையார் கோயில் வரை ஏறி. இறங்கிவிட்டுப் பாட்டியின் வீட்டுக்கு வந்தான்.

நடந்த அனைத்தையும் சொல்ல முடியாமல் சில கட்டங்களை அபரஞ்சியின் ஊகத்துக்கு விட்ட போதும் முக்கியமான பகுதிகளை மறைக்காமல் அவளிடம் சொன்னான், வசீகரன்.

சொல்லி முடித்துவிட்டு “என்னைப் பொறுத்தவரை இந்தத் திருமணம் சுபா முன் என் கௌரவத்தைக் காப்பாற்ற, உனக்கு இந்த இக்கட்டில் இருந்து விடுதலை. என்ன சொல்லுகிறாய்?” என்று கேட்டான் வசீகரன்.

“உங்களைப் போலவே வெளிப்படையாகப் பேசுவதானால் எனக்கு ஒரு சாதாரண நிலை என்றால் இன்னொரு பெண்ணை விரும்பும் ஒருவரை நான் நிச்சயமாக மணந்து கொள்ள மாட்டேன் தான். ஆனால் இப்போது கையேந்துகிற நிலை எனக்கு. தேர்வு செய்ய சக்தி இல்லை. கிடைத்ததைப் பற்றிக்கொண்டே ஆக வேண்டும்” என்ற அபரஞ்சி ஒரு பெரிய மூச்சை எடுத்து “அதனால் சம்மதம்” என்று முடித்தாள்.

சிறு வியப்புடன் அவளைப் பார்த்தான் அவன். உதட்டோரத்தில், லேசான புன்னகை கூட எட்டிப் பார்த்தது. “கையேந்துகிற நிலை என்று வாய் சொல்லுகிறதே தவிர வார்த்தைகள் கூறவில்லையே” என்றான்.

விழி உயர்த்தி அவனைப்பார்த்துவிட்டு “பொதுவாக நான் அதிகம் பேசுவதில்லை. ஆனால் பேசும்போது மனதில் இருப்பதைத்தான் சொல்லுவது” என்றாள் அவள் சுருக்கமாக.



“நல்லது” என்றான் வசீகரன். “எனக்கும் வெளிப்படையான பேச்சுதான் பிடிக்கும். இப்படியே இருப்பாய் என்று நம்புகிறேன்.”

“இதற்காக நீங்கள் வருத்தப்படக்கூட நேரலாம். ஆனால் நான் இப்படியேதான் இருப்பேன்” என்று முறுவலித்தாள் அபரஞ்சி.

“ஓகே. என் தப்புகளைக் கூடச் சொல்லிக்காட்டப் போவதாக மிரட்டுகிறாயாக்கும். ஆனால் உன் மிரட்டலுக்கு நான் பயப்பட மாட்டேன். ஏனெனில் நான் தப்பு செய்தால்தானே?” என்று இலகுவாகப் பேசி அவனும் முறுவலித்தான்.

முதல் காதலாக இருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும்தான். ஆனால் அதற்குக் கொடுத்து வைக்காத போது ‘தப்பு செய்ய மாட்டேன்’ என்பவன் எவ்வளவோ மேல் அல்லவா?

தொடர்ந்து “இதில் இன்னும் ஒன்று இருக்கிறது. நீ சம்மதம் சொல்லுமுன் என் பேச்சில் ஒரு முக்கியமான விஷயம் கவனித்தாயா என்று தெரியவில்லை. இந்தத் திருமணம், உண்மைத் திருமணமாகத்தான் இருக்கும், இருக்க வேண்டும். குழந்தை, குட்டி என்று எனக்குக் குடும்பம் வேண்டும். என் தந்தையைத் தாத்தா என்று என் பிள்ளைகள் அழைக்கும் நிலையைக் கொடுக்கக்கூடிய திருமணம்” என்றான் வசீகரன் தெளிவாக.

சற்று யோசித்துவிட்டு “கொள்ளுக்கு வாயைத் திறந்துவிட்டு கடிவாளத்தை மறுக்க முடியாது” என்றாள் அபரஞ்சி.

கண்ணில் சிரிப்பு மலர “அப்படியென்றால்?” என்று கேட்டான் அவன்.

“திருமணம் என்றால் அதன் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் ஆக வேண்டும். ஆனால்..”

“என்ன ஆனால்?”

“இது விஷயத்தில், எனக்கு நீங்கள் ஓர் உறுதி தர வேண்டும்.”

“என்ன உறுதி?”

கன்னங்கள் சிவந்த போதும், அபரஞ்சி நேராக அவனைப் பார்த்துச் சொன்னாள். "மனதில் அந்த சுபாவை வைத்துக் கொண்டு என்... என்னுடன் பழகக் கூடாது." என்று பிடிவாதமாகச் சொல்லி முடித்தாள்.

"அடடா. அது கஷ்டமாயிற்றே" என்றான் வசீகரன்.

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

## 9

இன்னொருத்தியைக் காதலிப்பவன்தான். அது தெரிந்த போதும் அபரஞ்சிக்கு இந்தத் திருமணம் மிகவும் தேவைதான். ஆனால் அவனும் தேவைப்பட்டுத்தானே மணக்கக் கேட்டான்?

மணக்கக் கேட்டதாலேயே முன் காதலைப் பற்றிய விளக்கம் கொடுப்பதுதான் நியாயம் என்று மகா நியாயவான் போல, விளக்கம் கொடுத்துவிட்டு தப்பு செய்ய மாட்டேன் என்று வேறு கூறிவிட்டு இப்படிச் சொல்லலாமா?

அவளை நினைத்துக் கொண்டு உன்னுடன் குடும்பம் நடத்துவேன் என்பது எவ்வளவு பெரிய அநியாயம். அவன் கை ஓங்கியிருக்கும் நிலை என்பதால் எதுவும் பேசலாம் என்று எண்ணினானா?

ஆத்திரத்துடன் அபரஞ்சி முறைக்கும்போதே, வசீகரன் சொன்னான். "எனக்கு நல்ல ஞாபக சக்தி உண்டு அவளைச் சந்திக்கும் போது அடையாளம் தெரிந்தால் பரவாயில்லையா?"

முதலில் திகைத்த அபரஞ்சி, உடனேயே சிரிக்கலானாள்.



அவளோடு இணைந்து நகைத்தவனுக்கு, உள்ளூர ஆச்சரியமும் உண்டாயிற்று.

தாங்க முடியாத இழப்பு என்று அவன் எண்ணியது, காலப் போக்கில் மெல்லமெல்ல வலி குறையக் கூடும் என்று எதிர்பார்த்தது. ஆனால் அந்த இழப்பைப் பற்றியே ஜோக்கடித்துச் சிரிக்க முடிகிறதே. இவளது துணையிருந்தால் சுபா இல்லாத வாழ்க்கையை எளிதாகவே சமாளித்து விடலாம் போலிருக்கிறதே.

உற்சாகத்துடன் "இனி பாட்டியிடம் விவரத்தைச் சொல்லுவோமா?" என்று பார்வதி அம்மாளிடம் அபரஞ்சியை அழைத்துச் சென்றான்.

அந்தப் பெண்மணிக்குச் சற்று நேரம் பேச்சே வரவில்லை.

இருவர் கைகளையும் பிடித்துக்கொண்டு கண்களில் நீர் மல்கினாள்.

பேரனிடம் "உன் அதிருஷ்டம்" என்றவர், அபரஞ்சியிடம் "நீ நன்றாக இருப்பாய் என்று எனக்குத் தெரியும் அபிம்மா" என்றார்.

"பாட்டி பயங்கரமான ஆள். தூதரகத்தில் வேலை பார்க்க வேண்டியவர்கள். இரண்டு பேரையும் உச்சி குளிர வைத்து விட்டார்களே."

"உனக்கு வேலை தந்து இந்த நரகத்திலிருந்து மீட்கப் போகிறான் என்று கொஞ்சம் பாயசம் வைக்கச் சொன்னேன். பாயசத்துக்கு உரிய செய்தியே கூறிவிட்டீர்கள்" என்று சொல்லிப் பாட்டி மகிழ்ந்தார்.

பாட்டியின் மகிழ்ச்சியைப் பார்க்கப் பார்க்க இருவர் மனதிலும் கொஞ்ச நஞ்ச சந்தேகமும் பறந்தது.

சுடச்சுடப் பாயசத்தை அருந்திவிட்டு நடப்பு விவரம் பேசினார்கள்.

அதன்படி பாட்டியும் பேரனுமாக மறுநாள் நாகேந்திரனின் வீட்டுக்குச் சென்று அபரஞ்சியை முறைப்படிப் பெண் கேட்டனர்.

யோசித்து ஒரு வாரத்தில் முடிவு தெரிவிப்பதாகச் சொல்லி அவர்களை விரட்ட பாக்கியம் முயன்றாள்.

புதன் கிழமை திருமணம் பற்றி அறிந்திருந்த வசீகரன், அதற்கு இடம் கொடுக்கவில்லை.

"இரண்டே நாட்களில் திருமணத்தை முடித்துக் கொண்டு நான் திரும்பிச் செல்லும்போது அபரஞ்சியை என்னோடு அழைத்துச் செல்வதாக இருக்கிறேன். பாட்டி பார்ப்பதற்காக இங்கே திருமணத்தை முடித்துக் கொண்டு சென்னையில் ஒரு வரவேற்பு வைக்கப் போகிறோம். அதனால் நீங்கள் சொல்லுகிற மாதிரிக் காத்திருக்க எங்களுக்கு அவகாசம் இல்லை" என்று முடித்து விட்டான்.

அபரஞ்சியைத் தனியே அழைத்து "இவனைக் கட்டாதே அபரஞ்சி. உன் வாழ்க்கை வீணாகி விடும். இவன் ஊர் அறிய இன்னொருத்தியை 'டாவு' அடித்தவன். அவளைக் கூட்டிக் கொண்டு இவன் சுற்றாத இடமில்லை" என்றாள் பாக்கியம்.

வசீகரனை அருகில் பார்த்ததிலிருந்து பொறாமையில் எரிந்து கொண்டிருந்த செல்வியும் அதற்கு ஒத்து ஊதினாள். "ஆமாம். இங்கே மலைக் கோட்டையில் கூட போட்டோவெல்லாம் எடுத்தார்களாமே. என் சினேகிதி சொன்னாள்" என்றாள்.

முழுப்பொய்.

வசீகரனோடு சுபா திருச்சிக்கு வந்ததே இல்லை என்பதுதான் அபரஞ்சி அறிந்த உண்மை ஆயிற்றே.

ஆனால் இந்த மாதிரிப் பேச்சு வரும் என்று எதிர்பார்த்து அதற்குரிய பதிலையும் இருவரும் யோசித்து வைத்திருந்தனர்.

எனவே "அதெல்லாம் நாடகம் சித்தி. அப்படி இருந்தால்தானே எங்களைப் பற்றி யாருமே சந்தேகப்படாமலே இருந்தீர்கள்" என்று



சிரித்து அவர்கள் இருவரின் வயிற்றெரிச்சலையும் வாரிக் கட்டிக் கொண்டாள்.

எத்தனையோ அநியாயங்களுக்குப் பழி வாங்கிய திருப்தி அவளுக்கு.

மீண்டும், மீண்டும் நாகேந்திரன் தட்டித் தட்டிப் பேசினார். இல்லாவிட்டால் மனைவியிடம் அல்லவா, அவர் மாட்டிக் கொள்ள நேரும். அத்தோடு அவர் வீட்டு வேலைகள் அபரஞ்சி இல்லாவிட்டால் எப்படி ஒழுங்காக நடக்கும்? எனவே முடிந்தவரை முயன்றார்.

ஆனால் வசீகரன் தன் அழுத்தமான குரலில் "அபரஞ்சிக்கு இருபத்திரண்டு வயது முடிந்துவிட்டது. மனம் ஒப்பி மண முடிப்பதை யாரும் தடுக்க முடியாது. சென்னையில் வடபழனிக் கோயிலில் செய்வது போல திருமணத்தைப் பதிவு செய்யும் வசதி உள்ள ஏதாவது கோயிலில் வைத்துத் திருமணத்தை முடித்துப் பதிவு செய்துவிட்டு நாங்கள் தேனிலவுக்குப் போகப் போகிறோம்" என்று கூறிவிடவே அந்தக் குடும்பத்தால் அதற்கு மேல் எதையும் தடுக்க முடியாமல் போயிற்று.

அவன் சொன்ன ஒரு வாரத் தேனிலவு அபரஞ்சிக்கு அவ்வளவாக ஒப்புதல் இல்லை.

"உங்களுக்கு வேலை அதிகம் என்று பாட்டி பலமுறை சொல்லியிருக்கிறார்கள். ஒரு வாரம் தொடர்ந்து விடுமுறை எடுத்தால் பிறகு உங்களுக்குத்தானே சிரமம்?" என்று காரணம் சொன்னாள்.

"சென்னையில் நான் பழகப் போகும் சமூகத்தில் இந்தத் தேனிலவு ஒரு கட்டாயம். தாலி கட்டுவது போல. போகாவிட்டால் ரொம்பவே சந்தேகம் வரும். நம் திருமணம் இயல்பாகத் தெரிய வேண்டும்" என்றான் வசீகரன்.

"அதற்கில்லை சார். தேனிலவு பற்றி முன்பு என்னென்னவோ கனவு கண்டிருப்பீர்கள். வீண் வேதனைதானே என்று நினைத்தேன்" என்று அவள் மீண்டும் கூறவும் அவன் முகம் சுளித்தான்.

"முதலில் இந்த சாரை விடு. கேட்கிறவர்கள் என்ன நினைப் பார்கள்? நானானால் திருமணம் இயல்பாகத் தெரிய வேண்டும் என்று இந்தப் பாடு படுகிறேன். ஒரு வார்த்தையில் எல்லாவற்றையும் வீணாக்கி விடுவாய் போல இருக்கிறதே" என்றான் எரிச்சலோடு.

இந்த எரிச்சல் பழைய தேனிலவுக் கனவின் ஞாபகத்திலோ என்றிருந்தது அவளுக்கு.

அதை மாற்றும் முயற்சியாக தீவிரமாக யோசிப்பவள் போன்ற பாவனையுடன் "ம்ம்ம்.. உங்களை வேறு எப்படிக் கூப்பிடுவது? பழசுதானே இப்போது அதி நாகரீகம் ஆகிறது என்று முன்காலம் மாதிரி 'பிராண நாயகா' என்று நீட்டி முழங்கலாம் என்றால் நீங்கள் இன்னும் என் நாயகனே ஆகவில்லை. அநியாயமாகத் திருமணத்தை நாளை வரை தள்ளிப் போட்டு விட்டீர்கள். பெயரோ, அதற்கு மேல். குட்டியூண்டு. எப்படிப் பிரித்தாலும் சரியில்லை. வசீகரா என்று முழுப்பெயர் சொன்னாலும் யாரோ போல இருக்கிறது. சொந்தம் தொனிக்க அழைப்பதற்கு இன்னும் ஒன்றுதான் பாக்கி." என்று அலுத்துக் கொண்டாள் அபரஞ்சி.

அவளது பாவனையைப் புரிந்து கொண்டு "அது என்ன அபர.. அபி?" என்று அவசரமாகத் தன்னைத் திருத்திக்கொண்டு ஆவல் காட்டினான் அவன்.

எழுந்து தள்ளி நின்று கொண்டு "டேய் வசீகரா என்பதுதான்" என்று அவள் கூற "டேயா?" என்று முறைக்க முயன்றுவிட்டுக் குபீரென்று சிரித்தான் வசீகரன்.

உள்ளூர மகிழ்ந்தபடி "சிரித்தால் என்ன அர்த்தம்? 'டேய்' தான் சரி என்றா?" என்று அவள் சீரியசாகக் கேட்க, அவன் பத்திரம் காட்டி "உதை விழும்" என்று மிரட்டினான்.

"அட்டா. பின்னே சினிமா மாதிரி 'என்னங்க' தான் சரி."

"ஊகூம். அதெல்லாம் வேண்டாம்... என் அப்பா போல 'வசு' என்று கூப்பிடு. பொருளும், நாம் இருவரும் தங்கக் கட்டிகள் என்று



ஆகிவிடும்" என்று வசீகரன் முடித்தபோது இருவர் முகங்களுமே முறுவலால் மலர்ந்திருந்தன.

"இந்த மகிழ்ச்சியுடனேயே அடுத்த விஷயத்தையும் முடித்து விடலாம். நம் திருமணம் இயல்பாகத் தெரிவதற்காகவே நாம் தேனிலவுக்கு போகத்தான் வேண்டும் அபரஞ்சி. அதற்குக் காதலர்களாகத்தான் போக வேண்டும் என்று நினைப்பானேன்? நாம் இருவரும் நல்ல நண்பர்களாக ஓர் இடம் போய்ச் சுற்றிவிட்டு வர முடியாதா? செய்வோமே" என்றான் அவன்.

திருமணத்துக்கு வசீகரனுடைய தந்தை வந்திருந்தார்.

"என் மாமியார் உன்னைப் பற்றி ரொம்பவும் உயர்வாகச் சொன்னார்கள். வசீகரனைப் பற்றி இதுவரை எங்களுக்கு இருந்த கவலை தீர்ந்தது. இருவரும் மகிழ்ச்சியோடு வாழுங்கள்" என்று அவளைத் தனியாக ஒரு தரம் ஆசீர்வதித்தார்.

ஆக இவருக்கும் அந்த சுபாவைப் பிடிக்கவில்லை. இப்படிக் குடும்பத்தில் யாருக்குமே பிடிக்காதே ஒருத்தியை வசீகரனுக்கு மட்டும் எப்படிப் பிடித்தது?

அவளது அழகில் வசீகரன் மயங்கி விட்டிருப்பானோ?

கண்ணாடி பொய் சொல்லவில்லை என்றால் தானும் கூடப் பார்க்க அழகாய் இருப்பதாகத்தான் அபரஞ்சிக்கு தோன்றியது. மற்றபடி அவளை அழகற்றுக் காட்டுவதற்காகச் சித்தி பாக்கியம் முயற்சித்திருக்க மாட்டாளே.

ஆனால் அவளைவிட அந்த சுபா அதிக அழகாக இருந்து, அந்த அழகில் வசீகரன் மயங்கி மனதை இழந்திருந்தால்? அவனை எப்படி மீட்க முடியும்?

அவள் 'பேரழகியாம்' என்று செல்வி சொன்னது நினைவு வந்தது.

அபரஞ்சியின் மனம் சட்டெனக் கலங்கிப் போயிற்று.

கழுத்தில் புதிதாகக் கனத்த திருமாங்கல்யத்தைத் தொட்டுப் பார்த்தபோது நெஞ்சினுள்ளும் ஏதோ கனத்தது. சித்தி வீட்டில் ஓர் அசம்பாவிதமான நிலைமையில் மாட்டிக் கொள்ளாமல் தப்பிப்பதே இதுவரை பெரிதாகத் தோன்ற நல்லபடியாகத் திருமணம் நடக்க வேண்டுமே என்று மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தாள்.

இப்போது கழுத்தில் தாலி ஏறிய பிறகு எதிர்காலம் எப்படியிருக்குமோ என்ற கவலை மனதில் சுமையாய் ஏறி உட்கார்ந்தது.

வசீகரன் சுபாவை என்றேனும் மறப்பானா? எல்லோரையும் போல ஒரு நல்ல குடும்ப வாழ்க்கை அவளுக்கு என்றேனும் கிட்டுமா?

அதைக் காலம்தான் சொல்ல வேண்டும்.

“என்னம்மா?” என்று பிரகாசம் கேட்ட போதுதான் மனதை முகத்தில் காட்டிவிட்டது புரிந்தது.

சொல்வது அறியாமல் அவள் திகைத்தபோது அவரே பேசினார்.

“மனைவி என்ற பதவியை உனக்குத் தந்திருக்கும் என் மகன் அதற்குரிய மரியாதையை மறுக்க மாட்டான். பொறுப்போ, நியாயமோ அறியாதவன் அல்ல அவன். ஆனால் உனக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் குன்னூரில் நான் இருக்கிறேன் என்பது நினைவில் இருக்கட்டும்” என்றார் அவர்.

மகன் விஷயமாகப் பிரச்சினை ஏற்பட்டால் உனக்குத் துணை இருக்கிறேன் என்று எத்தனை மாமனார்கள் சொல்லுவார்கள்?

புன்னகையோடு தலையாட்டினாள் அவள்.

அவளிடம் ஒரு கவரைக் கொடுத்து “வசு அம்மா இருந்திருந்தால் உனக்கு என்ன பரிசு கொடுப்பது என்று தெரிந்திருக்கும். பிடித்ததை வாங்கிக் கொள்ளம்மா” என்றார் அவர்.



அவளிடம் பணம் இருக்க வழியில்லை. வாங்கிக் கொடுக்கப் பிறந்த வீடும் இல்லை என்று அறிந்ததால் அந்தப் பொறுப்பை அவரே ஏற்றுக் கொண்டிருக்கிறார். அதை அவளுக்கு நோகாமல் என்ன நாசூக்காகச் செய்கிறார்.

அதேபோலப் பார்வதி அம்மாளும், அபரஞ்சிக்கு நல்லதாக மூன்று செட் சுரிதாரும், ரெடிமேடு பிளவுசுடன் இரண்டு சேலைகளும் வாங்கிப் பரிசளித்திருந்தார். வீட்டை விட்டு வெளியே செல்லாத அவர் கடைகளில் இருந்து கொண்டு வரச் சொல்லி தேர்ந்தெடுத்துக் கொடுத்தார்.

இந்தத் திருமணத்தால் எவ்வளவு நல்ல உறவினர்கள் அவளுக்குக் கிடைத்திருக்கிறார்கள்.

மனம் திடமுற மகிழ்ச்சியோடு நன்றியுரைத்தாள் அபரஞ்சி.

தேனிலவுக்கு என்று வசீகரன் அவளை அழைத்துச் சென்றது பெங்களூருக்கு.

அங்கே பார்த்து ரசிக்கவும் சுற்றிலும் நிறைய இடங்கள் இருந்தன. கூடவே ‘ஷாப்பிங்’ செய்யவும் தரமான கடைகள் நிறைய இருந்தன.

அவன் வாங்கிக் குவித்ததைப் பார்க்கையில் அதற்காகத்தான் அவன் பெங்களூரைத் தேர்ந்தெடுத்தானோ என்று தோன்றியது.

முன்னே உள்ளது என்று எதுவும் இல்லாத அவளுக்குத் தேவைதான். ஆனாலும் ஒரேயடியாய் வாங்கிக் கொடுப்பதை ஏற்கவும் அபரஞ்சிக்கு ஒரு மாதிரி இருக்க “போதும்” என்று தடுத்துப் பார்த்தாள்.

“சென்னையில் உனக்குத் தேவைப்படும் அபரஞ்சி. அங்கே நீ ஒன்றிரண்டையே திரும்பத் திரும்ப அணிந்தால் நன்றாயிராது. அதனால் நிறையவே வாங்கிக் கொள்” என்றான் வசீகரன்.

அவள் அப்போதும் தயங்கவும் "இதோ பார். இந்தச் சில நாட்களில் உன்னைப் பற்றி ஓரளவு புரிந்து கொண்டிருக்கிறேன். அதனால் நீ பணத்தாசை பிடித்தவள் என்றோ, உடையாசை பிடித்தவள் என்றோ நான் நிச்சயமாக நினைக்க மாட்டேன். சொல்லப் போனால் இந்த ஆடை அணிமணிகளும் கூட என் கௌரவத்தை தானே காப்பாற்றப் போகின்றன. அதனால் தாராளமாக வாங்கிக் கொள்" என்று வற்புறுத்தினாள்.

அபரஞ்சி மேலே மறுக்கவில்லை. ஆனால் மகிழ்ந்து போகவும் இல்லை.

இது உனக்கு அழகாக இருக்கும். இது உன் நிறத்தை எடுத்துக் காட்டும். இதில் ஜொலிப்பாய்! என்றெல்லாம் காரணம் கூறி, ஒரு கணவன் கோணித்துணியை வாங்கிக் கொடுத்தாலும் அது மனைவிக்கு மகிழ்ச்சியாகவே இருக்கக்கூடும். ஆனாலும் 'என் கௌரவத்தைக் காப்பாற்றத்தான் வாங்குகிறேன்' என்றால்?

அவனைப் பொறுத்த வரையில் அவனது கௌரவத்துக்காக நடந்த திருமணம். அதுதானே பெரிதாகத் தோன்றும்? கௌரவத்துக் காகத் தேனிலவு. அதை நிரூபிக்க அங்கங்கே போட்டோக்கள்.

அபரஞ்சிக்கு உள்ளூர, ஏதோ ஓர் ஏக்கம் உண்டாயிற்று. என்றேனும் வசீகரன் முழுக்க அவளுக்காக மட்டுமாக யோசிப்பானா?

## 10

சென்னை வாசம் அபரஞ்சிக்கு விரைவிலேயே பழகிவிட்டது.

'லக்ஜரி ஃப்ளாட்' வசீரனுடையது. குளியலறை வசதிகளுடன் கூடிய மூன்று பெரிய படுக்கையறைகள், பெரிய ஹால், சிட்



அவுட்டுகள், சாப்பாட்டு, சமையல் அறைகள் என்று எல்லாமே விசாலமாகவும், வசதியாகவும் இருந்தன. சுத்தம் பண்ண, சமையல் செய்ய என்று காலையிலேயே ஆட்கள் வந்தார்கள். வேலையை முடித்துக் கொண்டு பத்து மணிக்குள் வெளியேறிவிடுவது வழக்கமாக இருந்தது.

இப்போது அந்த வழக்கத்தை அவளுக்கு ஏற்றபடி மாற்றிக் கொள்ளும்படி வசீகரன் அபரஞ்சியிடம் சொன்னான். "அபி வீட்டோடு ஆள் இருக்க வேண்டும் என்று நீ விரும்பினாலும் அதற்கேற்றபடி ஏற்பாடு செய்து கொள்ளலாம். செலவைப் பற்றிக் கவலைப்படாதே" என்றான்.

"உங்கள் மற்ற வேளைச் சாப்பாடு?"

"எல்லாம் வெளியேதான். மதிய உணவு, அலுவலகத்துக்கு அழகாக டப்பாக்களில் வந்து விடும். தெரிந்தவர்கள் வீட்டில் செய்து இப்படி அலுவலகங்களுக்கு அனுப்புகிறார்கள். மாலைக்கு காபி, சாண்ட்விச் பக்கத்து காபி ஷாப்பில் சொன்னால் அனுப்புவார்கள். இரவு ஏதாவது ஹோட்டலில். அனேகமாகத் தொழில் முறை டின்னரே இருக்கும்."

தொழில் முறை டின்னரா, அல்லது அந்த சுபாவோடு சாப்பிடுவானா என்று அபரஞ்சியின் மனம் சிந்தித்தது.

"ஆனால் இப்போது உனக்கு மதியம் மாலை என்று மற்ற வேளை உணவுக்குச் சமையல் ஏற்பாடு செய்ய வேண்டும்..."

"எனக்கே ஓரளவு தெரியும். அதனால் நானே செய்து.."

"வேண்டாம் அதற்கெல்லாம் ஆள் வைத்துக் கொள். அடுப்படியில் நின்று சருமத்தைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம். இப்போது செய்யும் நாகுவையே பார்ப்போம். இல்லாவிட்டாலும் இந்த மாதிரி வேலைக்கு ஆட்களைத் தேடித் தரும் நல்ல நிறுவனங்கள் சில இருக்கின்றன, அவர்கள் மூலம் ஏற்பாடு செய்யலாம். அந்த மாதிரி நிறுவனங்கள் மூலம் வருகிறவர்களை இன்னும் கொஞ்சம் நம்பலாம். உனக்குப் பிடித்தபடி தேர்ந்தெடுத்துக் கொள். வீட்டின் அலங்காரத்தைக்கூட உனக்குப் பிடித்தவாறு" என்று அனைத்திலும் அவளுக்கு முழு உரிமை கொடுத்தான்.

ஆனால் அந்த உரிமையை விட 'அடுப்படியில் நின்று சருமத்தைக் கெடுத்துக் கொள்ளாதே' என்று அவன் கூறியதே அவள் மனதைக் குளிர்வித்தது.

இந்த ஏற்பாடெல்லாம் உரியபடி நிறைவேறி விரைவிலேயே அன்றாட வாழ்வு சிக்கலின்றிச் செல்லத் தொடங்கவும், திருமண வரவேற்பு பற்றி வசீகரன் பேச்செடுத்தான்.

"இங்கே தொழில் முறையிலும், உறவிலும் நிறையப் பேர் இருக்கிறார்கள் அபரஞ்சி. நம் திருமணம் நடந்திருக்கும் விஷயம் ஏற்கனவே பலருக்குத் தெரிந்திருந்தாலும்."

"எப்படித் தெரியும்?" என்று கேட்டாள் அபரஞ்சி.

"திருமணம் முடிந்து தேனிலவுக்குச் செல்வதால் ஒரு வாரம் அலுவலகத்துக்கு வர இயலாது என்று அப்போதே தகவல் அனுப்பியிருந்தேன். கிசுகிசுப்பிலேயே விஷயம் நம் வட்டாரம் முழுவதும் பரவியிருக்கும். அதிகார பூர்வமாக நாம் அதை அறிவித்தால்தான் நன்றாக இருக்கும். திருமண வரவேற்பாக அதை நடத்தி, விருந்து ஒன்று கொடுத்துவிட்டால் நோக்கம் அழகாக நிறைவேறிவிடும்" என்றான் வசீகரன்.

சுபா வரை இந்தக் கிசுகிசு எட்டியிருக்குமா?

"அப்படியானால் உங்கள் சுபாவுக்கும், திருமணம் பற்றித் தெரிந்திருக்கும்தானே?" என்று மனம் நினைத்ததை வாய் கேட்டுவிட அவன் முகம் கடுத்தது.

"உங்கள் சுபா என்று சொல்வதை முதலில் நிறுத்து. கேட்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்?" என்றான் ஆத்திரத்துடன்.

மெய்தானே? இப்போது கேட்டவன் இவன் மட்டும் என்றாலும் நாக்கில் இது பழக்கமாகி விடக் கூடாதே. ஆனாலும் அதற்காக வசீகரன் இவ்வளவு கோபப் பட வேண்டியது இல்லை. சும்மாவே, சொல்லியிருக்கலாம் என்று எண்ணியபடி "சாரி" என்றாள் மெல்லிய குரலில்.



உள்ளூர சிறு குறுகுறுப்பு. சுபாவின் பெயரே அவனது மனநிலையைப் பாதிக்கிறதா?

ஒரு வகையில் உண்மை அதுதான். வசீகரனின் திருமணம் பற்றிய பேச்சை வெறும் வதந்தியாக சுபா ஒதுக்கிய போதும் அதைப் பற்றிப் பேசிச் சிரிப்பதற்காகவே வசீகரனைத் தேடி வந்தாள். திருமணம் நடந்தது உண்மை என்று அவன் தெரிவித்த பிறகும் அவளை மிரட்டுவதற்காக வசீகரன் நடத்தும் நாடகம் என்றாளே தவிரத் திருமணத்தை அவள் ஒத்துக் கொள்வதாக இல்லை. 'என்னைத் தவிர வேறு ஒருத்தியை மனைவியாய் ஏற்க உன்னால் முடியவே முடியாது' என்று அவனுக்கே அறிவித்துவிட்டுப் போனாள்.

அதிலேயே உள்ளூர ஆத்திரமுற்று இருந்தவன் அபரஞ்சி வேறு 'உங்கள் சுபா' எனவும் வெடித்து விட்டான். கோபத்தின் உண்மையான காரணத்தைச் சொல்ல முடியாதது வேறு அவனுக்கு எரிச்சலூட்டியது.

சொன்னாலோ, அவனும் சுபாவும் தினமும் சந்திப்பதாக அபரஞ்சிக்குக் கற்பனைகள் தோன்றத் தொடங்கி விடாதா? அனாவசியமாக இன்னொரு பிரச்சினை உருவாகும்.

எனவே பெருந்தன்மை போல "சரிசரி விடு" என்று ஒதுக்கிவிட்டு உள்ளூரக் குன்றினான்.

என்னதான் ஒதுக்க முயன்றாலும் சுபாவையும் மறக்க முடியாது போயிற்று.

வரவேற்பு விருந்துக்கு அழைக்க வேண்டியவர்களை பட்டியல் இடும்போது சுபாவின் பெயர் மீண்டும் வந்தது. "விருந்துக்கு அவளையும் அழைக்க வேண்டியிருக்கும்" என்றான் வசீகரன்.

"கட்டாயம் அழைத்தாக வேண்டுமா?"

"இல்லாவிட்டால் தப்பாகத் தோன்றும் அபரஞ்சி."

அவள் யோசனையாக நோக்க அவன் சொன்னான். "இவ்வளவு நாட்கள் பலர் எங்களைச் சேர்த்து பார்த்திருக்கிறார்கள். இன்னமும் அவளுடைய தந்தை என் கட்சிக்காரர்தான். நம் திருமண விருந்துக்கு அந்தக் குடும்பத்தை அழைத்து எல்லோரையும் போல நடத்தினால் அவளுடன் கொண்டிருந்தது தொழில்முறை நட்புதான் என்று ஆகிவிடும். தொடர்ந்து, நமக்குக் குழந்தைகளும் பிறந்து விட்டால்..."

பெயரைச் சொல்லுமுன் குணம், குரல் எல்லாம் மாறுகிறது, பிள்ளையைப் பற்றி என்ன பேச்சு?

"மற்றவர்கள் அபிப்பிராயத்துக்காகப் பிள்ளை பெற முடியாதே" என்று ஜன்னல் வழியே கடலைப் பார்த்தாள் அபரஞ்சி.

சிறு மௌனத்தின் பின் "அழகான காட்சி. நான் கூட அடிக்கடி இப்படிக் கடலைப் பார்த்துக் கொண்டு நிற்பதுண்டு" என்றான் வசீகரன்.

அபரஞ்சி திடுக்கிட்டுத் திரும்பவும் "ரொம்பத் தீவிரமாகத் தன்னை மறந்து பார்த்துக் கொண்டு நின்றாயே அதனால் சொன்னேன்" என்று அவன் விளக்கினான்.

தன்னை மீறி அவள் புன்னகைக்கவும், பழைய பேச்சைத் தொடர்ந்து "மற்றவர் அபிப்பிராயத்துக்காகப் பிள்ளை பெற முடியாதுதான். ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால் மற்றது செய்யலாம் இல்லையா?" என்றுரைத்து முறுவலித்தான்.

சற்றுமுன் இருந்த இறுக்கம் மாறி, இருவரும் மேலே பேசத் தொடங்கினர்.

பக்கத்துக் கட்டிடத்தின் அடித்தளத்தை ஒரு மண்டபம் போல ஆக்கியிருந்தார்கள். சின்ன அளவில் விழாக்கள் நடத்தவும் அவ்வப்போது ஏதாவது 'சேல்' நடத்தவும் அதை வாடகைக்கு விட்டார்கள். அதிலேயே விருந்தை நடத்துவது என்று இருவருமாக முடிவு செய்தனர்.



"நமக்கு இவ்வளவு பெரிய மண்டபம் தேவை இல்லை என்றாலும் சாப்பாட்டு ஹாலாக அடுத்த தளமும் கிடைப்பதால் இதையே முன் பதிவு செய்து விடுவோம். பஃபே முறை உணவு வைப்பதால் நம் விருந்தினரின் எண்ணிக்கைக்கு இந்த அளவுச் சாப்பாட்டு அறை கட்டாயம் தேவைப்படும்" என்றாள் அபரஞ்சி.

வசீகரன் வியந்து நோக்கவும், "இதெல்லாம் இவளுக்கு எப்படித் தெரியும் என்றிருக்கிறதா?" என்று கேட்டு முறுவலித்தாள் அபரஞ்சி. "அடிக்கடி சித்தப்பா இப்படி விருந்து கொடுப்பார். இப்படிப் பெரிய அளவில் அல்ல. சின்ன சின்னதாய். வீட்டிலே கூட நடத்துவது உண்டு. அடிப்படை வேலைகளை எல்லாம், நான்தான் செய்வது. விருந்தன்று மட்டும் அந்தப் பக்கம் எட்டியும் பார்க்கக் கூடாது என்பது சித்தியின் சட்டம்" என்று சிரித்தாள்.

"நீ கெட்டிக்காரி என்று பாட்டி சொல்லுவார்கள். இவ்வளவு கெட்டிக்காரி என்று எண்ணவில்லை" என்றான் அவன் மகிழ்ச்சியோடு. "அவ்வப்போது தொழில் நிமித்தமாக நானும் பலருக்கு விருந்து கொடுக்க வேண்டியிருக்கும். மெனு அது இது என்று அது வேறு நேரம் இழுக்கும். இனி அந்த வேலையெல்லாம் உன்னிடம் தள்ளிவிட்டு என் அலுவலை மட்டும் பார்க்கலாம்" என்று அவன் தொடர்ந்து சொன்னது, அபரஞ்சிக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.

ஒரு வழிப்பாதையாக அவனிடம் வாங்கிக் கொண்டே இருப்பது மாறி அவனுக்கு உபயோகமாக அவளாலும் ஏதாவது திருப்பிச் செய்ய முடிகிறதே.

வேண்டிய நேரம், வேண்டிய செலவு செய்வதற்காகக் கிரெடிட் கார்டு வாங்கிக் கொடுத்தான்.

"எல்லாச் செலவுகளையும் கணக்கு எழுதி வை, அபரஞ்சி. நாம் வருமான வரி கட்டுகிறவர்கள். பிற்பாடு தேவைப்படும்" என்றான்.

வரவேற்புக்கான வேலையை வசீகரனே தேர்ந்தெடுத்தான். இளம் பச்சை வண்ணத்தில் புரோகேட். "உனக்குப் பொன்னிறமான

சருமம். இந்த நிறம் தூக்கியடிக்கும்'' என்று அதைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் சொன்னான்.

ஒரு கணம் உள்ளம் துள்ளிவிட்டது அபரஞ்சிக்கு. அவளுக்கு அழகாயிருக்கும் என்று ஒன்றைத் தேர்ந்தெடுக்கிறானே. 'தூக்கியடிக்கும்' என்று அவனது வார்த்தையை அசை போட்டு ரசிக்கும் போதே சட்டென ஊசி குத்திய பலூனாக அவளது உற்சாகம் வடிந்தது.

யார் முன் தூக்கியடிக்கும்? அந்த சுபா? அவளை மட்டம்தட்டிக் காட்டுவதற்காகத்தான் இவ்வளவு கவனத்துடன் தேர்தெடுக்கிறானா? அப்படித்தான் இருக்க வேண்டும். மற்றபடி பெங்களூரில் அத்தனை துணிமணி வாங்கினானே. ஒரு தரமாவது உனக்கு அழகாக இருக்கும் என்று சொன்னதுண்டா? இப்போது இரு பெண்களும் நேருக்கு நேர் சந்திக்கப் போகிறார்கள்.

என்னைவிடப் பணம் பெரிது என்றாயே, உன்னைவிட அழகிய மனைவி கிடைத்திருக்கிறாள் பார், என்று காதலிக்குக் காட்ட வேண்டும். அதுதான் அவனை உந்தியிருக்கிறது.

மகிழ்ச்சி மறைந்துவிட்ட போதும் அந்த சுபாவை விடத் தான் அழகாகத் தோன்ற வேண்டும் என்ற எண்ணம் அபரஞ்சிக்கும் வந்துவிட்டது.

மனதில் காதல் இருந்தால் மனைவி உலக அழகியாகத் தோன்றுவாளாம். அதற்கு அவள் கொடுத்து வைக்கவில்லை. போகட்டும். இதுவே பெரிதென்ற நிலை அவளுக்கு இருந்ததால் அவளும் மனமுவந்துதான் இந்த நிலையை ஏற்றாள். இனி இந்த அழகி என் மனைவி என்று தொடங்கட்டுமே.

கவனத்துடன் நகத்துக்கும், உதட்டுக்குமான சாயங்கள், பொட்டு முதலானவற்றை ஓர் அழகு நிலையத்தில் ஆலோசனை கேட்டு வாங்கி வைத்தாள். நகைகளை வசீகரனே வாங்கித் தந்திருந்தான்.

விருந்துக்கு முன்னதாக வேலை தொடர்பாக வசீகரன் நாலு நாள் வெளியூர் செல்லும்படி ஆயிற்று.



செல்ல அவனுக்கு மனமே இல்லை "தனியாய் இருப்பாயா? சமாளித்துக் கொள்வாயா?'' என்று பல முறை கேட்டு "எல்லாம் நான் பார்த்துக் கொள்ளுவேன்'' என்று அவள் திடமாகச் சொன்ன பிறகுதான் அப்போதும் அரை மனதாகவே கிளம்பிப் போனான்.

உணவு வகை பரிமாறுகிற விதம் (பஃபே என்றாலும் உதவி செய்ய வேண்டும் அல்லவா?), ஹால் அலங்காரம், ஃப்ரூட் சாலட், தாம்பூல வகை, கடைசியாக நன்றி அறிவிப்புடன் கூடிய சின்ன பரிசு என்று, ஒவ்வொன்றும் மிகுந்த கவனத்துடன் ஏற்பாடு செய்து அதைச் சரி பார்த்துத் திருப்தி அடைந்தவளுக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று.

வசீகரனுக்கு அவள் ஒரு பரிசு வாங்கிக் கொடுத்தால் என்ன?

இதுவரை அவன்தானே அவளுக்காக வாங்கிக் கொடுத்துக் கொண்டே இருக்கிறான்.

வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி அவருக்கே நைவேத்தியம் செய்வது போல இந்த பரிசுக்காக அவள் அவனது பணத்தையே எடுக்க வேண்டியது கூட இல்லை.

அவளிடம் அவன் தந்தை பிரகாசம் கொடுத்த பணம், அப்படியே இருந்தது. நூறு ரூபாய்க் கட்டு என்று எண்ணியிருந்தது பிரித்துப் பார்த்தால் ஐநூறு ரூபாய்க்கட்டாக இருந்தது. ஐம்பதினாயிரம் ரூபாய். இதுவரை, அவள் அதைத் தொடவே இல்லை. தொட நேரவும் இல்லை.

முதலில் அதை அப்படியே வசீகரனிடம்தான் கொடுத்தாள். ஆனால் "உனக்காக உன்னிடம் கொடுத்தது. உன் பணம், உனக்குப் பிடித்ததாய் எதையேனும் பார்த்தால் வாங்கப் பயன்படுத்து. நீயே வைத்துக்கொள்'' என்று விட்டான் அவன்.

அப்படி ஒன்றும் வாங்கத் தோன்றாததால் அந்தப் பணம் அப்படியே இருந்தது.

ஆனால் அந்தப் பணத்தில் அவனுக்கு என்ன வாங்குவது என்று யோசித்தால் முதலில் ஒன்றுமே தோன்றவில்லை. அவனுக்குத்

தேவையானது எது அவனிடம் இல்லை என்று வெகுவாக யோசித்தும் ஒன்றும் தெரியவில்லை. பிறகு வசீகரனிடம் இல்லாத பொருள் என்று யோசித்துப் பயன் இல்லை என்று முடிவு செய்து அவனுக்கு விலை உயர்ந்ததாக ஒரு கைக்கடிகாரம், டை, ஆஃப்டர் ஷேவ் லோஷன் என்று நினைத்ததை எல்லாம் வாங்கி வைத்தாள்.

நாலு நாள் வேலையை மூன்று நாட்களில் முடித்து விட்டு வரவேற்புக்கு முன் தினமே, வசீகரன் வீடு வந்து சேர்ந்தான்.

அகமதாபாதிலிருந்து நேரடியாக வர விமானத்தில் டிக்கட் கிடைக்காததால் பெங்களூருக்கு வந்து அங்கிருந்து டாக்சியில் கிளம்பி வந்திருந்தான். அந்த ஒரு நாளை மிச்சம் பிடிக்க இரவு பகலாக வேலை செய்திருப்பான் போலும்.

அசதி முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

காபி கலந்து தருவதாக அபரஞ்சி கூறவும் உடம்பு கழுவிவிட்டு வருவதாகச் சென்றான். காபி ஆறத் தொடங்கவும், காபியோடு அவன் அறைக்குச் சென்றாள் அவள். கூப்பிட்டதற்குப் பதில் இல்லாது போகவே, காரணம் புரியாத கவலையுடன் சும்மா சாத்தியிருந்த கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றால் உடையைக் கூட மாற்றாமல் சோபாவில் சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தான் அவன்.

இவ்வளவு அசதியா என்று எண்ணுகையில் உள்ளூர வலித்தது அபரஞ்சிக்கு.

இப்போது என்ன செய்வது?

இப்படி அசந்து உறங்குகிறவனை எழுப்புவது பாவம்.

ஆறிக் கொண்டிருந்த காபியைப் பக்கத்துச் சிறு மேஜையில் வைத்தாள்.



அவன் அருகே வந்து காலில் கிடந்த ஷூக்களை மெல்லக் கழற்றினாள். ஹாலில் இருந்த சிறு மோடாவை எடுத்து வந்து அதன்மேல் அவனது கால்களை அவனுக்கு வசதியாக வைத்தாள்.

இவன் எப்போது விழிப்பானோ? இப்படி விழிக்கும்போது இரவாகி விட்டால் அதன் பின் அவளை எழுப்பி உணவோ, பானமோ அவன் கேட்பது சந்தேகம்தான்.

சற்று யோசித்துவிட்டு ஃப்ரிஜ்ஜிலிருந்து ரொட்டி, வெண்ணை, சீஸ் எடுத்து வந்து ஆறு செட் சீஸ் சாண்ட்விச்சுகள் செய்து பாத்திரத்தில் எடுத்து வைத்தாள். புதிதாகக் காபி தயார் செய்து ஃப்ளாஸ்கில் ஊற்றி மூடினாள். இரண்டையும் கொண்டு போய் அவனது அறை சோபா அருகில் கிடக்கும் சிறு மேஜை மீது வைத்து விட்டுத் தன் அறைக்குத் திரும்பினாள்.

இரவு பத்து மணி வரையும் அவன் விழித்த அரவம் கேளாததால் விளக்கை அணைத்துவிட்டுத் தூங்கப் போனாள்.

மறுநாள் காலையில் அபரஞ்சி குளித்து முடித்து வெளியே வருகையில் வழக்கம்போலப் பத்திரிகையில் ஆழ்ந்திருந்தான் வசீகரன். அவளைக் கண்டதும் "குட்மார்னிங்" சொன்னவன் தொடர்ந்து "சாண்ட் விச், காபிக்கு நன்றி அபி. கிட்டதட்ட நள்ளிரவில் விழிப்பு வந்த போது சிறுகுடலைப் பெருங்குடல் தின்று கொண்டிருந்தது. உன் சாண்ட்விச்சைப் பார்த்தபோது கடவுளையே பார்த்த மாதிரி இருந்தது. இப்படியொரு மனைவி யாருக்குக் கிடைப்பாள் என்று நினைத்தேன்" என்று அவன் கூறியபோது வானில் சிறகடித்துப் பறப்பது போலிருந்தது அபரஞ்சிக்கு.

ஆனால் அவ்வளவு ஆனந்தமாகத் தொடங்கிய பொழுது அவ்வளவு படு மோசமாக முடியும் என்று அவள் அப்போது எதிர்பார்க்கவே இல்லை.

## 11

அன்றைய விழாவுக்கான ஏற்பாடுகளைக் கேட்டறிந்த போதும் வசீகரனுக்கு மிகுந்த திருப்திதான்.

ஓரளவு ஏற்பாடுகளை இருவருமாகச் சேர்ந்தே செய்திருந்த போதும் அதில் அவள் செய்திருந்த நகாசு வேலைகள், அவனுக்குப் பிடித்திருந்தன. முக்கியமாக பஃபே உணவு முறைக்குப் பொருத்தமாக உணவு, ஐஸ் க்ரீம் முடிந்ததும் உலர்ந்த பழவகைகளைத் தட்டுத் தட்டாக வைத்ததும், தாம்பூலத்திலும், பெருஞ்சீரகம், பாக்கு வகைகளில் இருந்து, பீடா வரை, பல தினுசாக வைத்ததும்.

அடுத்து விருந்தினரின் பொழுது போக்கிற்காக 'மாஜிக் ஷோ' வைத்ததும்.

திருமண மண்டபத்துக்கே போய் விழா ஏற்பாடுகளை ஒரு தரம் பார்வையிட்டுவிட்டு நிம்மதியும் திருப்தியுமாகத் திரும்பி வந்தனர்.

உரிய நேரத்தில் இருவருமாக விழா உடையணிந்து அவரவர் அறையை விட்டு வெளியே வந்தனர்.

அவளைப் பார்த்து அவன் "வாவ்" என்று கண்களை விரிக்கவும், அபரஞ்சியின் முகம் லேசாகச் சிவந்தது. "உங்களுக்கு நீங்களே ஷொட்டு வைத்துக் கொள்ளுகிறீர்களா? இது நீங்கள் தேர்ந்தெடுத்த சேலை தான். நினைவிருக்கட்டும்" என்றாள் அபரஞ்சி கிண்டலாக.

"சேலையைப் போலவே அதைக் கட்டியிருப்பவளும் என் தேர்வுதானே? எல்லாமே சூப்பர் தேர்வாக்கும்."



தன்னையறியாமல் அவள் மீண்டும் புன்னகைக் காட்டினாள். ஏளனப் புன்னகை. நன்றாகத்தான் தேர்ந்தெடுத்தான். பத்து நூறு பெண்களுக்கிடையில் இவள் உயர்வென்று. 'சூப்பர் தேர்வா'மே அன்றைய நினைவு வர அவளது கீழுதடு, சற்று ஏளனமாகப் பிதுங்கியது.

"தேர்வேதான். இந்த முகமும் சிரிப்பும், பாட்டியின் புகழாரமும் இல்லையென்றால் மணக்கக் கேட்டிருப்பேன் என்றா, நினைத்தாய்?" என்று அவன் விடாமல் கூறவும் அவளுக்கு மெய்யாகவே சிரிப்பு வந்தது.

நன்றாகவே சமாளிக்கிறான்.

உள்ளூரத் தன் பரிசை எப்போது கொடுப்பது என்று அவளுக்கு ஒரே யோசனை. விடிந்ததிலிருந்தே அதே யோசனைதான். சும்மா போய் ஒரு விலை உயர்ந்த வாட்சைக் கொடுக்கப் போய் அவன் தப்புத் தவறாக ஏதாவது அர்த்தம் கற்பித்துக் கொண்டுவிடக் கூடாதே. தயக்கமும் குழப்பமுமாக ஏண்டா அதை வாங்கினோம் என்று கூடத் தோன்றிவிட்டது.

மனைவியின் முகத்தைப் பார்த்துவிட்டு காரணத்தைத் தவறாக ஊகித்து "எல்லாம் சரியாக நடக்கும் அபரஞ்சி. சின்னச் சின்ன விஷயங்களைக் கூடக் கவனித்து பக்காவாக ஏற்பாடு செய்திருக்கிறாய். தவறு நடக்க வாய்ப்பே இல்லை கவலைப்படாதே" என்றான் வசீகரன்.

"அப்புறம் இன்னொன்று அங்கே ஒரு முத்து மாலை ஒன்று விலைக்கு வந்தது. வாங்கி வந்தேன். சேர்த்து அணிந்தால் நன்றாயிருக்குமானால் போட்டுக் கொள்" என்று ஒரு நீளமான நகைப் பெட்டியை அவளிடம் கொடுத்தான்.

நடுத்தர அளவு நல்முத்துக்கள், மூன்று வரிசையாகக் கோர்க்கப்பட்டிருந்தன. அங்கங்கே மூன்று சரங்களையும், வைரப் பட்டையில் இணைத்திருந்தார்கள். நீளமாகச் சரங்கள் தொங்க, வைரமும் முத்துமாய், அகலமான பதக்கம் கீழே ஒளி வீசியது. வெகு அழகான மாலை.

உள்ளங்கழுத்தோடு ஒட்டி அணிந்திருந்த மரகத மாலையிலும் முத்துப் பதக்கம் இருக்கவே சேர்த்து வைத்துப் பார்த்த போது வெகு அழகாகப் பொருந்தியது.

"மிக நன்றாக இருக்கிறது" என்று அபரஞ்சி கூறவும் "சூப்பர் தேர்வாளர் வாங்கி வந்ததல்லவா?" என்று சட்டைக் காலரைத்தூக்கி விட்டுக் கொண்டான் வசீகரன்.

இது சரியான தருணமாகத் தோன்றிவிட வாங்கி வைத்திருந்த கைக் கடிகாரத்தைக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள் அபரஞ்சி.

விலையில் அவன் வாங்கி வந்ததன் கிட்டே கூட வர முடியாது தான். ஆனாலும் கைக்கடிகாரம் என்று பார்க்கும் போது இதுவும் விலை மதிப்பு உள்ளதுதானே. ஆனால் என்ன சொல்லப் போகிறானோ என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு கவனித்தாள்.

"என்னது. வாட்சா? எனக்கா?" என்று ஆச்சரியத்துடன் டப்பாவைத் திறந்து கடிகாரத்தை வெளியே எடுத்தான். "அடேடே! ரோலக்சா? இந்த மாடல் என்னிடம் இல்லை என்று உனக்கு எப்படித் தெரியும் அபரஞ்சி? சங்கிலி அமைப்புக் கூடப் பிரமாதமாக இருக்கிறதே" என்று பாராட்டினான் அவன்.

"தேடியலைந்து வாங்கியிருக்கிறாய் என்று தோன்றுகிறது. மனைவியின் முதல் பரிசு வேறு. பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். நீயே கட்டி விடுகிறாயா?" என்று முன்பு கட்டியிருந்ததைக் கழற்றிவிட்டுக் கையை நீட்டினான்.

வலிவும் வனப்புமான, அவன் கையைப் பார்க்கையில் அந்தக் கைகளின் அணைப்பு பற்றிய கற்பனை தானாக வந்தது.

உண்மைத் திருமணத்தை விரும்பியவனுக்கு நிபந்தனை விதித்தவள் அவள். அதற்குள் இப்படிக் கற்பனையா என்று தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொண்டு கடிகாரத்தைக் கட்டி விட்டாள் அவள்.



அவசரமாக விலகும்போது அவள் கையைப் பற்றி முத்த மிட்டான் அவன். "தாங்க்யூ ரஞ்சி."

"ரஞ்சி?"

அவள் திகைத்து நோக்க, முறுவலித்து "அபரஞ்சியில் ஒரு 'ரஞ்சி' ஒளிந்திருப்பதை நேற்றுதான் கண்டுபிடித்தேன். இன்று அது உறுதியும் ஆகிவிட்டது. எனவே இனி உன்னை ரஞ்சி என்றுதான் அழைக்கப் போகிறேன்" என்றான் வசீகரன் சரளமாக.

சரளமாகவா? அல்லது சரசமாகவா?

புரிந்து கொள்ளாமலே நெஞ்சு படபடத்தவளுக்கு அதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும் மனம் வரவில்லை.

இன்னும் கொஞ்ச காலத்துக்குப் பிறகு இது போலப் பலப் பல சம்பவங்கள் நடந்து இருவர் மனமும் ஒன்றிய பிறகு அந்த சுபாவின் பெயரே வசீகரனுக்கு மறந்தும் போன பிறகு அவனைப் புரிந்து கொள்வதுதான் நல்லது. அதுவரை இந்த ஆராய்ச்சிகள் எல்லாம் இல்லாதிருப்பதே நல்லது.

ஏனெனில் சற்று நேரத்தில் அவள் சுபாவைச் சந்திக்க வேண்டும்.

அவள் முன் வசீகரன் தலை குனிய நேர்ந்து விடாமல் அவள் நடந்து கொள்ள வேண்டும். அவனது 'கௌரவம்' காக்க வேண்டும்.

அபரஞ்சி உள்ளூரப் பயந்த அளவு முதலில் எதுவும் சிரமமாக இருக்கவில்லை.

முதல் காரணம், வந்தவர்களில் நிறையப் பேர் நாகரீகம் கருதியோ, என்னவோ, பட்டும் படாமலும், வெறும் வாழ்த்தோடு விலகிப்போய், விருந்தினரை மகிழ்விப்பதற்காக நடந்து கொண்டிருந்த 'மாஜிக் ஷோ'வில் போய் உட்கார்ந்தார்கள். நல்ல உயர் தரமான 'மாஜிக்'. எனவே பலரின் கவனத்தை அது நன்றாகவே ஈர்த்துப் பிடித்து வைத்திருந்தது. அதற்காகவே அவள் அதைத் தேர்ந்தெடுத்ததும்.

பலர் புதுப் பெண்ணான அவளுக்கு உதவி புரியவே முன்வந்தனர். வசீகரனின் முன்னாள் காதல் விவகாரத்தைப் பற்றி அவர்கள் என்ன நினைத்தார்களோ, இப்போதைக்கு அபரஞ்சி மீது பரிவு பிரியம்தான் காட்டினார்கள்.

“இன்றைக்கு எல்லோர் பெயரையும் நினைவில் பதிக்க முயற்சி பண்ணாதே அபரஞ்சி. அடுத்தடுத்து யார் வீட்டிலாவது ஏதாவது விழா வரும். திரும்பத் திரும்பச் சந்திக்கும்போது உனக்கே அடையாளம் புரியத் தொடங்கிவிடும்” என்று யோசனை சொன்னாள் நாற்பதுகளில் உள்ள ஒரு பெண்மணி.

சௌதாமினி குப்தா என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவள் “அடுத்த தடவை சந்திக்கும்போது என் பெயர் உனக்கு நினைவு வரவில்லை என்றால் நான் கொஞ்சம் கூடக் கோபித்துக் கொள்ள மாட்டேன்” என்று சேர்த்துச் சொல்ல அபரஞ்சிக்குச் சிரிப்பு வந்தது.

“கொஞ்சம் கூடக் கோபிக்க மாட்டீர்களா? அப்படியானால் ரொம்பவே கோபித்துக் கொள்வீர்களா?” என்று வசீகரன் கேட்க அது அதிகமாயிற்று.

“அழகான சிரிப்பு உன் மனைவிக்கு. அது வாடாமல் பார்த்துக் கொள்” என்று வசீகரனுக்கு அறிவுரை கூறினாள் சௌதாமினி குப்தா.

ரொம்பவும் நெருங்கிய பழக்கம் போலிருக்கிறது என்று அபரஞ்சி எண்ணும்போதே வாயில் புறம் சிறு பரபரப்பு ஏற்பட்டது. “சுபலேகா. சூப்பர்” என்றார்கள் யாரோ.

தயக்கத்துடன் திரும்பும் போதே கணவனின் பார்வை அவளை முந்திக் கொண்டு வாயிற்புறம் பாய்ந்து விட்டதை உள்ளூர வலியுடன் கண்டாள் அபரஞ்சி.



## 12

புது மணப்பெண், பட்டுச் சேலை, அதற்குரிய நகைகளில் வருவாள் என்று ஊகித்து அதற்கு நேர்மாறான அதி நாகரீகமான உடையில் வந்து எல்லோரையும் அசத்தினாள் சுபலேகா.

இரண்டாவது தோலோ எனும்படியாக உடம்போடு ஒட்டிய சில்வர் கிரே உடை ஒற்றைத் தோள்பட்டையிலிருந்து வழித்து முழங்கால் வரை பளபளத்தது. புது நாகரீகமாக வைரம் இழைத்த பிளாட்டினம் நகைகள், கழுத்திலும், காதுகளிலும் வெற்றுத் தோளிலும் மின்னலாய் ஒளிர்ந்தன.

அவளே மின்னல் போலத்தான் கண்ணைப் பறித்தாள்.

தானும் அழகாகவே இருப்பதைக் கண்ணாடியில் பார்த்ததோடு மட்டுமின்றி வந்திருந்த பலரும் சொல்லக் கேட்டிராவிட்டால் அப்படியே அழுந்தித் தலைக்குள்ளேயே போய்விடத்தான் அபரஞ்சி விரும்பியிருப்பாள்.

ஆனால் இது தோற்றோடுகிற நேரம் அல்ல. சுய கௌரவத்தோடு வசீகரனின் கௌரவத்தையும் கட்டிக் காப்பாற்ற வேண்டிய நேரம்.

அத்தோடு விவரம் அறிந்த பல ஜோடிக் கண்கள் இப்போது மேடையில் நின்ற மூவரின் மீதே பதிந்திருப்பதையும் பாராமலே அவளால் உணர முடிந்தது. இன்று நடப்பதுதான் இந்தக் கூட்டத்தினிடையே அவளது மதிப்பு மரியாதையை நிர்ணயிக்கப் போவது.

எனவே மூளை, முகம் அனைத்தையும் மிக முயன்று கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தாள்.

மிக ஒயிலாக அசைந்தாடி சுபலேகா மெல்லவே நடந்து வந்தாள். அதற்குரிய நேரமும் அவளுக்குக் கிடைத்தது.

எனவே வசீகரன் சுபலேகாவை அறிமுகம் செய்து வைத்த போது அழகாகச் சிரித்து வரவேற்று "உங்கள் அப்பா வர வில்லையே. உடம்புக்கு ஒன்றும் இல்லையே?" என்று கரிசனமாக வினவினாள்.

அபரஞ்சியிடம் பேசப் பிடிக்கவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டி "என் அப்பா பெரிய தொழில் பிரமுகர். கண்ட கண்ட வரவேற்புக்கெல்லாம் அவர் வருவது இல்லை" என்று எழிலாக உதட்டைப் பிதுக்கினாள் சுபா.

"அவருடைய சொந்த ஆடிட்டரின் திருமண வரவேற்புக்குக் கூடவா? அதுவும் இவ்வளவு நெருங்கிப் பழகிவிட்டு?" என்று சிங்கத்தை அதன் குகையிலே சந்தித்தாள் அபரஞ்சி.

விழியிடுங்க நோக்கி "எங்களைப் பற்றி ரொம்பவே தெரியும் போல இருக்கிறதே" என்றாள் சுபலேகா. "வீட்டுக்கு அவர் வரும்போதெல்லாம் சந்திப்போமா? அப்போது இங்கு நடப்பது எல்லாம் சொல்லுவார்" என்று முறுவலித்தாள்.

சற்றுத் திணறிப் போனாள் சுபலேகா.

அவள் எண்ணி வந்தது வேறு. எழில் நங்கையாக எதிரே போய் நின்றால் போதும் அரசல் புரசலாக அவளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கும் அந்தப் பெண் சுருண்டு விடுவாள். அவளை நன்றாகக் கொத்திக் குதறிவிட்டு வரலாம் என்று திட்டமிட்டிருந்தாள்.

அவளைக் குதறியே ஆகவேண்டும். என்ன தைரியம் இருந்தால் தன் சொந்தச் சொத்தாக சுபா மனதில் நினைத்துக் கொண்டிருக்கும் வசீகரனை இவள் மணப்பாள்? அதற்காக அவளை நோகடித்தே தீர வேண்டும் என்று வந்தால், இவள் 'எல்...லாம்' தெரியும் என்கிறாளே.



இங்கே இருக்கும் எல்லோருக்குமே வசீகரனும் அவளும் சேர்ந்து சுற்றியது தெரியும்தான். எனினும் எப்படி எப்படிப் பழகிய போதும் 'நண்பர்கள்' என்று கழன்று கொள்வது இப்போது எளிது. நடப்பதுதான். ஆனால் இந்த இடத்தில் வைத்துக் காதல் என்று பறை சாற்றிவிட்டால் அப்புறம் மாற்றுவது கடினம். வசீகரன் வேறு மனைவி பக்கம் சாய்ந்துவிட்டால், படு கேவலம் ஆகிப் போகும்.

அவளைத் தவிர வேறு யாரையும் காதலிக்க வசீகரனால் முடியாது என்பதில் சுபாவுக்கு இப்போதும் சந்தேகம் கிடையாது தான். ஆனால் தாலியே கட்டி ஒருத்தியைக் கூட்டி வந்திருக்கும் அவன் என்ன பேசுவான் என்று நிச்சயம் இல்லையே.

சும்மா விடவும் மனம் இல்லாமல் குரலைத் தணித்து "எல்லாமே தெரிந்துமா வசியை மணந்து கொண்டாய்?" என்று ஏக வசனத்தில் கேட்டாள் அவள். திடுமெனத் தணிக்கப்பட்ட தன் குரலே தோல்வியைப் பறை சாற்றுவதை அறியாமல்.

புன்னகை புரிந்து "ஒளிவு மறைவு இல்லாமல் எல்லாம் சொல்லுகிற கணவனை அடைவதுதானே நல்லது? 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்று வள்ளலாரின் பாட்டுக் கூட இருக்கிறது தெரியுமா? சாதாரணமாகப் பேசிப் பழகுகிறவர்களுக்கே இப்படி என்றால் கணவன் எப்படி மெய் சொல்ல வேண்டும்? வசுவை நான் மணக்கக் காரணமே அவரது உண்மை பேசும்.. அதாவது என்னிடம் உண்மை பேசும் பண்புதான்" என்றாள் அபரஞ்சி பெருமையாக.

அத்தோடு நில்லாமல் வசீகரனின் அலுவலகத்திலிருந்து விருந்தின் போது உதவி செய்வதற்காக வந்திருந்த ஒரு பெண்ணை அழைத்து "மேடத்தைச் சாப்பிடக் கூட்டி போங்கள் ஜெயா. சாப்பிடாமல் போக விட்டுவிட வேண்டாம். என்ன வசு, சும்மா நிற்கிறீர்கள்? மிஸ் சுபாவைச் சாப்பிடச் சொல்லுங்கள்" என்று இல்லத்தரசியாக, உபசாரமும் செய்தாள்.

கொதித்துக் கொண்டு வந்தது சுபாவுக்கு . யாரை யார் உபசாரம் செய்வது? அதுவும் வசியிடம் வேறு சிபாரிசா? அதுவும் யாருக்காக?

“உங்களிடம் பேச வேண்டும் வசி” என்றாள் குறிப்பாக.

அவன் பதில் சொல்லுமுன் “பேசலாம்” என்றாள் அபரஞ்சி. “ஆனால் இப்போதல்ல. உங்களை மாதிரித் தாமதமாக வருகிறவர்கள் இன்னும் யாரேனும் வரக் கூடும். அப்படி வரும்போது இவர் இங்கே இல்லாதிருந்தால் நன்றாயிராது அல்லவா? அதனால் நீங்கள் போய்ச் சாப்பிட்டுவிட்டு வந்து அப்புறமாக இவரிடம் பேசுங்கள்” என்று அவள் கூற சுபாவின் கோபம் இன்னமும் அதிகரித்தது.

இவள் யார் வசீகரனோடு சுபா எப்போது பேசுவது என்று நிர்ணயிக்க? அத்தோடு பேசப் போவது சுபா என்கிற பயமே இல்லையே. மனைவி ஆகி விட்டோம் என்கிற திமிரா? சுபா யார் என்று தெரியாமல் பேசுகிறாள் முட்டாள். தாமதமாக வந்ததாகக் குட்டு வேறு. என்ன திமிர். என்ன கொழுப்பு.

“இந்த மாதிரி விருந்துச் சாப்பாட்டை யெல்லாம் சாப்பிட்டு என் உடம்பில் நான் கொழுப்பேற்றிக் கொள்வது இல்லை” என்று முகத்தில் அடித்தாற்போலக் கூறியதோடு அபரஞ்சி அங்கே இல்லாதது போலவே பாவித்து “வசி. நாம் பேச வேண்டும் என்று உங்களிடம் சொன்னேனே” என்று அடிக் குரலில் சீறினாள்.

“பேசுவதற்கு என்ன இருக்கிறது?” என்றான் வசீகரன் சற்று தணிந்த குரலில் ஆனால் உறுதியாக.

நல்ல வேளையாக அந்த நேரத்தில் இன்னும் இரு குடும்பத்தினர் தாமதமாக வந்ததற்கு வருத்தம் தெரிவித்தபடி மேடைக்கு வந்து சேர்ந்தனர்.

அவர்கள் சௌதாமினி குப்தாவுக்குத் தெரிந்தவர்களாக இருக்க அவளும் மேடையேறிக் கூட நின்று பேசத் தொடங்கினாள்.



வேறு வழியின்றி “அப்புறம் பார்க்கலாம்” என்று முணு முணுத்து விட்டு விலகிச் சென்றாள் சுபலேகா.

வியப்புடன் மனைவியைப் பார்த்தான் வசீகரன்.

வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும் சுபாவும் அபரஞ்சியும் சந்திக்கும் கட்டத்தை நினைத்து வசீகரன் சற்றுக் கவலைப்பட்டுக் கொண்டுதான் இருந்தான். சுபாவின் பிடிவாதம் அறிந்திருந்ததால் அவளை அபரஞ்சி எப்படிச் சமாளிக்கப் போகிறாளோ என்ற கவலை.

ஆனால் எவ்வளவு அமைதியாகவும், திடமாகவும் அதே சமயம் இனிமையாகவும் அவள் சுபாவைச் சந்தித்தாள். கடைசியாக நிலை குலைந்து போனவள் சுபாதான்.

எங்கிருந்தோ வந்தவள், இந்த சமூகத்துக்குப் புதியவள், சுண்டு விரலால் தூக்கியெறிந்து விடலாம் என்று எண்ணிக் கொண்டு வந்திருப்பாள். அது முடியாமல் போனதும் எப்படி விழித்தாள்.

குவித்தும், பிதுக்கியும், நீட்டியும், அழகாகச் சிரித்தும் பார்த்து, ரசித்துப் பழக்கப்பட்ட அழகான செந்நிற உதடுகள், செய்வதறியாத திகைப்பிலும் கோபத்திலுமாகச் சுருங்கியபோது என்னமாய் அழகற்றுப்போயின, சுபாவின் உதடுகள், இவ்வளவு அழகற்றுத் தோன்றக் கூடும் என்று அவன் கனவில் கூட நினைத்தது கிடையாது இப்போது கண்ணெதிரில்...

தன்னையறியாமல் அவன் பார்வை சற்று தூரத்தில் உட்கார்ந்திருந்த சுபாவிடம் சென்றது.

வெறுப்பும் கோபமுமாக அபரஞ்சியை வெறித்துக் கொண்டிருந்தாள் அவள். பார்வையாலேயே கொன்று விடுவாள் போல, இவ்வளவு குரூரமான கண்களா அவளுக்கு? அவளிடம் மயங்கிக் கிடந்த காலத்தில் ஒரு தரம் கூட அவன் இதைக் கண்டு கொள்ளவே இல்லையே.

சட்டென, வசீகரன் திகைத்தான்.

'மயங்கிக் கிடந்த காலத்தில்' என்று இறந்த காலத்தில் எண்ணினால் என்ன அர்த்தம்? இப்போது அந்த மயக்கம் இல்லை என்றா?

எப்படி முடியும்? இரண்டு ஆண்டுகளாகக் காதலித்துவிட்டு. ...எப்படித் தவித்துவிட்டு.

ஏதேதோ எண்ணங்கள் தறி கெட்டு ஓடும்போதே இதயத்தின் மீதிருந்த ஓர் இறுக்கம் தளர்வது போலவும், வசீகரன் உணர்ந்தான்.

"உன் மனைவி ரொம்பப் பிரியமானவளாக இருக்கிறாளப்பா. ஒரு நாள் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வா. இவனுக்கு நினைவு மூட்டிக் கட்டாயமாக இழுத்துக் கொண்டு வாம்மா" என்று அவனுடைய ஒன்று விட்ட பெரியப்பா சொல்லிக் கொண்டிருந்ததைச் சமயத்தில் கவனித்து "கட்டாயம் வருகிறோம் பெரியப்பா" என்று உரிய பதில் தந்தான் வசீகரன்.

எழுந்து அவர்கள் முன்னே ஒரு சிறு உலாப் போய் தான் காத்திருப்பதைக் காட்டிக் கொண்டாள் சுபா.

அப்போது மட்டுமல்ல. அடிக்கடி சுபா அதையே செய்தாள்.

விருந்தினர் வருவது நின்று சாப்பாட்டு அறைக்குச் சென்று சாப்பிடுகிறவர்களை விசாரிக்கப் போனால் போகும் போதும், வரும் போதும், வழியில் நின்றாள்.

இதுவரை இந்த சுபா காத்திருக்கும்படி தான் செய்ததே இல்லை என்பது நினைவு வர வசீகரனுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது.

ஓடிஓடிப் போய் நிற்பானே. இன்று அவளாகப் பேச வேண்டும் என்று கேட்டும்...

பாவம் என்று தோன்றவும் அருகில் சென்று "என்ன பேச வேண்டும்? சொல்லு" என்று கேட்டான்.



சுபாவுக்கும் அது பழக்கமான இடமே. எனவே "சொல்லுகிறேன். ஆனால் வருகிறவர்கள், போகிறவர்கள் எல்லோரும் அறியும்படியாக அல்ல" என்றவள் அருகில் இருந்த பால்கனிக்கு அவனை அழைத்துச் சென்றாள்.

பால்கனியை அடைத்து கிரில் போடப்பட்டு அதில் 'மணிப்ளான்ட்'டும் அடர்ந்து படர்ந்திருந்ததால் அது ஓர் அறையாக இல்லாமலே அறை போன்ற தோற்றத்தைத் தந்தது.

அங்கே சென்றதும் சுபா தன் மனதைக் கொட்டத் தொடங்கினாள்.

"வசி உண்மையைச் சொல்லுங்கள். உங்கள் பாட்டி சாகப் போகிற மாதிரி டிராமா போட்டு இந்தப் பெண்ணை மணந்தாக வேண்டும என்று வாங்கி கல்யாணத்தை நடத்தி விட்டார்களா? கட்டாயத் திருமணம்தானே? எனக்குத் தெரியும். என்னைத் தவிர வேறு யாரையும் மனைவியாக நடத்த உன்னால் முடியாது. இந்தத் திருமணத்தை நான் ஒரு நாளும் ஒப்புக் கொள்ள மாட்டேன். உன்னால் என்னை மறக்கவே முடியாது வசி. எல்லாவற்றையும் உதறிவிட்டு வந்துவிடு வசி. நான் உனக்குச் சொர்க்கத்தைக் காட்டுகிறேன்." என்றவள் சட்டென அவனை இழுத்து அணைத்தாள்.

இரண்டு ஆண்டுகளாக சுபலேகாவை மணந்து அவளை மனைவியாகக் கொள்ளும் நாளைப் பற்றிக் கனவு கண்டு வந்தவன் வசீகரன். நற்குடிப் பிறப்பும் வளர்ப்பும் அத்து மீற விடவில்லை என்றாலும் அந்த நாள் பற்றிய கற்பனைகளை எது தடுக்க முடியும்?

சுபா அவனை அணைத்த விதம் அந்தக் கனவுகளுக்கு உயிரூட்ட அவன் தன்னை மறக்கத் தொடங்கிய போது ஏதோ பட்டென்று விழுந்த சத்தம் அவனை நடப்புக்குத் திருப்பியது. நிற்கும் நிலையும் புரிந்தது.

சட்டென சுபாவை விலக்கி நிறுத்தினான். "இது என்ன பைத்தியக்காரத்தனம் சுபா?" என்று அதட்டினான்.

அவள் வெற்றிச் சிரிப்புச் சிரித்தாள். "பைத்தியக்காரத்தனம் அல்ல. உண்மை. உண்மையை உனக்கு உணர்த்தினேன். சொல்வதைக் கேள் வசி. இப்போது எல்லாம் எளிது. அந்தப் பெண் அபரஞ்சிக்கு ஏதாவது கொடுத்து விரட்டி விடலாம். ஒன்றிரண்டு லட்சங்களே அவளுக்குப் போதும்..."

அபரஞ்சியை விரட்டி விடுவதா? என்ன அநியாயம்.

சுள்ளென்று மூண்ட ஆத்திரத்துடன் "இதற்கு மேல் ஒரு வார்த்தை பேசாதே சுபா. அபரஞ்சி என் மனைவி. வாழ்க்கை முழுமைக்கும் எனக்கு அவள்தான். இதுதான் உண்மை. இந்த உண்மையை நீ எப்போது ஒத்துக் கொள்ளுகிறாயோ, அதற்குப் பிறகு இனி நாம் சந்திப்பது நல்லது. இதற்கு மேல் உன்னிடம் பேச எனக்கு விருப்பம் இல்லை. நீ கிளம்புவதானால் என் மனைவியிடம் சொல்லிக் கொண்டு கிளம்பு. எனக்கு வேறு வேலை இருக்கிறது" என்றவன் மடமடவென்று அங்கிருந்து வெளியேறிச் சென்று விட்டான்.

சினம்தான் என்ற போதும் ஏதோ. சுமையகன்ற உணர்வையும் அனுபவித்த போது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. சுகமாகவும் இருந்தது.

சௌதாமினி குப்தாவுடன் பேசிக் கொண்டே வந்த அபரஞ்சி எதற்கோ சிரிக்க அந்த ஒலி கிண்கிணி நாதமாய் அவன் காதில் விழுந்தது.



## 13

பக்கத்துக் கட்டடம்தான் என்றாலும் கடைசி விருந்தினரை வழியனுப்பிவிட்டு எல்லோருக்கும் பணம் கொடுத்து முடித்து வீடு திரும்ப வசீகரன் தம்பதிக்கு இரவு பன்னிரண்டு மணியாகி விட்டது.

நகைகளைக் கழற்றிப் பட்டாடையைக் களைந்து உடம்பு கழுவிக்கொண்டு வந்த அபரஞ்சி அப்படியே சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டாள். என்னவோ மலையைத் தூக்கி வைத்த மாதிரி விரலை அசைப்பது கூட சிரமமாய்த் தோன்றியது அவளுக்கு.

செய்து முடித்தது பெரிய வேலைதான். ஆனால் அதனால் மட்டுமே இவ்வளவு களைப்பு ஏற்படுமா? இதைவிட அதிகவேலை சித்தப்பா வீட்டில் அவள் செய்ததில்லையா?

செய்திருக்கிறாள்தான். வருத்தத்துடன் கூடச் செய்திருக்கிறாள். என்ன வேலை செய்தாலும் ஒரு நல்ல வார்த்தை இல்லையே என்ற வருத்தம். ஆனால் இப்படி மன இறுக்கத்துடன் செய்தது இல்லை.

வசீகரன் தன்னால் தலை குனியும்படி ஆகி விடுமோ என்ற பயம். கவலை.

அதைவிட அந்த சுபா.

பிடிவாதமாக மனதை வேறு பக்கம் திருப்ப அவள் முயன்று கொண்டிருந்த போது அவளது அறைக் கதவு தட்டப்பட்டது.

அவளுடைய கணவன்தான். இப்போது இவனுக்கு என்ன வேண்டும்?

"வரலாம்" என்ற அவளது மெல்லிய குரல் அவனுக்குக் கேட்டதோ என்னவோ, கதவைத் தள்ளித் திறந்து கொண்டு கையில் ஒரு தட்டுடன் வசீகரன் அறையினுள் வந்தான்.

அவளது சோர்ந்த தோற்றத்தை எதிர்பார்த்தவன் போல லேசாக முறுவலித்தான்.

"பெரிய வேலை. ஒரு குறையில்லாமல் செய்து முடித்திருக் கிறாய். இந்தச் சோர்வு இயல்பு. இந்தா இனிப்பாக இதைக் குடித்தால் உடம்புக்குத் தெம்பாக இருக்கும்" என்று ஒரு பெரிய கப்பில் சூடாகச் சாக்கலேட் பானம் கலந்து கொண்டு வந்திருந்ததைத் தட்டில் இருந்து எடுத்து அவளிடம் கொடுத்தான்.

"தாங்க்ஸ்" என்றாள் அபரஞ்சி யந்திரக் குரலில். இரண்டு மிடறு விழுங்கியவள் யோசித்து "நீங்கள் குடிக்கவில்லையா?" என்று வினவினாள்.

"இதோ எனக்கும் சேர்த்துதான் கொண்டு வந்தேன்" என்று எடுத்து அருந்தத் தொடங்கியவன் 'டிரஸ்ஸிங் டேபிளி'ல் நகைகள் இருப்பதைக் கண்டதும், அங்கே சென்றான்.

பானத்தைக் குடித்து முடித்துவிட்டுக் கப்பை வைத்தவன், நகைகளை அவற்றுக்குரிய அட்டைப் பெட்டிகளில் எடுத்து வைக்கலானான்.

"இந்த முத்து மாலை நான் ஆடிட்டிங் செய்யப் போனேனே அந்த சேட்டிடம் விலைக்கு வந்தது. புதிதாகத் திருமணம் ஆகியிருக்கிறது. சீக்கிரம் போக வேண்டும் என்றுதானே வேலையைச் சீக்கிரமாக முடித்துக் கொண்டிருந்தேன். மனைவிக்கு வாங்கிப் போகிறாயா என்று கேட்டான். அந்தச் சேலைக்குப் பொருந்தும் என்று தோன்றியது. உடனே வாங்கிவிட்டேன். எதிர்பார்த்தது போலவே உனக்கு மிக அழகாகவும் இருந்தது. இதே போல ஒவ்வொரு வண்ணத்திலும் சேலையும் சேலைக்கேற்ற நகைகளும் வாங்குவோமா?.."



"இவ்வளவு நேரம் அவளுடன் உருகியதற்கு ஈடுகட்ட வென்று எதையும் செய்ய வேண்டாம்."

சுள்ளென்ற குரலில் அவள் கூறியதைக் கேட்டுத் திகைத்தான் வசீகரன். "நான் என் மனதில் நினைத்ததைச் சொன்னேன். அதற்கு நீயாக வேறு வண்ணம் பூசாதே" என்றான் அவன் எரிச்சலாக.

சொல்லும் போதே சுபாவுடன் தனியே பேசியது இவளுக்குத் தெரிந்திருக்கிறது என்று உணர்ந்து "இருந்து பேசும்படி சுபாவிடம் சொன்னது நீதானே" என்று கேட்டான்.

ஆத்திரத்துடன் திரும்பினாள் அபரஞ்சி. "பேசத்தான் சொன்னேன். ஆனால் அவள் மேலிருந்த சென்டைக்கூட உங்கள் மேல் பூசிக் கொள்ளச் சொன்னேனா?" என்று குத்தலாகக் கேட்டாள்.

சட்டெனத் திகைத்தான் வசீகரன்.

சென்ட் வாசனையிலிருந்து ஊகித்திருக்கிறாள். கெட்டிக்காரி தான். ஆனால் கொஞ்சம் தப்பாக ஊகித்து விட்டாளே. இந்த ஊகத்தினால்தான் இவ்வளவு டல்லடித்து விட்டாளோ?

மற்றபடி வரவேற்பு மகத்தான வெற்றியல்லவா? உற்சாகம் கலந்த சோர்வு இருப்பதுதானே நியாயம்?

ஒன்று தோன்றவும் "உன் பேச்சைக் கேட்கும்போது பொறாமை தொனிப்பது போல இருக்கிறது" என்றான் கண்ணில் குறுகுறுப்புடன்.

தலையைச் சிலுப்பி உச்சுக் கொட்டினாள் அபரஞ்சி. "பொறாமையும் இல்லை, ஒன்றும் இல்லை. பெரிதாகக் கௌரவம் காப்பதற்காகத் திருமணம் என்றீர்களே. இப்படி ஒரு நிகழ்ச்சியில் அவளைக் கட்...ச்சு, அவளோடு ஒட்டிக் கொண்டு நிற்பதில் என்ன கௌரவம் இருக்கிறது? யாரேனும் பார்த்திருந்தால் என்ன நினைப்பார்கள்? அது எனக்கும்தானே அவமானம்?" என்றாள் வறண்ட குரலில்.

"யாரும் பார்க்கவில்லை. நீயும் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் உனக்கோ, எனக்கோ, கேவலத்துக்கு ஒன்றும் இல்லை என்று தெரிந்திருக்கும். நான் பேசத்தான் போனேன். ஆனால் உன் மொழியில் சொல்வதானால் சுபாவாக வந்து ஒட்டிக் கொண்டு நின்றாலும் என்மேல் அந்த சென்ட் வாசனை வந்துதான் இருக்கும் இல்லையா?"

சிறு அமைதியின் பின் ஒரு பெருமூச்சு விட்டு "மெய்யாகவே ரொம்பக் களைத்துவிட்டேன் என்று தோன்றுகிறது. நான் தூங்க வேண்டும். நீங்களும் தூங்க வேண்டுமே. போகிறீர்களா?" என்றாள் அவள்.

"தூங்க வேண்டும் என்று கணவனை வெளியே போகச் சொல்லும் மனைவி நீ மட்டுமாகத்தான் இருப்பாய்" என்று கேலி போலக் கூறியவாறு எழுந்தவன் "இது உண்மைத் திருமணம் என்று சொன்னேனே அது உனக்கு நினைவிருக்கிறதா?" என்று அவளிடம் கேட்டான்.

இரு காலிக் கோப்பைகளையும் எடுத்து தட்டில் வைத்தபடி "அப்போது நானும் ஒரு நிபந்தனை சொன்னேனே அது உங்களுக்கு நினைவு இருக்கிறதுதானே?" என்றாள் அபரஞ்சி பதிலுக்கு.

"திவ்வியமாய்" என்று தோளைக் குலுக்கினான் வசீகரன். "அது கூட மறக்குமா என்ன? ஆனால் ஒன்று. மறக்க வேண்டியதை நீ நினைவு படுத்தாமல் இருந்தால் சரி. அதைக் கொடு நான் போகிற போது சமையல் அறையில் வைத்து விடுகிறேன்" என்று தட்டை வாங்கிக் கொண்டு வெளியேறினான்.

அனாவசியமாக அவள் தான் இப்போது சுபாவை நினைவுபடுத்தினாளா?

அந்த சுபாவே முயன்றும் இவன் ஒதுக்கியிருந்தால் தன் பேச்சு தவறல்லவா?

முதலிலேயே சுபாவுடன் பேச வசீகரனுக்கு விருப்பம் இல்லைதானே?



விருப்பம் இல்லையா? அல்லது தளர்ந்து விடுவோம் என்கிற பயமா?

அவள் முயன்றிருக்கிறாள் என்பது நிச்சயம். ஆனால் வசீகரன் தளர்ந்தானா, இல்லையா?

கேவலத்துக்கு ஒன்றும் இல்லை என்று அவன் சொன்னது நினைவு வர நிம்மதியோடு உறங்கப் போனாள் அபரஞ்சி.

வேலை நிமித்தமாக வசீகரன் அடிக்கடி வெளியூர் செல்வது அபரஞ்சிக்கு இப்போது வழக்கமாகிவிட்டது.

ஒரு முறை திருச்சி சென்றபோது அவளும் அவனோடு சென்று பார்வதி அம்மாளைப் பார்த்து வந்தாள்.

அந்த அம்மாளுக்கு மிகுந்த சந்தோஷம்.

"என் பேரன் தனியாக வரும்போதே எனக்கு ஆனந்தமாக இருக்கும். இப்போது நீயும் சேர்ந்து வந்திருப்பது பேரானந்தமாக இருக்கிறது. இதைப் பரமானந்தமாக்க வேண்டும். அதனால் அடுத்த முறை வரும் போது நல்ல செய்தியோடு வர வேண்டும்" என்று மகிழ்ச்சியோடு கேட்டுக் கொண்டார்.

"நல்ல செய்தியா? அது என்ன நல்ல சேதி பாட்டி? ஏன் ரஞ்சி பாட்டி சொல்வது உனக்கு ஏதாவது புரிகிறதா?" என்று அறியாதவன் போல வசீகரன் கேட்க அபரஞ்சி அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தாள்.

பேரனின் நடிப்பை உண்மை என்று நம்பி "அறியாப் பையன்" என்று பெருமையாகச் சொல்லிச் சிரித்தார் முதியவர். "பெரிய ஆடிட்டர் என்று பெயர். இது தெரியவில்லையே. உன் கொள்ளுப் பேரன் வருகிற சேதிடா மக்குப் பையா."

"ஓஹோ. அதைச் சொன்னீர்களா பாட்டி" என்று கண்களை விரித்தான் பேரன்.

"பின்னே? அதுதானேம்மா இனி உனக்கு உலகத்திலேயே நல்ல சேதி" என்றார் பெரியவர்.

"ஆனால் பாட்டி இந்த மாதிரி விஷயத்தையெல்லாம் ஆண்பிள்ளை என்னிடம் கேட்டால் எப்படி? உங்கள் அபியிடம் கேளுங்கள் பாட்டீ" என்று மனைவியை நன்றாகவே மாட்டி விட்டான் வசீகரன்.

பார்வதி அம்மாளின் பல்வேறு கேள்விகளுக்குப் பதிலளித்து முடிக்குமுன் அபரஞ்சி திணறித் திண்டாடிப் போனாள்.

அதை ரசித்து வசீகரன் சிரிப்பதைப் பார்த்து முதலில் கோபம் வந்த போதும் அந்தச் சிரிப்பில் தான் வசீகரிக்கப் பட்டதை அபரஞ்சி நன்றாகவே உணர்ந்தாள்.

"வசும்மா அவன் அப்பா சாயல். சின்ன வயதில் மாப்பிள்ளையும் இவனைப் போலத்தான் ஆள் கன கம்பீரமாய் நன்றாக இருப்பார். அவரைப் பார்த்ததுமே இவன் அம்மா மயங்கி விட்டதாக மூத்தவள் விமலியைக் கேலி பண்ணுவாள். அப்பா போலப் பிள்ளை. இனி இவனைப் போல இவன் பிள்ளை..."

வசீகரனின் சாயலில் ஒரு சிறு குழந்தையை மடியில் வைத்துக் கொண்டிருப்பது போலக் கற்பனை கூட அபரஞ்சிக்குத் தோன்றி உடம்பு மனது எல்லாமே இளகிவிட்டது.

பாட்டியின் பேச்சை ரசித்து முறுவலித்துக் கொண்டிருந் தவனைப் பார்க்கையில் இவனுக்குப் பிள்ளை பெறக் கொடுத்து வைக்க வேண்டாமா என்று தோன்றிற்று.

கூடவே சுபாவும் இப்படித்தானே எண்ணியிருப்பாள் என்றும் தோன்றவும் சட்டெனத் திகைத்தாள்.

சுபா. அவளை அவன் மறந்த பிறகல்லவா பிள்ளையைப் பற்றி யோசிக்க வேண்டும் அதற்குள் இது என்ன முந்திரிக் கொட்டைத் தனம்?

இங்கேயே இருந்து அவன் புகழைக் கேட்டுக் கொண்டே இருந்தால் மூளை முழுசாக மழுங்கிவிடும்.



"சித்தப்பா வீட்டில் தலையைக் காட்டிவிட்டு வந்து விடுகிறேன்" என்று எழுந்தாள் அவள்.

'கூட வருகிறாயா?' என்று அபரஞ்சியும் கேட்கவில்லை 'கூட வருகிறேன்' என்று அவள் கணவனும் கூறவில்லை.

மாறாக, "தேவைப்பட்டால் குரல் கொடு. ஓடி வந்து காப்பாற்றுகிறேன்" என்று அவன் சொன்ன தினுசில் அவளுக்குச் சிரிப்பு வந்தது.

அந்தச் சிரிப்புடனேயே எதிர் வீட்டுக்குச் சென்றவளுக்கு எதிர்பார்த்த வரவேற்புதான் கிடைத்தது.

அபரஞ்சியின் சேலை நகை கூந்தல் கட்டு எல்லாவற்றையும் பொறாமையோடு ஆராய்ந்து விட்டு பாக்கியம் பேச்சைத் தொடங்கினாள்.

"என்னடி திடீர்னு வருகை? வயிற்றிலே வாங்கிக் கொண்டு விட்டாயா? வேண்டாம்டீ. உன் வாழ்க்கையே அந்தரத்திலே கிடக்கிறது. திடீர்னு வந்து கட்டிக்கிட்டவன் திடீர்னு வெட்டி விட்டாலும் விடுவானில்லையா? அதனாலே ஏதாச்சும் உண்டாகி யிருந்தால் அதை அழித்துவிடு. இல்லாட்டி தனியாக அதை வேறே வைத்துக் கொண்டு படும்படி ஆகிவிடும்" என்று இலவச ஆலோசனை வழங்கினாள் பாக்கியம்.

இப்படியெல்லாம் பேச வேண்டுமா? என்ன புத்தி.

"என்னடீ பார்க்கிறாய்? இன்னொருத்தி கூடச் சுற்றினவன்தானே உன் புருஷன். என்றைக்கு ஒருத்தியை விட்டுவிட்டு உன் கூட வந்தானோ அப்புறம் உன்னைவிடுவது என்னடி பிரமாதம்? ஆமாம் இப்போதெல்லாம் உன் புருஷன் அவள் கிட்டே போகிறதுண்டா? நீ அவளைப் பார்த்திருக்கிறாயா? ஆள் அழகா? வீட்டுக்கும் வருவாளா? அவளுக்குக் காப்பி தண்ணீர் கொடுப்பாயா?" என்று நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு வம்புப் பேச்சுக்கு அடிப் போட்டாள் பாக்கியம்.

"என்னென்னவோ பேசுகிறீர்கள் சித்தி. அப்படியெல்லாம் ஒன்றுமே கிடையாது. இதோ பாருங்கள் செல்விக்கு நன்றாக இருக்கும் என்று இந்தச் சுரிதார் செட் வாங்கி வந்தேன். இந்தா செல்வி பிடித்திருக்கிறதா பார்" என்று கையோடு கொண்டு வந்திருந்ததைக் கொடுத்தாள்.

நன்றாகத்தான் இருந்தது. ஆனால் அதை ஒப்புக்கொள்ள அம்மா, பெண் இருவருக்குமே மனமில்லை.

வயதில் சிறியவள் அரை மனதாய்த் தலையாட்ட "துணி ரொம்ப லேசாத் தெரியுதே. நனைத்தால் சுருங்கிப் போய் விடும்னு நினைக்கிறேன்" என்றாள் அருமைச் சிற்றன்னை.

வந்தவள் எட்டிக்கூடப் பார்க்கவில்லையே என்று சித்தப் பாவுக்குக் குத்து விழுமே என்று தான் அபரஞ்சி அந்த வீட்டுக்குப் போனது. கூடவே அவள் இல்லாத அருமையை உணர்ந்து சித்தியின் மனம் கொஞ்சமேனும் இளகியிருக்குமோ என்கிற நப்பாசை. அது இல்லை என்று ஆனதும் அபரஞ்சி உடனே கிளம்பிவிட்டாள்.

கிளம்பும் போதும் "இதோ பார் அபரஞ்சி அங்கே உனக்குக் கொஞ்சம் கஷ்டம் என்றாலும் உடனே கிளம்பி இங்கே வந்து விடு. முன்னைப் போலவே இங்கே நிம்மதியாக இருக்கலாம்" என்று சொல்லி அனுப்பினாள் பாக்கியம்.

முன்னைப் போல நிம்மதியாகவா? என்று எண்ணியபோதும் ஒன்றும் சொல்லாமலே அபரஞ்சி வெறும் தலையசைப்பிலேயே விடை பெற்றுச் சென்றாள்.

"திமிரைப் பார். சும்மா தலையாட்டிட்டுப் போகிறாளே. எல்லாம் இந்த வீட்டில் தின்ற சோறு கொடுத்த திமிர். இருக்கட்டும். இவளுக்கு எத்தனை நாள் இந்த வாழ்வு நிலைக்கிறதுன்னு நானும் பார்க்கத்தானே போகிறேன். அனாதைக் கழுதை. இவளுக்கு வந்த வாழ்வைப் பார்" என்று ஆத்திரத்துடன் பொறுமினாள் பாக்கியம்.



எதிர் வீட்டில் வாயில் அறையிலே மனைவியை எதிர் கொண்டான் வசீகரன்.

அவள் உள்ளே வந்ததும் ஏற இறங்கப் பார்த்துவிட்டு "அட. முழுசாகத் திரும்பி வந்து விட்டாளே. ஆலம் கரைத்துச் சுற்றிப் போடும்படி சரசுவதி ஆன்ட்டியிடம் சொல்ல வேண்டும்" என்று அவன் பாவனையுடன் கூறவும் அபரஞ்சியும் மனநிலை மாறிச் சிரிக்கத் தொடங்கினாள்.

"எப்போதும் இப்படிச் சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும்" என்று ஆசீர்வதித்து அனுப்பினார் பார்வதி.

இருந்திருக்கலாம். 'சுபலேகா' என்கிற தடை மட்டும் இல்லாமல் இருந்திருந்தால்.

## 14

குரங்கை நினையாமல் மருந்து குடித்தால் குணமாகும் என்றானாம் ஒரு வைத்தியன். மருந்தைத் தொட்டாலே குரங்கின் நினைவு வந்து மருந்ததைக் குடிக்க முடியாமலே போயிற்றாம்.

சுபாவை மறக்காவிடில் தன் வாழ்வு என்பதும் அதைப் போலத்தான் முடியுமோ என்றாகிவிட்டது அபரஞ்சிக்கு.

சும்மாச் சும்மா, எதிர்பாராத நேரங்களில் எல்லாம் அவள் பெயர் தலையை நீட்டியது.

வசீகரன் ஒரு நல்ல கணவனாக நடந்து கொள்ளவில்லை என்று சொல்ல முடியாது. அவளுக்குத் தேவையான அனைத்தையும் வாங்கிக் கொடுத்தான். தேவை என்று இல்லாவிட்டாலும் கூட

அவளுக்கு நன்றாக இருக்கும் என்றும் பல பொருட்களை வாங்கிக் குவித்தான். அதுவும் வெளியூர் சென்றான் என்றால் அவளுக்கு ஒரு நல்ல பரிசு வருவது நிச்சயம்.

அவள் வேண்டாம் என்றாலும் விட மாட்டான்.

பெற்றோருடன் வாழ்ந்த காலத்திலும் கூட அவள் அறிந்திராத நிலை. அவ்வளவாகப் பொருள் வசதி இல்லாத காரணத்தால் அவர்கள் ஓர் அளவுக்கு மேல் மகள் கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்தது இல்லை.

அவளுக்குப் பொழுது போவதற்காகவும் வீணை, பாட்டு, ஓவியம் என்று அவள் விரும்பியது எதுவானாலும் கற்றுக் கொள்ளச் சொன்னான். அவளது கம்ப்யூட்டர் கனவை அறிந்ததும் அந்தக் கல்விக்கும் பணம் கட்டி அவளும் போய் வந்தாள்.

இன்டர்நெட் தொடர்போடு வீட்டுக்குக் கம்ப்யூட்டர் வந்தது.

தொழில் முறை 'டின்னர்'கள் இல்லாத போது பெரிய ஹோட்டல்களுக்கு அபரஞ்சியை அழைத்துச் சென்றான். இதமான இசைப் பின்னணியில் மெலிதாக ஒலிக்க அரை ஒளியில் உட்கார்ந்து கவர்ச்சிகரமான ஆட்டத்தைப் பார்த்தபடி உண்ணும்போது கனவுலகத்தில் வாழ்வது போன்ற பிரமை ஏற்படும்.

குடும்ப வாழ்வை அவன் விரும்புவதை இதமாகவே உணர வைத்துக் கொண்டிருந்தான்.

ஆனால் எல்லாம் சுகமாகவே இருந்த போதும் அவன் சொன்ன உண்மைத் திருமணத்துக்குத் தடை ஏற்பட்டுக் கொண்டே இருந்தது.

ஏதாவது ஒரு வகையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, சுபா குறுக்கே வந்து கொண்டே இருந்தாள்.

அதே சென்னையில் தானே அவளும் இருந்தாள். அவ்வப் போது கண்ணில் பட்டு அபரஞ்சியின் மனநிலையைக் கெடுத்துக் கொண்டே இருந்தாள். இவளிடம் கௌரவம் காட்டத்தானே



திருமணம் செய்தான்? அதே போல அந்தத் திருமணத்தின் வெற்றியாக இவளிடம் குழந்தை ஒன்றைக் காட்டத்தான் குடும்ப வாழ்க்கை விழைகிறானோ?

இந்த எண்ணம் தோன்றியதுமே அவளுக்கு எல்லாம் வெறுத்து விடும்.

இருக்கட்டும். அவளது நிபந்தனைக்குச் சம்மதித்துத்தானே மணந்தான். மனதிலிருந்து அவளை அடியோடு அகற்றிவிட்டு வரட்டும். அப்புறம் பார்க்கலாம் என்று ஒதுங்கிக் கொள்வாள்.

"கார் ஓட்டக் கற்றுக்கொள். வீட்டில் ஒரு காரை நிறுத்துகிறேன். உன் விருப்பம் போல வெளியே போய் வர வசதியாக இருக்கும்" என்று சொல்லி அபரஞ்சிக்கு கார் ஓட்டும் பயிற்சிக்கும் வசீகரன் ஏற்பாடு செய்தான்.

கிட்டத்தட்டப் பயிற்சி முடிந்துவிட்ட நிலை.

எப்படி ஓட்டுகிறாள் என்று பார்ப்பதற்காகப் பக்கத்தில் அமர்ந்து ஓட்டச் சொன்னான்.

போக்குவரத்து நெரிசலில் கூட அழகாக ஓட்டி வந்தவள் வலது பக்கம் திரும்ப வேண்டிய இடம் ஒன்றில் சற்று அவசரப்பட்டு விட்டாள். நேர்ப்பாதையில் வந்த காரோட்டி கையை நீட்டித் திட்டிக் கொண்டே போனபோதும் ஓர் உரசலைச் சாமர்த்தியமாகத் தடுத்துச் சென்றதும் அவன்தான்.

நெஞ்சு படபடத்துப் போயிற்று அவளுக்கு.

அது பற்றி ஒன்றும் சொல்லாவிடினும் "அப்படியே உட்கார்ந்து கொண்டிராதே. போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விடும். காலை எடு" என்று வசீகரன் சற்று அழுத்தமாகக் கூறியதே திட்டியது போல அபரஞ்சியின் மனம் குன்றிப் போயிற்று.

சமாளித்துக் கொண்டு அவள் காரை மீண்டும் ஓட்டத் தொடங்கும் போது ஹார்ன் ஒலியுடன் அவள் பின்னிருந்து ஒரு கார் வெகு வேகமாக அவளை முந்திச் சென்றது.

ஓட்டிச் சென்றது ஒரு பெண்.

சுபா இப்படித்தான் ஓட்டியிருப்பாள் என்ற எண்ணம் அவளுக்குத் தானாக வந்தது.

முதல் காரைத் தொடர்ந்து நாலைந்து கார்கள் முந்திச் சென்ற பிறகே அபரஞ்சியால் காரை எடுக்க முடிந்தது. நடந்தது எல்லாம் வீட்டிற்குச் சற்று தூரத்தில்தான்.

காரை நிறுத்திவிட்டு வீட்டுக்குள் செல்லும் வரை யாரும் பேசவில்லை.

அதன் பிறகே அவள் தோளில் கைவைத்து "ஓட்ட ஓட்ட எல்லாம் சரியாகி விடும். அதைப் பற்றியே நினைத்துக் கொண்டிராதே" என்றான் வசீகரன்.

சட்டெனத் திரும்பி விலகி "அதை பற்றியே நினைத்து கொண்டிருப்பது நீங்கள்தான்" என்று குற்றம் சாட்டினாள் அபரஞ்சி.

"நானா?"

"ஆமாம். அதைப் பற்றி மட்டும் அல்ல. அவளைப் பற்றியும் தான் சுபாவாக இருந்தால் எப்படி ஓட்டியிருப்பாள் என்று நினைத்தீர்கள், நினைக்கிறீர்கள்."

"நான் நினைப்பதை அறிகிற புத்தி உனக்கு ஏது? சுபாவை நினைக்கவில்லை என்று சொன்னாலும்தான் நம்பப் போகிறாயா என்ன?"

"எப்படி நம்புவது? அந்த நேரத்தில் அதட்டினீர்களே."

"அதட்டவில்லை. அழுத்திச் சொன்னேன். அந்த நேரத்தில் நீ கொஞ்சம் அதிர்ச்சியில் இருந்தாய். மெல்லச் சொன்னால் மனதில் படாது. அதனால் குரலில் அழுத்தம் கூட்டிச் சொன்னேன். அவ்வளவுதான்" என்றான் அவன் அப்போதைய அதே அழுத்தத்துடன்.



உதட்டைக் கடித்துக் கொண்டு அபரஞ்சி நிற்கவும் "சுபாவை மறக்க வேண்டும் என்று என்னிடம் சொன்னாய். ஆனால் அவளை நினைத்துக்கொண்டே இருப்பது நீதான் என்று எனக்குத் தோன்றுகிறது. மூளை வேறு மாதிரியும் வேலை செய்தால் கொஞ்சம் யோசித்துப் பார்" என்று கடுப்புடன் மொழிந்து விட்டுப் போனான் வசீகரன்.

அவன் சொல்வது சரிதானா? அவள் தான் அடிக்கடி சுபாவை நினைக்கிறாளோ? ஆனால் அவன் நினைக்கவில்லை என்று என்ன நிச்சயம்? மனதிற்குள் புகுந்து பார்க்கவா முடியும்?

அபரஞ்சி குழம்பிக் கொண்டிருக்கையில் ஒரு நாள் குப்தா குடும்பத்தினர் வீட்டுக்கு அவர்களை விருந்துண்ண அழைத்திருப்ப தாக வசீகரன் கூறினான்.

சௌதாமினி குப்தா. முதல் நாளே அபரஞ்சியிடம் பிரியமாகப் பேசியவள்.

மகிழ்ச்சியோடு அவர்கள் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள், என்ன உடை உடுத்துவது, என்ன வாங்கிப் போவது என்று அது பற்றிக் கணவனிடம் கேட்டு உற்சாகமாகத் திட்டமிடலானாள் அபரஞ்சி.

"கணவன் மனைவி மட்டும் தான் இங்கே இருக்கிறார்கள். இரண்டு பிள்ளைகள் பிலானியில் படித்துக் கொண்டு இருக்கிறார்கள். லீவுக்கு வரும் போது ஆட்டமும், பாட்டுமாக வீடு அதிரும். அப்போது கட்டாயம் எல்லோருக்கும் ஒரு பார்ட்டி இருக்கும். கணவன் மனைவி இருவருமே நன்றாகப் பழகுவார்கள். பணமும் எக்கச் சக்கம்."

"உங்களை ஆடிட்டராக வைத்திருப்பதிலிருந்தே தெரிகிறதே" என்றாள் மனைவி.

"இது வசவா, பாராட்டா என்று புரியவில்லையே" என்றான் வசீகரன்.

"நான் சொன்னது வசவாகவும், பாராட்டாகவும் எப்படி மாறும் என்று புரியவில்லையே..."

"ஏன்? பெரிய பெரிய பணக்காரர்கள் எல்லாம் என் கட்சிக்காரர்கள் ஆக விரும்பி வருகிறார்கள் என்றால் என் திறமைக்கு அது பாராட்டு. நான் பணக்காரர்களாகப் பார்த்து, கட்சிக்காரர்களாக ஏற்கிறேன் என்றால் பணத்தாசை பிடித்தவன் என்று அது வசவுதானே?"

"உங்கள் கட்சிக்காரர்கள் எப்படி மண்டை குழம்பிப்போய் நீங்கள் சொல்லுவதற்கெல்லாம் தலையை ஆட்டுகிறார்கள் என்று இப்போது புரிகிறது. நான் சாதாரணமாகச் சொன்னேன். சாமி, நான் பார்த்த அளவில் உங்கள் கட்சிக்காரர்கள் எல்லோரும் பெரிய பணக்காரர்கள் தானே? இந்த குப்தா அந்த அகமதாபாத் சேட், மோடி திருச்சியில் அந்த சூப்பர் மார்க்கெட்காரர், சுபா..."

"ம்... சுபா. அவள் பெயரைக் கொண்டு வராமல் உன்னால் இருக்க முடியாதே" என்று சட்டெனக் கடுத்தான் வசீகரன். "வரவர எனக்குப் பொறுமையே போய்க்கொண்டு இருக்கிறது" என்றான் எரிச்சலோடு. "என்னை 'மறமற' என்று விட்டு நீதான் அவள் பெயரை உருப் போடுகிறாய்."

அவள் பெயரைச் சொல்லாமல் இருந்திருக்கலாமோ என்பதுதான் அவளுக்கும். ஆனால் அவன் கோபப்படவும், அவளுக்கும் ஆத்திரம் வந்தது. "நாலு பேரோடு ஒன்றாக நான் சாதாரணமாகத்தான் சொன்னேன். அதை இவ்வளவு பெரிதாக எடுப்பதுதான் வித்தியாசமாக இருக்கிறது" என்றாள் பதிலுக்கு.

சற்று நேரம் அங்கே மௌனம் நிலவியது.

சில நிமிஷங்கள் நிசப்தத்தில் கழிய இருவருமே ஒன்றாக நிமிர்ந்து "சரி சரி..." என்று தொடங்கி விட்டு சிறு வியப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு பேச்சை நிறுத்தினர்.



முறுவலித்தவாறு மேலே பேசுமாறு மனைவியிடம் கையைக் காட்டினான் வசீகரன்.

அதே சிரித்த முகமாய் "நீங்கள் முதலில் சொல்லுங்கள்" என்றாள் அபரஞ்சி.

"ஓகே. வீண் வாக்குவாதத்தை விட்டுவிட்டு குப்தா வீடு பற்றிப் பேசலாம் என்று சொல்ல வந்தேன் நான்" என்று அவன் கூறவும் கலகலவென்று சிரித்தாள் அவன் மனைவி. "நானும் அதையேதான் சொல்லத் தொடங்கினேன்."

"ஹையோ என்ன பொருத்தம், இப்பொருத்தம். தாங்க முடியவில்லையே." அவன் வானை நோக்கி கண்ணையும் கையையும் உயர்த்த அவள் மேலும் சிரிக்க நிலைமை மீண்டும் இலகுவாயிற்று.

சௌதாமினியின் வீடு அடையாறில் தனி பங்களா. செடி கொடிகள் எல்லாம் பார்த்துப் பார்த்து அழகாக வளர்த்திருந்தார்கள்.

உணவும் சுவையாக இருந்தது.

சப்பாத்திதான். ஆனால் விதம் விதமான கூட்டு, குருமா வகைகள்.

நவரத்தினக் குருமா என்று முந்திரிப் பருப்பு, சீஸ் கலந்து, இனிப்பு, உப்பு, உறைப்பு எல்லாம் போட்டுச் செய்திருந்தார்கள். அதன் சுவை அபரஞ்சிக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

எனவே அதை நன்றாகச் சாப்பிட்டதோடு அதன் தயாரிப்பு முறையையும் சௌதாமினியிடம் கேட்டு எழுதி வாங்கிக் கொண்டாள்.

ஆண்கள் இருவரும் தொழில் விவகாரம் பேசிக்கொண்டு இருந்தார்கள்.

அந்தப் பக்கம் ஒரு தரம் எட்டிப் பார்த்துவிட்டு "வசீகரன் பற்றி நாங்கள் எல்லோரும் ரொம்பவே பயந்து கொண்டிருந்தோம்.

சுபாவை மணப்பானோ என்ற கவலை. குறைந்தது அரை சென்டி மீட்டர் உயரத்துக்குக் குழைத்துப் பூசியிருக்கிறாள் அவளிடம் என்னத்தைக் கண்டானோ என்று பேசுவோம். நீ ஓர் இனிமையான ஆச்சரியம்'' என்றாள் சௌதாமினி.

அபரஞ்சி விழி உயர்த்திப் பார்க்கவும் "இந்த நவரத்தினக் குருமாவை சுபா தொட்டுக் கூடப் பார்த்திருக்க மாட்டாள். அவளது அழகான உடல்கட்டு கெட்டுவிடும் என்பாள்'' என்றாள் சௌதாமினி.

வினாடி தயங்கிவிட்டு "தன் அழகைப் பாதுகாப்பது தப்பு இல்லையே'' என்றாள் அபரஞ்சி.

"தப்பு இல்லைதான். ஆனால் அதை அவரவர் அளவில் நிறுத்திக் கொள்ள வேண்டும் அல்லவா? இதைச் சாப்பிடுகிறவர்கள் எல்லோரும் குண்டு பூசனிக்காய்கள். அழகு பற்றிய அறிவே இல்லாத நிர் மூடங்கள் என்று சொல்லக் கூடாதே.''

"ஓ.''

"ஆமாம். அப்படித்தான் பேசுவாள். ஒன்று தெரியுமா? பெண்களில் அவளுக்குச் சினேகிதிகளே கிடையாது. இருக்க முடியாது. இன்னொருத்தி அழகாக இருந்தால் அவளால் தாங்க முடியாது. அப்படி ஒரு பிறவி.''

"ரொம்பத் தெரிந்து வைத்திருக்கிறீர்களே'' என்று முறுவலித்தாள் அபரஞ்சி.

ஒரு கணம் தயங்கிவிட்டு "உனக்கும் எல்லாம் தெரியும் என்று வசீகரன் சொன்னார். முன்பு வசீகரன் அவளை மணக்கக் கூடும் என்ற வதந்தி இருந்தது. வசீகரை எங்களுக்கு மிகவும் பிடிக்கும். வருங்காலத் திருமதி வசீகரனிடம் பழகிக் கொள்ளலாம் என்று முயன்றேன். அவளை விட இருபது ஆண்டுகளுக்கு மேலாக நான் பெரியவள். என் நிறத்தையே அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சம வயதில் யாரிடம் எதைப் பொறுப்பாள்?



அப்புறம் நட்பு எங்கிருந்து வரும்? வசீகரனுடன் பழகுகிறவர்கள் எல்லோருமே அவரது பெயருக்கேற்றபடி வசீகரிக்கப்பட்டு அவருக்கு நண்பர்கள் ஆகி விடுவார்கள். அவளோடு திருமணம் ஆனபின் எவ்வளவு கஷ்டப்படுவார் என்று வருத்தப்படுவேன். நல்ல வேளை. தப்பித்தார்... இதையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால் சுபா ஒரு மாதிரி ஆள். வசீகரனை எளிதில் விட மாட்டாள். உங்கள் இருவருக்கும் இடையில் ஏதாவது குழப்பம் உண்டாக்க அவள் முயற்சி பண்ணலாம். அப்போது எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்'' என்றாள்.

"நிச்சயம்'' என்று மீண்டும் முறுவலித்தாள் அபரஞ்சி.

"அத்தோடு எங்கள் வசீகரனை சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டும்.''

அதற்கும் அபரஞ்சி முறுவலித்தாள்.

திரும்பி வரும்போது அவள் மனதில் ஒரு போராட்டம்.

சௌதாமினியை அவளுக்குப் பிடித்தது. நல்ல குணவதியான குடும்பப் பெண்மணி.

அவள் வசீகரனைப் பற்றி மிக உயர்வாகப் பேசுகிறாள். அவன் நல்லவன் என்பது அபரஞ்சிக்கே தெரியுமே. இல்லாவிட்டால் முப்பது கோடியும், காதலியும் போதும் என்று அன்றே சுபாவை மணந்து கொண்டிருப்பானே.

அது நியாயம் அல்ல என்றுதானே அந்த உறவை முறித்துக் கொண்டான்.

அவன் முன்பு காதலித்த ஒருத்தியை அடியோடு மறக்க வேண்டுமானால் அதற்கு மனைவியான அபரஞ்சியும் உதவ வேண்டுமோ?

தன்னை மறக்கவிடக் கூடாது என்று சுபா என்னென்ன செய்கிறாளோ? முன்பே அவனை மயக்க முயன்றவள் தானே? தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன் அவன்தான்.

இப்போதும் சுபா அங்கங்கே வந்த நிற்பது கூட அவனிடம் பாதிப்பை ஏற்படுத்தத்தானோ, என்னவோ?

அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று அவன் தனக்குள்ளேயே என்னமாய்ப் போராடிக்கொண்டு இருக்கிறானோ?

அபரஞ்சியிடம் வசீகரனுக்குப் பிரியம் இல்லாமல் இல்லை. அவளும் ஒத்துழைத்தால்...ஒத்துழைத்தால்தான் சுபாவை வசீகரனால் மறக்க முடியுமோ?

கணவனோடு ஒன்றுபட்டு வாழ்வது என்ற முடிவுக்கு அபரஞ்சி வந்து கொண்டிருந்த போது "நீங்கள் இருவருமாக சுபாவைப் பற்றி என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்?" என்று கேட்டு வசீகரனே அதைக் கெடுத்தான்.

## 15

அபரஞ்சி வசீகரனின் திருமணம் அவரவருக்கு ஓர் அவசியம் இருந்ததால் அவசரமாக முடிவு செய்யப்பட்டு நடந்தது.

ஆனால் அடுத்த முடிவுகளை அப்படி எடுக்க முடியவில்லை.

ரொம்பவும் யோசித்து அபரஞ்சி முடிவெடுக்கும் போது சுபாவின் பெயரைக் கேட்டதும் மீண்டும் அது கலைந்து போனது.

என்னவோ அவள்தான் அனாவசியமாக சுபா ஜபம் செய்வதாகக் குற்றம் சாட்டுகிறவன் இப்போது அவனே அவளைப் பற்றி எப்படிப் பேசலாம்?

தோளைக் குலுக்கிவிட்டு "நீங்கள் தான் அவளையே நினைத்துக் கொண்டிருப்பீர்கள். எங்களுக்கென்ன தலையெழுத்து இருந்திருந்து அவளைப் பற்றிப் பேசுவதற்கு?" என்றாள் ஏளனமாக.



"தலையெழுத்து அப்படியிருக்கத் தேவையில்லைதான். ஆனால் தேவையற்றதை நீ ஒதுக்குவது இல்லையே" என்று திருப்பிக் கொடுத்தான் அவன். "அங்கே பேசியது மட்டுமல்ல இப்போதும் அவளைப் பற்றி நீ யோசிப்பதை உன் முகம் அப்பட்டமாகக் காட்டுகிறது. உண்மையா இல்லையா?"

'அவர் நினைப்பதை முகத்திலிருந்தே கண்டு பிடித்து விட்டேனா' என்று அலுவலக விஷயங்களைப் பேசும் போது வசீகரன் சொல்வதுண்டு. இப்போது ஆபீஸ் பழக்கம் வீட்டிற்கு வந்திருக்கிறதாக்கும் என்று எண்ணினாள் அபரஞ்சி. ஆனால் கண்டுபிடித்தும் விட்டான்தானே?

உள்ளூரப் பெருமையாக உணர்ந்தபடி "இல்லை என்று சொன்னால்?" என்று விளையாட்டாகக் கேட்டாள்.

"பொய் சொல்லுவதாகச் சொல்லுவேன்" என்றான் அவனும் அதே குரலில்.

"பொய்யா?" என்று விழிகளை விரித்தாள் அபரஞ்சி. "நாம் நடந்து கொள்ள வேண்டிய வழி முறைகளை வகுக்கும் சட்டசபையில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தக்கூடாது என்கிறார்கள். நீங்கள் சர்வ சாதாரணமாகச் சொல்லுகிறீர்களே" என்றாள் கிண்டலாக.

"ஓஹோ அப்படியா?" என்று யோசிப்பது போலப் பாவனை செய்துவிட்டு "அப்..படியானால்... நம் சட்டசபையில் அனுமதிக்கப் படும் விதமாக உண்மைக்குப் புறம்பாகப் பேசினாய் என்று மாற்றி விடுகிறேன். என்ன சொல்லுகிறாய்?" என்று மடக்கினான் அவன்.

இந்த இலகுப் பேச்சில் சிரிப்பு வந்த போதும் சற்று முன் இருந்த நெகிழ்வு மறைந்து போயிற்று.

சுபாவின் பெயருக்கு இருந்த சக்தி.

"ரஞ்சீ" என்று மென் குரலில் அவன் அழைத்ததையும் கேளாதது போலவே அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

மறுநாள் வசீகரன் மீண்டும் வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. மதுரை, கொடைக்கானல் என்று பயணம். பெரும்பாலும் கொடைக்கானலில்தான் தங்கல்.

"நீயும் வாயேன். எனக்கு வேலை இருந்தாலும் நீ தனியாகவே சுற்றிப் பார்க்கலாமே. ஹோட்டலிலேயே சுற்றிப் பார்க்க வசதி செய்து தருவார்கள்" என்று வசீகரன் அவளையும் அழைத்தான்.

கம்ப்யூட்டர் வகுப்பைக் காரணம் காட்டி அபரஞ்சி மறுத்துவிட்டாள்.

உண்மைக் காரணம் வேறு.

கணவன் மனைவிதானே என்று ஒரு டபுள் ரூமைத் தந்து விடுவார்கள். அறைகளும், சிறியவையாக இருந்துவிட்டால் மிகவும் சங்கடமாகி விடும்.

பெங்களூருக்கு முதல் முதலாகப் போன போதே அவளுக்கு ஒரு மாதிரிதான் இருந்தது.

நெருக்கத்தை விரும்புவதாகப் பல வகையிலும் வசீகரன் காட்டிக் கொண்டிருக்கும் இப்போது ரொம்பவே சிரமம்தான்.

அவன் ஒன்றும் அவளைக் கட்டாயப்படுத்த மாட்டான். ஆனால் இப்போது அபரஞ்சிக்கே தன் மீது நம்பிக்கை இல்லை.

எப்படி சுபா விஷயத்தில் அவன் மீதே நம்பிக்கை இல்லாமல் வசீகரன் அவளை மணந்தானோ அது போல... யோசித்துக் கொண்டிருந்த அபரஞ்சிக்குத் தன்னிடமே இப்போது கோபம் வந்தது.

இப்போது எதற்காக அவள் சுபாவை நினைத்தாள்?

வசீகரன் சொல்வது போல அவள் தான் அவனை விடவும் அதிகமாக சுபாவை நினைக்கிறாளோ?

முதலில் இந்தப் பழக்கத்துக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.



கொடைக்கானல் சென்ற வசீகரன் திரும்பி வருமுன் அவர்கள் வீட்டுக்கு அபரஞ்சி சற்றும் எதிர்பாராத இரு விருந்தாளிகள் வந்தனர்.

அவர்கள் அவளுடைய சித்தப்பா நாகேந்திரனும் சித்தி பாக்கியமும்.

என்ன..என்று திகைத்த போதும் அபரஞ்சிக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது.

எப்படியும் பிறந்த வீட்டு உறவு என்பது ஒன்று.

அடுத்தது தான் நல்ல நிலைமையில் இருந்து அவர்களை வரவேற்பது.

இரண்டுமே சந்தோஷமாக இருக்க "வாருங்கள் சித்தப்பா சித்தி. உட்காருங்கள்" என்று பரபரத்தாள். சமையல்கார நாகுவை அழைத்து நிறைய முந்திரிப் பருப்புப் போட்டு கேசரி தயார் பண்ணச் சொன்னாள். "சித்தப்பாவுக்குச் சூடாக இனிப்பு சாப்பிடப் பிடிக்கும் நாகு. செய்ததுமே கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு வாருங்கள். சித்திக்கு வெங்காய பஜ்ஜி பிடிக்கும். அதுவும் இரண்டு ஈடு போட்டு சீக்கிரமாகக் கொண்டு வாருங்கள்" என்று அனுப்பினாள்.

"செல்வி எப்படி இருக்கிறாள் சித்தி? அவளை அழைத்து வரவில்லையா?" என்று குசலம் விசாரித்தாள்.

"கல்யாணம் ஆக வேண்டிய பொண்ணு. அவளைக் கண்ட இடத்துக்கும் அழைத்து வர முடியுமா?" என்று பாக்கியம் பதிலளிக்கவும் சித்தப்பா, மகள் இருவரும் விழித்தனர்.

'கல்யாணம் ஆக வேண்டிய பொண்ணு. நாலு இடத்துக்குக் கூட்டிப் போனால்தானே யாராச்சும் பார்த்துப் பேசிக் கல்யாணம் நடக்கும்' என்று எல்லா இடங்களுக்கும் மகளைக் கூடவே அழைத்துப் போகிறவள் பாக்கியம். இப்போது அப்படியே தலை மாற்றிப் பேசவும் மற்ற இருவரும் திகைத்தனர்.

"கொடைக்கானல் வரைக்கும் எங்களோடுதான் வந்தாள். அப்புறம்..ஏதோ நல்ல விஷயமாகப் போனால் கூட்டிப் போக

வேண்டியதுதான். இப்படி இடத்துக்கு எதற்கு என்று வீட்டிலே விட்டுவிட்டு வந்தோம்'' என்று பாக்கியம் தொடர்ந்து கூறவும் அபரஞ்சிக்கு விஷயம் ஒருவாறு விளங்கியது.

இங்கே சென்னையில் யார் வீட்டுக்கோ, துக்கம் கேட்க வந்திருக்கிறார்கள். அதற்குக் கூட்டிச் செல்ல விருப்பமின்றி திருச்சியிலேயே விட்டுவிட்டு வந்திருக்கிறார்கள்.

கோர்ட், வழக்கு என்று அடிக்கடி சென்னைக்கு வந்து போகிறவர்தான் நாகேந்திரன். அண்ணன் மகளோடு நல்ல உறவாக இருந்திருந்தால் இப்போது செல்வியை இங்கே அபரஞ்சியிடம் விட்டு விட்டுக் கூட அந்த வீட்டுக்குப் போயிருக்கலாம்.

அதையே "செல்வியை என்னோடு இருக்கச் சொல்லிவிட்டு நீங்கள் இருவரும் அந்த வீட்டுக்குப் போயிருக்கலாமே. எதற்காக அவளை அங்கே தனியே விட்டு வந்தீர்கள்?'' என்று கேட்க, பாக்கியம் மௌனம் சாதிக்க நாகேந்திரன் உட்கார்ந்த இடத்திலேயே நெளிந்தார்.

யாரும் எதுவும் பேசாமல் சில வினாடிகள் கடந்தன.

"நாகு வேகமாக வேலை செய்கிறவர்கள் சித்தி. இன்னும் ஐந்தே நிமிஷங்களில் டிபன் தயாராகிவிடும். அதற்குள் நீங்கள் வீட்டைச் சுற்றிப் பார்க்கிறீர்களா?'' என்று அழைத்தாள்.

கண்ணாடியாகப் பளபளத்த கிரானைட் தரையும், பூப்பூவாய் மலரும் ஒளி விளக்குகளும், அலங்காரமாய் வைக்கப்பட்டிருந்த கலைப் பொருட்களும், நட்சத்திரக் குவியலாக ஷாண்டிலியர்களும் பார்க்கப் பார்க்க பாக்கியத்தின் கண்கள் சிவந்தன.

அனாதை நாய்க்கு வந்த வாழ்வா? இதை என்னிடமே பெருமை காட்டுகிறாளா? என்று மனம் கொதித்தாள். இதற்கெல்லாம் சரியான வேட்டு வைக்கிறேன் என்று உள்ளூரக் கறுவினாள்.

ஆனால் அபரஞ்சி அவர்களுக்காகச் செய்யச் சொன்ன கேசரி, பஜ்ஜியைச் சாப்பிடுமுன் எதையும் தொடங்கவும்



மனமின்றி மைத்துனர் மகளின் வீட்டு அமைப்பை வெறித்தாள் அவள்.

சம்பளம் கொடுக்கும் எஜமானி அம்மாளுடைய உறவினர் என்பதால் தாராளமாக நெய் விட்டு நாகு தனிக் கவனத்துடன் செய்த இனிப்பும் காரமும் வெகு சுவையுடன் தொண்டையில் வழுக்கிக் கொண்டு உள்ளே செல்ல, பெரியவர்கள் இருவருமே நன்றாக உண்டனர்.

உண்டு முடித்தபின் "தினமும் இப்படித்தான் சாப்பிடுகிறாய் போல. அதனால்தான் உடம்பு இப்படி அசிங்கமாக ஊதி விட்டிருக்கிறது. நம் வீட்டில் கொடி போல அழகாக இருப்பாயே'' என்று தன் விஷப் பல்லைக் காட்டத் தொடங்கினாள் பாக்கியம். "நீ இப்படி ஆகி விட்டதால்தான் இந்த மாதிரியெல்லாம் நடக்கிறது.''

அசிங்கமாகவா?

காலையில் கண்ணாடியில் பார்த்தபோது கூட முன்னைவிட அழகாகவும், நிறமாகவும் இருப்பதாக நினைத்தாளே.

கொடைக்கானல் செல்லுமுன் வசீகரனும் அதையே இன்னோரன்ன வார்த்தைகளால் குறிப்பிட்டு "பார்த்துக் கொண்டே இரு. நீ இப்படியே நாளுக்கு நாள் அழகாகிக் கொண்டிருந்தால் நிபந்தனை, கிபந்தனை எல்லாவற்றையும் மறந்து ஒரு நாள் உன் மேல் பாய்ந்து விடப் போகிறேன். அப்புறம் என்னைக் குற்றம் சொல்லாதே'' என்று மிரட்டி விட்டுப் போனானே.

விளையாட்டு மாதிரிக் கூறினாலும் அவன் கண்ணில் இருந்த தாகம் அவள் மனதைப் பட படக்க வைத்து நல்லவேளை கொடைக்கானல் போகவில்லை என்று எண்ண வைத்தது. கூடவே போயிருந்தால் என்று ஏதேதோ கற்பனைகள் வேறு.

ஆனால் இந்த சித்தி ஏன் இப்படிச் சொல்ல வேண்டும்?

சித்திக்கு அபரஞ்சி அழகாக இருந்தால் பிடிக்காது. அதற்காக இப்படிச் சொல்லுகிறாள் என்று உணர்ந்து கொண்டாள் பெண். ஆனால் இவ்வளவு நாள் கழித்துப் பார்க்கும் போதுமா இப்படி? வீடு தேடி வந்து வருந்தப் பேசுகிறாளே என்று வருத்தப்பட்டாள்.

தன்னைப் பற்றிய பேச்சைத் தவிர்க்க எண்ணி "இங்கே யார் வீட்டுக்கு வந்தீர்கள் சித்தி? அந்த வீடு எந்தப் பக்கம் சித்தப்பா?" என்று இருவரையும் விசாரித்தாள்.

பெரியவர்கள் இருவரும் சற்றுத் திகைத்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"ஏன்? உன் வீட்டுக்குத்தான் வந்தோம். ஏன் அப்படிக் கேட்கிறாய்?" என்று கேட்டாள் பாக்கியம்.

குழப்பமுற்று "அது..அதில்லை சித்தி. ஏதோ துக்க வீட்டுக்கு வந்த மாதிரிச் சொன்னீர்களே..." எனுமுன் அவள் மனம் எங்கெங்கோ போய்விட்டது.

இவர்களும் கொடைக்கானலுக்குப் போய் வந்ததாகச் சொன்னார்களே. அங்கேதானே வசீகரனும் போயிருக்கிறான். அங்கே அவனுக்கு ஏ ஏதோ... ஏதேனும் ஆகிவிட்டதா?

சட்டென முகம் வெளுத்துப் போனாள் அபரஞ்சி.

## 16

நாகேந்திரனும் பாக்கியமும் பேசிய தினுசில் அபரஞ்சி ரொம்பவே பயந்து போனாள்.

அவர்கள் துக்க வீட்டுக்கு வந்ததாக எண்ணியிருந்தவள் இருவரும் அவள் வீட்டை நாடித்தான் வந்ததாகக் கூறவும் அந்தத் துக்க வீடு தன் வீடேதானோ என்று அரண்டு போனாள்.



அப்படித் தவறாக எதுவும் நடந்திருந்தால் டெலிபோன் வந்திராதா? அல்லது இவர்களே கூட வந்ததுமே ஒப்பாரி வைத்திருக்க மாட்டார்களா, நிதானமாக உட்கார்ந்து இனிப்பும் காரமுமாக சிற்றுண்டியை ஒரு வெட்டு வெட்டுவார்களா என்றெல்லாம் யோசிக்கக் கூட அவளுக்குத் தோன்றவில்லை.

"சித்தப்பா அவர் அவருக்கு என்ன?" என்று குரல் நடுங்க, உடல் நடுங்கக் கேட்டாள்.

நல்ல வேளையாகச் சொல்ல வந்ததிலேயே கவனமாக இருந்ததால் பாக்கியம் அபரஞ்சியின் கலக்கத்தின் காரணத்தை ஊகிக்கவில்லை. ஊகித்திருந்தால் எப்படிப் பேசியிருப்பாளோ? இப்போது தன் திட்டத்திலேயே கவனமாக "அந்த ஆளுக்கு என்னடி வந்தது? அவன் தான் குஷாலாக குதியாட்டம் போட்டுக் கொண்டு ஜாலியாக இருக்கிறானே. அவனால் கொடைக்கானல் தான் நாறிப் போயிற்று" என்று கஷ்டப்பட்டு உடலைக் குலுக்கி அருவருப்பைக் காட்ட முயன்றாள்.

வசீகரனுக்கு ஆபத்து ஏதும் இல்லை என்பதிலேயே அபரஞ்சியின் உள்ளம் அமைதியடைந்து விட்டது.

அப்பாடா என்று மூச்சு விட்டவள் பாக்கியத்திடம் "என்ன ஆயிற்று சித்தி?" என்று நிதானமாகக் கேட்டாள். "அங்கே யாருக்கு என்ன நடந்தது?"

"நின்று நிதானித்து இவள் கேட்கிறதைப் பாருங்களேன்? பா..வம். இந்த அப்பாவிப் பெண்ணைப் போய் ஏமாற்றுகிறார்களே பாவிகள். அவர்கள் உருப்படுவார்களா? நாசமாய்த்தான் போவார்கள்" என்றாள் பாக்கியம் ஆத்திரத்துடன்.

"சும்மாயிரு பாக்கியம். உருப்படுவார்களா நாசமாவது அது இது என்று ஏன் சபிக்கிறாய்? அவரவர் விதி. அவரவர் அனுபவிக்கிறார்கள். சும்மா சாபம் எல்லாம் கொடுக்காதே. பலித்து கிலித்து வைக்கப் போகிறது" என்று மனைவியை எச்சரித்தார் நாகேந்திரன்.

கப்பென்று ஒரு கணம் பாக்கியம் அடங்கினாள். பிறகு அபரஞ்சியின் கையைப் பிடித்துக் கொண்டு "இதைப் பார் அபிக்கண்ணு சித்தப்பாவும், நானும் உனக்கு நல்லது செய்வதற்காகவே கொடைக்கானலிலே இருந்து திருச்சிக்குப் போய் அங்கேயிருந்து சென்னைக்கு இவ்வளவு தூரம் வந்திருக்கிறோம். பாருடாம்மா செல்வி, சித்தப்பா, நான் மூன்று பேருமாகக் கொடைக்கானலுக்கு போயிருந்தோமா அங்கே நாங்கள் பார்த்ததை எங்கள் கண்ணாலேயே நம்ப முடியவில்லை கண்ணு. அப்படி ஒரு அநியாயம்.." என்று 'சஸ்பென்ஸ்' வைத்து நிறுத்தினாள்.

அதற்குள் பதற்றம், தவிப்பு எல்லாம் அபரஞ்சிக்கு அடங்கிப் போயிருந்தது. ஆனால் பாக்கியத்தின் குணம் அறிந்தவள் என்பதால் "அப்படி என்ன நடந்தது சித்தி?" என்று குறிப்புணர்ந்து விசாரித்தாள்.

"அதைத்தானே சொல்ல வந்தோம்" என்று சோபாவில் வசதியாகக் காலை மடக்கிச் சப்பணமிட்டு உட்கார்ந்து கொண்டு பாக்கியம் தொடர்ந்தாள். "அங்கே நாங்கள் உன் புருஷனைப் பார்த்தோம்" என்று பெரிதாக அறிவித்தாள்.

"பார்த்திருப்பீர்கள் சித்தி. அவரும் அங்கேதான் போயிருக்கிறார்" என்றாள் அபரஞ்சி சாதாரணமாக.

வேறு எங்கோ போவதாக அபரஞ்சியிடம் போக்குக் காட்டிவிட்டு வசீகரன் கொடைக்கானலுக்குச் சென்றிருக்கிறான் என்று சர்வ நிச்சயமாக முடிவு கட்டியிருந்த நாகேந்திரன் தம்பதிக்குக் கொஞ்சம் சப்பிட்டுவிட்டது.

ஆனாலும் சமாளித்துக் கொண்டு "அங்கே அவன் தனியாகப் போகவில்லையே. அதுதானே சிக்கல்" என்று வெற்றிக் குரலில் இயம்பினாள் பாக்கியம்.

"ஆமாம் சித்தி" என்றாள் அபரஞ்சி அப்போதும் அமைதியாகவே. "அலுவல் விஷயமாகப் பலர் சேர்ந்துதான் போயிருக்கிறார்கள்" என்று விளக்கமும் கொடுத்தாள்.



"அய்யோ அய்யோ" என்று தலையில் அடித்துக் கொண்டாள் பாக்கியம். "அவன் கூட்டிப் போயிருப்பது அலுவல் விஷயமாகப் பலரை அல்லடி. உல்லாசத்துக்காக அவனுடைய கூத்தியை" என்று அறிவித்தாள்.

தொண்டையைக் கனைத்துக் கொண்டு "எங்களை அலட்சியம் செய்த வசீகரனை மணந்தாய். வேண்டாம் என்று எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. இப்போது என்ன ஆயிற்று பார்த்தாயா? முன்பு அவனோடு சுற்றிக் கொண்டிருந்தாளே அந்தப் பெண்ணோடு கொடைக்கானலில் உல்லாசமாக இருக்கிறான். இதற்கு என்ன செய்யப் போகிறாய்? இந்தக் கேவலத்தைச் சகித்துக் கொண்டு இங்கேயே இருக்கப் போகிறாயா?" என்று நாகேந்திரன் கேட்டார்.

சுபாவும் கொடைக்கானலுக்குச் சென்றிருக்கிறாள் என்பது அபரஞ்சிக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஆனால் வசீகரன் அவளை உல்லாசமாக அழைத்துச் சென்றிருப்பான் என்று அவளால் நினைக்க முடியவில்லை. அவன் அப்படிப்பட்டவன் அல்லவே.

ஆனால் அவள் எதற்கும் துணிந்தவள் ஆயிற்றே.

சுபாவைப்பற்றி யோசிக்க முடியாமல் "என்ன வார்த்தை சொன்னீர்கள்?" என்று ஆவேசத்துடன் முழங்கினாள் பாக்கியம்.

அபரஞ்சி திகைப்புடன் பார்க்க "அபிப் பொண்ணு மானம் மரியாதை உள்ளவள். கூத்தியாளோடு கொஞ்சிக் குலாவிவிட்டு வருகிறவனுக்குக் கால் பிடித்து விடுவதற்கு அவள் ஒன்றும் மானம் கெட்டவள் அல்ல. அபி நான் சொல்லுகிறதைக் கேளும்மா. பேசாமல் ஒரு துண்டுக் காகிதத்தை எடு. 'உன் வண்டவாளம் தெரிந்து போயிற்று. என் முகத்திலேயே முழிக்காதே. தேடி வந்தால் செத்திடுவேன்.' அப்படீன்னு எழுதி வைத்திட்டு எங்களோடு கிளம்பு. நம்ம வீட்டிலே பழைய மாதிரி சந்தோஷமாக இருக்கலாம்" என்று கனிவு சொட்டும் குரலில் அழைத்தாள்.

இந்தப் 'பழைய மாதிரியே சந்தோஷமா' என்று வார்த்தைகள் முன்போலவே அபரஞ்சியை யோசிக்க வைத்தன.

பழைய மாதிரி இவர்கள் வீட்டில் அவள் சம்பளம் இல்லாத வேலைக்காரியாக உழைத்து ஓடாகிப் போக இவர்கள் சந்தோஷமாகத்தான் இருப்பார்கள். அப்ரஞ்சியைப் போலத் திறமையாகவும் அதே சமயம் நம்பிக்கையாகவும் வீட்டை நடத்த யாரும் கிடைத்திருக்க மாட்டார்கள். அத்தோடு சாப்பாடு தவிர வேறு செலவும் கிடையாது. அதனால் அவளை எப்படியாவது அவள் கணவனிடமிருந்து பிரித்து பழையபடி கொத்தடிமையாக வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிட வேண்டும். செலவில்லாமல் வீட்டுப் பொறுப்பைத் தலையில் சுமத்த வேண்டும்.

இதற்காகத்தான் இந்த நடிப்பு இந்தக் கதையெல்லாம். ஏன் சுபாவைக் கொடைக்கானலில் பார்த்ததாகச் சொல்வது கூடப் பொய்யாகவே இருக்கலாம்.

இதில் மயங்கி இவர்கள் பின்னே சென்றுவிட அவள் என்ன முட்டாளா? அவளுடைய கணவன்தான் அவள் பிரிந்து போக விட்டுவிடுவானா? இதற்கும் மேலாக எதிர் வீட்டிலேயே பாட்டியம்மா. அவர்கள்தான் சும்மா இருப்பார்களா?

இதில் எதையும் யோசியாமல் வசீகரனையும், சுபாவையும் கொடைக்கானலில் பார்த்ததுமே. இருவரையும் தனித் தனியாகக் கூடப் பார்த்திருக்கலாம். இங்கே வந்து இந்தக் கதை விடுகிறார்களே. அந்த அளவுக்கு இவர்களுக்கு வீட்டில் அபரஞ்சி தேவைப் படுகிறாளா?

அபரஞ்சி அல்ல. அவளது உண்மையான உழைப்பு.

இந்த அளவு தெளிவு இருந்ததால் வயதால மட்டும் பெரியவர்களாக இருந்தவர்கள் என்னென்னவோ கதைகள் சொன்ன போதும் "வைப்பாட்டிக்கும் சேர்த்துக் கால் பிடிக்கப் போகிறாயா? வெட்கமில்லை?" என்று அவளது ரோஷத்தைக் கிளப்பிவிட முயன்ற போதும் அமைதியாகவே "அவர் வந்த பிறகு விசாரிக்கிறேன் சித்தி" என்பதற்கு மேல் அபரஞ்சி அசைந்து கொடுக்கவே இல்லை.



"விசாரித்தால் அந்த வசீகரன் உண்மை சொல்லிவிடப் போகிறானாக்கும்? அறிவு கெட்டத்தனமாகப் பேசுகிறாயே. இல்லவே இல்லை என்று சாதிப்பான்டி. சொல்வதை கேள். நல்லதுக்குச் சொல்லுகிறோம் என்று நம்பு. கல்யாணம் ஆகி மூன்று மாதம் ஆயிற்று. ஒத்துப் போகவில்லை என்று பிரிந்து போய் வாழ்க்கைப் பணம் கூட வாங்கலாம். கேஸ் போட்டு சொத்தைப் பிடுங்கலாம். எத்தனையோ கோடி வருமடி. சித்தப்பா அதை 'ஆறை நூறாய்' என்கிற மாதிரி எத்தனையோ மடங்காகப் பெருக்கித் தருவார்டி. கோடீசுவரியாகி விடலாமே" என்று ஏதேதோ சொல்லிப் பார்த்துவிட்டு "பாவிப்பெண் எதற்கும் இடம் கொடுக்க மாட்டேன் என்கிறாளே. இவள் நாசமாகத்தான் போகப் போகிறாள்" என்று புலம்பியவாறு ஒரு வழியாக நாகேந்திரன் தம்பதியினர் கிளம்பிச் சென்றனர்.

அதற்குமேல் அபரஞ்சி அவர்களுக்கு உபசாரம் ஏதும் செய்யவில்லை. ஒரு நாள் தங்கிப் போகுமாறு வாய் வார்த்தை அளவில் கூடச் சொன்னாளில்லை.

அவர்களை உறுதியோடு அனுப்பிவிட்ட போதும் சுபாவும் கொடைக்கானலில் இருக்கிறாள் என்பது அபரஞ்சியை நெருஞ்சி முள்ளாய் உறுத்தத்தான் செய்தது.

அவளை வசீகரனே அழைத்துச் சென்றதாகச் சித்தப்பாவும் சித்தியும் சொன்னது பொய் என்பது வரை அவளுக்கு நிச்சயம். அதற்கு அத்தாட்சி தன்னோடு வருமாறு அபரஞ்சியை அவள் கணவன் விரும்பிக் கூப்பிட்டதே.

ஆனால் அந்த சுபா..அவள் எந்த அளவுக்குப் போவாள், அதன் பாதிப்பு என்ன என்பதை அந்தக் கணவன் வாயாலேயே கேட்டவள் அல்லவா? அவளுக்குச் சஞ்சலமாகத்தாள் இருந்தது.

ஆனால் இன்று வசீகரன் திருமணம் ஆனவன். இப்போது கூடவா, அப்படி நடந்து கொள்ளுவாள்?

நடந்து கொள்ள மாட்டாள் என்று அபரஞ்சியால் நிச்சயமாக நினைக்கவும் முடியவில்லை. வேறு பெண்ணைக் காதலித்தவன் என்று தெரிந்தும் கூட அபரஞ்சியே அவனுக்காக ஏங்கவில்லையா?

வசீகரனின் வசீகரம் அப்படிப்பட்டது ஆயிற்றே.

ஆனால் இது பற்றி வசீகரனிடம் கேட்கவும் அவளுக்கு மனமில்லை. அவனது ஒழுக்கத்தை அவள் சந்தேகப்பட்டது போலத் தோன்றக் கூடும். சும்மாவே அவள்தான் 'சுபா ஜபம்' செய்வதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

'கூப்பிட்டால் கூட வராமல் இருந்துவிட்டு இது வேறா?' என்று கேட்டால் பதில் சொல்ல முடியாது.

மறு நாளே வசீகரனும் கொடைக்கானலில் இருந்து திரும்பி வந்து விட்டான்.

வழக்கம்போல அவளுக்கான பரிசுகளும் வந்தன.

அங்கிருக்கும் திபேத்தியரிடம் வாங்கிய அழகான ஸ்வெட்டர், மிடி சைஸ் பாவாடை அதற்குப் பொருத்தமாக பூவேலை செய்த டாப்ஸ்.

அவனைப் பார்த்ததுமே துள்ளத் தொடங்கிய மனதை அடக்கியபடி "வேலை வேலை என்கிறீர்கள், இதையெல்லாம் எப்படி வாங்குகிறீர்கள்?" என்று விசாரித்தாள். "தேர்ந்தெடுக்கவே நேரம் ஆகுமே."

"நிறைய வண்ணங்கள் உனக்கு நன்றாக இருப்பதால் தேர்ந்தெடுப்பதற்காக அதிக நேரம் ஆவது இல்லை. ஆனால் போய் வர வேண்டும் அல்லவா? கூட வருகிறவர்களிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டே போவேன். ஏன்? என்ன விஷயம்? தேர்ந் தெடுப்பதில் யாரேனும் பெண் உதவினாளோ என்று இருக்கிறதா?"

"அப்படி ஒன்றும் இல்லை" என்றாள் அபரஞ்சி அவசரமாக. அவள் மனதில் இருந்தது வேறு. சுபா அவளுக்கு வாங்குவதைப்



பார்த்து வசீகரன் மனைவிக்கு வாங்கியிருப்பானோ என்று ஒரு சிறு சலனம். ஏனெனில் பொதுவாக இது போலப் பாவாடை, டாப்ஸ் எல்லாம் அபரஞ்சி அணிவது இல்லை. சுபாவோ அடுத்தவர் கண்ணைக் கவர எதையும் அணிகிறவள் என்று கேள்வி.

சுபா கடைகளில் வாங்குவதை இவன் தூர நின்று கவனிப்பது போலக் கற்பனையில் ஒரு தோற்றம். அருகில் வந்து கூடப் பார்த்திருக்கலாம். ஆனால் இந்தக் கற்பனையை அவனிடம் சொல்ல முடியுமா?

"மனைவிக்கு வாங்கப் போவதாகச் சொல்லக் கூச்சமாக..ஒரு மாதிரி இராதா? அதற்குத்தான் கேட்டேன்" என்று அவள் அவசரமாக யோசித்துக் கொடுத்த விளக்கத்தில் வசீகரன் சிரித்தான்.

"புத்தம் புதுப் பொண்டாட்டி. இப்படி என்று வாங்கப் போகாவிட்டால்தான் தப்பாகத் தோன்றும். உடனே அடுத்தவர்கள் அபிப்பிராயத்துக்காகத்தான் இதெல்லாம் வாங்குகிறேனோ என்று நினைத்துவிடாதே. சும்மா வாங்க வேண்டும் என்று ஆசை. கடவுள் கிருபை. வாங்க முடிகிறது வாங்குகிறேன்" என்று சோம்பல் முறித்தான் அவன்.

"நாலு நாட்களாக வேலை வேலை என்று ஓடியாயிற்று. அரைநாள் ஓய்வு எடுத்துவிட்டுத்தான் அலுவலகம் செல்ல வேண்டும்." என்று எழுந்தவன் போய்க்கொண்டே "சொல்ல வில்லையே, ராமலிங்கத்துக்கு ஏதோ உடம்பு சரியில்லையாம். கொடைக்கானலுக்கு அவருக்குப் பதிலாக சுபா வந்திருந்தாள்" என்று விவரம் தெரிவித்தான்.

"தெரியும்" என்று சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள் அபரஞ்சி.

சட்டென்று நின்றுவிட்டான் வசீகரன்.

மெல்லத் திரும்பி "தெரியுமா? என்ன உளவா?" என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

வீடு தேடி வந்து சொன்ன சித்தி, சித்தப்பா பேச்சையே பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்டிருந்தவள் அபரஞ்சி.

அது சிரமமாக இருந்த போதும்.

அப்படி இருக்கையில் அவன் 'உளவா' என்று அதுவும் குற்றம் சாட்டும் குரலில் கேட்கவும் சுள்ளென்று கோபம் தலைக்கேறி விட்டது. "உளவு எதற்கு? பார்த்தவர்கள். சொன்னால் காதில் விழத்தானே செய்யும்? கேட்க முடியாது என்று காதை மூடிக் கொள்வதா மரியாதை?" என்று மிடுக்காகக் கேட்டாள்.

## 17

முந்திய நாள் காலையில் நாகேந்திரனும், பாக்கியமும் வந்துவிட்டுப் போனதிலிருந்து அபரஞ்சிக்குத் தவிப்புதான். சுபாவை சூர்ப்பனகையாகவே எண்ணிவிட்டாள். கானகத்தில் ராமனை மயக்க வந்த சூர்ப்பனகை, ஏற்கனவே அவள் அப்படி முயன்றவள்தான்.

அப்போதும் அவள் தன் ராமனைச் சட்டென சந்தேகப்பட வில்லை.

இந்தப் பாதகி சுபா அவளுடைய கணவனை என்ன பாடு படுத்துகிறாளோ என்றுதானே தவித்தாள்.

இவனானால் அவனை சந்தேகப்பட்டு உளவறிய அவள் ஆள் அனுப்பியதாகச் சொல்லுகிறான்.

தவறாகக் குற்றம் சாட்டப்பட்ட நேர்மையாளர்களுக்கு வரும் கோபம் அவளுக்கும் வந்தது. மறைக்காமல் காட்டிவிட்டாள்.



கண் மூடித் திறந்து "சாரி" என்று முணுமுணுத்தான் வசீகரன்.

தோளைக் குலுக்கி அதை அலட்சியப்படுத்தி "அத்தோடு உங்களை நான் ஏன் உளவு பார்க்க வேண்டும்?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள் அபரஞ்சி.

மெல்ல நிமிர்ந்து "அதில்லை அபரஞ்சி. உன் நிபந்தனை.. அதன்படி நடக்கிறேனா என்ற சந்தேகத்தில். இங்கே நீ இருக்கும் இடத்தில் மனதை அடக்கி ஒழுங்காக இருந்து விட்டு கண் மறைந்த இடத்தில் சுபாவோடு ஆட்டம் போடுகிறேனோ என்று உளவு பார்க்கிறாய் என்று நினைத்து விட்டேன். அவ்வளவு சந்தேகமா என்று.. அதுதான்..." என்று விளக்க முயன்றவனை அபரஞ்சி இடைமறித்தாள்.

"அதற்காக உளவறியக் கொடைக்கானல் வரை அனுப்பு வானேன்? இங்கேயே வீட்டை விட்டு வெளியே சென்ற பிறகு நீங்கள் என்ன செய்தாலும் என்னால் பார்க்க முடியுமா என்ன? எங்கே அந்த சுபாவோடு..."

இப்போது வசீகரன் இடை மறித்தான். "ஒழுக்கத் தவறு எனக்குப் பிடிக்காது. எனக்குப் பிடிக்காததைச் செய்ய வைக்க யாராலும் முடியாது. சுபாவாலும்தான். நம் திருமணமே அதற்குச் சான்று" என்றான் அவன் இறுகிய குரலில்.

பெரிய திருமணம். அதைச் செய்ததில் பெருமை வேறா என்று ஆத்திரம் வந்தது அவளுக்கு.

அந்தத் திருமணத்தால் அவளுக்கு விளைந்த நன்மைகள் இப்போது மனதில் தோன்றவில்லை. மாறாக மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் திணறுவது போல சுபாவை ஒதுக்கி அவனோடு வாழவும் முடியாமல் அவனோடு ஒன்றி வாழும் ஆசையை விடவும் முடியாமல் தவிக்கும் தவிப்புதான் இப்போது பெரிதாகத் தோன்றியது. இந்தத் திருமணத்தைப் போய்ப் பெரிதாகச் சான்று வேறு சொல்வதா?

அவனை மறுப்பதே முக்கியமாகத் தோன்ற வேறு திசையில் பாய்ந்தாள் அபரஞ்சி. "விரும்பியது கிடைக்காவிட்டால் கிடைத்ததை விரும்பு என்று ஒன்று சொல்லுவார்கள். அது போல் கூட இருக்கலாமே" என்றாள் அலட்சியமாக.

"அதாவது?"

"சுபலேகாவோடு திருமணம் நடக்க முடியாது என்றாகி விட்டது. என்னோடு முடியும் என்பதாலும் நம் திருமணம் நடந்திருக்கலாமே."

"சுபாவோடு திருமணத்தை மறுத்தவன் நான்தான்."

"மான ரோஷம் பார்ப்பதனால் மறுக்கும்படியான நிலைமை. சுய கௌரவம் பார்த்துக் கொண்டு அவளை மறுத்து விட்டீர்கள். இப்போது அவளை நினைத்து மனம் அடித்துக் கொள்கிறது."

"அவளை நினைத்து நினைத்து மனம் அடித்துக் கொண்டே இருப்பது உனக்குத்தான். இதை முன்பே நான் உனக்குச் சொல்லியிருக்கிறேன். சுபாவை மறக்கும்படி என்னிடம் சொன்னாய். ஆனால் உண்மையில் அவளை நினைத்துக் கொண்டே இருப்பது நீதான். இப்போது அவளை மறக்க வேண்டியதும் நீதான்.." என்று இறுகிய குரலில் அழுத்தமாகக் கூறியபடி வசீகரன் மனைவியிடம் திரும்பி வந்தான்.

அபரஞ்சி திகைப்புடன் அவனைப் பார்த்தாள். இன்றுவரை அவனிடம் அவள் அறிந்திராத குரல் இது. இந்தக் கோபமும் அவள் அறிந்திராததுதான்.

"ஆனால் சுபாவை நீயாக மறக்கப் போகிற மாதிரி எனக்குத் தெரியவில்லை. எனவே என் வழியில் மறக்க வைக்கிறேன்" என்றவன் சட்டென அபரஞ்சியை இழுத்து அணைத்து முத்த மிட்டான்.

கணவனின் முதல் அணைப்பின் தாக்கத்தில் அவள் திகைத்து நிற்கையிலேயே அவளைத் தூக்கி கொண்டு அவனது படுக்கை யறையை நோக்கி நடந்தான்.



சொர்க்கம் சொர்க்கம் என்கிறார்களே அதில் இருப்பவர்கள் இதை விடச் சுகமாக இருக்க முடியாது என்பது போல ஒரு பரவசத்தை உடம்பின் ஒவ்வோர் அணுவிலும் உணர்ந்த அபரஞ்சி கண்ணைத் திறக்கக் கூட மனமின்றி அப்படியே படுத்திருந்தாள்.

ஒரு சந்தோஷப் பெருமூச்சு மட்டிலுமே.

"நல்ல வேளை. விழித்து விட்டாய். மதியம் இரண்டு ஆகிறதே இதற்கு மேல் திருப்பள்ளி எழுச்சி பாடலாமோ, கூடாதோ என்று குழம்பிக் கொண்டிருந்தேன்" என்று வசீகரனின் கிண்டல் குரல் கேட்டது.

சற்றும் எதிர்பாராமல் கணவன் குரலைக் கேட்டதும் அபரஞ்சி திகைத்துக் கண் திறந்து பார்த்தாள். அவளது படுக்கை அறைக்குள் அவள் தூங்கும் போது வசீகரன் எப்படி வந்தான்? அது பழக்கம் இல்லையே என்று பார்த்தால் மேலும் திகைப்பாய் வெளியே செல்ல உடையணிந்து வசீகரன் நிற்க அந்த அறையும் அவளது அல்ல. அவன் அறை.

அன்றைய நிகழ்ச்சிகள் சூறாவளியாய்ச் சுழன்று வந்து குழுமும் போதே அவனும் லேசாகக் கண் சிமிட்ட அவள் முகம் செக்கச் சிவந்து போயிற்று.

இயல்பாய் அருகே அமர்ந்து சூடாகியிருந்த அவள் கன்னத்தை மிருதுவாக வருடினான் வசீகரன்.

அவளையே நோக்கியபடி "போகவே மனமில்லை. ஆனால் கொடைக்கானல் வேலை பற்றிய அறிக்கை தயார் பண்ண வேண்டும். வரட்டுமா?" என்று குனிந்து அவள் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டான் அவன்.

கைகளை மாலையாக அவன் கழுத்தில் இட்டு அவனை இறுக அணைத்துக் கொள்ள வேண்டும் போல உள்ளூர ஒரு வேகம் உண்டாயிற்று அவளுக்கு.

அடக்கிக் கொண்டு "சாப்பாடு.." என்று எழப் போனவள் சட்டென வெட்கிச் சிவந்தாள்.

சிரித்துவிட்டு "ஆயிற்று. நாகம்மாவை எடுத்து வைக்கச் சொல்லி சாப்பிட்டேன்..." என்று அவள் கன்னத்தில் உதட்டில் கோல மிட்டபடி வசீகரன் சொல்லி வரும் போதே அவள் முகம் மீண்டும் ரத்தமெனச் சிவந்தது.

"ஐயோ. நாகு என்ன நினைத்திருப்பார்கள்" என்று தவித்தாள்.

அவனுக்கு மேலும் சிரிப்புதான். "வேறென்ன? புது மணத் தம்பதிகளாக நடந்து கொள்கிறோம் என்று எண்ணியிருப்பார்கள். நல்லதுதானே? தானாகவே இங்கிதமாக ஒதுங்கியிருக்கத் தோன்றும் அல்லவா? நாம் சொல்லத் தேவையிராது."

"நாகு எப்போதுமே அப்படித்தான். அனாவசியமாகக் குறுக்கே வருவது கிடையாது."

"எதிர்பார்ப்பில் அவசியமின்றியே அப்படி இருந்தவர்கள். இனி அது அவசியமாகும் என்று நல்ல வேளையாகச் சொல்லத் தேவையில்லை" என்று மீண்டும் சிரித்தான் அவன்.

சந்தோஷச் சிரிப்பு அவள் முகத்திலும் முறுவலை வர வழைத்தது.

கனிவாய் நோக்கி "எதற்கும் இருக்கட்டும் என்று உனக்கும் சாப்பாடு இங்கேயே எடுத்து வந்தேன். ஆனால் நீ அசையவே இல்லை. அப்படியொரு தூக்கம். ஏன்மா? இந்த நாலு நாளுமே நீ சரியாகத் தூங்கவே இல்லையா? அதோ சின்ன மேஜையில் சாப்பாடு இருக்கிறது. சாப்பிட்டுவிட்டு நன்றாகத் தூங்கு" என்றவன் அவள் காதருகில் குனிந்து "இவ்வளவு நாட்கள் வீணாக்கியது நிறைய ஈடுகட்ட வேண்டியிருக்கிறது" என்று மறுபடியும் சிரித்தான்.

கன்னங்களில் மீண்டும் சிவப்பேறிய போதும் இமைகளைத் தாழ்த்திப் பார்வையை மறைத்து "நீங்கள் மட்டும் ஓய்வெடுக்க வேண்டாமோ? நாலு நாளாய் நீங்களும் இரவு பகல் என்றில்லாமல் முழு நேரமும் வேலையில் தானே முழ்கி இருந்திருப்பீர்கள்?" என்றாள் அபரஞ்சி கரிசனமாய்.



"எதில் முழ்கினேன் என்றாய்?" என்று அவளைக் கூர்ந்து நோக்கிக் கேட்டான் வசீகரன்.

"வேலையில்தான். அதுதானே உங்கள் வழக்கம்?"

"ரொம்ப சரி ரஞ்சி" என்று கூறியவன் குனிந்து அவளை அழுந்த முத்தமிட்டு நிமிர்ந்தான். "ஜெயித்துக் கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன்" என்று திருப்திப் புன்னகையோடு கையைத் திருப்பிக் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். "ஊகூம். இனியும் தாமதித்தால் அலுவலகம் சென்றும் பயனிராது" என்றவன் ஒரு சின்ன சிலுமிஷத்தில் அவளைக் கிளுகிளுக்க வைத்துவிட்டுச் சென்று விட்டான்.

அன்றைய நிகழ்வுகளை மகிழ்ச்சியோடு அசை போட்டவாறே எழுந்து குளித்துவிட்டு உணவருந்தினாள் அபரஞ்சி.

அவனது 'ஜெயித்துக் கொண்டிருக்கிறேன்' என்ற வாக்கியத்தில் சற்று நிரடியது.

அதற்கு முந்திய அவனது கேள்வியிலும்.

அதாவது சுபா கொடைக்கானலில் இருந்த போதும் வசீகரனின் நேரத்தில் அவளது குறுக்கீடு சற்றும் இருக்கவில்லை என்று அவளே ஒத்துக் கொண்டாள் என்று அவன் சொல்வதாக அர்த்தமா? அல்லது அவளுக்கு சுபாவைப் பற்றிய நினைவு வராமல் தடுத்துவிட்டதில் தனக்கு வெற்றி கிடைத்துவிட்டதாகச் சொன்னானா?

இதை அவனிடமே கேட்டு விட்டால் என்ன என்று யோசித்துவிட்டு அந்த எண்ணத்தைக் கைவிட்டாள் அபரஞ்சி.

எந்த மாதிரிக் கேட்பதானாலும் சுபாவின் பெயரைக் கொண்டு வராமல் முடியாது. மீண்டும் 'நீதானே அவளை நினைக்கிறாய்' என்பான். அனாவசியமாக அந்தக் குற்றச்சாட்டுக்கு ஏன் இடம் கொடுக்க வேண்டும்?

வசீகரனைப் பொறுத்தவரை சுபாவை அவன் மறந்திருப்பது போலத்தான் தோன்றுகிறது.

அத்தோடு இன்றைய நிலையும் சந்தோஷமாகத்தான் இருக்கிறது.

இப்படியே இருந்து விட்டால் என்ன?

இப்படியே இருக்க வேண்டியதுதான் என்று அபரஞ்சி முடிவு செய்தாள். இருந்தாள்.

வசீகரன் அவளுக்கும் மேலே ஒரு படி சென்றான்.

அவன் இல்லாத போது வீட்டுக்கு வந்த விருந்தினர் யார் என்று கேட்டறிந்தவன் அதற்கு மேல் அவளிடம் துருவாத போதும் அடுத்து வந்த சனி ஞாயிறில் அபரஞ்சியைத் திருச்சிக்கு அழைத்துச் சென்றான்.

அந்தப் பக்கம் தெரிந்தவர்களை அழைத்து விருந்து கொடுத்து பாட்டி வீட்டைக் கலகலக்க வைத்தான்.

இனிப்புகள் வாங்கிக் கொண்டு நாகேந்திரன் வீட்டுக்கு அபரஞ்சியோடு சென்று நன்றி தெரிவித்தான். இன்றைய அவனது மகிழ்ச்சிக்குக் காரணம் அவர்கள் தானாம். அவனுடைய 'ரஞ்சி'க்கு அருமையான புத்திமதிகள் சொல்லிக் கொடுத்து அற்புதமாக வளர்த்திருக்கிறார்களாம். இப்போதும் தொடர்ந்து அதே கடமையைச் செவ்வனே ஆற்றுகிறார்களாம். இனிமேல் அவனும் அவளோடு சேர்ந்து வீட்டிலிருக்கும் போது வந்து இருவருக்குமே இதே போல நல்ல நல்ல புத்திமதிகள் கூற வேண்டுமாம்.

நமுட்டுச் சிரிப்புடன் அவன் கூற நாகேந்திரன் தம்பதி முகத்தில் ஈயாடவில்லை.

அந்த நிலையில் அவர்களை நிறுத்திவிட்டு சிரித்துக் கொண்டே கிளம்பிவிட்டான். மனைவியையும் கூடவே அழைத்துக் கொண்டு.

அவளுக்கும் அதில் ஒன்றும் வருத்தம் இல்லை. அநியாயமாகக் கலகமூட்ட முயன்றவர்களுக்கு இது வைக்க வேண்டிய குட்டுதானே?



ஆனால் திரும்பி வரும்போது அவன் உற்சாகமாகச் சீட்டியடித்தபடியே காரை ஓட்டியது அவளுக்கு வியப்பாக இருந்தது. "பழி வாங்குவதில் அவ்வளவு சந்தோஷமா?"

நினைத்ததை வாய் விட்டுக் கேட்டுவிட, அவன் புன்னகையுடனேயே "இல்லையே" என்றான். "உன் சித்தப்பா சித்தியைப் பழி வாங்கும் எண்ணம் எனக்குச் சுத்தமாகக் கிடையாது ரஞ்சி. சொல்லப் போனால் அவர்களிடம் எனக்கு நன்றி உணர்ச்சிதான். கெட்டதையே எண்ணி உன்னிடம் அவர்கள் என்ன சொல்லியிருந்த போதும் நாரதர் கலகம் அதனால் விளைந்தது நன்மைதானே? அதனால்தான் அவ்வளவு இனிப்புகள் வாங்கிக் கொடுத்தேன்."

"பின்னே அவர்களிடம் அப்படிப் பேசினீர்களே."

"ஆமாம்மா. என் மனதில் இருக்கும் நன்றியைக் கொஞ்சம் காட்டினேன் என்று வை. அப்புறம். நம் வீட்டுக்கு அடிக்கடி வந்து நிற்பார்களே. தேளின் இயல்பு கொட்டுவது. வந்தால், அவர்களாலும் சும்மா இருக்க முடியாது. ஏதோ, ஒரு கலகம் நன்மையில் முடிந்ததால் எப்போதும் அதையே எதிர்பார்க்க முடியுமா? 'வம்புசெறி தீங்கினரைக்' கண்ணில் படாத தூரத்திலேயே நிறுத்தி வைப்பது தானே நல்லது? அதனால்தான். மற்றபடி, இந்த அழகுப் பதுமையை என் பிடிக்குள் தள்ளி விட்டதற்கு அவர்களுக்கு ஆயிரம் நமஸ்காரங்கள் பண்ண வேண்டாமா?"

'பிடிக்குள் தள்ளி விட்டதற்கு!'

கூச்சமாகவும், அதே சமயம் பெருமையாகவும் இருந்தது அவளுக்கு. ஆயிரம் நமஸ்காரம் பண்ணத் தயாராமே.

தொடர்ந்த ஒரு மாத காலம், இறக்கை கட்டிப் பறந்தது எனலாம்.

திருமண வாழ்வு இவ்வளவு ஆனந்தமாக இருக்கக் கூடும் என்று அபரஞ்சி கற்பனையில் கூட நினைத்தது இல்லை. அவ்வளவு தூரம் மகிழ்ச்சியில் திளைத்தாள் அவள்.

வீட்டில் இருக்கும் நேரம் முழுவதும் வசீகரன், மனைவியைத் தன் அருகாமையை விட்டு அகல விடுவதே இல்லை. அவளும் அகல விரும்புவதில்லை.

லீவு நாளில் கிரிக்கெட் போட்டியைப் பார்க்கும் போது கூட, கணவன் கை வளைவில் இருந்து கொண்டுதான் பார்த்தாள் அவள். நம்மவர்கள், ஒரு பவுண்டரி அடித்தால் ஒரு தரம் அணைத்துக் கொண்டார்கள். சிக்ஸர் அடித்தால், முத்தம் என்று கொண்டாடி மகிழ்ந்தார்கள். எதிர் தரப்பினர் நன்றாக ஆடினால் கூட, ஒருவரை ஒருவரை தேற்றும் பாவனையில் கட்டிப் பிடித்துக் கொண்டார்கள்.

ஒட்டிக் கொள்வதற்கு ஏதோ ஒரு சாக்கு. அப்படிச் சாக்கு, சமாதானம் எதுவும் இல்லாத போதும் ஒட்டலும் உரசலுமாத்தான் இருந்தார்கள்.

தான்தான் கணவனிடம் பைத்தியமாகி விட்டோமோ என்று சில சமயங்களில் அபரஞ்சி யோசிப்பாள்.

ஆனால் எல்லாம் அலுவலகத்திலிருந்து அவன் திரும்பி வரும்வரைதான். அப்புறம் 'ரஞ்சி, ரஞ்சி' என்று அவன் வளைய வருவதில் அவளுக்கு முந்தைய நினைப்பே மறந்து போகும்.

அத்தனைக்கும் முன்னைப்போல, வசீகரன் அவளுக்குப் பரிசுப் பொருட்கள் கூட வாங்கி வருவதில்லை. "கடைக்குப் போனால் ஏற்ற பரிசைத் தேர்ந்தெடுத்து பில் போட்டு பணம் கட்டி வாங்கி வருமுன், குறைந்தது ஒரு மணி நேரம் ஆகிவிடும். அந்த ஒரு மணி நேரத்தை உன்னோடு கழிக்கலாமே என்று ஒன்றும் வாங்காமலே ஓடி வந்து விட்டேன். நான் அலுவலுக்குப் போன பிறகு, வெளியே போய் ஏதாவது வாங்கிக் கொள்கிறாயா? ஆனால் நான் திரும்பி வருமுன் வீட்டுக்கு வந்து விட வேண்டும். என்னடா? வீட்டுக்கு வந்து உன்னைக் காணாவிட்டால், எனக்குத் தாங்காது?" என்று கொஞ்சலாகக் கூறி, கத்தை ரூபாய் நோட்டுகளைக் கையில் கொடுப்பான்.



இதற்கு மேல் நேசம் யாருக்கு இருக்கும்?

ஆனால் கொஞ்ச நாட்களாக அபரஞ்சிக்கு நெஞ்சுக்குள் அடிக்கடி ஏதோ பிசைந்தது.

நாய்க்கு முழுத் தேங்காய் ஒட்டுமா, என்பார்களே. அது போல இந்த மாதிரி மகிழ்ச்சியெல்லாம் அவளுக்கு நிலைக்குமா? என்று ஒரு பயம் தோன்றி, அவளை அலைக்கழித்தது. பதினைந்து வயதில் இருந்து அவள் பெரும் துரதிருஷ்டசாலி ஆயிற்றே. திடீர் என்று எப்படி சொர்க்க போகம் கிட்டிவிடும்?

அதையே நினைத்துக் கொண்டிருந்ததிலோ, என்னமோ ஒரு நாள் தலை சுற்றிக் கீழே விழப் போனாள்.

நெஞ்சுப் பிசைதலும், தலை சுற்றலும் அதிகமாகவே, உடம்புக்குதான் ஏதோ என்று தோன்றியது.

கணவனிடம் சொல்லி, அவனைக் கவலைக்குள்ளாக்க மனமின்றி, வசீகரன் அலுவலகம் சென்றபின் அருகில் இருந்த மருத்துவமனைக்குச் சென்றாள்.

காத்திருக்கும் நேரத்தில் ஆங்காங்கே சுவரில் தொங்கிய படங்களைப் பார்க்கையில் ஓர் இனிய சந்தேகம் தோன்றி அவளுள் குறுகுறுப்பை ஏற்படுத்தியது.

சில பரிசோதனைகளின் பின், அந்த மருத்துவர் பானுமதி சொன்ன சேதியோ, அவளுக்கு உலகையே ஒளி மயமாக்கியது.

அவள் கருவுற்றிருக்கிறாள். வசீகரனும் அவளும் கொண்டுள்ள அன்பின் சின்னம், அவளுள் வளர்கிறது.

சந்தோஷத்தில் எழுந்து நின்று குதிக்க வேண்டும் போல இருந்தது. அப்படிக் குதித்தால், குழந்தைக்குக் கெடுதலோ என்ற பயம் வந்தது.

இனிமையாகப் பேசிய டாக்டரிடமே தன் பல்வேறு சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

முதல் கரு. பெற்றவர்கள் இல்லை என்று தெரியவும் மருத்துவரும் கனிவாகவே பேசி அவளது பல்வேறு பயங்களைப் போக்கி அனுப்பினார். வீட்டுக்குத் திரும்பி வரும்போது, மனதில் என்னென்னவோ தோன்றியது. இந்த சந்தோஷ சமாசாரத்தை உலகறியச் செய்ய வேண்டுமே. முக்கியமாக அந்த சுபா. இனியேனும் இது உண்மைத் திருமணம் என்று ஒத்துக் கொள்ளுவாள் அல்லவா?

சீச்சி. மீண்டும் சுபாவா. இந்த நேரத்தில் அவளைப் பற்றி நினைப்பதே தப்பு.

இதைப் பற்றி அறிந்தால் மகிழ்ச்சி அடைகிறவர்களுக்கு மட்டுமே விஷயத்தைச் சொன்னால் போதும்.

பார்வதிப் பாட்டிக்கு எழுத வேண்டும். மாமனாருக்குத் தெரிவிக்குமாறு வசீகரனிடம் கூற வேண்டும். முதலில் கணவனிடம் விஷயத்தை எப்படி வெளியிடுவது?

பல விதமான இனிய வழிகளை யோசித்தபடியே வீட்டினுள் அபரஞ்சி நுழையும் போதே டெலிபோன் மணி அடித்தது. வசீகரன்தான்.

"எத்தனை தடவை கூப்பிடுவது? எங்கே போய்த் தொலைந்தாய்?" என்று எரிந்து விழுந்தான் அவளுடைய கணவன்.

அவளது இனிய செய்தியைச் சொல்லும் நேரம் இது அல்ல! "பக்கத்தில்தான் கடைக்கு" என்று சமாளித்தாள்.

என்ன கடை, என்ன என்றெல்லாம் விசாரிக்கும் அளவுக்கு அவனுக்குப் பொறுமை இல்லை. "சரிசரி, இப்போது பத்து நிமிஷத்தில் நான் அங்கே வருவேன். ராமலிங்கம்-சுபாவுடைய தந்தை இறந்து விட்டார்! வீட்டுக்குப் போய்ப் பார்க்க வேண்டும். நீயும் வர வேண்டும். தயாராயிரு" என்றுவிட்டு, போனை வைத்து விட்டான் அவன்.



ஏதோ சிகரத்தை எட்டிவிட்டாற்போல அதுவரை இருந்த ஆனந்தம் அடியோடு மறைந்து அதல பாதாளத்தில் விழுவது போல, அபரஞ்சி உணர்ந்தாள். தந்தையின் மறைவை, சுபா எப்படிப் பயன்படுத்திக் கொள்ளக் கூடும்?

## 18

பெற்று வளர்த்தவரை இழந்து விட்டு சுபா தவித்துக் கொண்டிருப்பாள். அதை எண்ணிப் பரிதாபப்படாமல் இந்த நிலையை அவள் எப்படி பயன்படுத்திக் கொள்ளப் போகிறாளோ என்றா யோசிப்பது?

தன்னை நினைத்தே அபரஞ்சிக்கு அவமானமாக இருந்தது.

ஆனாலும், சுபாவைப் பற்றிய அந்த எண்ணம் அவளை விட்டு அகல மறுத்தது.

ஏனெனில், சுபா அப்படிப்பட்டவள். அதில் சந்தேகத்துக்கே இடமில்லை. அபரஞ்சி, வசீகரன் திருமணத்தையே, ஒத்துக் கொள்ளாதவள் அவள். யாரோ ஒருத்தியை அழைத்து வந்து வசீகரன் நாடகம் போடுகிறான் என்று அவள் கூறுவதாக அபரஞ்சியிடமே, ஓரிருவர் வந்து சொல்லியது உண்டு.

சுபா, அப்படிச் சொல்லியிருந்தாலும் அதைத் தன்னிடம் வந்து சொல்லுகிற இவர்களும் நம்பத் தகுந்தவர்கள் அல்ல என்று முடிவு செய்து அவர்களையும் மனதளவில் அபரஞ்சி ஒதுக்கி வைத்திருந்தாள். அவர்களைப் பார்த்தால், 'ஹாய்' சொல்லுவதோடு சரி, அதற்கு மேல், நின்று பேசுவதில்லை.

எனவே, அங்கும் இங்கும் மாறி மாறி வந்து கதை சொல்ல வழியில்லாது போகவே, அத்தகையோரின் வருகையும் நின்று போயிற்று.

ஆனால் அதைக்கொண்டு சுபா மனம் மாறிவிட்டாள் என்று எண்ண முடியாதே.

வசீகரனும், அபரஞ்சியும்... முக்கியமாக வசீகரன் செல்லும் இடங்களுக்கு எல்லாம் சென்று போஸ் கொடுத்துக் கொண்டேதானே இருக்கிறாள். 'என்னைப் பார், என் அழகைப் பார்' என்பதுபோல இப்போதும், கொடைக்கானல் வரை செல்லவில்லையா?

எத்தனையோ பேரைப் போல சுபலேகாவும் வருகிறாள் என்று வசீகரன் சொன்ன போதும், அப்படி அல்ல என்பது அபரஞ்சி அறியாததா? ஒரு முக பாவனை, ஓர் அரை விநாடி உதட்டுச் சுழிப்பு, ஒரு பார்வையில் கண்டு கொள்ள முடியாதா?

சொன்னால், 'நீதான் சுபாவை நினைத்துக் கொண்டே இருக்கிறாய்' என்று எரிச்சல் படுவானே என்று அபரஞ்சி அது பற்றிப் பேசுவதில்லை. அவ்வளவு தான்.

மற்றபடி, சுபா வசீகரனை மறக்கவில்லை என்பது நிச்சயமே.

கடைசியாக இந்த ஒரு மாதமாக சுபாவைப் பற்றிய உறுத்தல் இல்லாமல் இருந்துவிட்டு...

வாயிற்கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

வசீகரன்தான்.

அவசரமாகத் தன்னை குனிந்து பார்த்தவளுக்குச் சற்று நிம்மதியாயிற்று. மருத்துவமனைக்குப் போவதற்காக ஓரளவு நல்ல ஆனால், எளிமையான சேலைதான் கட்டியிருந்தாள். துக்க வீட்டுக்கும் சரியாகவே இருக்கும், ஆனாலும்...

"கட்டாயம் வர வேண்டுமா?" என்று அபரஞ்சிக்குத் தயக்கம்தான்.



"ஆமாம். வராவிட்டால் நன்றாக இராது!", என்று அழுத்தமான குரலில் கூறி, அவளை அழைத்துச் சென்றான் அவன். அவன் முகத்தில் இருந்த வாட்டமும் கவலையும், கூடவே இறுக்கமும்.. அவளை யோசிக்க வைத்தன.

சுபாவிடம் தன்னை ஒரு கேடயமாக அழைத்துச் செல்லுகிறானா?

வசீகரனுக்கு இன்னமும் ஒரு கேடயம் தேவைப்படுகிறது என்றால் அதுவே தோற்றாற் போல இருந்தது அவன் மனைவிக்கு.

அங்கே துக்க வீட்டிலோ, இப்படி ஒரு கேடயத்தை வசீகரன் அழைத்து வந்திருப்பது சுபாவின் கண்ணில் படவே இல்லை. சூழ இருப்போர் யார் அவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற கவலையே இல்லாமல் அவன் மேலேயே விழுந்து கதறி அழுதாள் அவள்.

செய்வது அறியாது நின்றவளின் தோளைத் தொட்டு, "வா அபரஞ்சி, மிசஸ் ராமலிங்கத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாம். அடுத்த மகள் சோபிதா, தாயார் பக்கத்தில்தான் இருக்கிறாள். அவளிடமும் ஒரு வார்த்தை பேசிவிட்டு வருவோம்" என்று சௌதாமினி குப்தா அழைத்தாள்.

அங்கே நின்று தவித்துக் கொண்டிருப்பதற்கு அது மேல் அல்லவா?

அன்றுவரை, கிட்டத்தட்ட வெளியே யாரும் பார்த்ததே இராத அந்தப் பெண்மணியைப் பார்த்து ஆறுதலாக இரண்டொரு வார்த்தைகள் பேசினர். பெரிய பொட்டும், தோடும், உடைக்கட்டும் கிராம மணம் காட்டின.

தாயை விட்டு அகலாமல் அவளைக் கவனித்துக் கொண்டிருந்த சோபிதாவைப் பார்க்கையில் அபரஞ்சிக்கு மரியாதை வந்தது. நடக்க வேண்டியது பற்றிய முடிவுகளுக்கும் எல்லோரும், அவளிடம் தான் வந்து நின்றனர். சுபாவிடம் எதையும் கேட்க வேண்டும் என்கிற எண்ணமே யாருக்கும் இருப்பது போலத் தெரியவில்லை.

அவள் தந்தையின் இறுதிக்காலம் பற்றிய விவரத்தை சோபிதா சுருக்கமாகத் தெரிவித்தாள்.

சில மாதங்களாகவே ராமலிங்கத்துக்கு உடல் நிலை சரியில்லை. "உங்கள் திருமண வரவேற்புக்குக் கூட, அதனால் தான் அப்பாவால் வர முடியவில்லை மிசஸ் வசீகரன்!" என்றாள் அவள்.

லேசாக நிமிர்ந்து பார்த்துவிட்டு, மீண்டும் குப்புறக் கவிழ்ந்து கொண்டாள் ராமலிங்கத்துடைய மனைவி.

தாயின் முதுகைத் தடவிக் கொடுத்தபடி, "அப்புறம் அவருக்குச் சரியாகவே இல்லை!" என்று முடித்தாள் சோபிதா.

வெளியே வரும் போது, "சகோதரிகள் இருவருக்கும் இடையே எவ்வளவு வேறுபாடு?" என்றாள் சௌதாமினி.

பழைய கதறல் இல்லை என்றாலும் இன்னமும் வசீகரனின் தோளில்தான் சுபா சாய்ந்திருந்தாள்.

பார்த்துவிட்டு, "நீங்கள் மெள்ள வாருங்கள். நான் திருமதி குப்தாவுடன் சென்று வீட்டில் இறங்கிக் கொள்கிறேன்" என்று அபரஞ்சி கிளம்பி விட்டாள்.

வீட்டுக்கு வரும் வழியில், "தந்தைக்கும் மகளுக்கும் ஒரே தகராறு! வீட்டில், யாரையுமே அவள் மதிப்பதில்லை. தாயாரைப் பார்த்தாயில்லையா? ஒன்றுமே தெரியாத பட்டிக்காடு என்று பெற்றவரிடம் அலட்சியம். தங்கையிடம் பொறாமை. எப்போதும் ஒரே ஆட்டம்தானாம். அவள் கவலையே ராமலிங்கத்தை முடித்து விட்டது!" என்றாள் சௌதாமினி.

"சுபா சொல்லுகிறபடியெல்லாம் ஆடுகிறவர் அவளுடைய தந்தை என்று நினைத்தேனே. அவர்கள் இருவருக்கிடையே என்ன பிரச்சினை இருக்கக் கூடும்?" என்று யோசனையோடு கேட்டாள் அபரஞ்சி.

சற்றுத் தயங்கிவிட்டு, "இது உனக்கும் தெரிந்திருப்பது நல்லது, அபரஞ்சி. ஏனெனில் தந்தை இல்லாத இந்த நிலையை, சுபா எப்படிப் பயன்படுத்திக் கொள்வாளோ தெரியாது. அப்பா மகளுக்கிடையே கோப தாபத்துக்குக் காரணமே, வசீகரனைக் கை நழுவ விட்டதுதானாம். தொழிலை விட்டுவிட்டு வர வேண்டும் என்றது தந்தை என்றாலும், உறவைக் கை கழுவச் சொன்னது நீதானே. அதனால்தான் வசீகரன் ஒரேயடியாக விட்டுப் போய்விட்டான் என்பாராம் தந்தை. முடிந்தது, முடிந்து விட்டது. இனி அவனை மறந்து வேறிடத்தில் மனதைச் செலுத்து என்பாராம். ஆனால் அவள் ஒத்துக் கொள்ளவில்லைதானே. உங்கள் இருவரையும் கண்காணிக்க ஆள் வைத்துப் பின்னோடு அலைந்தது... கடைசியாகக் கொடைக் கானலுக்கு வசீகரன் பின்னே சுபா ஓடியதுதான் பெற்றவருக்கு ரொம்பக் கோபமாம். கையில் பணமே தரப்போவது இல்லை என்று மிரட்டினாராம். அவள் அடங்குகிறவளா? மிஞ்சிப் போய் நகையை விற்றிருக்கிறாள். ராமலிங்கம் மனம் உடைந்து போய் விட்டார். சென்ற வாரம் கிளப்பில் தனியாக உட்கார்ந்து குடித்தாராம். நரேந்தரும் அவரும், நண்பர்கள் அல்லவா? பார்த்துவிட்டு நரேன் போய்ப் பேச, அவர் புலம்பியிருக்கிறார். 'சொத்தைக் கவனிக்கும் மருமகன் தேடினேன். இடம் கொடுத்ததன் பலன், இப்போது எல்லாவற்றையும் தெருவில் விட்டுவிட்டுப் போகப் போகிறேன்!' என்று அழுதாராம். தன் உடம்பு பற்றித் தெரிந்திருக்கும் போல. பாவம்" என்றாள் சௌதாமினி.

வசீகரன் தோளில் சுபா இயல்பாய் சாய்ந்திருந்தது அபரஞ்சிக்கு நினைவு வந்தது.

யார் பாவம்?

பரிதாபத்துக்கு ஆளாகப் போவது, ஆளாகியிருப்பது யார் என்று அபரஞ்சிக்கு விரைவிலேயே தெரிந்து போயிற்று.

அன்று ராமலிங்கத்தின் வீட்டில் விட்டு வந்த வசீகரனை, மீண்டும் அவள் கண்ணில் காண்பதே அரிதாயிற்று.

வசீகரன் வீட்டுக்கு வரவே இல்லை என்று சொல்ல முடியாது. மாதவி வீடு சென்ற கோவலனாய், அவன் சுபா வீட்டிலேயே தங்கி

விடவில்லை. இரவு பதினொன்றிலிருந்து, பன்னிரெண்டு மணிக்குள் நிச்சயமாகத் திரும்பி வந்து விடுவான் தான்.

ஓய்ந்து, சோர்ந்து களைத்துப் போய் வருவான். அவனிடம் என்னவென்று பேசுவது?

அதுவரை, அவனுக்காகக் காத்திருந்தாலும், கோபித்துக் கொள்ளுவான். "அங்கே எல்லாம் பார்த்து ஒழுங்கு பண்ண, நாட்கணக்கில் ஆகும். அதுவரை தாமதமாகத்தான் வருவேன் என்று தெரியாதா? உணவு எல்லாம் அங்கேயே முடிந்து விடும். எதற்கு அநாவசியமாக விழித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாய். இது போல சம்பிரதாயங்கள் எல்லாம் எனக்குப் பிடிக்காது என்று தெரியாதா?" என்று எரிந்து விழுவான்.

மனைவி விழித்திருந்து, வீணாக உடம்பைக் கெடுத்துக் கொள்கிறாளே என்ற கரிசனத்தில் சொல்கிறான் என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்ள முயன்றாள் அபரஞ்சி.

ஆனால் உணவு அங்கேயே சுபா வீட்டில் முடிந்து விடும் என்பது மனதுக்குக் கஷ்டமாகவே இருந்தது.

சுபாவும், வசீகரனும் சேர்ந்து பேசிக் கொண்டே உண்பது போல, முட்டை மசாலா பிடிக்குமே இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்கள் என்று சுபா வசீகரன் தட்டில் எடுத்து வைப்பது போலக் காட்சிகள் தோன்றி, உணவு என்ற சொல்லையே அபரஞ்சிக்கு வெறுக்கடித்தன.

காலையில் எழுந்து குளித்து, எட்டு மணிக்கெல்லாம் கிளம்பிச் சென்று விடுவான். "காலைச் சிற்றுண்டியை சுபா வீட்டில் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று வெளியே போய்க் கொண்டே அவன் சொல்லும்போது, அவளுக்குத் திக்கென்றிருக்கும்.

எட்டு மணிக்குள் வசீகரன் கிளம்பவில்லையானால், சுபாவிடமிருந்து போன் வந்துவிடும்.

இரண்டு நாட்கள் இப்படிக் கழிந்தபின், மூன்றாம் நாள் காலையில் சுபா வீட்டுக்குக் கிளம்பும்போது "இரவு உன்



அறையிலேயே படுத்துக் கொள் அபரஞ்சி. நான் நள்ளிரவில் வந்து படுக்கும் போது பாவம் உன் தூக்கம் கலைகிறது. பார்" என்று விட்டுப் போனான்.

அபரஞ்சி திகைத்தாள்.

'உன் தூக்கம் கலைகிறதா?'

கடந்த ஒரு மாதமாக நள்ளிரவு வரை தூங்கவிடாமல் கூத்தடிக்கும்போதும், விடிகாலை மூன்று மணிக்கும் நாலு மணிக்கும் 'மூடு வந்திருக்கிறது' என்று எழுப்பி விளையாடிய போதெல்லாம் அவளது தூக்கம் கலையவே இல்லையாமா?

சரியாக ஒரு மாதத்தில் அவள் கசந்து விட்டாளா?

இல்லை, இல்லை. வசீகரன் அவள் மீது கொண்ட அக்கறையில்தான் சொல்லுகிறான் என்று பிடிவாதமாக உருப் போட்டு, மனதை அமைதியாக வைத்துக் கொள்ள அபரஞ்சி வெகுவாக முயன்றபோதும், அது அவ்வளவு எளிதாக இருக்க வில்லை.

அவ்வப்போது, வயிற்றைத் தொட்டுப் பார்த்து அமைதி பெறுவாள். இந்த சொத்து இருக்கையில், வேறு என்ன வேண்டும்?

ஆனால் அதைக்கூட, இன்னும் அவனிடம் சொல்ல முடியவில்லையே. சரியாக ஓய்வெடுக்கக் கூட முடியாமல் அவன் ஓடிக் கொண்டிருக்கையில் அவனை நிறுத்தி இதை எப்படிச் சொல்வது?

அப்படி அவசர அவசரமாகச் சொல்ல, அபரஞ்சிக்கு மனம் வரவில்லை.

இருவருமாகச் சேர்ந்து, ஆற அமரப் பேசி மகிழ்ந்து கொண்டாட வேண்டிய விஷயம். இதைப் போய் அவன் உட்கார்ந்து பேச நேரமின்றி ஓடுகிறபோதா, சொல்வது? அப்படியே சொல்லி, அவன் வேலையையே நினைத்துக் கொண்டு இவள் சொல்லுவதைச்

சரியாகக் கவனிக்காமல் வெளியே போய் விட்டால் அதை அவளால் தாங்கவே முடியாது.

அதைவிடச் சரியான தருணத்துக்குக் காத்திருப்பதே நல்லது. சுபா வீட்டு வேலை என்ன, மாதக் கணக்கிலா இழுத்துவிடப் போகிறது?

ஆனால், மேலும் பல தினங்கள் இப்படியே கழியவும் அபரஞ்சி பொறுமை இழந்தாள். கணவனைக் கண்ணால் காண்பது கூட அரிதாக இருக்கும் இந்த நிலை. அவளால் சகிக்க முடியாததாக மாறிக் கொண்டு வந்தது.

இவள் இங்கே தனிமையில் வாடும் நேரம் முழுமையும், அவன் சுபா வீட்டில் இருக்கிறான் என்பதும் கூட.

தன் ரகசியத்தைக் கணவனிடம் சொல்லிவிட்டால், நிலைமை கொஞ்சம் மாறக் கூடும் என்று எண்ணி, ஒரு நாள், "உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்" என்று அபரஞ்சி தொடங்கினாள்.

ஷூ கயிறுகளை முடி போட்டபடியே, "நான் உடனே ஏற்பாடு செய்கிறேன்" என்றான் அவன். "பாங்கில் என் கணக்கிலிருந்து உன் கணக்குக்குப் பணம் மாற்ற, இன்றைக்கே ஏற்பாடு செய்கிறேன். கிரெடிட் கார்டைத் தாராளமாகப் பயன்படுத்து. வருகிறேன்" என்று கிளம்பிச் சென்று விட்டான்.

கொதித்துப் போயிற்று அபரஞ்சிக்கு.

பணத்துக்கு மட்டுமாகத்தான் அவள் வசீகரனிடம் பேசுவாளாமா? அல்லது அதற்காக மட்டும்தான் நீ என்னிடம் பேசலாம் என்று குறிப்பாகக் கூறுகிறானா?

மற்றதெல்லாம் சுபாவிடமா?

சே! அப்படியெல்லாம் இராது. இந்த சுபா விஷயம் மனதைப் பாதிக்க விட்டு விடக்கூடாது என்று தனக்குத்தானே அவள் அறிவுறுத்திக் கொண்டு இருக்கையில் அந்த சுபாவே போன் செய்தாள்.



"அவர் அப்போதே கிளம்பி விட்டாரே!" என்று அபரஞ்சி கூறவும், "அது எனக்குத் தெரியும்" என்றாள் அவள். "அவர் எப்போதும் இருக்க வேண்டிய இடத்துக்கு, வசி அப்போதே வந்தாயிற்றே. அவர் எப்போதும் இருக்க ஆசைப்படும் என் வீட்டுக்கு இரவு பகல் என்று பாராமல் அவர் இங்கேயே விழுந்து கிடப்பதிலிருந்து உனக்கே இத்தனை நாளில் அது புரிந்திருக்கும். அதனால் அது பற்றி உன்னிடம் பேசத்தான் கூப்பிட்டேன்!" என்றாள் தொடர்ந்து.

## 19

**த**லை சுற்றிப் போயிற்று அபரஞ்சிக்கு.

சும்மாவே தலை சுற்றுதான். வயிற்றுக் கருவின் காரணமாக உணவும் இறங்கவில்லை. இருபது நாட்களுக்கும் மேலாகக் கிட்டத்தட்ட பட்டினி என்கிற நிலை. மனதின் சஞ்சலம் காரணமாக உறக்கமும் சரியில்லை.

உடல்நிலை, மனநிலை இரண்டுமே சரியில்லாத இந்த நேரத்தில் சுபா ஏதேதோ கூறவும் அபரஞ்சி ரொம்பவே கலங்கிப் போனாள்.

ஆனால் தன் கலக்கத்தை இவளிடம் காட்டிக் கொள்ளக் கூடாது என்கிறவரை, அவளுக்கு மனதில் தெளிவு இருந்தது. எனவே "வசு, செய்யும் தொழிலே தெய்வம் என்று இருப்பவர். எடுத்து வேலையை நேரம் காலம் பாராமல் இருந்து முடித்துக் கொடுப்பது அவர் வழக்கம். வேலை இருக்கும் இடம் அவருக்குப் பிடித்த இடமும் கூட இதெல்லாம் நீங்கள் சொல்லி, எனக்குத் தெரிய வேண்டியது இல்லை. அதனால், போனை வைத்து விடுங்கள். நான் வெளியே போக வேண்டியிருக்கிறது" என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு கூறி

முடித்தவள், மற்றவள் மேலே பேசு முன்னரே ரிசீவரை வைத்து விட்டாள்.

மீண்டும் சுபா கூப்பிடுவாளோ என்ற பயத்தில், 'ஆன்சரிங் மிஷினை' ஓடவிட்டுவிட்டு, அவசரமாகக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றாள்.

தெரு முனையில் இருந்த பூங்காவினுள் சென்று மூச்சு வாங்க நிழலில் அமர்ந்தபோது, அதுவும் தவறாகத் தோன்றியது.

சுபாவின் ஒரு போன் காலில் மிரண்டு போய், பாதிப் பேச்சில் விழுந்தடித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே ஓடி வந்து விட்டாளே. இன்னும் அவள் முழுவதும் பேசினால் என்ன ஆகும்? வசீகரனின் வாழ்வை விட்டே அபரஞ்சி வெளியேறிப் போய் விடுவாளா?

நினைக்கும் போதே நெஞ்சை அடைத்தது அவளுக்கு.

வசீகரனின் பிரிவை, அவள் எப்படித் தாங்குவாள்?

இந்தப் பாராமுகத்தையே தாங்க முடியவில்லையே!

பாராமுகம். இது பாராமுகமேதானா? வசீகரன் வேலை மும்முரத்தில் தன்னைக் கவனிக்கவில்லை என்று எண்ணி எண்ணி, அவள் தன்னையே ஏமாற்றிக் கொண்டாளா?

இருக்காது. இருக்காது. இருக்கவே இருக்காது என்று அவள் தலையை அசைக்கையில் பூங்காவின் காவல்காரன் நின்று கவனிப்பது கண்ணில் பட்டது.

"என்னம்மா?" என்று கரிசனமாகக் கேட்டவனிடம், "ஒரே தலைவலி, காற்றாட வந்தால் அதுவும் கேட்கவில்லை!" என்று சமாளித்து விட்டு மீண்டும் வீட்டுக்கே திரும்பி வந்தாள்.

இது சரியில்லை, இன்று இதுபற்றி, வசீகரனிடம் பேசியே தீர வேண்டும்.

வீட்டுக்கு வந்து 'ஆன்சரிங் மிஷினை' ஓடவிட்டால் சுபாதான் மீண்டும் கூப்பிட்டிருந்தாள்.



பேசாமல் பழைய மாதிரியே வைத்துவிட்டு, அறைக்குள் சென்று படுக்கையில் குப்புற விழுந்தாள். தன்னை மீறிக் கண்ணீர் பெருகியது.

அன்றிரவு வசீகரன் வந்து சேர, வழக்கத்தைவிட அதிக நேரம் ஆயிற்று. இப்போது போய்ப் பேசினால் இவ்வளவு நேரம் ஏன் விழித்திருந்தாய் என்று எரிச்சல் படுவான். அதற்கு மேல் என்ன பேச முடியும்?

காலையில் ஆறு மணிக்கு மேல், அவன் லேசில் படுத்திருப்பது இல்லை. அவனது அறைவாயிலிலேயே சுற்றிக் கொண்டிருந்த அபரஞ்சிக்கு கணவன் எழுந்ததற்கான அரவமே கேட்கவில்லை.

சரியாக ஏழு மணிக்கு அவன் அறையில் அலாரம் மணி கிணுகிணுத்தது. அவன் அவசரமாக எழுவதும் கேட்டது.

இரவில் குறைந்து போன நாலு மணி நேரத் தூக்கத்தை இப்படிக் காலையில் ஒரு மணி நேரம் அதிகம் தூங்கி ஈடுகட்ட முயற்சிக்கிறான். அப்புறம் அவசர அவசரமாக கிளம்பி ஓடுகிறான். இப்படியே போனால், எவ்வளவு நாள் உடம்பு தாங்கும்?

வெளியே செல்லத் தயாராகி, வசீகரன் அறையிலிருந்து வரும் போது, அபரஞ்சியும் தயாராகக் காத்திருந்தாள். "உங்களிடம் நான் கொஞ்சம் பேச வேண்டும்" என்றபடி.

"இப்போதா?" என்று லேசாக முகம் சுளித்தவாறே, வசீகரன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான்.

"ஆமாம்." என்று அவள் சொல்லும் போதே நினைவு வந்தவன் போல, "பணம் போட்டாகி விட்டதே. நீ ஏன் சுபாவிடம் மீண்டும் பேசவில்லை? அவள் எல்லாம் சொல்லியிருப்பாளே" என்றான் அவன்.

அவள் சொன்னது போதாதா? அதற்கு மேலும் சொல்ல வேண்டுமா? பெரிதாக அவளிடம் பேசவில்லையே என்று கேட்க வேறு வந்து விட்டானே.

உடம்பெரிய, "நீங்கள் இப்படி அவள் வீடே கதியாய்க் கிடப்பது நன்றாயில்லை. எல்லோரும் என்ன நினைப்பார்கள்..?" என்றவளை, "என்ன உளறுகிறாய்?" என்று ஆத்திரத்துடன் இடை மறித்தான் வசீகரன்.

"அங்கே என்ன நிலைமை என்று உனக்குத் தெரியுமா? ஆண் துணை இல்லாமல் அலை பாய்கிறார்கள். பெரும் சொத்து. ஏமாற்றிப் பறிக்க எத்தனை கழுகுகள் வட்டமிடுகின்றன தெரியுமா? நான் ஒருவன் இல்லாவிட்டால்... ராமலிங்கம் சார் மனைவி, என்னைப் பிள்ளை மாதிரி நடத்துவார்கள். சுபா நான் இல்லாவிட்டால் செத்திருப்பாள். டெத் டியூட்டி, சொத்து பெயர் மாற்றம், வரிக்கணக்கு... அங்கே வேறு யார் பார்ப்பது? நிலைமை புரியாமல் கண்டபடி பேசாதே" என்றவன், அவளது விளக்கம் பதில் எதையும் நின்று கேளாமல் மீண்டும் மணியைப் பார்த்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

கதவருகில் ஒரு கணம் மட்டும் நின்று, "'ஆன்சரிங் மிஷின்' வைப்பது எதற்கு? அதில் பதிவானது பார்த்துத் திரும்பப் பேச வேண்டாம்?" என்று கண்டனக் குரலில் கூறிவிட்டு, கதவைச் சாத்திக் கொண்டு வெளியே சென்று விட்டான்.

கணவனுக்காக ஏங்கி நின்றவளுக்கோ, அவனது மனக் கதவைச் சாத்திக் கொண்டு போன மாதிரி உணர்வு.

பிள்ளை மாதிரி நடத்துவதாமே. பிள்ளை போலவா? அல்லது மாப்பிள்ளையாகவா?

தன்னைத் தவிர யார் பார்ப்பார்கள் என்று அவனே கேட்கிறானே. பார்க்கும் உரிமை, கடமை எல்லாமே தனக்குத் தான் என்றானா?

எல்லாவற்றுக்கும் மேலாக சுபாவிடம் வேறு பேசச் சொல்லுகிறான். அவள் என்ன சொல்லுவாள் என்று தெரியாதா? தெரியாமல் என்ன? இடைப்பட்ட ஒரு மாதம் இல்லையென்றால், அவனே சொல்லியிருப்பான்.



ஆனால் அந்த ஒரு மாதம். அதன் பிறகும், எப்படி முடியும்?

தவியாய்த் தவித்தது அவள் மனம்.

ஆனால் இதையெல்லாம் சொல்லிக் கணவனிடம் வாழ்வுப் பிச்சை கேட்பதும், அவளுக்கு அவமானமாகப் பட்டது.

அவனுக்கு அவளிடம் பேசவே தோன்றவில்லை. ஆசைப் பட்ட சுபா, கைக்கெட்டும் நிலையில் இருக்கும் இப்போது, பேசப் பிடிக்காமலும் இருக்கலாம். அவளாகப் போய்ப் பேசிய இரு சந்தர்ப்பங்களும் கூட அவளுக்கு வேதனையாகவே முடிந்து விட்டன.

இப்போது என்ன செய்வது?

என்ன செய்வது என்பதை, சுபா சொன்னாள்.

அன்றே மீண்டும் அபரஞ்சியைக் கூப்பிட்டு, அவள் கூறினாள், "என் தந்தை இறந்து விட்டது உனக்குத் தெரியும் அல்லவா? எங்கள் இணைப்புக்கு இருந்த ஒரே தடையும் அவரோடு நீங்கிவிட்டது. நாங்கள் இருவரும் காதலர்கள் என்பது உலகம் அறிந்த உண்மை. நிபந்தனை போட்டுத் தடுக்க அப்பா இல்லாததால்..."

சௌதாமினியின் பேச்சு நினைவு வர, துரும்பையும் பற்றுகிறவளாகி, அபரஞ்சி மற்றவளின் பேச்சில் குறுக்கிட்டாள். "அப்போது நீங்களும் ஒரு நிபந்தனை விதித்ததாக நான் கேள்விப்பட்டேனே" என்று கேட்டு விட்டாள்.

ஒரு வினாடி, எதிர்ப்பக்கத்திலிருந்து ஒரு சத்தமும் கேட்க வில்லை. ஆனால் உடனேயே, "நான்தான் என் தப்பை உணர்ந்து திருந்தி விட்டேனே. அவருடைய உறவினர் மனம் மகிழும்படி, ஒத்து நடந்து கொள்வேன் என்று நான் உறுதி கூறியதை, வசியும் ஏற்றுக் கொண்டு விட்டார். நாள் முழுவதும் வசி இங்கேயே இருப்பதில் இருந்தே, நிலைமை புரிந்து நீயாக விலகுவாய் என்று நினைத்தோம். ஆனால் நீதான், அடி முட்டாளாக இருக்கிறாயே!" என்று தாக்குதலில் இறங்கினாள் சுபலேகா.

பதில் சொல்ல முடியாமல் அபரஞ்சி தவித்துப் போனாள். அப்போதும் சமாளித்து "இதையெல்லாம் நீங்கள் தானே சொல்லுகிறீர்கள். அவர் சொல்லட்டும்" என்றாள் அவள்.

முகத்துக்கு நேரே வசீகரன் அப்படிச் சொல்லித் துரத்தும் வரை ரோஷமின்றிக் காத்திருப்பதா என்ற எண்ணம்தான். ஆனால் அவன் வாய் மொழியின்றி விலகவும் அவளுக்கு மனம் வரவேயில்லை. அத்தோடு, நூற்றில் ஒரு வாய்ப்பாக இவள் பொய்யே சொன்னாள் என்றால்?

"எப்படிச் சொல்லுவார்?" என்று கீச்சிட்டாள் சுபா. உடனே குரலைத் தணித்து "முழுக்க முழுக்க அயோக்கியனாக இல்லாத எந்த ஆணாவது தாலி கட்டியவள் முகத்துக்கு நேரே அப்படிச் சொல்லுவானா? வசியா, பாவம் நல்லவர். ஜாடை மாடையாகத்தான் அவரால் இதைச் சொல்ல முடியும். இன்னொருத்தியாக இருந்தால் தனியறையில் படுக்கச் சொன்னபோதே புரிந்து கொண்டிருப்பாள். இப்படி மண்டையில் அடித்துச் சொல்ல வேண்டியிராது" என்று மரண அடி கொடுத்தாள் அவள்.

அந்த ஓர் அடியில் அபரஞ்சி சுருண்டு போனாள்.

இது கூட இவளுக்குத் தெரிந்திருக்கிறது என்றால்... இதைக்கூட சுபாவிடம் சொல்லியிருக்கிறான் என்றால் எல்லாம் முடிந்து விட்டது என்றுதானே அர்த்தம்? அபரஞ்சி ஆசைப்பட்ட நூற்றில் ஒரு வாய்ப்பும் பொய்த்துப் போயிற்று.

என்ன செய்கிறோம் என்பதே புரியாமல் ரிசீவரைத் தாங்கியில் வைத்தாள்.

இனி என்ன செய்வது?

இது போன்ற இன்னும் பல 'ஜாடைமாடை'க் குறிப்புகளின் பின் பொறுமையிழந்து நேரடியாக 'வெளியே போ' என்று வசீகரன் அவள்து கழுத்தைப் பிடித்துத் தள்ளும்வரை அழும்பு பிடித்துக் கொண்டு இங்கேயே உட்கார்ந்திருப்பதா?

நினைக்கவே அருவருப்பாக இருந்தது.



ஆனால் ஈருயிராக இருக்கும் இந்த நிலையில் தன்னந் தனியே..

அபரஞ்சி யோசிக்கும் போதே பொறுமையற்று டெலிபோன் குரல் கொடுத்தது.

அவள் எண்ணியது போல சுபாதான். "ஏய் நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? பாதிப் பேச்சில் வைக்கிறாயே. மரியாதை தெரியாது? கண்ட பட்டிக்காட்டு நாய்களையெல்லாம் வீட்டுக்குள் கொண்டு வைத்தால் இப்படித்தான்..."

அவளது உதாசீனத்தைப் பொறுத்துக் கொள்ளும் மனநிலை அபரஞ்சிக்கு அப்போது இல்லை. எனவே சுபாவின் பேச்சில் குறுக்கிட்டு "போதும்" என்றாள் அதட்டலாக.

மீண்டும் சுபா தொடங்கு முன் "என்னால் உங்கள் இருவருக்கும் எந்த இடைஞ்சலும் இராது. நான் இன்றே இங்கிருந்து போய்விடுகிறேன். அதுதானே உனக்கு வேண்டும். போனை வை" என்று மரத்த குரலில் கூறி, மற்றவள் "எப்படி.." என்று ஏதோ கேட்பதை அலட்சியம் செய்து மீண்டும் பாதிப் பேச்சில் ரிசீவரைக் கீழே வைத்தாள்.

ஒரு கணம் டெலிபோன் கருவியை வெறித்தவள் ரிசீவரை எடுத்துக் கீழே வைத்துவிட்டு சோபாவில் விழுந்தாள்.

சுபாவிடம் சொன்னதற்காக இல்லை என்றாலும் தங்கள் அந்தரங்கத்தைக் கூட இன்னொருத்தியிடம் பகிர்ந்து கொண்டவன் வீட்டில் வேண்டாத சுமையாக இன்னும் தங்கியிருக்க அபரஞ்சிக்கு வெறுப்பாக இருந்தது.

ஆனால் எங்கே போவது என்ன செய்வது என்பதுதான் குழப்பமாக இருந்தது.

என்ன குழப்பமாக இருந்தாலும் செய்து தீர வேண்டியது.

வந்து வந்து குறுக்கிட்ட வசீகரனின் நினைவைப் பிடிவாதமாக ஒதுக்கி யோசிக்க முயன்றால் கண்ணீர்தான் பொங்கி வழிந்தது. எப்படி முடியும் எப்படி முடியும் என்று அதே தவிப்பு.

எப்படியும் சுபாவிடம் சொல்லியாயிற்று. அவள் வசீகரனிடம் தெரிவித்திருப்பாள் தொல்லை தீர்ந்தது என்று நிம்மதியோடு திரும்பி வரும் கணவன் முகம் சுளிக்கும்படியாக வீட்டில் உட்கார்ந்திருக்கக் கூடாது.

முதலில் இங்கிருந்து வெளியேறி சற்று எளிமையான பெண்கள் விடுதி ஒன்றில் தங்கிக் கொண்டு மேலே செய்வது பற்றி யோசிக்கலாம் என்று முடிவு செய்தாள் அபரஞ்சி.

வசீகரன் வாங்கித் தந்த எதையும் எடுத்துப் போகக் கூடாது. அவன் பணத்தைத் தொடக்கூடாது.

சாப்பாடு, துணி, தங்கும் இடம் எதுவும் காசின்றிக் கிடைக்காதே என்று சோர்ந்த போது வசீகரனுடைய தந்தை தந்த பணம் நினைவு வந்தது. பார்வதிப் பாட்டி அளித்த உடைகளும்.

கணவன் வழி உறவினர்தான். ஆனால் அவள் மீது உண்மை அன்பு கொண்டவர்கள். அவர்கள் வழித் தோன்றலான குழந்தைக்காகத்தான் அவள் இனி உயிர்வாழப் போவதே. எனவே அப்படி உயிர் வாழ்வதற்காகவே இவர்கள் கொடுத்தவற்றைப் பயன்படுத்த வேண்டியதுதான். ஆனால் அந்தக் குழந்தையைக் கொடுத்த அதன் தந்தை.. இல்லை அவனைப் பற்றி நினைக்கக் கூடாது.

எங்கோ அழைப்பு மணி மிக மெல்லியதாகக் கேட்டது. அடுத்த தளத்திலும் இதே போல அழைப்பு மணி போலும் என்று நினைத்தவாறு தான் முடிவு செய்ததைச் செயலாற்ற எழுந்த போது சற்றும் வலுவில்லாதவை போல கைகால்கள் துவண்டு, கண்கள் இருள அபரஞ்சி தடுமாறி விழலானாள்.

அவள் கீழே விழுமுன் இரு கரங்கள் அவளைத் தாங்கி சோபாவில் அமர்த்தின.

இந்த நேரத்தில் யார் என்று கனத்த இமைகளைச் சிரமத்துடன் பிரித்துப் பார்த்த அபரஞ்சி திகைத்தாள். ஏனெனில் அவள் எதிரே நின்றவர் அவளுடைய மாமனார் பிரகாசம்.



# 20

அபரஞ்சி திகைப்புடன் எழ முயற்சிக்கவும் "வேண்டாம் சற்று நேரம் அசையாமல் அப்படியே சாய்ந்திரு" என்றவர் உள்ளே சென்று வந்த போது அவர் கையில் இரண்டு கப்பில் காபி இருந்தது.

"உள்ளே போய்ப்பார்த்தால் அங்கே யாரையும் காணோம். ப்ளாஸ்கில் காபி இருந்தது. இந்தா. முதலில் இதைக் குடி. பிறகு மற்றது பேசலாம்" என்று ஒன்றை அவளிடம் கொடுத்துவிட்டு எதிரே அமர்ந்து தானும் காபியை அருந்தலானார்.

அவர் சொன்னபிறகே சமையல்கார நாகுவுக்கு இன்று அரைநாள் விடுப்பு என்பது அபரஞ்சிக்கு நினைவு வந்தது. வீட்டை விட்டு வெளியேறும் போது அவரிடம் ஏதாவது சொல்லிச் சமாளிக்கத் தேவையிராது.

ஆனால் ஒரு நாளும் இல்லாமல் இந்த மாமனார் வந்திருக்கிறாரே.

வந்தவரை வரவேற்கக்கூட இல்லை என்பது நினைவு வர "வாருங்கள் மாமா" என்றாள் மருமகள். திடீரென்று வீட்டுக்குள் எப்படி வந்தார் என்ற திகைப்பு முகத்தில் தெரியவும் அவர் "வீட்டுக்குள் எப்படி வந்தேன் என்றால் என்னிடம் ஒரு சாவி இருக்கிறது. எப்போதாவது சென்னைக்கு வரவேண்டும்போல எனக்குத் தோன்றினால் பையன் வீட்டில் இல்லாத நேரத்திலும் வந்துகொள்ள என்று ஒரு சாவியைத் தந்திருந்தான். மருமகள் இருக்கிறாளே என்று மணியடித்தால் கதவு திறக்கவில்லை. நீயும் வெளியே போயிருக்கிறாய் என்று நினைத்துக் கொண்டுதான் கதவைத் திறந்து உள்ளே வந்தேன். வந்தால்... வந்தது நல்ல சமயம் ஆகிப் போயிற்று" என்றார்.

ஆக அழைப்பு மணி மாமா அடித்ததுதான். அடுத்த தளம் மாதிரி தூரத்தில் கேட்ட மாதிரி இருந்ததே. அப்போதே உடம்பு ஏதோ பண்ணத் தொடங்கி விட்டது போலும். இந்த நிலையில் என்ன வேலை செய்து எப்படி வருமானத்துக்கு வகை செய்வது?

தன்னிலிருந்து மனதைப் பிடிவாதமாகப் பிரித்து "இங்கே ஏதாவது வேலையா மாமா?" என்று பிரகாசத்திடம் விசாரித்தாள் அபரஞ்சி.

மாமனார் இங்கு தங்கும் கால அளவு தெரிய வேண்டுமே. அவர் அறியாமல் அல்லவா அவள் வெளியேற வேண்டும்.

"வேலையா..?" என்று முகவாயைத் தேய்த்துவிட்டுக் கொண்டார் பிரகாசம். "முதலில் இதற்குப் பதில் சொல். உன்னைப் பார்த்தால் உடம்பு சரியில்லாத மாதிரி இருக்கிறது. இந்த நிலையில் உன்னைத் தனியே விட்டுவிட்டு உன் புருஷன் எங்கே போனான்?" என்று கேட்டார்.

என்ன பதில் சொல்லுவாள்?

தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு "எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை.." என்றவளுக்கு அதற்கு மேல் பேச முடியாமல் கண்களில் நீர்ச்சரம் இறங்கியது.

உதட்டைக் கடித்து அவள் கண்ணீரை அடக்க முயல்வதைச் சில வினாடிகள் பார்த்திருந்துவிட்டு "வசுவை மீண்டும் பிசாசு பிடிப்பதாகக் கேள்விப் பட்டேன். அது பற்றித் தெரிந்து கொள்ளத் தான் வந்தேன். அது உண்மைதான் என்று இப்போது தெரிகிறது. என்ன நடந்தது சொல்லு. ராமலிங்கம் இறந்த சேதி தெரியும்" என்று மருமகளிடம் விவரம் கேட்டார் பிரகாசம்.

அவள் சுருக்கமாகச் சொல்ல சற்று நேரம் யோசித்துவிட்டு "இந்த நிலைமையில் நீ இப்படித் தனியே இங்கே கிடக்க வேண்டாம். என்னோடு குன்னூருக்கு வா. அவனிடம் சொல்லாமல் வா. கொஞ்ச நாள் தனியே கிடந்தால்தான் வாழ்வில் எது முக்கியம் என்பது அவனுக்குத் தெரியும். நீ இருக்கும் இடம் தெரியாமல் தவிக்கட்டும். கிளம்பு" என்றார் அவர்.



தவிப்பானா?

நம்பிக்கையற்ற பெருமூச்சுடன் அபரஞ்சி எழுந்தாள்.

பயந்து கொண்டேதான். ஆனால் சற்று முன் குடித்த காபியினாலோ, என்னவோ கால்கள் திடமாகவே நின்றன. அத்தோடு துணை ஒன்று இருக்கிறது என்ற தெம்பும் காரணமாக இருக்கலாம்.

ஒன்று தோன்றவும் "'இருக்கும் இடம் தெரியாமல்' என்றீர்கள் மாமா? வாட்ச்மேன் உங்களைப் பார்த்திருப்பானே" என்றாள்.

"ஆனால் நான் முன்பு பார்த்த ஆள் இல்லை இவன். அதனால் நான் யார் என்று தெரிந்திராது. சும்மா தோரணையாக வரவும் நிறுத்தி விவரம் கேட்கப் பயந்து விட்டுவிட்டான் என்று நினைக்கிறேன். ஆனால்... சரி ஒரு வேலை செய்வோம். நான் வந்தது போலவே முதலில் கிளம்பி விடுகிறேன். நீ ஒரு 'கால் டாக்சி' வரவழைத்து அதில் கிளம்பி ரயில் நிலையத்துக்கு வந்துவிடு" என்று கிளம்பினார் பிரகாசம்.

அவர் சொன்னது போல வசீகரனுக்கு ஒன்றுமே தெரியாது செல்ல அபரஞ்சியின் மனம் இடம் கொடுக்கவில்லை.

அவள் எப்படியோ செத்து ஒழியட்டும் என்று எண்ணும் அளவுக்கு வசீகரன் கிராதகன் அல்ல. சுபா மேல் அவனுக்கு ஏற்கனவே காதல். முன்பே அவளை மணக்க முடியாததால்தானே அபரஞ்சியைத் திருமணம் செய்தான். இப்போது மீண்டும் சுபாவை அடையும் வாய்ப்பு கிட்டியிருக்கிறது. எப்படி விடுவான் பாவம்.

நல்லவனாக இருக்கப் போய்த்தானே முகத்துக்கு நேராக அபரஞ்சியிடம் சொல்ல முடியாமல் ஓடுகிறான். போகட்டும். இனி ஓடத் தேவையிராது. நிம்மதியுடனேயே சுபாவை மணந்து கொள்ளட்டும்.

"உங்கள் விருப்பம் போல வாழ வசதியாக உங்களை விட்டு நான் விலகிப் போகிறேன். சாக மாட்டேன்" என்று எழுதி வசீகரன் பார்க்கும் இடத்தில் வைத்துவிட்டு முன் திட்டமிட்டபடியே கிளம்பினாள் அவள்.

பார்வதி அம்மாள் வாங்கிக் கொடுத்த உடைகளோடு மாமனார் கொடுத்த பணத்தில் மீதம் இருந்த பணத்துக்கு ஒரு 'செக்' எழுதி அதையும் கடிதத்தோடு வைத்துவிட்டு அந்த அளவு பணத்தை எடுத்துக் கொண்டு பிரகாசம் சொன்னது போல 'கால் டாக்சி'யில் ஏறிச் சென்றாள்.

ரயில் நிலையத்தில் காத்திருந்த பிரகாசம் மருமகளைக் குன்னூருக்கே அழைத்துச் சென்றுவிட்டார்.

சும்மா என்றால் அபரஞ்சி குன்னூரை மிகவும் ரசித்திருக்கக் கூடும். ஆனால் கணவனைப் பிரிந்து வந்திருக்கிறோம் என்பதும் அவன் இன்னொருத்தியை விரும்புவதால் இனி அவனை அடைய வாய்ப்பே இல்லை என்பதும் அவளை உள்ளூர அரித்துக் கொண்டே இருந்ததால் அவளுக்கு அந்த மலைப் பிரதேசத்தின் எழில் கண்ணில் படவே இல்லை.

பிரகாசம் மட்டும் விரட்டிக்கொண்டே இருக்கவில்லை என்றால் அவள் படுக்கையை விட்டு அசைந்திருக்கவே மாட்டாள். தனக்குள்ளேயே உருகி ஓடாகியிருப்பாள்.

ஆனால் பிரகாசம் அவளை ஓய்ந்திருக்க விடவே இல்லை.

குன்னூரை அடைந்ததுமே முதலில் ஒரு பெண் வைத்தியரை அழைத்து வந்து அபரஞ்சியைப் பரிசோதிக்கச் செய்தார்.

"எதற்கு மாமா?" என்று தவிர்க்க முயன்றவளிடம் "என் பேரக் குழந்தை அம்மா. ஆணோ, பெண்ணோ அதன் பாட்டியின் அம்சம் தான் என்றிருக்கிறது எனக்கு. அவள் மாதிரி அற்பாயுசாக இல்லாமல் குழந்தை நல்ல ஆரோக்கியத்துடன் நூறாண்டு வாழ வேண்டாமா? அதற்காகத்தான் இந்த மருத்துவப் பரிசோதனை ஆலோசனை எல்லாம்" என்று கூறி மருமகளைச் சம்மதிக்க வைத்தார்.

குழந்தைக்காக என்றதும் அவளும் தலையாட்டினாள்.

டானிக் வைட்டமின் மாத்திரைகள் என்று டாக்டர் சொன்னதை யெல்லாம் வாங்கிக் கொடுத்தார்.

சுத்தமான மலைக் காற்று என்று உலாவ அழைத்துப் போனார்.



ஆனால் உள்ளே மனம் உருகிக் கொண்டே இருக்கும்போது உடம்பு எதை ஏற்கும்?

ஏதாவது கார் வந்து நின்றால் வசீகரனும் சுபாவும் மாமனாரின் ஆசிக்காக வருகிறார்களோ என்று கலங்குவது, போன் மணியடித் தால் சுபாவோடு இணையப் போவது பற்றிச் சொல்ல வசீகரன்தான் போன் செய்கிறானோ என்று அஞ்சுவது என்று தவித்துக் கொண்டே இருந்தால் மனமோ, உடம்போ எப்படித் தேறும்?

அபரஞ்சி மெலிந்து கொண்டே போவதைக்கண்டு மகனைச் சபித்தபடி டாக்டரிடம் தனியாகப் போய் தன் கவலையைச் சொன்னார் பிரகாசம். அவருக்கு மனைவியின் நினைவில் வந்த கவலை வேறு.

ஆனால் ஐந்தாறு மாதங்கள் கூட மெலிந்து கொண்டே போகிறவர்கள் உண்டு. பயப்பட ஒன்றுமில்லை என்று தைரியம் சொன்னார் மருத்துவர்.

மாமனார் கவலைப்படுவதை உணர்ந்து உற்சாகமாக இருப்பது போலக் காட்டிக் கொண்டாள் அபரஞ்சி.

ஓரளவு அதை நம்பி தன் பண்ணை வேலையைப் பார்க்கப் போனார் பிரகாசம்.

மொட்டுமொட்டென்று அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தால் இன்னமும் மனம் சோர்கிறது என்று அபரஞ்சியும் அங்குமிங்குமாக வீட்டுக்குப் பக்கத்திலேயே நடப்பாள். சோர்வாக இருந்தால் ஓரமாய் ஏதாவது மரத்தடியில் உட்கார்ந்திருப்பாள்.

அப்படி ஒரு நாள் உட்கார்ந்திருக்கும் போது தான் அவள் இருந்த இடத்தைத் தாண்டிச் சென்ற கார் ஒன்று நின்று பின்னோக்கி வந்து அவள் அருகில் நின்றது.

"அபரஞ்சி" என்று வியப்புடன் கூவியவாறு காரிலிருந்து இறங்கியவள் சௌதாமினி.

"நீ இங்கேயா இருக்கிறாய்? இங்கே எங்கே எந்த இடத்தில் தங்கியிருக்கிறாய்? அங்கே உன்னைப் பிரிந்து வசீகரன் என்ன பாடு

படுகிறார் தெரியுமா? ஆள் பாதியாய் மெலிந்துவிட்டார். நீயானால்... நீயும் மெலிந்துதான் இருக்கிறாய். சரி சரி, எங்களோடு சென்னைக்கு வா. உன்னைப் பார்த்த பிறகுதான் வசீகரன் முகத்தில் சிரிப்பு வரும்'' என்று வேகமாகப் பேசினாள்.

சிரிப்பு வருவதா? இருக்கும் சிரிப்பும் மறைந்து போகும் என்று எண்ணியவாறு ''சுபா சென்னையில் இல்லையா?'' என்று பாதிக் காற்றாகிப் போன குரலில் அபரஞ்சி வினவினாள்.

காதலர்கள் இருவருக்கும் ஏதாவது ஊடலாக இருக்கும். அது வசீகரனுக்குத் தாங்க முடியாமல் போயிருக்கும் என்று எண்ணும் போதே மெய்யாகவே தன்னைப் பிரிந்ததால் இருக்கலாமோ என்றும் அவளுக்கு ஆசை அடித்துக் கொண்டது.

''அவள் சென்னையில்தான் இருக்கிறாள். ஆனால்...ஓ உனக்கு விஷயமே தெரியாதா? வசீகரன் அவளை முழுதாக வெட்டி விட்டாரே. 'ஆடிட்டிங்'கூட வேறு ஆளிடம் கொடுத்து விட்டார். ஆண்டுக்குக் குறைந்தாலும் ஐந்தாறு லட்சம் வரும். அந்தத் தொடர்பே வேண்டாம் என்று விட்டதாகக் கேள்வி...மைகாட். அந்தப் பெண் சுபாவாலா, வசீகரனை விட்டு நீ பிரிந்து வந்தாய்? சேச்சே. உடனே கிளம்பு அபரஞ்சி முதலில் வசீகரனிடம் போய்ச் சேர். அப்போதுதான் அவர் நேராவார். வா.கிளம்பு'' என்று விரட்டினார் சௌதாமினி.

மெய்யாக இருக்குமோ என்று அபரஞ்சியின் மனம் அடித்துக் கொண்டது. ஆனால் சுபாவிடம் அவன் பகிர்ந்து கொண்ட அந்தரங்கம்? அதற்கு என்ன விளக்கம் இருக்கக் கூடும்? மற்றது எல்லாம் கூட நூற்றில் ஒரு வாய்ப்பாக அவள் கற்பித்துக் கொண்ட சமாதானங்களே நடப்பாகவும் இருந்திருக்கலாம் ஆனால் இது?

அபரஞ்சியின் முகம் மறுபடியும் சோர்வதைக் கண்டதும் சௌதாமினி ''ஊகூம். இது சரிப்படாது. நீ யோசிப்பது எதுவும் எனக்குச் சரியாகப் படவில்லை. ஏதோ தப்புத் தப்பாக நினைக்கிறாய் என்று தோன்றுகிறது. நரேன் நீங்கள் உடனே



செல்லில் வசீகரனைக் கூப்பிட்டு அபரஞ்சி இங்கிருப்பதைச் சொல்லுங்கள்'' என்று பரபரத்தாள்.

மனைவி சொன்னதைச் செய்வதில் அவசரம் காட்டாமல் அவர் நிற்க அபரஞ்சியும் ஒரு முடிவுக்கு வந்தாள். ''இல்லை சௌதாமினி. இதை நானே பார்த்துக் கொள்கிறேன். நானும் அவரும் நேரில் பேசித் தீர்த்துக் கொள்வதுதான் சரி'' என்று சொல்லும்போதே அவளுக்கு ஒன்று உறைத்தது.

வசீகரனிடம் அவள் நேரடியாக எதையுமே பேசவில்லை. அவளது கலக்கங்கள், காரணங்கள், எல்லாமே வெறும் ஊகங்களே. அடுத்து சுபாவின் பேச்சு. நோக்கம் நிறைவேறுவதற்காக அவள் எதையும் செய்யக் கூடியவள். ஆனால்...ஆனாலும்.

என்ன ஆனாலும் சரி. எப்படியும் உடனே அவனைப் பார்த்தே ஆக வேண்டும் என்று தோன்றிவிட்டது அவளுக்கு. அவனைப் பாராமல் தவிக்கும் இந்தத் துன்பத்துக்கு அவனை ஒருதரம் சந்தித்து அதன்பின் அவன் போகச் சொன்னால் கூடப் பரவாயில்லை.

வசீகரன் கோபமாக இருப்பானோ? அவளை வெறுத்தே விட்டானோ? அவளை அவன் தேடவே இல்லையே. அப்படியானால் ரொம்பவே வெறுப்புதான்..என்றெல்லாம் ஏதேதோ எண்ணித் தவித்த போதும் அவனைப் பார்த்தாக வேண்டும் எனும் ஆவல் மட்டும் வேகமாக வளர்ந்து வெறியாகவே மாறிற்று.

கணவனிடம் எப்படிப் போவது?

சட்டென வீட்டுப் பக்கம் திரும்பியவளுக்கு சௌதாமினியும் அவளுடைய கணவரும் நிற்பது மனதில் பட ''சௌதாமினி இது என் மாமனாரின் பண்ணை. அதோ அதுதான் வீடு. நான் இப்போது அவசரமாகச் சென்னைக்குக் கிளம்பப் போகிறேன். அதனால் இன்னொரு முறை வீட்டுக்கு அழைக்கிறேன். தப்பாக நினைக்க வேண்டாம். என்ன?..'' என்று வாய் சொல்லும் போதே அபரஞ்சி வீட்டை நோக்கி விரைந்தாள்.

வியப்பும் புன்னகையுமாகக் கணவன் புறம் திரும்பிய சௌதாமினியின் கண்கள் மேலும் அகன்றன. ''ஏய் எனக்குத்

தெரியாமல் ஏதோ ரகசியம். என்ன அது? வசீகரன் மனைவி இங்கே இருப்பது ஏற்கனவே தெரியுமா? என்னவோ எஸ்டேட் பார்க்க வென்று அழைத்து வந்தீர்களே."

"எல்லாம் ஓர் ஊகம்தான் அது. இங்கே எஸ்டேட் வாங்கலாம் என்று பார்த்துவரச் சொன்னது வசீகரன். அந்த எஸ்டேட் பற்றிய அபிப்பிராயம் கேட்கும்படி அவன் சொல்லியனுப்பியது அவன் தந்தை பிரகாசத்திடம். மனைவி தானாகத் திரும்பி வர வேண்டும் என்கிற எண்ணம் என்பது என் கருத்து. தானாகப் போனவள் தானாகத்தானே திரும்பி வர வேண்டும்?"

"ஓஹோ. அதனால்தான் செல்லில் கூப்பிடு கூப்பிடு என்று நான் சொல்லச் சொல்ல அப்படி இடித்த புளி மாதிரி கல்லாய் நின்றீர்களாக்கும்?"

"கிடைத்தது வாய்ப்பு என்று இடித்த புளி, கல்.. அம்மாடி. நன்றாகத்தான் திட்டுகிறாய்."

"பின்னே என்னிடம் மறைத்தால் அப்படித்தான் சொல்வேன் திருடா."

நாற்பதுகளிலும் நேசம் மிகுந்த அந்தத் தம்பதி கலகலத்தபடியே சென்றது.

மருமகளின் விருப்பம் தெரிந்தபின் பிரகாசம் அதற்குத் தடையேதும் சொல்லவில்லை.

கடந்த நாலு வாரங்களாக அவள் உருகிக் கரைவதைப் பார்த்து உள்ளூரவும், வெளிப்படையாகவுமே கவலைப்பட்டுக் கொண்டிருப் பவர் ஆயிற்றே.

அபரஞ்சி விரும்பியது போல உடனே பயணத்துக்கு ஏற்பாடு செய்தார்.

முடிந்தால் அங்கிருந்தே விமானப் பயணத்துக்கு ஏற்பாடு செய்திருப்பார். ஆனால் அபரஞ்சி கிளம்பிய நேரத்துக்குக் கோவையில் கூட விமானத்தைப் பிடிக்க முடியாத நிலை. எனவே மேட்டுப்பாளையத்திலேயே நீலகிரி எக்ஸ்பிரஸ்சைப் பிடித்தார்கள்.



தனக்காக அலைய வேண்டாம் என்று அபரஞ்சி எவ்வளவு சொல்லியும் அவர் கேட்கவில்லை. "இந்த நிலையில் உன்னைத் தனியாக அனுப்ப முடியாதும்மா" என்று கூறிவிட்டார்.

ஆனால் வீட்டுக்குத் தனியாகத்தான் அனுப்பினார். அபரஞ்சிக்கும் அதுதான் விருப்பமாக இருந்தது.

அவள் கணவனுக்கும் அவளுக்கும் இடையே என்ன மாதிரிப் பேச்சு நடக்குமோ? அதை இன்னொருவரை... அதிலும் வீட்டுப் பெரியவரை வைத்துக் கொண்டு பேச முடியாது. இது மற்றவர்களுக்காக வேஷம் போடுகிற நேரமும் அல்ல.

எனவே "தப்பாக நினையாதீர்கள் மாமா. நான் முதலில் போகிறேன். நீங்கள் அப்புறமாக வாருங்கள்" என்று அவள் கூறியதை அவர் நல்ல விதமாகவே புரிந்து கொண்டார்.

தன்னோடு தொடர்பு கொள்வதற்குரிய டெலிபோன் எண்ணைக் கொடுத்து அவளை டாக்சியில் அனுப்பி வைத்தார்.

அழைப்பு மணியை அழுத்திவிட்டுக் கதவு திறப்பதற்காகக் காத்து நின்ற சில வினாடிகள் அபரஞ்சியின் இதயம் பந்தயக் குதிரையாகத்தான் ஓடிற்று.

லென்ஸ் வழியாகப் பார்த்துவிட்டு கதவைத் திறக்காமலே இருந்து விடுவானோ?

படபடக்கும் நெஞ்சோடு அவள் காத்து நிற்கையில் கதவு திறந்தது. "ஆக அம்மையார் திரும்பிவரத் திருவுளம் கொண்டு விட்டாயாக்கும்?" என்றான் அவன் ஏளனமாக.

இதற்கு என்ன சொல்வது?

நல்ல வேளையாக வழியையும் விட்டதால் உள்ளே சென்றாள் அபரஞ்சி.

அவள் பின்னோடு கதவைச் சாத்திவிட்டு "இன்னொருதரம் இப்படிச் சென்று பார். திரும்பி வந்து பார்க்க நான் இருக்க மாட்டேன்" என்றான் வசீகரன்.

கேட்க நினைத்தது சொல்ல எண்ணியது எல்லாம் மறந்து விட "ஐயோ" வென்று ஓடிவந்து அவனை இறுக அணைத்துக் கொண்டாள் அபரஞ்சி.

இவன் எப்படி இன்னொருத்தியை நினைப்பான்? எல்லாம் தப்பு.

அணைப்பு எப்போது அவனதாயிற்றோ தெரியாது. கொஞ்ச நேரம் அங்கே சத்தமே எழவில்லை. சற்றுப் பொறுத்து அவளை அணைத்தவாறே அழைத்துச் சென்று சோபாவில் அமர்த்தி "இவ்வளவு அன்பை வைத்துக் கொண்டு என்னைப் பிரிந்து செல்ல உன்னால் எப்படி முடிந்தது?" என்று கேட்டான் அவன்.

எப்படி முடிந்தது?

என்னென்ன காரணங்கள். எவ்வளவு வேதனை.

ஆனால் எல்லாமே இப்போது முக்கியமற்றுத் தோன்றிவிட ஒன்றுமில்லை என்பது போல அபரஞ்சி தலையசைத்தாள்.

"ஊகூம்" என்று அவனும் தலையசைத்தான். "எனக்குள் ஓர் ஊகம் இருக்கிறது. சுபா. அவள்தானே? அவளை நான் மறந்தாலும் நீ நினைத்துக்கொண்டே இருந்துவிட்டாய். ஒன்றும் இல்லாததை ஊதிப் பெரிதாக்கிக் கொண்டாய். அப்படித்தானே?" என்று சிறு கோபத்துடன் கேட்டான்.

நினைத்துக்கொண்டே இருந்தாளா? நினைத்தாள்தான். ஆனால் உடனுக்குடனேயே யோசித்து தன்னைத் திருத்திக் கொள்ள வில்லையா? கடைசியில்... அதற்கு என்ன விளக்கம் சொல்லுவான்?

அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன் சட்டெனத் தணிந்த குரலில் "என்னடா?" என்று கனிவாக விசாரித்தான்.

"நாம்..நாம் வெவ்வேறு அறைகளில் உறங்கியதை சுபாவிடம் ஏன் சொன்னீர்கள்?" என்று வருத்தத்துடன் வினவினாள்அபரஞ்சி.

சற்று யோசித்து "சுபாவிடம் என்று தனியாக நான் அதைப் பற்றிப் பேசியதில்லையே" என்றான் வசீகரன். "இதைப் போய் அவளிடம் ஏன் பேசப் போகிறேன்?"



"ஆனால் அவள் சொன்னாளே" என்றபோது அபரஞ்சியின் கண்களில் நீர் திரையிட்டது.

"என்ன சொன்னாள்?" என்று விழியிடுங்க நோக்கிக் கேட்டான் அவன்.

"தனியறையில் படுக்கச் சொன்னதே உங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை என்பதை ஜாடை மாடையாகத் தெரிவிப்பதற்காகத் தான் என்றாள்." என்று தொண்டையடைக்கச் சொன்னாள் அவள். "அதற்கப்புறம்தான்.. இதைக்கூடச் சொல்லுவது என்றால் நீங்களும் அவளும் நெருக்கமாகத்தானே இருந்திருப்பீர்கள் என்று.. என்னைப் பிடிக்கவில்லையோ என்று.."

"என்றெல்லாம் நினைத்து மனதைப் புண்ணாக்கி கொண்டாயாக்கும். பைத்தியம். முதலில் இந்தப் பேச்சு எப்படி வந்தது என்று உனக்குச் சொல்கிறேன். ராமலிங்கம் அங்கிளுக்குச் சொத்துகள் நிறைய. அவர் இறந்ததும் டெத் டியூட்டி சொத்து மாற்றுவது ..ஒவ்வொருவர் பெயரிலும் அவர் எழுதி வைத்திருந்ததை எழுதியபடி செயல்படுத்துவது முக்கியமாக அதிக இழப்பு இல்லாமல் எப்படிச் செய்வது என்று நிறைய வேலைகள். நான் வக்கீல் சங்கர், சோபிதா மூவருமாய் இந்தக் கணக்கு வழக்குகள் எல்லாம் பார்ப்போம். சுபா என்றைக்குமே வேலை செய்தது இல்லை. வேடிக்கை விளையாட்டுதான் பிடிக்கும். சோபிதா எப்போதுமே எல்லாவற்றையும் ஒழுங்காகக் கவனிப்பாள். சங்கரை அவள் மணப்பதாகவும் இருக்கிறது. வேலை நடுவே, அவ்வப்போது அந்த ஆன்ட்டி ஏதாவது கொறிக்க குடிக்க என்று கொண்டுவந்து தருவார்கள். அப்போது கொஞ்சம் இலகுவாகப் பேசுவோம். ஒரு நாள் நீ சோர்வாகத் தெரிவது பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன்.."

"அதைக்கூடக் கவனித்தீர்களா? மெய்யாகவா?" என்று வியப்புடன் கேட்டாள் அவள். அவளைக் கவனிக்கவே இல்லை என்று நினைத்தாளே.

"பின்னே? எனக்காக விழித்திருந்து தூக்கம் கெட்டதால் வந்த சோர்வு என்று எண்ணித்தான் எரிச்சல் பட்டேன். 'இங்கிருந்து போய் அவர்களை எழுப்பியிருப்பீர்கள்' என்று சங்கர் கேலி செய்தார். ஒரு வேளை, நான் வந்து உடை மாற்றி உடம்பு கழுவி வரும் அவசரத்தில் தூங்கிக் கொண்டிருந்தாலும் விழித்து விடுகிறாயோ என்றுதான் உன் அறையில் படுக்கச் சொன்னேன். பிறகு ஒரு தரம் இதே கேலி வர, இந்த மாதிரி விஷயம் என்று சாதாரணமாக சங்கரிடம் சொன்னேன். சுபா அதைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு.. ஆனால் அவள் என்ன சொன்னாலும் அதைப்பற்றி என்னிடம் ஒரு வார்த்தை கேளாமல் போய்விடுவதா?"

"எப்படிக் கேட்பது?" என்று அது பற்றி நடந்த பேச்சு வார்த்தைகளை அபரஞ்சி தெரிவித்தாள். "நீங்கள் நல்லவர் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. சொல்லக் கூசுகிறீர்கள் என்று சுபா கூறவும் அப்படித்தானோ என்று எனக்கும் தோன்றிவிட்டது."

"ஆக நான் மகா நல்லவன் என்பதால் என்னைப் பிரிந்து போனாயாக்கும். ஆகா. உச்சி குளிர்ந்து விட்டது" என்றான் அவன் பரிகாசமாகத் தட்டி. "இந்தக் கனமான மண்டை ஓட்டினுள் இந்த ஒரு விஷயத்தை மட்டுமாவது நுழைய விடு தாயே. அங்கே இதைப் பதித்தும் வைத்துக்கொள். நம் திருமண வரவேற்பு நடந்ததல்லவா? அன்றைக்கே எனக்கு ஞானோதயம். இந்தப் பிறவியில் அபரஞ்சிதான் எனக்கு ஆதாரம் என்று என் அப்பா சொன்னது போல சுபாவிடம் நான் கொண்டிருந்தது வெறும் கவர்ச்சி மட்டும்தான் காதல் அல்ல என்றும் புரிந்து கொண்டேன்" என்றான் அவன்.

"ஆமாம் அப்பா எங்கே? நாம் இருவரும் மனம் விட்டுப் பேசுவதற்காக வெளியே எங்கேயும் போயிருக்கிறாரா?" என்று கேட்டவனை அதிசயமாகப் பார்த்தாள் அபரஞ்சி.

"நான் மாமா வீட்டில் இருந்தது. உங்களுக்குத் தெரியுமா? தேடவே இல்லை என்று அது வேறு வருத்தப்பட்டேனே" என்றாள் வியப்புடன்.



"என் உயிருக்கு உயிரான மனைவி. திடீரென்று வீட்டை விட்டுப் போயிருக்கிறாள். எங்கே இருக்கிறாள் என்று தேடாமல் விடுவேனா? துப்பறியும் நிறுவனம் மூலம் காதும் காதும் வைத்த மாதிரி முடித்து விட்டேன். ஆனால் பிரிவு என்றால் என்னவென்று நீயும் உணர வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் இன்னொருதரம் இப்படிப் போகிற எண்ணம் வரவே கூடாது என்றுதான் பின்னோடு வந்து கூந்தலைப்பிடித்து இழுத்து வரவில்லை தெரியுமா?"

"கூந்தலைப் பிடித்து இழுத்து வருவதா? சரியான பழைய கற்காலம் போலப் பேசுகிறீர்களே?" என்று சிரித்தாள் அபரஞ்சி.

ஒன்றோடு ஒன்றாக இன்னொன்றும் நினைவு வர "சௌதாமினி... குப்தா குடும்பத்தை நீங்களா அனுப்பினீர்கள்?" என்று விசாரித்தாள்.

"பின்னே? போய் ஒரு மாதம் ஆகிறது. வருவாய் வருவாய் என்று பார்த்தால் குன்னூரிலிருந்து ஆள் அசையவே காணோம். அதனால்தான் ஒரு தார்க்குச்சி போட்டேன்."

"அப்போது தலைமுடி இப்போது தார்க்குச்சியோ? சரியான வன்முறையாளர் ஆகிவிட்ட மாதிரிப் பயமாக இருக்கிறதே" என்று கண்களை உருட்டி அஞ்சுவது போல நடித்தாள் அபரஞ்சி.

"இன்னொரு தடவை வாசலைத் தாண்டிக் காலை எடுத்து வைக்கத் தைரியம் வரக்கூடாதில்லையா? அதனால்தான் இப்படி" என்று மீசையை முறுக்கிக் காட்டினான் வசீகரன்.

முறுவலோடு அவன் தோளில் சாய்ந்தவள் ஏதோ தோன்ற நிமிர்ந்தாள். "சுபா வீட்டுக்கு ஆடிட்டராக இருக்க முடியாது என்று விட்டீர்களாமே, நிறையப் பணம் வரும். அதை விட்டுவிட்டீர்கள் என்று சௌதாமினி சொன்னார்கள்."

"ஆமாம்" என்றான் அவன் அசுவாரசியமாக. "நம் திருமணத்துக்கு முன் ஒரு தரம் வந்தாள் என்றேனே. அதே போலப் போன வாரம் வந்து நின்றாள். சே. என்ன அருவருப்பாக இருந்தது தெரியுமா? இவளிடமா, ஒரு காலத்தில் மயங்கினோம் என்று எனக்கு

மிகவும் ஆச்சரியமாக இருந்தது" என்று தோளைக் குலுக்கினான் அவன்.

வாய்ப்பை விடாமல் "பிரிந்திருந்தால்தான் வாழ்வில் எது முக்கியம் என்பது புரியும் என்று மாமா சொன்னார்" என்றாள் அபரஞ்சி.

"அவர் உனக்காகச் சொல்லியிருப்பார்" என்று அவன் பதில் கொடுத்த விதத்தில் அவள் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

"ஆமாம் சிரி." தானும் சேர்ந்து முறுவலித்தபடி கை வளைவில் அவளையும் சேர்த்து எழுப்பியவாறு வசீகரன் எழுந்தான் "அப்பா ஏதாவது நம்பர் கொடுத்தாரா? எல்லாம் நேராகிவிட்டது என்று அவருக்குச் சொல்லி விடலாம்."

கன்னத்து எலும்பு தூக்கித் தெரிவதைப் பார்த்துவிட்டு "ரொம்பவும் மெலிந்து விட்டீர்களே" என்று வருந்தினாள் அபரஞ்சி.

"அவ்விடம் மட்டும் என்னவாம்? ஓர் அடுக்கு ஃபோம் குஷனை ஒட்டி வைத்த மாதிரியா இருக்கிறாய்? நீயும் ஒல்லியாகித் தானே..."

"நான் ஒல்லியானது இயற்கை. எல்லாப் பெண்களுமே இந்த நேரத்தில்.." என்று தொடங்கிவிட்டுச் சட்டென முகம் சிவக்க உள்ளே ஓடப் போனாள் அவள்.

ஓர் எட்டில் அவளைப் பற்றித் தன் புறம் திருப்பி "அதென்ன இந்த நேரம் பெண்கள் மட்டும் இயற்கையாய் ஒல்லியாகிற நேரம்?" என்று கண்ணில் குறுகுறுப்புடன் விசாரித்தான் வசீகரன்.

"ம்ம்ம்... தெருக் கோடியில் மருத்துவமனை வைத்திருக் கிறார்களே அந்தப் பெண் மருத்துவரிடம் போய்க் கேளுங்கள் அவர்கள் சொல்லுவார்கள்" என்று அபரஞ்சி வெட்கச் சிரிப்புடன் கூற "என் கண்மணி" என்று அவளை இறுக அணைத்தான் அவள் கணவன்.

# உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா



ரமணிசந்திரன்